


# நிறுத்தமாட்டாயா நீயே...!

பிரேமலதா பாலசுப்ரமணியம்

# நெஞ்சமெல்லாம் நீயே...!



1

"குழலூதி மனமெல்லாம் கொள்ளை கொண்ட பின்னும்.

குறை ஏதும் எனக்கேதடி சகியே..."

இதழில் உறைந்த மெல்லிய புன்னகையுடன் பாடலுக்கேற்ற முக பாவத்துடன் பாடிக் கொண்டிருந்த மதுமிதாவின் இனிமையான குரல், அந்த இனிய மாலை நேரத்தை மேலும் ரம்மியமாக்கியதைப் போலத் தோன்றியது, சத்யநந்தனுக்கு!

சற்று நேரத்துக்கு முன்பு, திரைப்பட பாடல்களுக்கான நிகழ்ச்சியில், உச்சஸ்தாயியில் குரல் எடுத்துப் பாடியவளா இவள்? என்று வியக்கும் அளவுக்கு, அவளது குரல் இப்போது கர்நாடக சங்கீதப் பாடலில் குழைந்து கொண்டிருந்தது.

அவள் குரலை மட்டுமல்லாது, முக பாவங்களையும் ரசித்துக் கொண்டிருந்த சத்யநந்தனுக்கு, உள்ளுக்குள் ஒரு இனிமையான உணர்வு எழுவதை உணர முடிந்தது. அந்த உணர்வைப் பற்றி அதிகம் ஆராயாமல், அந்த இனிய உணர்வை ரசித்துக் கொண்டிருந்தவனின் பார்வை, இம்மி அளவும் மதுமிதாவை விட்டு விலக வில்லை.

தொழிலைக் கவனிக்க ஆரம்பித்த நாளில் இருந்து, இந்த மாதிரிப் பொழுதுபோக்குகளில் நேரம் செலவழிக்க அவனால் முடிந்ததில்லை.

தங்கை நித்யாவின் வற்புறுத்தலுக்காகத்தான் சத்யா, இந்த விழாவுக்கு வந்ததே! ஆனால், இப்போது அவன் மனம், தங்கையிடம் மானசீகமாக நன்றி சொல்லிக் கொண்டிருந்தது.

''நீ எந்த நிகழ்ச்சியிலும் கலந்துக்கப் போறதில்லை எனும்போது, அண்ணன் எதுக்கு வரணும் நித்திக்குட்டி? அண்ணனுக்கு நிறைய வேலை இருக்குடா!'' என்று அவன் முதலில் மறுத்தபோது, எப்போதும் போல அண்ணன் பேச்சைத் தட்டாமல் கேட்கும் நித்யா, அமைதியாக இருக்கவில்லை.

''ப்ளீஸ் அண்ணா எல்லா ப்ரோக்ராமும் நல்லா இருக்கும்! உங்களுக்கு போர் அடிக்கவே அடிக்காது! ஐ ப்ராமிஸ்!'' என்றவள்.

''நான் இந்த வருஷம் கலந்துக்கலைதான்! ஆனால், என்னோட ஐடியல் ஹீரோயின் எல்லாத்துலயும் கலந்துக்கிறாங்க! நான் அவங்களைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம் நீங்க நான் சும்மா சொல்றேன் என்று சொல்லுவீங்க இல்லை? இப்போ நீங்களே வந்து பாருங்க!'' என்று



தங்கை வற்புறுத்தவும், சத்யாவுக்கு அவளது வேண்டுகோளை மறுக்க மனம் வரவில்லை.

''சரிடா... வரேன்'' என்று சத்யா சொன்னதும், நித்யாவின் முகம் மலர்ந்தபோது, சத்யனுக்கு எதோ ஒரு பெண்ணின் திறமையைத் தனக்குக் காட்டி விடுவதில், தங்கைக்கு இருந்த உத்வேகத்தைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''எங்கள் காலேஜில் மதுமிதா என்று ஒரு சீனியர் அண்ணா! அவங்க சிரிச்சா பார்த்துக்கிட்டே இருக்கலாம் போல இருக்கும் தெரியுமா? படிப்பிலும் முதல், எல்லா போட்டியிலும் கலந்துப்பாங்க! பாட்டு, டான்ஸ், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்று ஒண்ணு விட மாட்டாங்க!'' என்று தங்கை மதுவைப் பற்றிப் பேசும்போதெல்லாம், ஒரு பெண்ணின் திறமைகளைக் கண்டு பொறாமைப் படாமல் அவளைப் புகழ்கிறாளே என்று, சத்யாவுக்கு ஒரு புறம் தங்கையைப் பற்றிப் பெருமையாகவே இருக்கும்.

இருந்தாலும், ''ஜாக் ஆஃப் ஆல் ட்ரேட்ஸ் இஸ் எ மாஸ்டர் ஆப் நன்!'' என்று சொல்வாங்களே அப்படியா நித்திம்மா?'' என்று வம்பிழுப்பான்.

தன்னையே குறை சொன்னது போல, ''போங்கண்ணா! எங்க மது அப்படி எல்லாம் இல்லை! உண்மையிலேயே எல்லாத்துலயும் திறமைசாலி! எங்க ஆண்டு விழா நடக்கும்போது, உங்களைக் கூட்டிட்டுப் போய் காட்டறேன்!'' என்று அவனது தங்கை சிலிர்த்தெழுவாள்.

சத்யநந்தன், டெல்லி என்.ஐ.எஃப்.டி.யில் ஆடை வடிவமைப்பு மற்றும் மேலாண்மையில் முதுகலை படித்து முடித்துவிட்டு, கடந்த நான்கு வருடங்களாக,

தந்தை இருபது வருடங்களாக நடத்தி வரும், 'வானவில்' ஆடையகத்தில் தந்தையுடன் சேர்ந்து வெற்றிகரமாக தொழில் நடத்தி வருகிறான்.

சத்யநந்தன் தொழிலைக் கவனிக்க ஆரம்பித்த பிறகு, ஏற்றுமதித் துறையிலும், அவர்களது நிறுவனம் கால் பதிக்கத் துவங்கி இருக்கிறது.

வீட்டுக்கு மூத்த பிள்ளை. அவனது தங்கை நித்யா, ஏழு வருட இடைவெளிக்குப் பிறகு பிறந்தவள் என்பதால், வீட்டில் அனைவருக்கும் செல்லம். சத்யநந்தனுக்கு, தங்கையிடம் கூடுதல் பாசம்.

அதேபோல, தன் அண்ணன்தான் நித்யாவுக்கும் ஹீரோ! அதிகம் பேசாமல், செயலில் தன் திறமைகளைக் காட்டும் அண்ணனைப் பற்றி நித்யாவுக்கு எப்போதுமே பெருமிதம்தான்!

ஏனோ, அவளுக்கு முதன் முதலில் மதுமிதாவைப் பார்த்தபோது, தன் அண்ணனின் நினைவுதான் வந்தது. ஒரே ஒரு விஷயத்தைத் தவிர! அவளது அண்ணன், வீட்டினரிடம் மட்டும்தான் அதிகம் பேசுவான். வெளியாட்களிடம் அதிகம் பேச மாட்டான். ஆனால், மதுமிதா அப்படி இல்லை. வாயைத் திறந்தால், பேசிக் கொண்டே இருப்பவள்.

நித்யா, கல்லூரியில் சேர்ந்த இந்த மூன்று வருடத்தில், எல்லாத் திறமைகளும் இருந்தும், பந்தா இல்லாமல் பழகும் மதுமிதாவின் ரசிகையாகிப் போனாள். மனதின் ஓரத்தில், மதுமிதா தன் அண்ணியாக வந்தால் நன்றாக இருக்குமே என்ற எண்ணம் அவ்வப்போது தோன்றுவதுண்டு.



நேரிடையாக அதை வீட்டில் சொல்லவும் தயக்கம். அண்ணனுக்குப் பெண் பார்க்க என்று பேச்சு எழுந்திருக்கும் இந்த நேரத்தில், அண்ணனை மதுமிதாவைச் சந்திக்க வைத்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் தான், அவள் தங்கள் கல்லூரி விழாவுக்கு அவனை அழைத்ததே.

தான் எண்ணியது சரிதான் என்பது போல, சத்யாவின் முகம் மதுமிதாவைக் கண்டதும் மலர்ந்ததைக் கண்ட நித்யாவுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

''என்ன அண்ணா? நான் சொன்னது சரி என்று ஒத்துக் கொள்றீங்கதானே?''

பாடி முடித்து மதுமிதா, மேடை விட்டு இறங்கிச் சென்ற பிறகும், அவள் புறமே பார்வையை வைத்திருந்த அண்ணனின், தோளைத் தொட்டு நித்யா வினவியதும், சத்யா தங்கையின் புறம் திரும்பினான்.

''ஆமாண்டா நித்தி... உன் ஹீரோயின் உண்மையிலேயே திறமைசாலிதான்... ஒத்துக்கறேன்!'' என்று சொன்னவனின் பார்வை, மீண்டும் மதுமிதாவிடம் பாய்ந்தது.

கண் இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன், சிறிது நேரத்தில் தன் செய்கையை உணர்ந்து சங்கடம் கொண்டு, வலுக்கட்டாயமாக மேடையின் புறம் பார்வையைத் திருப்பினான்.

கொஞ்ச நேரம்தான்! மீண்டும், மனம் மதுமிதாவைப் பார்க்க விழைய, பார்வையை அவள் புறம் திருப்பியவனுக்கு, அவனுடைய அந்த செயல் வெட்கத்தைக் கொடுத்ததோடு, விசித்திரமாகவும் இருந்தது.

மூன்று வருடங்களாக, நித்யா அவளைப் பற்றி அடிக் கடி சொல்லிக் கொண்டே இருந்ததாலோ என்னவோ, மதுமிதாவை முதன் முறையாகப் பார்க்கிறோம் என்ற எண்ணமே சத்யாவுக்கு வரவில்லை.

ரொம்பவும் நெருங்கிப் பழகியவரை, கொஞ்ச நாள் இடைவெளிவிட்டு சந்திப்பதைப் போன்ற எண்ணமே தோன்றியது.

பெண்களை ஏறெடுத்தே பார்க்காதவன் என்று சத்ய நந்தனை சொல்ல முடியாது. அழகான பெண்களைக் கண்டால், மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்ப்பவன் தான்! கல்லூரியில் பெண்கள் தானாகவே வந்து தன்னோடு பேசும்போது, ஒரு வகையில் பெருமிதமாகக் கூட அவன் உணர்ந்ததுண்டு. இதெல்லாம், கல்லூரியில் படிக்கும் வரைதான்!

தந்தையுடன் தொழிலில் முழு மூச்சாய் இறங்கி விட்ட பிறகு, தங்கள் நிறுவனத்தின் புதிய வடிவமைப் புகளை விளம்பரப்படுத்துவதற்கென தயாரிக்கப்படும் விளம்பரப் படங்களில் நடிக்க வரும் எத்தனையோ அழகான இளம் மாடல்களை சந்தித்து இருக்கிறான்.

அப்போதெல்லாம், தங்கள் வேலைக்கு இவர்கள் ஒத்து வருவார்களா என்று மட்டும்தான் எண்ணத் தோன்றி இருக்கிறதே தவிர, வேறு எந்த வகையிலும், அவர்கள் அவன் மனதைப் பாதித்ததில்லை.

ஆனால், மதுமிதாவைப் பார்த்து இரண்டு மணி நேரம் தான் ஆகி இருக்கும்! அதற்குள், அவளைத் தவிர பார்வையை எங்கும் திருப்ப முடியாதபடி, இந்தப் பாடு படுத்துகிறாளே என்ற எண்ணம் தோன்ற, தனக்குள்ளே சிரித்துக் கொண்டான் அவன்.



கடந்த ஒரு மாதமாக அவனுக்குத் திருமணப் பேச்சு ஆரம்பமாகி இருக்கிறது என்றாலும் அவன் திருமண விஷயத்தில் பெரிதாக ஈடுபாடு காட்டவில்லை.

எந்த மாதிரிப் பெண் பார்க்க வேண்டும் என்று அன்னை சுமித்ரா கேட்டபோது கூட, ''உங்களுக்குத் தெரியாததா அம்மா?'' என்றதோடு முடித்து விட்டான்.

ஆனால், மதுமிதாவைப் பார்த்த பிறகு, இந்த மாதிரி ஒரு பெண் மனைவியாக அமைந்தால், நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

இந்த மாதிரிப் பெண்ணா, இல்லை? இவளே மனைவி யாக வர வேண்டுமா? என்று மனம் கேள்வி கேட்டதில், சற்றே திகைத்தவனின் பார்வை மீண்டும் மதுவின் புறம் பாய்ந்தது.

யாருடனோ, பேசிக் கொண்டிருந்தவள், தன் முத்துப் பற்கள் தெரிய சிரிக்க, பௌர்ணமி நிலவாய் பிரகாசித்த அவளது முகம், அழகிய சித்திரமாய் அவன் மனதில் பதிந்தது.

இது சாத்தியமா? சந்தித்து இரண்டு மணி நேரம் ஆக வில்லை! இன்னும், நேருக்கு நேர் ஒரு முறை கூடப் பார்க்கவில்லை! ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆனால், இவள் தன் மனைவியாக வரவேண்டும் என்ற ஆசை எப்படித் தோன்றுகிறது?

கேள்விகள் தொடர்ச்சியாகப் படை எடுத்தாலும், பார்வை மட்டும் அவளை மட்டும் விலகுவேனா என்றது.

இதில், அவன் விருப்பம் மட்டும் முக்கியமில்லையே! அவனுக்கு அவளைப் பிடித்ததைப் போலவே அவளுக்கும் பிடிக்க வேண்டுமே!

அவளுக்குத் தன்னைப் பிடிக்குமா? என்ற கேள்வி எழ, சத்யாவுக்கு மனம் படபடத்தது.

ஒருவேளை, அவளுக்குப் பிடிக்கவில்லை என்றால்... அந்த எண்ணமே, பிடிக்காமல் போக, வேகமாகத் தலையைக் குலுக்கிக் கொண்டான்.

பைத்தியம்தான் பிடிக்கப் போகிறது! பிடிக்கப் போகிறதென்ன? ஏற்கனவே பிடித்து விட்டது போலத்தான் தெரிகிறது! அவனுக்கு காதல் என்பதிலேயே பெரிதாக நம்பிக்கை இருந்ததில்லை!

அதுவும் பார்த்த முதல் நாளே... இப்படி எல்லாம் நினைப்பது தான்தானா? என்று ஆச்சர்யப்பட்டவனுக்குள், முக்கியமான அதி முக்கியமான கேள்வி பிறந்தது.

இது உண்மையிலேயே காதல் தானா?

அவனை மேலே யோசிக்க விடாமல், இடையில் தங்கையின் குரல் ஒலித்தது.

''என்ன அண்ணா? ஒரு மணி நேரம்தான் இருப்பேன்! அப்புறம் வேலை இருக்கு என்று சொன்னீங்க! இப்போ கிளம்பாமல் உட்கார்ந்து இருக்கீங்க?''

கேலியாகக் கேட்ட தங்கையைத் திரும்பிப் பார்த்த சத்யாவுக்கு, அவன் இருந்த மனநிலையில், அவளது கேலி கருத்தில் பதியவில்லை.

இன்னும் கொஞ்ச நேரம் இருந்து மதுவின் முகத்தை நெஞ்சத்தில் நிரப்பிக் கொள்ள ஆசை இருந்தாலும், கொஞ்ச நேரம் முன்பு எழுந்த கேள்வியில், மனம் குழம்பி இருக்க, அங்கிருந்து கிளம்புவதே மேல் என்று தோன்றியது.

''ம்ம்ம்? போகணும் நித்திம்மா! கிளம்பலாமா?'' என்று எழுந்தவன், மதுவை நோக்கித் திரும்ப எத்தனித்த



கண்களை, பிரயத்தனப்பட்டு அடக்கி, கார் பார்க்கிங்கை நோக்கி நடந்தான்.

சற்றுமுன், மலர்ந்திருந்த அண்ணனின் முகத்தில், திடீர் என்று சூழ்ந்திருந்த குழப்பத்தைக் கண்டு குழம்பிய நித்யாவும் பதில் பேசாமல், அவனுடன் நடந்தாள்.

தன்னைப் பார்த்த நேரத்தில் இருந்து, ஒருவன் தவித்துக் கொண்டிருப்பதை அறியாமல், மதுமிதா தனது தோழிகளிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

''மது... ரொம்ப நல்லா பாடினேப்பா.... அதெப்படி பாட்டு, டான்ஸ், படிப்பு என்று எல்லாத்தியும் கலக்கறே?''

''கேள்வி கேட்ட பெண்ணின் குரலில் இருந்த பொறாமையைக் கண்டும் காணாமல் விட்ட மது, ''விருப்பமும், முயற்சியும் இருந்தால், எல்லாம் கைவரும்!'' என்றபோது, அவளது கைப்பேசி அழைத்தது.

கைப்பேசியின் திரையில் 'அம்மா' என்று ஒளிர்வதைக் கண்டதும் அவசரமாக அழைப்பை எடுத்த மதுமிதா ஏதும் பேசும் முன்னரே, ''மது! உன் ப்ரோக்ராம் எல்லாம் நல்லபடியா முடிஞ்சுதாடா?'' என்ற அன்பான குரல் விசாரித்தது.

''சூப்பரா போச்சு அம்மா. நீங்க வரலை என்பது மட்டும்தான் குறை!'' என்ற மதுவுக்கு பதிலாக, ''எனக்கும் வருத்தமாதான் இருக்கு, என்ன செய்ய?'' என்ற ஜானகி, ''மகேன் வந்தானா?'' என்று விசாரித்தார்.

''அந்த தடியனைப் பற்றி என்கிட்டே கேட்காதீங்க!'' மது கடுப்புடன் பதில் சொல்ல, ''ப்ச்! மது இப்படி எல்லாம் பேசக்கூடாது!'' என்று அன்னையாகக் கண்டித்து, ''என்ன ஆச்சு?'' என்று விசாரித்தார்.

''நேற்று நைட்ல இருந்து இன்னைக்கு காலையில் கிளம்பற வரைக்கும் எத்தனை முறை சொல்லி இருப் பேன் தெரியுமா? அத்தோட என் வண்டியை சர்வீசுக்கு விட்டிருப்பதால், அவன்தான் வந்து கூட்டிட்டுப் போகணும் என்று வேற சொல்லி இருந்தேன்... அப்படி இருந்தும் அவன் வரலை! இதுல, நீங்க அவனுக்கு சப்போர்ட் வேற!''

மகளின் குரலில் இருந்த எரிச்சல், அவள் மன நிலையை எடுத்துச் சொல்ல, ''சரிடா! ஏதாவது காரணம் இருக்கும்! நான் அவன்கிட்ட பேசறேன்!'' என்றார் ஜானகி.

''நீங்க ஒண்ணும் பேச வேண்டாம்! அவனே பேச றானா என்று பார்க்கிறேன்!'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, இன்னொரு அழைப்பு வருவதற்கான அறிகுறியாக, கைப்பேசியில் பீப் ஒலி எழுந்தது.

யாரென்று பார்த்தவள், ''அவன்தான் கூப்பிடறான்!'' என்றாள் அன்னையிடம்!

''சரி, சண்டை போடாதே! அமைதியா பேசு!'' என்று விட்டு, ஜானகி அழைப்பைத் துண்டித்த பிறகு, மகேந் திரன் இருமுறை அழைத்தும், மது அழைப்பை எடுக்க வில்லை.

மீண்டும் அழைப்பு வந்தது.

எடுக்கும் வரை அழைப்பு வந்து கொண்டே இருக்கும் என்று உணர்ந்தவள், அழைப்பை எடுத்து ''என்னடா? இப்போது எதுக்கு போன் செய்யறே! விழாவுக்கு வான்னு எத்தனை முறை சொன்னேன்! ரொம்ப பெரிய ஆள் ஆகிட்டாயோ?'' என்று பொரியத் துவங்கினாள்.



''ஊப்ஸ்! ஹே... பட்டாசு படபடன்னு பொரியறதை நிறுத்து! தினமும், வீட்டில் நீ பாட்டு என்ற பேரில் கர்ண கொடூரமா கத்துவதையும், டான்ஸ் என்ற பெரில் தைய தைக்கா என்று குதிப்பதையும் பார்க்கிறேனே அதை உன் காலேஜ் விழாவில் வேற வந்து பார்க்கணுமா?''

கேலியாக வந்த பதிலில், மது பல்லைக் கடித்தாள்.

இருக்கும் இடத்தை மனதில் கொண்டு, தன்னைக் கட்டுப்படுத்தியவள், ''உன்னை வீட்டில் வந்து கவனிச் சுக்கறேன்!'' கடித்த பற்களிடையே சொல்லி விட்டு, ''சரி வண்டியை சர்வீஸ் விட்டிருக்கேன்! நீ வந்து கூட்டிட்டுப் போறியா இல்லையா?'' என்றாள்.

''கண்டிப்பா வரேன் மத்து! எப்போ வரணும் என்று கேட்கத்தான் போன் செஞ்சேன்!' என்றான், மகேந்திரன்.

''டேய் மக்கு! என்னை மத்து என்று கூப்பிடாதே என்று எத்தனை முறை சொல்லி இருக்கேன்! அடங்கவே மாட்டாயாடா நீ?''

எரிச்சலுடன் மது கேட்ட கேள்விக்கு, ''நீ முதல்ல மக்கு என்று என்னைக் கூப்பிடறதை நிறுத்து! அப்புறம், நான் நிறுத்தறேன்!'' என்று உடனடியாக பதில் வந்தது.

''நீதாண்டா, என்னை முதலில் அப்படிக் கூப்பிட ஆரம்பித்தாய்! நீதான் முதலில் நிறுத்தணும்!'' என்று மதுவும்,

''இல்லை! நீதான் முதல்ல ஆரம்பித்தாய்! நீதான் முதலில் நிறுத்தணும்!'' என்று மகேந்திரனும், கைப்பேசியி லேயே, சண்டையை ஆரம்பித்தனர்.

இருவருக்குமே, யார் முதலில் இந்த பெயர் சூட் டலை, ஆரம்பித்தது என்று தெரியாது என்பதுதான் உண்மை!

மதுவைத் திரும்பிப் பார்க்கக் கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கொஞ்ச தூரம் நடந்த சத்யா, எதோ உந்த மீண்டும் அவள் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

சற்று முன் வரை பிரகாசித்துக் கொண்டிருந்த அவள் முகம், இப்போது கோபத்தில் இறுகி இருப்பதைக் கண்டதும், 'என்ன பிரச்சனை?' என்று அவன் யோசிக்க ஆரம்பிக்க, அண்ணன் பார்வை சென்ற திசையைத் திரும்பிப் பார்த்த, நித்யாவின் முகத்தில் மீண்டும் புன்னகை அரும்பியது.

அண்ணனின் கைப் பற்றி அவனைத் தன் புறம் திருப்பிய நித்யா, ''அண்ணா! நான் ஒரு பிரண்டை பார்த்துட்டு வந்துடறேன்! கொஞ்சம் வெயிட் செய்யறீங்களா?'' என்று கேட்டு விட்டு, அவனது பதிலை எதிர் பாராமல் ஓடிவிட, மீண்டும் சத்யனின் பார்வை மது விடம் பதிந்தது.

'என்ன ஆச்சு? எதுக்காக இப்படி அவள் முகம் கோபமா இருக்கு?' என்று யோசித்தவனுக்கு, அவளை வருந்த வைப்பது யாராக இருந்தாலும், அவர்களை உதைக்க வேண்டும் என்ற ஆத்திரம் தோன்ற, கூடவே சிரிப்பும் வந்தது.

'என்னவாகிற்று எனக்கு?'

தன்னை ஒருவன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக் கிறான் என்பதை அறியாமல், மகேந்திரனோடு சண்டை வளர்த்துக் கொண்டிருந்த மதுவிடம், ''சாரிடா! மதுக் குட்டி! எங்க சீனியர் திடீர் என்று கூப்பிட்டு இருந்தார்... அதான் போயிருந்தேன்!'' என்று மகேந்திரன் தழைந் ததும், மதுவின் முகம் இயல்புக்கு வந்தது.



''என்ன விஷயம்?'' என்று மது கேட்டபோது, அவளது குரலில் கோபம் காணாமல் போயிருந்தது.

எப்போதுமே, மதுக்குட்டி என்ற அழைப்பு அவளைக் குளிர வைத்து விடும்!

அவளது மாமா ஸ்ரீனிவாசன்... மகேந்திரனின் அப்பா, அவளை எப்போதும் அப்படித்தான் அழைப்பார். அவர் இருந்தவரையில்... மகேந்திரனை விட மதுதான் அவ ருக்கு செல்லம்! மதுக்குட்டி என்ற அழைப்பு, மதுவுக்கு மாமாவின் அன்பை, பாசத்தை நினைவு படுத்தி, நெகிழ வைத்தாலும், கூடவே, மனதை அமைதியாக்கியும் விடும்.

மதுவிடம் ஏதாவது காரியம் ஆக வேண்டும் என்றால்... இல்லை அவளைக் கோபத்தில் இருந்து மலை இறக்க வேண்டும் என்றால்... மகேந்திரன் அவளை மதுக்குட்டி என்று அழைத்து விடுவான். என்னதான் கோபம் என் றாலும், அந்த அழைப்பைக் கேட்ட பிறகு, அவளால் கோபத்தை இழுத்து வைக்க முடியாது.

இப்போதும் அந்த அழைப்பு வேலை செய்ததை உணர்ந்து, உள்ளுக்குள் சிரித்தவாறே, ''அவர் இந்த மாசக் கடைசியிலே, அவங்க பிள்ளையோட அமெரிக்காவி லேயே போய் செட்டில் ஆகப் போகிறார் என்று சொல்லி இருந்தேன் இல்லை? அதுக்குள்ளே, அவர்கிட்ட இருக்கிற சில முக்கியமான பெரிய கிளையன்டை எல்லாம் அவரோட ஜூனியர்ஸ் எங்களுக்கே பிரிச்சு தரேன் என்று சொல்லி இருந்தார். அது சம்மந்தமாதான் கூப்பிட்டு இருந்தார். யூ நோ, எனக்கு வானவில் டெக்ஸ்டைல்ஸ் டீலிங்கை தரேன் என்று சொல்லி இருக்கார்!'' மகிழ்ச்சியுடன் விஷயத்தைப் பகிர்ந்தான் மகேந்திரன்.

மகேந்திரன், சி.ஏ. படிக்கும்போது, சுந்தரமூர்த்தியின் அலுவலகத்தில், வேலை பார்த்துக் கொண்டிருந்தான். கடந்த இரண்டு வருடங்களாக, தனியாக அலுவலகம் நடத்தி வருகிறான்.

வானவில் ஆடையகம் போன்ற ஒரு பெரிய நிறுவனம், வாடிக்கையாளராக கிடைக்க வேண்டும் என்பது அவனுடைய நீண்ட நாளைய எண்ணம்.

மகேந்திரனின் சந்தோஷம், மதுவையும் தொற்றிக் கொள்ள, விஷயம் தெரியாமல், அவனோடு சண்டை போட்டதற்காக வருந்தியவள், ''ஹே! கங்ராட்ஸ் மகேன்! இதை முதல்லையே சொல்ல வேண்டியதுதானே டா?'' என்றாள்.

''நீ பேச விட்டால்தானே? எடுத்தவுடனே, பட படன்னு பொரிய ஆரம்பிச்சிட்டாயா?'' என்றவன்.

''மது! உங்க காலேஜ் கிட்டதான் வந்துட்டு இருக்கேன்! உன் ப்ரோக்ராம் எல்லாம் முடிஞ்சிருச்சா? இப்போ வந்தால் கிளம்பலாமா?'' என்றான்.

''அல்மோஸ்ட் விழாவே முடிஞ்சுடுச்சு! நீ எப்போ வருவே?'' என்று விசாரித்தாள், மது.

''இன்னும் ஐந்து நிமிஷத்திலே அங்கே இருப்பேன்!'' என்றவன், ''இன்னும் உன் பிரண்ட்ஸ் யாரும் போகலை இல்லை? கூடத்தானே இருக்காங்க?'' என்று அக்கறையாக விசாரித்ததும், மதுமிதா சிரிக்க ஆரம்பித்தாள்.

''என்ன மது? தனியா நின்னுக்கிட்டு இருக்கியோன்னு எவ்வளவு அக்கறையா கேட்கிறேன்... கிண்டலா சிரிக்கிறாயே?'' என்று போலி சோகத்துடன் மகேந்திரன் கேட்ட பாவனையில் மதுவுக்கு மேலும் சிரிப்பு பொங்கியது.



''ஹே, ஃபிராட்! நீ எதுக்கு இவ்வளவு அக்கறையா விசாரிக்கிறாய் என்று எனக்குத் தெரியாதா? வந்து, பொண்ணுங்களை சைட் அடிக்கணும் என்றுதானே?'' என்று அவனைக் கேலி செய்தவளிடம், ''என் மனசில இருக்கிறதை தெரிஞ்சிக்கிறதில், உன்னை மிஞ்ச யாருமே இல்லை, மத்து!'' என்று பதில் கொடுத்தவன்.

மத்து என்று அழைத்ததற்காக, அவள் மீண்டும் மீண்டும் சண்டை போட ஆரம்பிக்கும் முன், ''சரி... போனை கட் செய்! நான் அங்கே வந்துட்டு, கால் செய்யறேன்!'' என்று அழைப்பைத் துண்டித்தான்.

மதுவையே பார்த்துக் கொண்டிருந்த சத்யாவுக்கு, அவள் முகத்தில் மீண்டும் சிரிப்பு வந்ததும்தான், சந்தோஷமாக இருந்தது.

அதற்குள், நித்யாவும் வந்து விட, இருவரும் காரில், கல்லூரி வாசலைத் தாண்டும்போது, மதுமிதா மீண்டும் கண்ணில் பட்டாள்.

''மது! எதுக்கு இந்த நேரத்தில் வெளியே வந்து நிற்கிறாய்? உள்ளேயே இருக்க வேண்டியதுதானே? நான் வந்து கூட்டிட்டு வந்திருப்பேன் இல்லை?'' அக்கறையாக விசாரித்த மகேந்திரனின் பார்வை, அங்கே வந்து கொண்டிருந்த அழகான பெண்களின் மீது ரசனையாகப் படிய,

''ஹப்பா சாமி! உள்ளே வந்து நீ விடப் போற ஜொள்ளில், என் காலேஜ் தத்தளிக்க கூடாதுன்னுதான், நான் இங்கேயே வந்துட்டேன்! கிளம்பு, கிளம்பு'' என்று அவனை அவசரப்படுத்தினாள்.

''மத்து! இதெல்லாம் அநியாயம்... இவ்வளவு தூரம் வந்துட்டு...'' என்று அவன் ஆரம்பிக்கும்போதே,

அவனது முதுகில் இரண்டு தட்டு தட்டியவள், ''அடி வாங்கப் போகிறாய்! மரியாதையா கிளம்பு!'' என்று அவனை மிரட்டியதும், வண்டியைக் கிளப்பினாலும்,

''ஆனாலும், அடிச்சிட்டு, அடி வாங்கப் போகிறாய் என்று வார்னிங் கொடுக்கிற ஆள், நீ ஒருத்தியாதான் இருப்பாய்!'' என்று கிண்டல் செய்யத் தவறவில்லை.

சிரித்தபடியே, ஒரு ஆடவனின் வண்டியின் பின்னால் ஏறி அமர்ந்து, மதுமிதா செல்வதைக் கண்ட, சத்யநந்தனின் முகம் சுருங்கியது.

சற்று நேரத்துக்கு முன், மது கோபமாகப் பேசியதும், கொஞ்ச நேரத்தில் சிரித்ததும் இவனுடன்தானோ? உரிமை இருக்கும் இடத்தில்தானே, கோபம் வரும் என்று எண்ணியவனுக்கு, அந்த ஆடவன், மதுவுக்கு நெருங்கியவன் என்ற நினைப்பு சற்றும் உவப்பாக இல்லை.

வண்டியில் அமர்ந்திருந்தவனை சரியாகப் பார்க்க முடியவில்லை! முகம் தெரியாத அந்த ஆடவன் மீது ஏனோ கோபம் கூட வந்தது.

தனது அர்த்தமற்ற கோபத்துக்காக தன்னையே நொந்து கொண்டவன், அவன் அவளது அண்ணனாகக் கூட இருக்கலாம் என்று எண்ணியபடி, கைப்பேசியில் எதையோ நோண்டிக் கொண்டிருந்த தங்கையிடம், ''நித்திம்மா... உன் ஹீரோயினுக்கு கூடப் பிறந்தவங்க எத்தனை பேராம்?'' என்று சாதாரணமாக வினவினான்.

அண்ணன், மதுவைப் பற்றி பேச்செடுத்ததும், ஆவலாக அவன் புறம் திரும்பிய நித்யா, ''அவங்க ஒரே பொண்ணுதான்!'' உற்சாகமாக சொல்லிய பதிலில், சத்யாவின் மனம் சோர்ந்தது.



அவன் விருப்பத்துக்கு ஆயுள் அவ்வளவுதானா? என்று மனம் வருந்தியவன், அடுத்த கணமே, 'ச்சே! ஒரு பெண், ஒருவரோடு வண்டியில் போனாலே, காதல் என்று நினைக்கும் அளவுக்கா, நான் கட்டுப்பெட்டியாக இருக்கிறேன்?' என்று தன்னையே திட்டிக் கொண்டு.

'அவன் அவளுடைய பெரியப்பா பையனாக இருக்கலாம்! இல்லை... சித்தப்பா பையனாகக்கூட இருக்கலாம்!' என்று நினைத்தான்.

தப்பித் தவறிக் கூட மாமா பையனாகவோ, அத்தை பையனாகவோ இருக்கும் என்று நினைக்கவில்லை! நினைக்கவில்லை என்பதை விட அப்படி நினைக்கப் பிடிக்கவில்லை என்பதுதான் உண்மை!



## 2

விழாவைப் பற்றி பட படவென்று பேசிக் கொண்டு வந்த மதுவிடம், ''மது... லேட் ஆகிடுச்சு! வெளியில் சாப்பிட்டு விட்டுப் போயிடலாமா?'' மகேந்திரன் விசாரித்தான்.

''இல்லைடா... வீட்டில் தோசை மாவு இருக்கு! வீட்டில் போயே சாப்பிடலாம்'' என்றாள் மது.

''கடவுளே... அத்தை அவங்க பேங்க் நியூ பிரான்ச் ஓபனிங் என்று வெளியூர் போன இந்த இரண்டு நாளா, காலையிலயும் நைட்லயும் தோசையும், சட்னி என்ற பெயரில் நீ கொடுக்கிற பேஸ்டையும் சாப்பிட்டு, சாப்பிட்டு எனக்கு நாக்கு செத்துப் போச்சு.''

மகேந்திரன் அவள் சமையலைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்ததுமே மது அவன் முதுகில் கொடுத்த அடிகளில் வண்டி சற்றே தடுமாறியது.

''மத்து! வண்டியில் போகும்போது இப்படி அடிக்காதே என்று எத்தனை தரம் சொல்லி இருக்கேன்!'' வண்டியை ஒரு நிலைக்குக் கொண்டு வந்தவன்,

''இப்படிக் கூப்பிடாதேன்னு எத்தனை முறை நானும் சொல்லி இருக்கேன்!'' என்று விட்டு, மீண்டும் அடிக்க கையை ஓங்க, ''மது என்று சுருக்கிக் கூப்பிடுவதை இன்னும் கொஞ்சம் அழுத்தமா கூப்பிடறது தப்பா? நீ சம்மந்தமே இல்லாமல் மக்கு என்று கூப்பிடுகிறாய்?'' என்றவனிடம்,

''நான் கூப்பிடறது காரணப் பெயர்டா மக்கு!'' என்று மது கேலி செய்தாள்.

''ஏய்! சி.ஏ.வை முதல் அட்டம்டிலேயே நல்ல ரேங்க் கோடு பாஸ் செஞ்சவனை என்ன எல்லாம் சொல்றேடி?''

''அதுதான்டா இன்னைக்கு வரைக்கும் எனக்குப் புரியாத புதிராவே இருக்கு!'' சீரியசாக சொல்வது போல அவள் கிண்டல் அடிக்க, ''உன்னை...'' என்றபடி, அவன் திரும்பி முறைக்க,

''டேய்... ரோட்டை பார்த்து ஓட்டுடா!'' என்று அதட்டியவள், ''பின்னே நீ மட்டும் என் சமையலை கிண்டல் செய்யலாமா? காலையில் கிளம்பற அவசரத்துலயும், நான் போனா போகுதுன்னு தோசை சுட்டு கொடுக்கிறேன்! நீயும் பத்து தோசைக்குக் குறையாமல் கொட்டிகிட்டு, என் சமையலையே குறை சொல்றாயா?'' என்று படபடத்தாள்.

''நீ படபட பட்டாசா வெடிக்கிறதைப் பார்க்க, கேட்க எனக்கு ரொம்ப ஜாலியா இருக்கே, மத்... மது! என்ன செய்ய?'' கேலிப் பேச்சுடன், ஓர் உணவகத்தின் முன் வண்டியை நிறுத்தினான், மகேந்திரன்.

வண்டியில் இருந்து இறங்கி, அவனை முறைத்த வளிடம், ''அட, போதும் மது! நல்ல சாப்பாடு சாப்



பிடணும் என்று உனக்கும் ஆசையா இருக்குதானே?'' மேலும் அவன் கேலி செய்ய.

''வேணாண்டா! இதுக்கு மேலே ஒட்டினே... அடி வாங்குவாய்!'' மது எச்சரிக்க, ''இனிமேல்தான் அடி வாங்கணுமா? அப்போ... வண்டியில் வரும்போது, முதுகில் மொத்து மொத்து என்று கொடுத்ததுக்கு என்ன பேர் மத்து?'' என்று வினவியவன்,

''ஹய்... மொத்து... மத்து... என்று ரைமிங்கா இருக்கு இல்லை?'' என்று தன் பேச்சை தானே சிலாகித்துக் கொண்டதும், மதுவுக்குக் கோபம் அதிகரித்தது.

''போடா! நான் இப்படியே ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போறேன்! நீ நல்லா மொக்கிட்டு வா!'' என்று திரும்ப, அவளது கையைப் பற்றி நிறுத்தினான், மகேந்திரன்.

''சாரி மது! வா... இதெல்லாம் நமக்குள்ள புதுசா?'' என்றபடி அவளைக் கைப் பற்றி உள்ளே அழைத்துச் செல்ல, அவனது கையை உதறி விட்டு, வேகமாக தானே உள்ளே சென்றாள்.

உள்ளே சென்று தேவையான உணவை ஆர்டர் செய்த பிறகும், மது அமைதியாக இருக்க, ''மது... அத்தை ஊருக்குப் போன ரெண்டு நாளா, நீ ரொம்ப டல் ஆகிட்டே! அதான்... கொஞ்சம் அளவுக்கு அதிகமா கேலி செஞ்சிட்டேன்... சாரிடா!'' உண்மையான குரலில் மகேந்திரன் சொன்னதும், மது அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

''நீயும்தான், அம்மாவை மிஸ் செய்யறே, இல்லையா?''

மதுவின் கேள்விக்கு ஆமோதிப்பாகத் தலையாட்டிய படி, ''அத்தைக்கும், நம்ம ரெண்டு பேரையும் விட்டுட்டுக் கிளம்பும்போது, கஷ்டமாதான் இருந்தது...

என்ன செய்யறது? முக்கியமான பதவியில் இருந்ததால், அந்த வேலைக்குத் தேவையானதை செய்துதானே ஆகணும்! நமக்காகவே, அத்தை வந்து பெரிய பெரிய ப்ரோமோஷனை எல்லாம் விட்டு இருக்காங்க!'' என்றபோது, மகேந்திரனின் குரலில், பாசத்தோடு பெருமிதமும் கலந்திருந்தது.

மதுவின் தாயார் ஜானகி, ஒரு பொதுத்துறை வங்கியின் மேலாளராக பணி புரிகிறார். ஐந்து வருடங்களுக்கு முன்பே, பொது மேலாளர் பதவி தேடி வந்தபோது, சந்தோஷமாக இருந்தாலும், வேறு ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற காரணத்தினாலேயே, அதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. மகேந்திரனும், மதுவும் சென்னையில் படித்துக் கொண்டிருக்கும்போது, பதவி உயர்வுக்காக, அவர்களைப் பிரிவதில் ஜானகிக்கு விருப்பமில்லை.

மதுமிதாவின் தாய் ஜானகியும், மகேந்திரனின் தந்தை ஸ்ரீநிவாசனும், சிறு வயதில் தாய் தந்தையை இழந்து, தங்களது சொந்த ஊரான ஸ்ரீரங்கத்தில், அவர்களது மாமாவின் பொறுப்பில் வளர்ந்தவர்கள்.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாமாவும், தன்னால் இயன்றவரை, அவர்களை நன்றாகவே வளர்த்தார் என்றாலுமே, அத்தைக்கு இந்த அதிக சுமை தேவை இல்லாதது என்ற எண்ணம் எப்போதுமே உண்டு. ஸ்ரீநிவாசன், உதவிப் பணத்தின் மூலமே, தனது கல்லூரிப் படிப்பை படித்து முடித்தார்.

ஸ்ரீநிவாசன், படித்து முடித்து சென்னையில் ஒரு நல்ல வேலையில் சேர்ந்த பிறகு, தங்கையோடு ஒரு தனி வீடு எடுத்து வசிக்க ஆரம்பித்தார்.

இருவருக்கும் இடையே எட்டு வருட இடைவெளி. ஸ்ரீநிவாசன் வேலையில் சேர்ந்தபோது, ஜானகி பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார்.



அடுத்த இரண்டு வருடத்தில், தன் திறமையால், ஒரு நல்ல நிலைமைக்கு வந்த பிறகு, ஒதுங்கிப் போன உறவினர்கள் ஸ்ரீநிவாசனுக்கு பெண் கொடுக்க விழைந்தனர்.

தங்கைக்கு திருமணம் முடித்த பிறகே, தன் திருமணம் என்ற முடிவோடிருந்த ஸ்ரீநிவாசனை, ஜானகிதான் கெஞ்சி சம்மதிக்க வைத்தார்.

''நான் இப்போதான் ப்ளஸ் டூ படிக்கிறேன்! இன்னும் காலேஜ் படிக்கணும்! வேலைக்குப் போகணும்! நீங்க கல்யாணம் செஞ்சுகிட்டா, எனக்கும் அண்ணி கிடைப்பாங்க... ப்ளீஸ் அண்ணா!''

தங்கையின் வேண்டுகோளுக்கிணங்க, தங்களது சொந்தத்திலேயே, தங்களைப் போலவே, தாய் தந்தை இல்லாத தேவியைத் திருமணம் செய்து கொண்டார் ஸ்ரீநிவாசன்.

தேவியும், ஜானகியைத் தன் சகோதரியாக நடத்த ஒரு இனிய குடும்பம் உருவானது. அடுத்த ஒரு வருடத்தில், ஸ்ரீநிவாசனுக்கும், தேவிக்கும் மகேந்திரன் பிறந்தான்.

பிள்ளைப் பேரில், உடல் நலம் குறைந்த தேவிக்கு உதவியாக இருந்தது மட்டுமன்றி, மகேந்திரனை வளர்க்கும் பொறுப்பையும், ஜானகி சந்தோஷமாகவே ஏற்றுக் கொண்டார்.

மகேந்திரனும், அன்னையை விட அத்தையிடம் அதிக ஒட்டுதலாக இருந்தான்.

ஜானகி, கல்லூரிப் படிப்பை முடிக்கும் தருவாயில், அவர்களது சீனியர் மாணவன் புருஷோத்தமன், தனது காதலைச் சொல்ல, முதலில் தயங்கினாலும், தங்களைப் போலவே, தாய் தந்தையின்றி வளர்ந்தவன் என்பதால்,

ஜானகியின் மனம் இளகியது. அண்ணனிடம் வந்து பேசுங்கள் என்று ஜானகி சொல்லிவிட, வீட்டுக்குப் பெண் கேட்டு வந்த புருஷோத்தமனைப் பற்றி விசாரித்த ஸ்ரீநிவாசனுக்கு அவ்வளவு திருப்தி இல்லை.

''வசதி இல்லை என்றால் கூடப் பரவாயில்லை. ஜானும்மா!'' விசாரித்தவரை, பையனுக்கு குடிக்கிற பழக்கம் இருக்கு என்று சொல்றாங்க!'' என்று ஸ்ரீநிவாசன் மறுத்து விட ஜானகியும், தன் அண்ணன் பேச்சை மீற விரும்பவில்லை.

புருஷோத்தமன் அத்தோடு விட்டு விடவில்லை!

''ஜானு! அம்மா அப்பா என்று கண்டிக்க இல்லாததால் இந்தப் பழக்கம் எல்லாம் வந்துடுச்சு! நீ என்னைக் கல்யாணம் செய்த பிறகு, இதெல்லாம் தொடவே மாட்டேன்!'' சத்தியம் செய்து ஜானகியின் மனத்தைக் கரைக்க முயற்சி செய்ய,. எறும்பூற கல்லும் தேயும் என்பதற்கிணங்க, ஜானகியின் மனமும் இளகியது.

''ப்ளீஸ் அண்ணா! இனிமேல் குடிக்கவே மாட்டேன் என்று சொல்றார் அண்ணா! அவரும் நம்மை மாதிரி தான் அண்ணா! மனைவி, குடும்பம் என்று வந்து விட்டால், எல்லாம் சரி ஆகிடும் அண்ணா!'' என்று அண்ணனிடம் வாதாடிய ஜானகியின் மனம் புருஷோத்தமனிடம் இளகி விட்டது என்பதை உணர்ந்த ஸ்ரீநிவாசனும், தன் பங்குக்கு, புருஷோத்தமனிடம், அறிவுரை சொல்லித் திருமணம் செய்து வைத்தார்.

திருமணத்துக்கு முன், சத்தியம் எல்லாம் செய்து ஜானகியை சம்மதிக்க வைத்த, புருஷோத்தமன் தனது சத்தியத்தைக் காப்பாற்ற எந்த முயற்சியும் செய்யவில்லை என்பது விரைவிலேயே ஜானகிக்கு தெரிய வந்தது.



அவரும் தன்னால் இயன்றவரை, மிரட்டி, கெஞ்சி, கனிவாகப் பேசியும் எந்தப் பலனும் இருக்கவில்லை!

''அண்ணன் வேண்டாம் என்றதும் என்னை விட்டு விட நினைச்சே இல்லை? இப்போ என்ன செய்வே?'' வக்கிரமாகப் பேசிய கணவனின் மற்றொரு முகம் தெரிய வந்தபோது, ஜானகி அதிர்ந்து போனார்.

இதற்கிடையில், மதுமிதாவும் பிறந்து விட, இனி மேலாவது பொறுப்புடன் நடந்து கொள்வார் என்ற ஜானகியின் நம்பிக்கையைத் துடைத்தெறியும் வண்ணம் புருஷோத்தமனின் செயல்கள் அமைந்தன.

தான் தேர்ந்தெடுத்த வாழ்க்கை! தானே தான் வரும் சிரமங்களையும் சமாளிக்க வேண்டும் என்றெண்ணி, ஜானகி அண்ணனிடம் எல்லாவற்றையும் மறைக்க, அதுவே புருஷோத்தமனுக்கு மேலும் தைரியத்தைக் கொடுத்தது.

தங்கை சொல்லாவிட்டாலும், விஷயம் அறிந்து ஸ்ரீநிவாசன், தங்கையின் கணவரிடம் பேச, அவரையும் அவமானப் படுத்தி அனுப்பி வைத்தார் அவர்.

தங்கையைத் தன்னோடு வந்து விடும்படி ஸ்ரீநிவாசன் அழைக்க, ஜானகியின் குற்ற உணர்வு அவரை அங்கே போக விடாமல் தடுத்தது. ஆனால்... கணவனது குடிப் பழக்கம் ஒரு நாள் அவரது உயிரை ஒரு விபத்தில் குடித்த போது, வெகு விரைவிலேயே அவர் அண்ணனைத் தேடிச் செல்லும்படி ஆனது.

கணவன் இறந்தது ஒரு புறம், அண்ணனுக்கு பாரமாக வந்து விட்டோம் என்ற குற்ற உணர்வு ஒரு புறம் வாட்டி எடுக்க, சோர்ந்து போய் இருந்த ஜானகிக்கு, ஊக்கமும் தைரியமும் கொடுத்து, சோகத்தில் இருந்து மீள வைத்தவர்கள், ஸ்ரீநிவாசனும் தேவியும்தான்.

தங்கையையும், அவரது குழந்தையின் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள ஸ்ரீநிவாசனுக்கு தயக்கம் இல்லை என்றாலும், தங்கையை அவரது சொந்தக் காலில் நிற்க வைப்பதுதான், அவளுக்கு நல்லது என்றுணர்ந்த ஸ்ரீநிவாசன், ஜானகிக்கு வங்கித் தேர்வு எழுத ஊக்கம் கொடுத்தார்.

அண்ணனின் முயற்சி புரிந்து, ஜானகியும் தனது சோகத்தை விடுத்து முயற்சி செய்ததில், அடுத்த ஒரு வருடத்திலேயே வங்கியில் வேலை கிடைத்தது. தபால் மூலம், மேற்கல்வியையும் தொடர்ந்தார்.

மகேந்திரன், மீண்டும் அத்தையின் செல்லப் பையன் ஆனான்.

மதுமிதாவுக்கு, மாமா அத்தையின் செல்லம் கிடைத்தது.

அடுத்த பத்து வருடங்கள், அவர்களது வாழ்வில் வசந்தம் வீசியது.

ஸ்ரீநிவாசனும், தேவியும் மகேந்திரனை விட அதிகமாக, மதுமிதாவைக் கொண்டாடினர். அவளுக்கு தந்தை இல்லாத குறையே தெரியாமல் வளர்த்தனர்.

ஸ்ரீநிவாசன் முதன் முதலில் கார் வாங்கியபோது, முன்னிருக்கையில் யார் அமர்வது என்று மது மற்றும் மகேந்திரனுக்கு இடையில் போட்டி நடக்கும்.

ஸ்ரீநிவாசனும், தேவியும் மதுவுக்கு ஆதரவாக இருந்தாலும், ஜானகி அதை மறுப்பார்.

''அவனும் குழந்தைதானே அண்ணி...'' முறைத்துக் கொண்டு நின்ற மகேந்திரனுக்கு ஆதரவு கொடுத்த தோடு, ''ஒரு நாள் மது... ஒரு நாள் நீ... மாற்றி மாற்றி உட்கார்ந்துக்கணும்... சரியா?'' என்று சமரசம் செய்து வைப்பார்.



ஒரு நாள், காரில் வெளியே செல்லும்போது, மற்றவர்கள் வருவதற்குள், மகேந்திரன் முன்னிருக்கையில் ஏறி அமர்ந்து விட, அன்று தன்னுடைய முறை என்று அவனிடம் சண்டையிட்டாள்.

மகேந்திரனுக்கு உண்மையில், அன்று யாருடைய முறை என்று நினைவில் இல்லை!

''இருக்கட்டுமே, அதனால் என்ன? இது எங்கப்பா கார்! நான்தான் முன்னாடி உட்காருவேன்!'' என்று விட்டான்.

''இது எங்க மாமா கார்! நான்தான் உட்காருவேன்!'' மதுவும் பதிலுக்குச் சொல்ல,

''போடி! இது எங்க வீடு! எங்க கார்! எனக்குதான் உரிமை அதிகம்!'' மகேந்திரன் சொன்னபோது, அவனது கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விழுந்தது.

அடித்தது, மதுவோ, ஜானகியோ, ஸ்ரீநிவாசனோ அல்ல! தேவி மகேந்திரனின் அன்னை!

பிள்ளைகளை அடிக்கும் பழக்கம், அவர்கள் குடும்பத்தில் யாருக்குமே இல்லை என்பதால், மற்றவர்கள் திகைத்து நின்றுவிட, அதிர்ந்து நின்ற மகேந்திரனை, ஜானகிதான் அழைத்துச் சென்று ஆறுதல் படுத்தினார்.

மகேந்திரனின் வார்த்தைகளோடு, அத்தை அவனை அறைந்ததும், சேர்ந்துகொள்ள, மது அதிர்ந்து போய் அழ ஆரம்பித்தாள்.

ஸ்ரீநிவாசன் அவளை அழைத்து, ''மகேன் எதோ தெரியாம சொல்லிட்டான், மதுக்குட்டி! இந்த வீட்டில் இருக்கிற எல்லாத்திலையும், அவனுக்கு இருக்கிற அதே அளவு உரிமை உனக்கும் இருக்கு!'' ஆத்மார்த்தமாக

அவர் சொன்னபோது, அவளுக்குத் தெளிவாக விளங்கா விட்டாலும், பிற்காலத்தில் அதை தெள்ளத் தெளிவாக அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

தான் சொன்ன வார்த்தைகள் தவறு என்று புரிந் தாலும், அதிர்ந்து கூடப் பேசாத தன் அன்னை, தன்னை அடித்தது மகேந்திரனுக்குக் கோபத்தை வரவழைத் திருந்தது. அன்னையிடம் முகம் கொடுத்துப் பேசாமல் அவன் ஒதுங்கிப் போக, இரண்டு நாட்கள் அமைதியாக இருந்த தேவி, மூன்றாம் நாள் அவனை அழைத்துப் பேசினார்.

''மகி! நீ பிறந்த சமயத்தில், அம்மாவுக்கு ரொம்ப முடி யாமல் போயிடுச்சுப்பா! அப்போ, உங்க அத்தைதான் என்னை மட்டுமல்லாமல், உன்னையும் கண்ணுக்கு கண்ணா பார்த்துகிட்டா... அப்படிப்பட்டவளோட பொண்ணுக்கு இந்த வீட்டில் உரிமை இல்லைன்னு நீ சொன்னதும், எனக்குக் கோபம் வந்துடுச்சு! உன்னை அடிச்சது தப்புதான் கண்ணா! ஆனால், நீ சொன்னதும் தப்புப்பா! நீ சின்ன பிள்ளைதான்! ஆனால், மது உன்னை விடவும் சின்ன பிள்ளை இல்லையா? அவ ளுக்கு நீ சொன்னது எவ்வளவு வருத்தமா இருந் திருக்கும்... நீயே சொல்லு?'' மென்மையாக அவர் புரிய வைக்க, மகேந்திரன் அன்னையின் கையைப் பற்றிக் கொண்டான்.

''சாரிம்மா! நான் சொன்னது தப்புதான்! இனிமேல் அப்படி நடந்துக்க மாட்டேன்!'' என்றவன், அத்தோடு எதிலும், அவளோடு போட்டி போடுவதை நிறுத்திக் கொண்டான்.

மகேந்திரன் ஒவ்வொரு விஷயத்திலும் விட்டுக் கொடுக்கத் துவங்க, முதலில் அதில் சந்தோஷப் பட்ட



மதுவுக்கு, போகப் போக, தனக்கும் மகேந்திரனுக்கும் இடைவெளி உண்டானதைப் போன்ற உணர்வு தோன்றியது.

கொஞ்ச நாள் கழித்து, மகேந்திரனிடம் சென்றவள், ''ப்ளீஸ்... நீ முன்னாடி மாதிரியே என்கூட போட்டி போடு... சண்டை போடு! அதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு! இப்போ இருக்கிறது எதோ மாதிரி... நான் யாரோ... நீ யாரோ என்கிற மாதிரி இருக்கு!'' என்றாள்.

மதுவின் வார்த்தைகளைக் கேட்டு மகேந்திரனுக்கும் திகைப்புத்தான்! ஏனெனில் அவனுக்குமே, அந்த மாதிரி எண்ணம்தான் தோன்ற ஆரம்பித்திருந்தது.

சிரித்தபடி, ''டன்!'' என்று கட்டை விரலை காட்டி யவள், பழைய மகேந்திரனாக மாறிப் போனான்.

இடையில் அமைதியாக இருந்தவர்கள், மீண்டும் சண்டை இட்டுக் கொள்ள ஆரம்பித்ததும், பெரியவர்கள் மலர்ந்து போனார்கள்.

மகேந்திரனைக் கேலி செய்யாவிட்டால், மதுவுக்கு பொழுது போகாது. மதுவை வம்பிழுக்கா விட்டால், அவனுக்குத் தூக்கம் வராது. ஆனால், இது வீட்டுக் குள்தான். வெளியே, வேறு யாரும் மகேந்திரனைக் குறை சொன்னால், மது பொறுத்துக் கொள்ள மாட்டாள். மகேந்திரனும், மதுவை யாராவது ஏதாவது சொன்னால், உண்டு இல்லை என்று செய்து விடுவான், என்பது தெரிந்ததும், பெரியவர்களின் கவலை அகன்றது.

இருவரும் ஏட்டிக்கு போட்டியாக சண்டை போட் டாலும், உள்ளுக்குள் பாசம் கொண்டவர்கள் என்பதில், பெரியவர்களுக்கும் பெருமிதமே!

அவர்களுக்கு பெருமிதம் சேர்க்கும் வகையில், இருவரும் படிப்பிலும் கெட்டிக்காரர்களாக இருந்தனர்.

எல்லாம், சந்தோஷமாக போய்க் கொண்டிருந்த நேரத்தில்தான், அந்த துரதிர்ஷ்டமான நிகழ்வு நடந்தது.

ஒரு திருமணத்துக்குச் சென்று விட்டு காரில் வரும் போது, ஒரு விபத்தில், ஸ்ரீநிவாசனும், தேவியும் மாண்டு போனார்கள்.

மகேந்திரனுக்கு அப்போது வயது பதினைந்து. மதுவுக்கு பதினொன்று!

ஜானகியோடு, மகேந்திரனும், மதுவும் கூட விபத்து நடந்த இடத்துக்குச் சென்றார்கள். இருவருக்கும், அந்த விபத்து ஆறாத வடுவாக மனதில் பதிந்தது.

மது, அழுகையில் தனது வேதனையை, வெளிப்படுத்த. இரண்டும் கெட்டான் வயதில் இருந்த மகேந்திரனுக்கு. தன் காயத்தை வெளிப்படுத்தும் வகை தெரியாமல் போனது.

அதிர்ச்சியில் இருந்து மீளாமல் இருக்கும் அத்தைக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்ற பொறுப்பை உணர்ந்தாலும், ஈடு செய்ய முடியாத இழப்பை அவனால், தாங்கிக் கொள்ளவும் இயலவில்லை. மதுவைப் போல வாய் விட்டு அழுதால் நன்றாக இருக்குமோ என்று ஏங்கியபடி, இறுகிய முகத்தோடு வளைய வந்தான்.

அண்ணனின் ஊக்கத்தால் வங்கியில் வேலைக்குச் சேர்ந்து, மேற்படிப்பு படித்து, பதவி உயர்வு பெறும் அளவுக்கு தகுதியை வளர்த்துக் கொண்டாலும், பண விவகாரத்தில் ஜானகி தலையிட்டதில்லை.



வாங்கும் ஊதியத்தை, அப்படியே அண்ணனிடம் கொடுத்து விடுவதுதான் அவரது வழக்கம். மாதச் செலவுக்கென்று அண்ணனிடம் ஒரு தொகையைப் பெற்றுக் கொள்வதோடு சரி.

ஸ்ரீநிவாசன், ''நீயும்... பண விவகாரம் எல்லாம் தெரிஞ்சிக்கணும் ஜானும்மா!'' என்று பலமுறை வற்புறுத்தினாலும், ''ப்ளீஸ் அண்ணா! பேங்கில் பார்க்கிறதே போதும்! வீட்டில் நீங்களே பாருங்க!'' என்பார்.

அவ்வப்போது, காப்பீட்டு திட்டம் வைப்புத் தொகை என்று ஏதாவது முதலீடு செய்யும்போது, அண்ணன் சொல்லும் இடத்தில் கையெழுத்து போடுவதோடு சரி.

''என்ன... ஏது என்று பாரும்மா!'' சின்ன கண்டிப்புடன் ஸ்ரீநிவாசன் சொல்லும்போது கூட, ''என்னோட வாழ்க்கையில், உங்களை விட யாருக்கு அண்ணா அக்கறை இருக்கப் போகுது?'' என்று முடித்து விடுவார்.

பண விவகாரத்தை, தானே பார்த்து ஆக வேண்டும் என்ற நிலை வந்த நேரத்தில், ஸ்ரீநிவாசன் செய்து வைத்திருந்ததைப் பார்த்த போது, ஜானகி உண்மையிலேயே அதிர்ந்துதான் போனார்.

ஜானகி அண்ணனிடம் கொடுத்த சம்பளம் முழுதும், ஜானகியின் பெயரில் ஒரு வங்கிக் கணக்குத் தொடங்கப்பட்டு, அதில் வரவு வைக்கப்பட்டு, ஜானகி, மது இருவரின் பெயரில், வைப்பு நிதி, மற்ற முதலீடுகள் என முதலீடு செய்யப்பட்டிருந்தது.

வேறு எந்த செலவுக்கும், ஜானகியின் சம்பளம் பயன்படுத்தப்பட்டதற்கான அறிகுறியே இல்லை! ஏன், அண்ணன் தனக்கு மாதச் செலவுக்கென்று கொடுக்கும்

தொகை கூட, தன் சம்பளத்தில் இருந்து இல்லை என்பது புரிந்ததும், ஜானகி வாயடைத்துப் போனார்.

தங்களுடைய தேவைகளும், அண்ணனே பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து, ஜானகியின் கண்கள் கசிந்தது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, மகேந்திரனுக்கு என்று என்ன என்ன சேமிப்பு இருக்கிறதோ, அதே போல மதுவுக்கும் செய்யப்பட்டிருந்தது.

அண்ணனின் அன்பில், ஜானகிக்கு அவருடைய இழப்பு மேலும் அதிகமாகத் தெரிந்தது.

இங்கே, பணம் மட்டும் விஷயமில்லை! மகேந்திரனைப் போலவே, மதுவையும் அவர் நினைத்த அவரது மனம், எவ்வளவு உயர்வானது!

இந்த வீட்டில், மகேந்திரனுக்கு இருக்கும் அதே உரிமை. மதுவுக்கும் இருக்கிறது என்று அண்ணன் சொன்னது வெறும் வாய் வார்த்தை இல்லை என்பதைக் கண்கூடாக, ஜானகி உணர்ந்தார்.

அண்ணன் செய்து வைத்திருந்த ஏற்பாட்டை எல்லாம் பார்த்த பிறகு, ஜானகி ஒரு முடிவுக்கு வந்தார்.

ஈடு செய்ய முடியாத இழப்பை எண்ணித் தானும் வருந்திக் கொண்டு, குழந்தைகளையும் வருத்துவதை விட, அண்ணன் இருந்திருந்தால், பிள்ளைகளை எப்படி வளர்த்திருப்பாரோ, அதே அளவு தானே, தாயும் தந்தையுமாக இருந்து அவர்களைத் தன்னம்பிக்கையுடன் வளர்க்க வேண்டும் என்று உறுதி கொண்டார்.

தன் வருத்தத்தை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, பிள்ளைகளுக்கு தாயும் தந்தையுமாக மட்டும் இல்லாமல், நல்ல தோழியாகவும் இருக்க முயன்றார்.



அவரது முயற்சி புரிந்து, பிள்ளைகளும் தங்கள் பங்குக்கு, ஜானகிக்கு ஆதரவாக இருக்க, மீண்டும் அந்தக் குடும்பத்தில் சந்தோஷப் பூ மலர ஆரம்பித்தது.

ஜானகி, பிள்ளைகள் இருவருக்கும் கட்டுப்பாடு என்று எதற்கும் விதித்ததில்லை!

இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று கட்டளை இடாமல், இதைச் செய்தால் இப்படி ஆகும் என்று மென்மையாகவே அவர்களை உணர வைத்து விடுவார்.

ஆனால், இரு விஷயங்களில் மட்டுமே அவர் கண்டிப்புடன் இருந்தார்.

ஒன்று குடிப்பழக்கம். அது இருக்கவே கூடாது என்பதை மட்டும் கண்டிப்புடன் மகேந்திரனிடம் ஜானகி சொல்லி இருந்தார்.

மற்றொன்று காதல்: எந்த வகைத் திருமணம் செய்தாலும் பிரச்சனைகள் வரும் என்பதை உணர்ந்து இருந்தாலும், அவரது சொந்த அனுபவம் அவரைக் காதல் திருமணம் என்றாலே வெறுப்படைய வைத்தது. காதல் என்ற பெயரில் தன் பிள்ளைகள் தவறான ஆளைத் தேர்ந்தெடுத்து விட்டு வாழ்க்கையைத் தொலைத்து விடக் கூடாது என்பதால், இந்த விஷயத்திலும் அவர் கண்டிப்பாகவே இருந்தார்.

கல்லூரியில் படிக்கும்போது, ஒரு நாள் மகேந்திரன் நண்பர்களின் வற்புறுத்தலால் பீர் அருந்திவிட்டு வர, அது தெரிந்ததும் ஜானகி அவனிடம் கோபம் கொண்டு திட்டவில்லை. ஆனால், அவனிடம் பேசுவதை நிறுத்தி விட்டார். அத்தை கோபமாக இருக்கிறார் என்று மகேந்திரனும் ஒதுங்கிப் போக, அந்த நிலை ஒரு வாரம் தொடர்ந்ததும், மகேந்திரனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

''ஒரு பீர் குடிச்சதுக்கே அத்தை இப்படி என்னை தண்டிக்கணுமா மது? எதோ குடிகாரனை ட்ரீட் செய்யற மாதிரி...'' என்று மதுவிடம் மகேந்திரன் பொருமிக் கொண்டிருந்த போது, ஜானகி அங்கே வந்துவிட மகேந்திரன் அமைதியானான்.

''இன்னைக்கு பீர் குடிச்சான்... நாளைக்கு பிராந்தி குடிப்பான்! நான் எதுவும் கண்டுக்கக் கூடாது... அப்படித்தானே?'' மதுவைப் பார்த்த வண்ணம் வினவிய ஜானகியின் குரலில் இருந்த வேதனை மனதைப் பிசைய,

''அப்படி இல்லை அத்தை'' என்று மகேந்திரன் எதோ சொல்லத் துவங்கும்போது, ஜானகி இடையிட்டார்.

''மகேன்.. குடிகாரனா ஆகணும் என்று யாரும் குடிக்க ஆரம்பிக்கிறதில்லை! ஆனால், கெட்ட பழக்கங்கள் எப்பவுமே சீக்கிரமா பழகிடும்! குடி போதை என்பது ஒரு அரக்கன் மாதிரி! அது நம்ம உடலோட மனசையும் பாழ் அடிச்சிடும்! அதை அனுபவத்தில் உணர்ந்தவ நான்! உங்க மாமா போனதுக்கு அப்புறம், அண்ணன் மட்டும் இல்லைன்னா, கையில் ஒரு சின்ன குழந்தையோட, பெரிய படிப்பு கூட இல்லாமல் நான் என்ன ஆகி இருப்பேனோ தெரியாது! எதோ, எனக்கு தெய்வமா அண்ணன் இருந்தார்... அது மாதிரி எல்லாருக்கும் அமையுமா, சொல்லு? அந்தப் பழக்கம் எல்லாம் வேண்டாம்பா... உங்க அப்பா இருந்திருந்தால் உன்னை எப்படி வளர்த்திருப்பாரோ அப்படி உன்னை வளர்க்கணும் என்று நான் ஆசைப்படறேன்... என் வளர்ப்பே தப்போ என்று என்னை நினைக்க வைத்து விடாதே!''

ஆதங்கத்துடன் ஜானகி பேசி முடித்ததும், அவரது கையைப் பற்றிக் கொண்டு ''சாரி அத்தை! இனிமேல்



சத்தியமா அந்தப் பழக்கம் எல்லாம் வைத்துக் கொள்ள மாட்டேன்!'' என்று உறுதி அளித்ததும்தான் ஜானகி மழையபடி அவனிடம் பேசத் தொடங்கினார்.

ஜானகியைப் பற்றிய நினைவுகளோடு, உணவருந்தி முடித்துவிட்டு, இருவரும் வெளியே வந்தபோது, மழை வாத் தொடங்கி இருந்தது.

''அச்சோ! என்ன மகேன் இது? இப்போ போய் மழை வந்துடுச்சு! இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு வந்திருக்கக் கூடாதா?'' மது சலித்துக் கொண்டாள்.

''இதுக்குதான்... கார் வாங்கணும் என்று சொல்றேன்! நீ கேட்டால்தானே?'' மகேந்திரன் சொன்னதும், மதுவின் முகம் இறுகியது.

''உன்னை யார் வாங்க வேண்டாம் என்று சொன்னது?''

''ஒரு சுவீட்டில், இருக்கிறது மூணு பேரு! எங்கேயாவது வெளியே போனால், கார் வசதியா இருக்கும் என்றுதான் அதை வாங்கலாம் என்று நினைக்கிறதே! நீ காரில் ஏற மாட்டாய் என்று அடம் பிடிக்கும்போது, எப்படி வாங்கறதாம்?''

புன்சிரிப்புடன், மகேந்திரன் சொன்னதும், தன் மாமா மற்றும் அத்தையும் இறந்த விபத்தில் சிக்கி சின்னாபின்னமாகி இருந்த அவர்களது கார் நினைவு வந்து மதுவின் கண்களில் நீர் துளிர்த்தது.

''ஷ்... மது... என்னடா? அதையே நினைச்சிட்டு இருந்தால் எப்படிம்மா?'' மகேந்திரன் அவளது தோளைப் பற்றி ஆதரவாக அழுத்த ''அதை மறக்கிறது. அவ்வளவு சுலபமா என்ன?'' என்றவள் குரல் தழுதழுத்தது.

அன்றைய நாளின் நினைவில், மகேந்திரனுக்கும் கண்கள் கரித்தது.

ஆனால், அதைப் பற்றிப் பேச ஆரம்பித்தால், மது மேலும் கலங்கிப் போவாள் என்று உணர்ந்தவனாக, ''வா மது... மழை நிற்கிற மாதிரி இருக்கு... சீக்கிரம் கிளம்பலாம்!'' என்று அழைத்தான்.

பழைய நினைவுகளில் மூழ்க விரும்பாதவளாய், கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''என்ன இப்பதான் வந்தது.. அதுக்குள்ளே நிற்குது?'' என்று ஆச்சரியப்பட்ட படியே, மது அவனோடு நடந்தாள்.

''அது ஒண்ணும் இல்லை மத்து! மழைக்கு போட்டியா நீ டேமை திறந்துவிட ஆரம்பிச்சதைப் பார்த்து, அதுக்கு இவளோடு போட்டி என்று மழை நின்னுடுச்சு என்று நினைக்கிறேன்!'' சீரியசான குரலில் சொல்லிவிட்டு மகேந்திரன் சிரிக்க ஆரம்பித்தான்.

பட்டென்று அவன் முதுகில் ஒரு அடி வைத்த மது, ''எதுக்கெடுத்தாலும், எதுக்குடா என்னை கிண்டல் செய்யறே?'' என்று மீண்டும் கையை ஓங்க, சட்டென்று அவளது கையைப் பற்றிய மகேந்திரன்,

''மது... உன்னோட தோசை தண்டனையில் இருந்து தப்பிக்க வைச்சு, உனக்கு பிடிச்சதெல்லாம் வாங்கி தந்த என்னை, இப்படி அடிக்கலாமா?'' கேலியுடன் கேட்டு விட்டு, அவளது கையை மேலும் கெட்டியாகப் பற்றிக் கொள்ள, ''யே! மக்கு! விடுடா!'' என்று கையை விடுவித்துக் கொள்ள மது முயற்சி செய்தாள்.

''அடிக்க மாட்டேன் என்று சொல்லு! அப்பத்தான் விடுவேன்!'' பேரம் பேசினான் மகேந்திரன்.

''பாவி! வலிக்குதுடா! அடிக்க மாட்டேன்! விட்டுத் தொலை!'' எரிச்சலுடன் மது சொன்னதும், மெல்ல அவளது கைகளை விடுவித்தவன், ''மது! வாக்கு மாறக் கூடாது!'' என்றபடியே, வண்டியை எடுக்கச் சென்றான்.



அவர்களது விளையாட்டை சற்று தொலைவில் இருந்து, வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்த இரு விழிகளில் வலி நிறைந்தது.



## 3

தங்கையின் கல்லூரி விழாவில் மதுவைக் கண்ட நாளில் இருந்து, சத்யநந்தனின் மனம் ஒரு நிலையில் இல்லை.

மதுவைப் பற்றி நினைக்கக் கூடாது என்று நினைக்க நினைக்க, அவளைப் பற்றிய எண்ணம் கூடியதே தவிர குறையவில்லை.

மதுமிதாவின் புன்னகை நிறைந்த முகம் அடிக்கடி மனதில் தோன்றி, அவனை எந்த வேலையிலும் முழு மனதோடு ஈடுபட விடாமல் செய்தது.

விழா முடிந்த பிறகு, தங்கையை வீட்டில் விட்டு விட்டு, தொழில் முறை உணவுக்காக, ஒருவருடன் பிரபல உணவு விடுதிக்குச் சென்ற சத்யா, மீண்டும் மதுவைப் பார்க்க நேர்ந்தது.

தன்னுடன் வந்த வாலிபனோடு அவள் கையைப் பிடித்துக் கொண்டு உரிமையாக சண்டையிட்டதையும், பின் அவனோடு வண்டியில் சென்றதையும் பார்த்த பிறகு சத்யாவுக்கு, அன்று இரவு உறக்கம் வரவில்லை.

மதுவுடன் இருந்தது யாராக இருக்கும் என்ற கேள்வி அவனைத் தூங்க விடவில்லை. கல்லூரி வாசலில் பார்த்தபோது, அவனது முகம் அவனுக்கு சரியாகத் தெரியவில்லை என்றாலும், உணவு விடுதியின் பார்க்கிங்கில் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, மதுவுடன்

பேசிக் கொண்டிருந்தவனின் முகத்தை நன்றாகவே பார்க்க முடிந்தது.

கம்பீரமானவனாகத் தான் தெரிந்தான். இருவரும் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்று காதில் தெளிவாக விழாவிட்டாலும், அவன் மதுவை ஏதோ கேலி செய்கிறான் என்று சத்யாவுக்குப் புரிந்தது. மது விடம் அவ்வளவு உரிமையாக கேலி பேசியவனின் மேல், கொஞ்சம் பொறாமை கூட வந்தது. வாழ்வில் முதல் முறையாக, பொறாமை என்ற உணர்வை அனு பவித்தான்.

இந்த மாதிரி தானும் மதுவுடன் கேலியாகப் பேசிச் சிரிக்கும் சந்தர்ப்பம் அமையுமா என்ற ஏக்கம் எழுந்த போதுதான், சத்யாவுக்கு தன் மனம் முழுமையாகப் புரிந்தது.

அழகும் திறமையும் நிறைந்த ஒரு பெண்ணைப் பார்த்த மயக்கத்தில், அவள் மனைவியாக வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது போல என்று தனக்குத்தானே இரண்டு நாட்களாகச் சொல்லிக் கொண்டிருந்தவனுக்கு, அவளைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும், தன் மனதில் இருப்பதை வெளிப்படை யாகச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் நொடிக்கு நொடி மிகுந்து கொண்டே இருந்தாலும், இதுதான் காதலா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

இதுதான் காதல் என்று யாராலும் வரையறுக்க முடி யுமா என்ன? அது அவரவர் உணர்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்று அடிக்கடி அவனது நண்பன் சொல்லுவதுண்டு.



அப்போதெல்லாம், கேலியாக தென்பட்ட அவனது வார்த்தைகள், இப்போதைக்கு சத்யாவுக்கு அர்த்தம் மிகுந்தவையாகத் தோன்றின.

என்ன இருந்தாலும், படிப்பு முடியும் வரை அவளை எந்த வித தொந்தரவும் செய்யக் கூடாது என்று மன துக்குள் முடிவெடுத்தவன், இந்த ஒரு மாதம் அவளைப் பார்க்கவும் முயற்சி எடுக்கக் கூடாது என்று தீர்மானித் தான். ஆனால், அடுத்த நாளே, அவளைப் பார்க்கும் வாய்ப்புத் தானாக அமையப் போகிறது என்று அவ னுக்குத் தெரிந்திருக்கவில்லை.

மதுவைப் பற்றிய எண்ணங்களில் மூழ்கி இருந்த வனை, அன்னை சுமித்ராவின் கேள்வி, தன்னிலைக்கு மீட்டு வந்தது.

"அடுத்த வாரம் நான் சொல்லி இருந்த பெண்ணை பார்க்கப் போகலாமா சத்யா? ஜாதகம் எல்லாம் நல்லா பொருந்தி இருக்கு என்று அவங்க வீட்டில் சொன்னாங்க! நீ என்ன சொல்றே?"

அன்னையின் கேள்வி முதலில் சத்யாவுக்குப் புரிய வில்லை.

"எந்தப் பொண்ணும்மா?" குழப்பத்துடன் கேட்ட வனை, ஆச்சரியத்துடன் பார்த்த சுமித்ரா, "என்னப்பா இது? போன வாரம்தானே பேசிட்டு இருந்தோம்! போட்டோ கூட காட்டினேனே? எல்லா விஷயமும் ஒத்து வருதா என்று பாருங்கம்மா... அப்புறம் பெண்ணைப் பார்க்கலாம் என்று நீ கூடச் சொன்னாயே?" என்றார்.

சத்யாவுக்கு போன வாரம் அன்னை பேசியதும், ஒரு பெண்ணின் புகைப் படத்தைக் காட்டியதும் நினைவுக்கு வந்தது. ஆனால், என்ன யோசித்தும், புகைப் படத்தில்

பார்த்த அந்தப் பெண்ணின் முகம் நினைவுக்கு வர வில்லை. அவன் மனம் முழுக்க, மதுவின் முகம் நிறைந்திருக்கும்போது, வேறு பெண்ணின் முகம் எங்கே நினைவிலிருக்கும்?

அந்தப் புகைப் படத்தை அவன் அவ்வளவு கவனத்துடன் கூடப் பார்க்கவில்லை. பெண் வீட்டினர் ஜாதகத்தில் பெரிதும் நம்பிக்கை இருப்பவர்கள் என்று அன்னை சொன்னதும், ஜாதகம் பார்த்த பிறகு பெண்ணை நன்றாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று அவன் எண்ணியதும், நினைவுக்கு வந்தது. தெளிவாகப் பார்த்திருந்தால் கூட, மது மனதில் வந்த பிறகு, வேறு ஒரு பெண்ணின் முகம் இப்போது நினைவில் இருக்குமா என்று அவனுக்குச் சந்தேகமாகவே இருந்தது.

மகன் அமைதியாக இருக்கவும், ''என்ன சத்யா? எதுவும் சொல்ல மாட்டேங்கிறே?'' சுமித்ரா மீண்டும் வினவ, சத்யா தன் யோசனையில் இருந்து மீண்டான்.

''வந்து... ஒரு முக்கியமான புது ஆர்டர் போயிட்டு இருக்கும்மா! அது முடிஞ்சதும், பார்த்துக்கலாமே?'' என்று அன்னையிடம் அவன் சொல்ல, சுமித்ரா ஆச் சரியப்பட்டார்.

''அதுக்கும்... இதுக்கும் என்ன சம்மந்தம் சத்யா?'' அன்னையின் கேள்விக்கு சத்யாவிடம் பதில் இல்லை.

ஆனால், இன்னும் ஒரு மாதத்தில் மதுவின் படிப்பு முடிந்து விடும். அதன் பிறகே, அவளிடம் பேச முயற்சி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து இருந்தவனுக்கு, இப்போதைக்கு எந்தப் பெண்ணையும் பார்க்க மன மில்லை. இப்போதைக்கு என்ன? எப்போதுமே அந்த எண்ணம் வரப் போவதில்லை.



வெளிப்படையாக மனதில் இருப்பதைச் சொல்ல முடியாமல் தயங்கியவன், ''ப்ளீஸ்மா... இன்னும் ரெண்டு மாசம் இதை எல்லாம் தள்ளிப் போடக் கூடாதா?'' என்று வேண்ட மகனின் முகத்தில் இருந்த ஏதோ ஒன்று, அவரை சரி என்று சொல்ல வைத்தாலும்,

''அது வரைக்கும் பெண் வீட்டில் என்னப்பா சொல்றது?'' என்று கேள்வி கேட்கவும் தவறவில்லை.

''அவங்களை வேற இடம் பார்த்துக்கச் சொல்லுங் கம்மா!''

மகனிடம் இருந்து வேகமாக வந்த பதில், ஆச்சரியம் தந்தாலும், மகனது விருப்பத்தையே பிரதானமாக கருதும் சுமித்ராவும் வேறு எதுவும் பேசவில்லை. ஆனால், அவரது மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

திருமண விஷயம் பேச ஆரம்பித்ததில் இருந்து, எல்லாமே உங்கள் விருப்பம் என்று சொன்ன மகனின் பேச்சில் இப்போதிருந்த வித்தியாசத்தை அவரால் உணர முடிந்தது.

காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தவரின் அருகில் வந்து அமர்ந்த நித்யா, ''அம்மா... அண்ணன் ஏன் இப்போ பெண் பார்க்கிற வேலை எல்லாம் வேண்டாம் என்று சொல்றார் என்று உனக்குத் தெரியுமே!'' என்று பெருமை அடித்துக் கொள்ள,

''அப்படியா? என்ன விஷயம் நித்திம்மா?'' சுமித்ரா ஆச்சரியத்துடன் விசாரித்தார்.

''இங்கே பாருங்க!'' என்று தன் கைப்பேசியில் ஒரு புகைப்படத்தைக் காட்டியவள், ''எப்படி இருக்காங்க?'' என்று அன்னையிடம் வினவினாள்.

''ரொம்ப நல்லா இருக்கா பொண்ணு! யாரு உன்னோட பிரண்டா?''

''ம்ஹூம்!'' அழுத்தமாக மகள் தலை ஆட்டியதும்,

''வேற யாரு?'' சுமித்ரா வினவ, மர்மப் புன்னகை சிந்திய நித்யா, ''உங்களோட வருங்கால மருமகள்!'' என்று அறிவித்தாள்.

''ஹான்!'' என்று சுமித்ரா வாயைத் திறக்க, நித்யா கிளுக்கிச் சிரித்தாள்.

நித்யா, ''அம்மா! உலகமே தெரியுது! வாயைச் சீக்கிரம் மூடுங்க!'' என்றதும், ''வாலு...'' என்று அவளது கன்னத்தில் தட்டிய சுமித்ரா, ''விளையாடாதே நித்தி... பெண் பார்க்கலாமா என்று கேட்ட போது கூட உங்க அண்ணன் எதுவும் சொல்லலையே?'' என்று விசாரித்தார்.

''அப்போ அண்ணனுக்கே தெரியாதே!'' மகள் கை விரித்துச் சொன்னதும், சுமித்ராவின் முகம் மேலும் குழப்பத்தைக் காட்ட, ''இரண்டு நாள் முன்னாடி என் காலேஜ் விழாவில்தான் அண்ணன் மதுவைப் பார்த்தாங்க!'' என்று விளக்கினாள்.

''மது?''

கேள்வியுடன் அன்னை ஏறிட்டதும், ''நான் அடிக்கடி சொல்லுவேனாம்மா... என்னோட சீனியர்!'' என்று நித்யா சொன்னதுமே, சுமித்ராவின் முகத்தில் கண்டு கொண்ட அறிகுறி தெரிந்தது.

''ஆமாம்! ஆனால்... அவளை எப்படி?'' குழப்பம் விலகாமலே அவர் விசாரிக்க,

''அங்கே மதுவைப் பார்த்தவுடனே அண்ணன் ஃப்ளாட் ஆகிட்டார்?'' புன்னகையுடன் நித்யா, சத்யா மதுவை



வைத்த கண் வாங்காமல் பார்த்த விதத்தை விவரித்தாள்.

சுமித்ராவால் இன்னும் நம்ப முடியவில்லை.

''சே சே... இப்படி பார்த்த உடனே எல்லாம் காதல் வருமா என்ன? அதுவும் நம்ம சத்யாவுக்கு? அதெல்லாம் சான்சே இல்லை!''

உறுதியாகச் சொன்னவர், ''விவரம் தெரியாமல் ஏதாவது உளறிட்டு இருக்காதே நித்தி!'' என்று மகளை எச்சரிக்கவும் செய்தார்.

''அம்மா... அம்மா! நான் ஒண்ணும் உளறலை! உறுதி செஞ்சுட்டுதான் சொல்றேன்!'' நித்யா அழுத்தமாகச் சொல்லிய பிறகும், சுமித்ராவின் முகம் நம்பிக்கை இன்மையைக் காட்ட ''இந்த போட்டோ என்னுடைய மொபைல்ல எப்படி வந்தது தெரியுமா?'' என்றாள்.

''இதென்ன கேள்வி?' என்பது போல சுமித்ரா நோக்கியதும், ''சொல்லுங்கம்மா!'' என்று சலுகை கொண்டாடினாள் மகள்.

''நீதான் எடுத்திருப்பாய்!'' என்றார் சுமித்ரா.

''அதுதான் இல்லை! இது அண்ணன் எடுத்த போட்டோ!''

''உன் மொபைல்ல அவன் போட்டோ எடுத்தானா?''

''இல்லைம்மா! இந்த போட்டோவை நான் அண்ணன் மொபைல்ல இருந்து எடுத்தேன்?'' என்று நித்யா சொன்னதும்,

''ஐயோ! ஒழுங்கா விவரத்தைச் சொல்லித் தொலை! என் மண்டை வெடிக்குது'' என்று சுமித்ரா புலம்பியதும், ''சரி சரி! விவரமா சொல்றேன்!'' என்று நித்யா சொல்லத் தொடங்கினாள்.

''நேற்று என் போனை எங்கே வைத்தேன்னு தேடிட்டு இருந்தேன் இல்லை?'' என்று நித்யா ஆரம்பிக்கவும்,

''நித்தி... நீ இப்போ உதை வாங்கப் போகிறாய்?'' - சுமித்ரா விரல் நீட்டி எச்சரிக்கவும்,

''அம்மா! அண்ணன் விஷயத்தைத்தான் சொல்லப் போறேன்... கொஞ்ச நேரம் பொறுமையா இருங்க!'' என்று அன்னையைச் செல்லமாக அடக்க,

''சரிம்மா...'' என்றபடி சுமித்ரா வாயை ஒரு கையால் பொத்திக் கொள்ள, புன்னகையுடன் நித்யா சொல்லத் துவங்கினாள்.

''ரொம்ப நேரம் தேடியும் மொபைல் எங்கே இருக்குன்னு தெரியலையா.. சரி டேபிள் மேல் அண்ணன் போன் இருந்தது... ஒரு கால் செஞ்சு என் போன் எங்கே இருக்குன்னு பார்க்கலாம்னு அவர் போனை எடுத்தேனா...'' என்று சொல்லி விட்டு நித்யா நிறுத்த,

''ஹே! இதுக்கு மேலே சன்பென்ஸ் வைச்சே... செல்ல பொண்ணுன்னு கூடப் பார்க்க மாட்டேன்...'' என்று சுமித்ரா கையை ஓங்கினார்.

''இருங்கம்மா... இருங்க... இப்போதான் நீங்க எதிர் பார்த்த ட்விஸ்ட் வருது!'' என்று சொல்லி அவரது கன்னத்தைப் பிடித்து செல்லமாகக் கிள்ளி விட்டு விட்டு, ''அண்ணனோட ஸ்க்ரீன் சேவர்ல அண்ணியோட போட்டோ!'' என்றவளிடம், ''அண்ணியா?'' என்று சுமித்ரா வியந்தார்.

''அதாம்மா... மதுவோட போட்டோ!''

''உண்மையாவா சொல்றே, நித்தி?'' என்ற சுமித்ராவின் ஆச்சரியம் கூடியதே தவிர குறையவில்லை.



''அட... உங்களுக்கே இப்படி இருக்கே! அன்னைக்கு விழா முடியற வரை, நான் அண்ணன் பக்கத்தில்தான் இருந்தேன்... எனக்கே தெரியாமல், போட்டோஸ் எடுத்திருக்காருன்னு பாருங்கம்மா! அதுவும் ஒண்ணில்லை! ரெண்டில்லை! பத்து போட்டோஸ்! வேற வேற எக்ஸ்ப்ரஷன்ல!'' சொன்ன நித்யாவின் குரலிலும் ஆச்சரியம் இருந்தது.

''ஓ! அதான் முதல்ல கல்யாண விஷயம் பார்க்கும்போது உங்க இஷ்டம் என்று சொன்னவன், இப்போ பேக் அடிக்கிறானா?'' புன்னகையுடன் கேட்டு விட்டு, நித்யாவிடம் இருந்து கைப்பேசியை வாங்கி, மீண்டும் ஒரு முறை மதுமிதாவின் புகைப்படத்தைப் பார்த்தவரின் மனத்தில் திருப்தி நிலவியது.

''பொண்ணு அழகாதான் இருக்கா? குணம் எப்படி இருக்கும்மா?'' அக்கறையுடன் அன்னை விசாரிக்க, மதுவைப் பற்றிப் பேச நித்யாவுக்கு கசக்குமா என்ன?

கிடைத்தது வாய்ப்பு என்று, அவள் மதுவின் புகழைப் பாட ஆரம்பிக்க, அது வரை மதுவைப் பற்றி மகள் சொல்லும்போதெல்லாம், யாரோ ஒரு பெண்ணைப் பற்றி சொல்கிறாள் என்று அதிகம் கவனம் இல்லாமல் கேட்கும் சுமித்ரா, இன்று ஆர்வத்துடன் மகளின் பேச்சைக் கவனிக்கலானார்.

''அது கிட்ட அன்றைக்கு அண்ணன் பேசினானா, ஏதாவது?'' சுமித்ரா விசாரித்ததும்,

''ஐயோ அம்மா! பார்த்ததோடு சரி! அவர் பார்த்த விஷயத்தை வைத்து அவருக்குப் பிடிச்சிருக்கு என்றுதான் சொல்லுவேன்... ஆனால், அப்புறம், மதுவைப் பற்றி அண்ணன் என்கிட்டே எதுவும் கேட்கலை! எனக்கே

கொஞ்சம் ஏமாற்றமா இருந்தது... பட், நேற்று போட் டோஸ் பார்த்த பிறகு சந்தேகம், ஏமாற்றம் எல்லாம் போயே போச்சு! போயிந்தி! இட்ஸ் கான்!'' விளம்பர பாணியில் மகள் சொன்னதும், சுமித்ரா சிரித்தார்.

''எங்க குட்டிம்மா கூட அண்ணனுக்கு பொண்ணு பார்க்கிற அளவுக்கு பெரிய ஆள் ஆகிட்டாங்க போலவே!'' என்றபடி மகளின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளியவர், ''இப்பவே அப்பா கிட்ட சொல்லவா? உடனே அவங்க வீட்டிலும் போய் பேசலாம்!'' என்று பரபரத்தார்.

''அம்மா! சூப்பர் அம்மா! மதுவை உங்களுக்கும் பிடிக்கும் என்று நான் நினைச்சேன்!'' சந்தோஷத்துடன் சொன்னவள்,

''இன்னும் ஒரு மாசம் படிப்பு இருக்கும்மா! மதுவுக்கு அவங்க படிப்புக்கு ஏற்ற வேலை செய்யணும் என்ற ஆசை எல்லாம் இருக்கு! அத்தோட அண்ணன் கிட்ட எதுக்கும் பேசிடுங்க!'' என்று பெரிய மனித தோரணை யில் சொல்ல, ''சரிங்கம்மா!'' என்று பவ்யத்துடன் சொல்லி விட்டு சுமித்ரா சிரித்தார்.

* * *

அன்னையிடம் இப்போதைக்கு சினிமா விஷயம் வேண்டாம் என்று சொல்லி விட்டாலும், தெளிவாக அவரிடம் தன் நிலையை எடுத்துரைக்காத தன் நிலைமை சத்யாவுக்கு வருத்தமாக இருந்தது.

மதுவிடம் பேசி, அவளது சம்மதம் இல்லாமல் எப்படி இந்த விஷயத்தைச் சொல்வது என்ற எண்ணத்தில் இருந்தவன், மதுவுக்கும் தன்னைப் பார்த்ததும், பிடிக்க வேண்டும் என்று மனதுக்குள் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான்.



மதுவின் நினைவுகளுக்கு தற்காலிகமாக ஓய்வு கொடுத்துவிட்டு, வேலையைப் பார்க்கத் துவங்கியவனின் கைப்பேசி அழைப்பு வந்ததின் அறிகுறியாக இனிமை யான ஒலியெழுப்பியது.

கைப்பேசியை எடுத்தவன், தங்கள் ஆடிட்டர் மட்டுமல் லாது குடும்ப நண்பருமான சுந்தரமூர்த்தியின் அழைப்பு என்றதும், வேகமாக அழைப்பை எடுத்து, ''ஹலோ அங் கிள், எப்படி இருக்கீங்க?'' என்று உற்சாகமான குரலில் விசாரித்தான்.

''நல்லா இருக்கேன் சத்யா! நீ எப்படி இருக்கே?'' பதிலுக்கு விசாரித்தவர், விஷயத்துக்கு வந்தார்.

''நான் இந்த மாசம் அமெரிக்கா போறதால், உங்க கம்பெனி அக்கவுண்ட்ஸ் பார்க்க, என் ஜூனியர் ஒருத் தனை ஏற்பாடு செய்யறேன் என்று அப்பா கிட்ட சொல்லி இருந்தேன்! அவர் உன்கிட்ட பேசச் சொன்னார்!''

சுந்தரமூர்த்தி சொன்னதும், ''உங்களுக்கே ஓகே யானால், எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை அங்கிள்!'' என்ற சத்யாவை இடைமறித்தவர்,

''ரொம்ப திறமையான பையன்! நேர்மையானவனும் கூட! இருந்தாலும் ஒரு முறை நீயும் அவனை நேரில் பார்த்துடு! நானே உங்க ஆபீஸ்க்குக் கூட்டிட்டு வரேன்!'' என்றார்.

''ஷ்யூர் அங்கிள்... நாளைக்குக் காலையில் ஒன்பது மணிக்கு மீட் செய்யலாம்!'' என்ற விட்டு அழைப்பைத் துண்டித்தவன், ஸ்க்ரீன் சேவரில் மதுவின் முகம் வந்த தும் புன்னகையுடன் அதை நோக்கி விட்டு, மீண்டும் மடிக்கணினியில் ஆழ்ந்து போனான்.

* * *

''மது, ப்ளீஸ் மது! என் பாத்ரூமில் தண்ணி வரலை! நான் சீக்கிரம் குளிச்சிட்டு வந்திடறேன்! எனக்கு ஒன்பது மணிக்கு வானவில் ஆபீஸ் எம்.டி.யோட அப்பாயின்மென்ட் இருக்கு!'' மகேந்திரன் கெஞ்சிக் கொண்டிருக்க,

''எனக்கும் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு! சீக்கிரம் போகணும்! நீ போனால், ஒரு மணி நேரம் குளிச்சிட்டு இருப்பே! நான் முதல்ல குளிக்கப் போறேன்! சீக்கிரம் கிளம்பணும்னு நினைக்கிறவன் சீக்கிரம் எழுந்துக்க வேண்டியதுதானே?'' என்று மதுவும் வம்பிழுத்துக் கொண்டிருந்தாள்.

''ஹே! ப்ளீஸ் மத்து!'' பழக்க தோஷத்தில் மத்து என்று மகேந்திரன் அழைத்து விட, மது பல்லைக் கடித்தாள்.

''போனால் போகுதுன்னு உன்னை முதல்ல குளிக்கச் சொல்லலாம் என்று பார்த்தேன்! இப்போ கண்டிப்பா முடியாதுடா மக்கு!'' அழுத்தமாகச் சொல்லிவிட்டு அவசரமாக தன் குளியலறைக்குள் நுழைய எத்தனித்த வளை, கைப் பிடித்து தடுத்தான் மகேந்திரன்.

என்ன சத்தம் என்றபடி உள்ளே நுழைந்த ஜானகியின் செவிகளில், மது மக்கு என்று அழைத்தது விழ, ''மது இன்னொரு தரம் மகேனை அப்படிச் சொல்லாதே!'' என்று மகளை அதட்டினார்.

''என்னை அவன் மத்து அப்படிக் கூப்பிடறதை நிறுத்தச் சொல்லுங்க! அப்புறம் நான் நிறுத்தறேன்!'' என்று மது சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

''அவள் தான் முதல்ல என்னை அப்படிக் கூப்பிட ஆரம்பிச்சா! அவள் நிறுத்தினால்தான் நான் நிறுத்துவேன்!'' என்று மகேந்திரன் போர்க்கொடி தூக்கினான்.



''என்ன மகேன் நீ கூட?'' என்று ஜானகி குறைபட,

மகேந்திரனும் மதுவும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனர்.

''அவன் சீக்கிரம் கிளம்பணும் என்று சொன்னான், அவன்கிட்ட சண்டை போட்டுட்டு நிற்காதே!'' என்று ஜானகி சொன்னதும்,

''அம்மா! எப்பவும் அவனுக்கே சப்போர்ட் செய்யறதை விட்டுட்டு கொஞ்சம் நியாத்துக்கும் சப்போர்ட் செய்யுங்க!'' மது எரிச்சலுடன் சொன்னதும், ஜானகியும் மகேந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

''என்ன சிரிப்பு?''

''இல்லை மத்து! எப்பவும் நியாயத்துக்குத்தானே அதாவது சப்போர்ட் செய்யறாங்க! நீ எதோ புதுசா சொல்றேன்னு நினைச்சு சிரிப்பு வந்திடுச்சு!''

கேலியுடன் மகேந்திரன் சொல்லவும், ஜானகி இப்போது வாய் விட்டே சிரித்தார்.

''அம்மா! யூ டூ!'' என்று மது அன்னையை முறைத்துக் கொண்டிருக்கும்போதே, மகேந்திரன் சரேலென்று குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

''டேய்'' கோபத்துடன் குளியலறைக் கதவை அவள் தட்ட,

''பாரு! ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்று சொல்றது சரிதான்! நீ இங்கே சண்டை போட்டுட்டு இருக்கும்போது அவன் உள்ளே போயிட்டான் பாரு!'' என்று சொல்லி விட்டு ஜானகி தன் வேலையைப் பார்க்கச் சென்று விட,

''இருடா! நீ எப்படி இன்னைக்குக் கிளம்பறேன்னு பார்க்கிறேன்!'' என்று கருவிக் கொண்டே மகேந்திரனின் அறைக்கு வந்த மது, அங்கே அவன் மிக மிக முக்கிய மான இடத்துக்குச் செல்ல வேண்டும் என்று நினைக் கும்போது அணியும் அவனது ராசியான சட்டை இஸ்திரி கூட போடாமல் இருப்பதைக் கண்டாள்.

மாமா ஸ்ரீநிவாசன் இறப்பதற்கு முன்பு கடைசியாக வாங்கிக் கொடுத்த சட்டையின் நிறத்தில், ஒவ்வொரு வருடமும் சட்டை எடுத்துக் கொள்வது மகேந்திரனின் வழக்கம். அதையே மிகவும் முக்கியமான தருணங்களில் அணிந்து கொள்வான்.

''சீக்கிரம் கிளம்பணும் என்று பறக்கிறான்! ஆனால் இன்னும் சட்டையைக் கூட அயர்ன் செஞ்சு வைக் கலை!'' என்று எரிச்சல் பட்டுக் கொண்டே இஸ்திரி செய்யத் துவங்கினாள்.

அதற்குள் குளித்துவிட்டு வந்த மகேந்திரன், மதுவைத் தன் அறைக்குள் பார்த்ததும்,

''ஹே! குட்டிப் பிசாசு! என்ன சதி செய்யறே இங்கே இருந்து?'' என்று கொஞ்சம் பயத்துடனே வினவ,

''குட்டிப் பிசாசு! சதி! என்னவெல்லாம் சொல்றேடா'' என்று முறைத்தவள், ''உனக்கு போய் சட்டையை அயர்ன் செஞ்சு வைக்கிறேன் பாரு!'' என்றபடியே சட்டையைக் கசக்கப் போக,

''மதுக்குட்டி! என் செல்லம் இல்லை! அப்படி செய்யா தடா! தெரியாமல் சொல்லிட்டேன்!'' என்று மகேந்திரன் அவளிடம் சரணடைந்தான்.

''அது! அந்த பயம் இருக்கட்டும்!'' என்று அமர்த்த லாகச் சொன்னவள்,



கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ''ஊப்ஸ்! எனக்கு டைம் ஆகுது?!'' என்று குளிக்க ஓடினாள்.

மகேந்திரன் காலை உணவைச் சாப்பிட்டுக் கொண் டிருக்கும்போது, தயாராகி வந்த மது ''சாப்பிட்டு விட்டு போ'' என்று அன்னை சொன்னதை காதில் வாங்காமல், வேகமாக வெளியே சென்றாள்.

''ப்ச்... சீக்கிரம் கிளம்பணும் என்றால், சீக்கிரம் எழுந் திருந்தான் என்ன? இப்போ யாரு... சாப்பிடாமலே கிளம்பிப் போறாள்!'' என்று ஜானகி அங்கலாய்த்துக் கொண்டிருக் கும்போதே, மது திரும்பவும் உள்ளே வந்தாள்.

''பாருங்க அத்தை! என்னவோ புலம்பிட்டு இருந்தீங் களே! உங்க சமையல் வாசனையை பார்த்த பிறகும் சாப்பிடாமல் போவாளா, நம்ம சாப்பாட்டு ராமி!'' என்று மகேந்திரன் கேலி செய்ததை பெரிது படுத்தாமல்,

''மகேன்! எனக்கு ஒரு ஹெல்ப் செய்ய முடியுமா?'' என்று நயந்த குரலில் வினவிய மதுவை சந்தேகத்துடன் பார்த்தான் மகேந்திரன்.

''நேற்றுதான் வண்டி சர்வீஸ்ல இருந்து வந்தது... வரும்போதுள்ளே பார்த்தால், இன்னைக்கு பஞ்சர் ஆகி இருக்கு! ப்ளீஸ் மகேன், என்னைக் கொஞ்சம் காலேஜ்ல ட்ராப் செய்யறியா?'' என்ற மதுவைப் பார்த்து,

''அதானே பார்த்தேன்! சோழியன் குடுமி சும்மா ஆடுமா? நோ சான்ஸ் மது! சாப்பிட்டு இப்போ கிளம்பி யாகணும். நான் சரியான டைமுக்கு வானவில் ஆபீ ஸுக்கு போக முடியும்! வீடு பக்கத்தில் இருக்கிறதால், மேபி நோ அங்கே வந்துடறேன்னு சொல்லி இருக் கிறாள். நீ ஷூட்டோ பிடிச்சு போ!'' என்று சொல்லி விட்டு கையைக் கழுவப் போனான்.

''லூசு! இந்த டைம்ல இங்கே ஆட்டோ கிடைக்கா துன்னு உனக்குத் தெரியாதாடா, மக்கு!'' என்று திட்டி விட்டு, இப்போது சண்டை போட்டால் வேலைக்கு ஆகாது என்று எண்ணி, ''ப்ளீஸ் மகேன்! ப்ளீஸ்டா!'' என்று மீண்டும் கொஞ்ச ஆரம்பித்தாள்.

''மது... உண்மையிலேயே எனக்கு நேரம் ஆகிடுச்சு... ஃபர்ஸ்ட் மீட்டிங்! கரெக்டா போக வேண்டாமா? நீயே சொல்லு?'' எனும்போதே, மகேந்திரனின் கைப்பேசி அழைத்தது.

''சார்! சரி சார்... தேங்க் யூ சார்!'' என்றவன், மதுவைப் பார்த்து புன்னகைத்தபடி, ''மது... யூ ஆர் லக்கி! அப் பாயின்மென்ட் ஒரு மணி நேரம் தள்ளி போயிருக்காம்... சீனியர் போன் செஞ்சார்! சீக்கிரம் சாப்பிட்டு விட்டு வா... உன்னை காலேஜ்ல டிராப் செஞ்சிட்டு, நான் போறேன்!'' என்றான்.

''தேங்க்ஸ் மகேன்!'' என்றபடி சாப்பிட அமர்ந்த வளிடம், ''எதுக்கும், அளவா சாப்பிடு மத்து! ஏற்கனவே உன் வெயிட் தாங்காமதான் அடிக்கடி உன் வண்டி பஞ்சர் ஆகுது!'' என்று கேலி செய்தவன், அவள் அடிக்க வரும் முன் அங்கிருந்து நகர்ந்தான்.

* * *

''ப்ளீஸ் அண்ணா! எனக்கு நேரம் ஆகிடுச்சு! டிரைவர் அண்ணா வேற இன்னைக்கு லீவ் என்று இப்போதான் போன் செய்தார். இன்னைக்கு ஒரு நாள், என்னை காலேஜ்ல டிராப் செஞ்சிடுங்க ப்ளீஸ்!'' என்று கெஞ்சிய தங்கை யிடம் சத்யாவால் மறுப்பு சொல்ல முடியவில்லை.

''நானே டைம் சொல்லிட்டு லேட்டா போனால் நல்லா இருக்காது நித்திம்மா?'' என்றவன், தங்கையின்



வாடிய முகத்தைக் கண்டதும், ''சரி, அங்கிளுக்கு போன் செஞ்சு சொல்லிட்டு வரேன்!'' என்று சுந்தரமூர்த்தி யிடம், தாமதத்துக்கு மன்னிப்பு வேண்டி விட்டு வந்தான்.

உள்ளுக்குள், இன்று மதுவைப் பார்க்கும் சந்தர்ப்பம் அமையுமா என்ற கேள்வியோடு, அவளது புன்னகை நிறைந்த முகம் மனதில் தோன்றி, இதழில் முறுவல் மலர்ந்தது.

* * *

மகேந்திரன் வழக்கத்தை விட கொஞ்சம், பரபரப் போடு இருந்ததை உணர்ந்த மது, வண்டியில் போகும் போது, ''என்ன மகேன்! இவ்வளவு எக்சைட்டா இருக்கே? உங்க சீனியர் இந்த டீலிங் நிச்சயம் என்று சொல்லிட் டாரானே?'' என்று வினவியதும்,

''ம்ம்ம்.. எங்க சீனியர் சொன்னா அங்கே மறுப்பு இருக் காதுதான்! இருந்தாலும், முதல் சந்திப்பு நல்ல படியா அமையணுமே என்ற டென்ஷன்தான்! வேற ஒண்ணு மில்லை!'' என்றவன், ஒரு கணம் வண்டியின் வேகத்தைக் குறைக்க, ''என்ன மகேன்?'' என்ற மதுவுக்கு, அவன் பதில் சொல்லாமலே விடை தெரிந்தது. எதிரே வந்த அழகான பெண்ணைக் கண்டதும்!

''கடவுளே! ஏண்டா, இப்படி? நேரம் ஆகிட்டு இருக் கும்போது கூட, இந்த சைடிங் எல்லாம் தேவையா?'' என்று மது தலையில் அடித்துக் கொள்ள,

''தப்பா பேசாதே மது! அழகை ரசிக்கிறது ஒரு தப்பா?'' என்றான்.

''இதையெல்லாம் எப்படித்தான் கவனம் சிதறாமல் மற்ற வர்களின் கணக்கை சரி பார்க்கிறாயோ, எனக்குத் தெரி யலைடா?'' என்று மது அலுத்துக் கொள்ள,

''மது! என்னைப் பார்த்து என்ன வேணா சொல்லு! என் வேலையைப் பற்றி மட்டும் எதுவும் சொல்லாதே! நான் அதில் எல்லாம் கரெக்டா இருப்பேன்!'' என்று அவன் சொல்லி முடிக்கவும், மதுவின் கல்லூரி வரவும் சரியாக இருக்க, ''ஆல் தி பெஸ்ட், மகேன்!'' என்று அவன் கையைப் பிடித்து வாழ்த்துச் சொல்லிவிட்டு மது உள்ளே சென்றாள்.

தங்கையை விட்டு விட்டு காரைக் கிளப்பிய சத்யாவின் கண்கள் மதுவைத் தேட வேகமாக நடந்து வந்து கொண்டிருந்த மதுவைக் கண்டதும், அவனது உள்ளும் புறமும் மலர்ந்து விகசித்தது.

கையில் இருந்த கோப்பில் இருந்து ஒரு காகிதம் விழுந்ததைக் கூட கவனிக்காமல், அவள் வேகமாக சென்றதைக் கண்ட சத்யா, காரை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு, வேகமாகச் சென்று அந்த பேப்பரை எடுத்துக் கொண்டு, மதுவின் பின் சென்றான்.

அவன் வருவதற்குள், மது கொஞ்சம் தூரம் சென்று விட, ''மது'' என்று அழைக்க நினைத்தவன், ஒரு கணம் நிதானித்து, வேகமாக அவள் பின் ஓடினான்.

''ஹலோ, மேடம்!'' அவன் அருகில் சென்று அழைத்ததும், மது ஆச்சரியத்துடன் திரும்ப, தினமும் அவளைப் புகைப் படத்தில் பார்த்துக் கொண்டிருந்தாலும், இத்தனை அருகாமையில் அவளது முகத்தைக் கண்ட சத்யா ஒரு கணம் தன்னை மறந்து நின்றான்.

'யார் இவன்? இதற்கு முன் கல்லூரியில் பார்த்த மாதிரியே இல்லையே?' என்று தனக்குள் எண்ணிக் கொண்ட மது, அவன் இமைக்காமல் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் எரிச்சல் அடைந்தாள்.



''ஹலோ என்ன சார்? என்ன வேணும்?''

கொஞ்சம் அதட்டலாக மதுவின் குரல் ஒலித்ததும், தன்னிலைக்கு வந்த சத்யா, அவன் தன் கையில் இருந்த காகிதத்தை அவள் புறம் நீட்டியதும், மதுவுக்கு மனதுக்குள் எரிச்சல் மண்டியது.

பார்க்க நாகரிகமானவனாக இருந்து கொண்டு, ஒரு பெண்ணைப் பின் தொடர்ந்து கொண்டு வந்து காதல் கடிதம் கொடுக்க வந்து விட்டானா, என்ன? என்ற கேள்வி தோன்றினாலும், 'இவனைப் பார்த்தால், அப்படி அநாகரிகமான வேலை செய்பவனாகத் தோன்றவில்லையே?' என்ற எண்ணமும் கூடவே வந்தது.

அவள் வாயைத் திறந்து ஏதும் பேசும் முன், ''மது... மேம் வந்துட்டாங்க, சீக்கிரம் வா...'' என்று ஒரு பெண் மதுவை இழுத்துக் கொண்டு போனாள்.

காலை வேளையில் யாரோ ஒருவனிடம் எரிச்சலாகப் பேசி தன் மனநிலையைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று ஒரு முடிவு செய்து, மதுவும் சத்யாவைத் திரும்பியும் பார்க்காமல் நடக்க ஆரம்பித்தாள்.

அவளது அதட்டலான குரலில் தன்னிலைக்கு வந்து, பின் அவள் முகத்தில் தோன்றிய எரிச்சலில், மனம் வாடியபடி நின்று கொண்டிருந்த சத்யாவுக்கு அவள் போன பிறகுதான் சுற்றுப்புறமே நினைவுக்கு வந்தது.

தன்னைப் பார்த்தவுடன் மதுவுக்குப் பிடிக்க வேண்டும் என்று அவன் பிரார்த்தனை செய்து கொண்டிருக்க, அவள் அவனை எதோ ரோட் சைட் ரோமியோ அளவுக்கு பார்த்து விட்டு போனதில் அவனுக்கு மனம் வலித்தது.

'என்னைப் பார்த்தால், அவளுக்கு அப்படியா தோன்றுகிறது?' என்று தனக்குள் வருந்தியவன், அவள் விட்டுச்

சென்ற பேப்பர் இன்னும் தன்னிடம் இருப்பதை அப்போதுதான் உணர்ந்தவனாக, அந்த காகிதத்தில் தனது பார்வையை ஓட்டினான்.

குழந்தைகள் அணியும் ஆடைக்கான வடிவமைப்பு அது!

'வாவ்! எவ்வளவு அழகான டிசைன்!' என்று வியந்தவன், அதை எப்படியாவது மதுவிடம் சேர்க்க வேண்டுமே! என்று யோசித்துவிட்டு, தங்கையின் கைப்பேசிக்கு அழைத்தான்.

''நித்திம்மா! நான் உன் காலேஜ் வாசல் பக்கத்தில் நிற்கிறேன்! கொஞ்சம் வாயேன்!'' என்று விட்டு, அழைப்பைத் துண்டித்துவிட, கொஞ்ச நேரத்தில், நித்யா வந்து சேர்ந்தாள்.

''என்ன அண்ணா? நீங்க இன்னுமா போகலை?'' ஆச்சரியத்துடன் விசாரித்த தங்கையிடம், தன் கையில் இருந்த பேப்பரைத் தந்தவன், ''உன் ஹீரோயின் இந்த பேப்பரை கீழே விட்டுட்டுப் போயிட்டாள்... அவள் கிட்ட இதைக் கொடுத்துடு'' என்று வேகமாக சொல்லி விட்டு, தங்கை மேலே எதுவும் கேட்கும் முன் வேகமாக அங்கிருந்து கிளம்பினான்.

பேப்பரின் வலது மேற்புறத்தில், மதுவின் பெயரும், வகுப்பும் எழுதப்பட்டிருக்க, 'அண்ணன் கையில் கிடைத்ததை அவளிடமே கொடுக்காமல் எதற்கு என்னிடம் கொடுத்துக் கொடுக்கச் சொல்கிறார்?' என்று யோசித்துக் கொண்டே, மதுவின் வகுப்பறைக்குள் வந்தவள், எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த மதுவின் மேல் மோதிக் கொண்டாள்.

''ஹாய் மது! உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்!'' என்று நித்யா சொல்லி முடிப்பதற்குள்,



''நித்யா... நான் உன்கிட்ட அப்புறம் பேசறேன்! ஒரு முக்கியமான பேப்பரை மிஸ் செஞ்சிட்டேன்! அதை தேடத்தான் போறேன்! தப்பா எடுத்துக்காதே!'' வேகமாகச் சொல்லி விட்டு நகர்ந்த மதுவின் கையைப் பற்றி நிறுத்திய நித்யா,

''ஒரு நிமிஷம்! நீங்க தேடப் போற பேப்பர் இதுவா என்று பாருங்க!'' என்று மதுவிடம் அந்தப் பேப்பரை நீட்ட, ஆச்சரியத்துடன் அதை வாங்கிய மது சந்தோஷத்தில் திணறிப் போனாள்.

''இதேதான்! ரொம்ப தேங்க்ஸ் நித்யா! உனக்கு இது எப்படிக் கிடைச்சுது?''

தன் அண்ணன்தான் இதைக் கொடுத்தான் என்று சொல்ல நினைத்ததை மாற்றி, ''இங்கே நம்ம ஸ்டூடன்ட் யாரையோ டிராப் செய்ய வந்த ஒருத்தர் கொடுத்தார்!'' என்று நித்யா சொன்னதும்,

'ஊப்ஸ் இதை கொடுக்கத்தான் அவர் என்னைக் கூப்பிட்டாரா? அது தெரியாம... நல்லவேளை! தவறாக எதுவும் பேசவில்லை!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட மது, ''தேங்க்ஸ் நித்யா!'' என்று மீண்டும் நித்யாவிடம் நன்றி சொல்ல.

''இதுக்கு எதுக்கு இதனை முறை தேங்க்ஸ் சொல்றீங்க?'' என்ற நித்யா, ''சரி! நான் வரேன்! என் கிளாஸ் ஸ்டார்ட் ஆகிற நேரம் ஆகுது!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்புகையில்,

''இந்த ட்ரஸ் உங்களுக்கு ரொம்ப அழகா இருக்கு மது!'' என, ''ஹய்யோ! நான் எது போட்டாலும் நீ அழகா இருக்குன்னுதான் சொல்வே!'' என்று புன்னகையுடன் அலுத்துக் கொண்டு மது நகர,

அவளது புன்னகையை ரசித்தவாறே, எல்லாம் நல்லபடியாக நடந்தால், மது தன் அண்ணியாகி விடுவாள் என்ற இனிய கற்பனையோடு நித்யா இருக்க, அவள் அண்ணனோ மனம் வெதும்பிக் கொண்டிருந்தான்.

அவளை முதன் முதலில் நேருக்கு நேராக சந்திக்கும் வாய்ப்பு இப்படியா அமைந்திருக்க வேண்டும் என்று அவன் தனக்குள் நொந்து கொண்டிருக்கும்போதே,

'இப்ப என்னடா ஆச்சு? நீ அப்படி கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றால், எந்தப் பெண்ணுக்குத் தான் எரிச்சல் வராது! பத்தாததற்கு ஒன்றும் பேசாமல் ஒரு பேப்பரை எடுத்து நீட்டினால் அவளும் தான் என்ன நினைப்பாள்? ஏதோ உன்னை உண்டு இல்லை என்று செய்யாமல் விட்டாளே... அதுக்கு நீ சந்தோஷப்படு!' என்று மனசாட்சி அறிவுறுத்தியது.

சரிதான்! அவனைப் பொறுத்தவரை அவள், அவனது மனம் கவர்ந்தவளாக இருக்கலாம்! ஆனால், அவளுக்கு அவன் முற்றிலும் அறிமுகமாகாதவன். அப்படி இருக்கும் போது, அவளுக்கும் பார்த்த நொடியே அவன் மேல் ஈர்ப்பு வர வேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகப்படி தான்! என்று எண்ணியபடி தன் அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தான்.

கொஞ்ச நேரத்தில் இன்டர்காம் ஒலித்தது.

''சத்யா! நான் கிளையன்ட் மீட்டிங் போறேன்! இன்னைக்கு புது ஆடிட்டர் உடன் சுந்தரமூர்த்தி வரேன் என்று சொல்லி இருந்தார் இல்லையா? அதை நீயே பார்த்துக்கோ!'' என்ற அவன் தந்தை, மேலும் சில வேலைகளைச் சொல்லி விட்டு அழைப்பை வைத்தார்.



அடுத்த பத்து நிமிடத்தில், சுந்தரமூர்த்தி வந்திருப்பதாக, அவனது காரியதரிசி சொல்ல, அவர்களை உள்ளே அனுப்புமாறு சொல்லிவிட்டு, அவர்கள் உள்ளே நுழைந்ததும், வரவேற்கும் முகமாக எழுந்து நின்றவன், சுந்தரமூர்த்தியின் அருகில் நின்று கொண்டிருந்த இளைஞனைக் கண்டதும் திகைத்து நின்றான்.



## 4

மகேந்திரனைக் கண்டதும், மதுவுடன் அன்று பார்த்த இளைஞன் அல்லவா இவன்? என்று சத்யா திகைத்து நின்றது ஒரு நொடிதான்!

அடுத்த கணம், தன் திகைப்பை மறைத்து, ''குட் மார்னிங் அங்கிள்! வாங்க!'' என்று இயல்பான குரலில் சுந்தரமூர்த்தியை வரவேற்றான்.

''குட் மார்னிங் சத்யா! இவர்தான் நான் சொன்ன புது ஆடிட்டர்!'' சுந்தரமூர்த்தி சொன்னதும், ''ஹலோ சார்! ஐ அம் மகேந்திரன்!'' என்றவாறு மகேந்திரன், சத்யாவிடம் கையை நீட்ட, இருவரும் கையைக் குலுக்கிக் கொண்டனர்.

''நைஸ் டு மீட் யூ மிஸ்டர். மகேந்திரன்!'' சம்பிரதாயமாக சொன்ன சத்யா, இருவரையும் அமரச் சொல்லி, குடிக்க என்ன வேண்டும் என்று கேட்டு, ஆபீஸ் பையனிடம் எடுத்து வரச் சொன்னான்.

மகேந்திரனைப் பார்த்ததில் இருந்து, இவனுக்கும் மதுவுக்கும் என்ன உறவு என்ற கேள்விக்கான விடையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மனம் அரித்துக் கொண்டே இருந்தாலும், அதைத் தற்காலிகமாக ஒதுக்கி

வைத்துவிட்டு, வேலையைப் பற்றிய விஷயங்களைப் பேசி முடித்தான்.

உள்ளுக்குள் என்ன இருந்தாலும், மகேந்திரனின் வேலை பற்றிய அவனது திறமை, அவனது பேச்சில் வெளிப்பட, சத்யாவுக்கு அவன் மேல் மரியாதை வந்தது என்னமோ உண்மை!

இரண்டு மணிநேர திருப்தியான பேச்சு வார்த்தைக்குப் பிறகு, மகேந்திரன் கிளம்ப, கூடவே எழுந்த சுந்தரமூர்த்தியை, ''நீங்க இருங்க அங்கிள்! அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துடுவாங்க... பார்த்துட்டுப் போகலாம்!'' என்று தடுத்தான் சத்யா.

''சரிப்பா! அப்பாவை பார்த்து ரொம்ப நாள் ஆச்சு! பார்த்துட்டே போறேன்!'' என்று அமர்ந்த சுந்தரமூர்த்தி.

''மகேன்! இன்னைக்கு நான் சொன்ன அந்த பொண்ணு இன்டர்வியூவுக்கு வருவாள் என்று சொன்னது நினைவு இருக்கில்லை? நல்ல பொண்ணு! திறமை ஆனவளும் கூட! என்ன கொஞ்ச நாள் வேலையில் ப்ரேக் வந்துடுச்சு அவ்வளவுதான்! நான் சொன்னேன்னு வேலைக்கு எடுக்க வேண்டாம்! உனக்கும் திருப்தி என்றால் மட்டும் பார்!'' என்று மகேந்திரனிடம் சொல்ல,

''நினைவு இருக்கு சார்! நீங்க இவ்வளவு சொன்ன பிறகு, வேற என்ன சார் வேணும்! இன்னைக்கே அவங்களை வேலையில் ஜாயின் செய்யச் சொல்றேன்!'' என்று விட்டு, மகேந்திரன் விடை பெற்றான்.

மகேந்திரன் சென்றதும், ''என்ன சத்யா, உனக்கு மகேந்திரன் பற்றி திருப்திதானே? எதோ அங்கிள் சொல்லிட்டார் என்று எதுவும் இல்லையே?'' என்று சத்யாவிடம் விசாரித்தார்.



''இல்லை அங்கிள்! அவர் ரொம்பவே திறமையான வர்தான் தெரியறார்! பட் அவரைப் பற்றி கொஞ்சம் பர்சனல் விஷயங்களும் தெரிஞ்சிக்கலாம் என்று நினைச்சேன்!'' என்றவன்,

''அவங்க குடும்பத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்க அங்கிள்!'' என்றபோது, அவன் மனம் படபடத்துக் கொண்டிருந்தது.

''ரொம்ப நல்ல குடும்பம்! நானும் சில சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கேன்!'' என்ற சுந்தரமூர்த்தி.

''மகேந்திரனுக்கு அம்மா அப்பா இல்லை, சத்யா! அவன் அத்தை... அதாவது அவன் அப்பா கூட பிறந்த தங்கைதான். அவனை வளர்த்தது எல்லாம்! ரொம்ப நல்ல மனுஷி! அவங்களுக்கும் ஒரு பொண்ணு! ரொம்ப நல்ல பொண்ணு! நீ படிச்ச படிப்பைத்தான் அவளும் படிச்சிட்டு இருக்கிறாள் என்று நினைக்கிறேன்!'' என்ற சுந்தரமூர்த்தி, அடுத்து மகேந்திரனைப் பற்றி சொன்ன எந்த விஷயங்களும், சத்யாவின் செவிகளைச் சென்றடையவில்லை.

அது மகேந்திரனின் அத்தை மகள்! என்பதிலேயே, மனம் சுழன்று கொண்டிருந்தது.

இந்த காலத்தில், அத்தை மகள், மாமன் மகன் என்று திருமணம் செய்வது குறைவுதான் என்றாலும், மகேந்திரனுக்கு பெற்றோர் இல்லை. அத்தைதான் அவனை வளர்த்தார்கள் என்பதெல்லாம் சத்யாவுக்கு ஏனோ முக்கியமான விஷயங்களாகத் தோன்றின.

அந்த நேரத்தில், சத்யாவின் தந்தை வந்துவிட, சுந்தரமூர்த்தியும், அவரைப் பார்க்க அவரது அறைக்குச் சென்று விட்டார்.

சற்று நேரம், கலக்கமான மனதுடன் அமர்ந்திருந்த சத்யாவை, எதையும் தைரியமாக, திறமையாக எதிர்கொள்ளும் அவனது இயல்பான குணம், மீட்டெடுத்தது.

'எதுவும் உறுதியாகத் தெரிந்திராத நிலையில், எதற்கு தேவை இல்லாமல், இந்த வீண் குழப்பம், கலக்கம் எல்லாம்?' என்று தன்னைத் தேற்றிக் கொண்டவன், தானும் மதுவும் வாழ்வில் இணைய வேண்டும் என்று இருந்தால், அதன்படியே நடக்கும்! நடக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு, வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

* * *

சத்யாவை சந்தித்து விட்டு தன் அலுவலகத்துக்கு வந்த மகேந்திரன், அத்தை ஜானகியையும், மதுவையும் ஒன்றாக அழைத்து தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டான்.

''மீட்டிங் சூப்பரா போச்சு அத்தை! நான் கூட ரொம்ப பெரிய கம்பெனி எம்.டி. கொஞ்சம் பந்தாவா இருப்பாரோன்னு நினைச்சேன். பட் அவர் ரொம்ப சிம்பிளா இருந்தார்.''

சத்யாவைப் பற்றி மகேந்திரன் புகழ்ந்து கொண்டிருந்ததை ஜானகி, அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அதெல்லாம் ஓ.கே. மேன்! நீ எப்போ ட்ரீட் கொடுக்கப் போறே?'' என்றாள் மது.

''நீ கொட்டிக்கிறதிலேயே இரு!'' என்று அவளை கேலி செய்துவிட்டு, ''இந்த வீக் என்ட் 'பார்க் ஹோட்டல்' போகலாம்!'' என்று சொல்லி விட்டுப் போனை வைத்தான்.



மனம் மகிழ்ச்சியாக இருந்தது. வானவில் போன்ற ஒரு பெரிய நிறுவனத்தின் ஒப்பந்தம், அவன் வேலை வாழ்க்கையில் ஒரு பெரிய முன்னேற்றம்தான்!

சுந்தரமூர்த்திக்கு மனதுக்குள் ஆயிரம் முறையாக நன்றி சொன்னவன், மதிய உணவை உண்டு விட்டு, தன் உதவியாளர்களிடம் வேலையைப் பற்றி விசாரிக்க தன் அறையில் இருந்து வெளியே வந்தான்.

அவனது அலுவலகத்தில், அவனுக்குக் கீழே ஆறு பேர் வேலை செய்து வந்தனர். கூடுதல் பொறுப்பு வர மேலும் ஆட்கள் தேவை என்று பேச்சு வாக்கில் சுந்தரமூர்த்தியிடம் ஒரு நாள் சொல்ல, அவர்தான் இன்று நந்தினி என்ற பெண்ணை அனுப்புவதாகச் சொல்லி இருந்தார்.

சி.ஏ. படித்துக் கொண்டிருக்கும் பெண்ணாம்! சுந்தரமூர்த்தியிடம் ஆறு மாதத்துக்கு முன் பயிற்சி வேலைக்கு வந்து கொண்டிருந்தவளாம். ஏதோ சொந்த வேலை காரணமாக ஆறு மாதங்கள் வேலைக்கு வர முடியாமல் போனது என்று சுந்தரமூர்த்தி சொல்லி இருந்தார். அவர் சொன்னால், திறமை உள்ளவளாகத்தான் இருப்பாள் என்று மகேந்திரனுக்கு நம்பிக்கை இருந்தது.

நாளை மூன்று மணிக்கு வரச் சொல்லி இருந்தான். நாளை முதல் இருந்து வேலையில் சேரச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியபடி வேலையைக் கவனிக்க ஆரம்பித்தான்.

* * *

''அப்பா ப்ளீஸ்! என்னைத் தடுக்காதீங்க! நீங்க இப்படி எல்லாம் சொல்லுவீங்க என்று தெரிஞ்சுதான். ஆரம்பிக்கிட்ட வேலைக்கு சேர்ந்த பிறகு சொல்லலாம்

என்று நினைச்சிருந்தேன்! ப்ளீஸ்பா... தயவு செய்து தடங்கல் சொல்லாதீங்க! வீட்டில் இருந்தால், எனக்கு பைத்தியமே பிடிச்சிடும் போல இருக்குப்பா!''

கெஞ்சுதலாக கேட்டுக் கொண்டிருந்த நந்தினியைக் கண்ட சிவராமனுக்கும், மகளை வேலைக்கு அனுப்புவதில் எந்தப் பிரச்சனையும் இருந்தது இல்லை. ஆறு மாதத்துக்கு முன்பு வரை!

இந்த ஆறு மாதத்தில்தான் எத்தனை மாற்றம்?

இப்பொழுது, மகளுக்கு நல்ல படியாகத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் அவரது ஒரே குறிக்கோளாக இருந்தது.

''நீயும் நான் சொல்றதைக் கொஞ்சம் கேளேன், நந்தும்மா! இன்னும் கொஞ்ச நாள்தான்! அப்பா நல்ல மாப்பிள்ளையா தேடிக் கொண்டு வரேன்!''

தந்தையின் வாயில் இருந்து மாப்பிள்ளை என்ற சொல்லைக் கேட்டதுமே, நந்தினியின் முகம் மாறியது.

''அப்பா...ப்ளீஸ்! இப்போதைக்கு கல்யாணத்தைப் பற்றிப் பேசாதீங்க! கல்யாணம் என்று நினைச்சாலே எனக்கு வெறுப்புதான் வருது!''

சீற்றத்துடன் சொல்லியவளை, பரிதாபமாக சிவராமன் பார்த்திருக்க, இதுவரை, தந்தையும் மகளும் பேசும்போது குறுக்கிடாமல் இருந்த பார்வதி, ''அவள் சொல்றபடிதான் கொஞ்ச நாள் விடுங்களேன். அவளுக்கும் ஒரு மாற்றமா இருக்கும்!'' என்று மென்மையான குரலில் இயம்பினார்.

''வெளியே போனால்... பழைய கதை எல்லாம் பேசி, எல்லாரும் என் குழந்தையை கேள்வி கேட்டு அவள் மனசு வாடக்கூடாது என்றுதான் நான் பார்க்கிறேன். நான் சொல்றது உனக்குக் கூடப் புரியலையா?''



ஆதங்கமான குரலில் தந்தை வினவியதும், அவர் அருகில் வந்து அமர்ந்த, நந்தினி, அவரது கையை ஆதரவாகப் பற்றிக் கொண்டு, ''நீங்க எது சொன்னாலும், அது என் நன்மைக்குத்தான் என்று எனக்குத் தெரியும்பா! ஆனால், இந்த விஷயத்தை மட்டும் என் போக்கில் விட்டுடுங்க... மற்றவங்க கேள்வியில் இருந்து தப்பிக்கிறதுக்காக, தவறே செய்யாமல் நான் ஏன்பா வீட்டில் அடைபட்டுக் கிடக்கணும்? முன்னாடி அந்த மாதிரி கேள்விகளும், பேச்சும் எனக்கு வருத்தமா இருந்தது உண்மைதான்! ஆனால், தப்பு நம்ம பக்கம் இல்லாத போது எதுக்கு பயமும் வருத்தமும் என்று இப்போதான்பா தெளிய ஆரம்பித்து இருக்கேன்! இந்த நேரத்தில், வேலைக்கு போறது எனக்கும் மனசுக்கு தைரியமா இருக்கும்பா... ப்ளீஸ்பா! புரிஞ்சுக்கோங்க!'' என்று மென்மையாகத் தன் மனதில் இருப்பதை உரைத்த மகளைக் கண்டு சிவராமனுக்கும் அவள் சொல்வது சரி என்று தோன்றியது.

''சரிதாம்மா! நல்லபடியா போயிட்டு வா!'' என்று அனுமதி கொடுத்தவர், ''இன்டர்வியூ போற இடம் நல்ல இடம்தானே?'' என்று தந்தையாய் அக்கறையுடன் விசாரித்தார்.

தந்தை அனுமதி தந்த மகிழ்ச்சி முகத்தில் பிரகாசிக்க, ''நம்ம சந்தரமூர்த்தி அங்கிளோட ஜூனியர் தனியா ஆபீஸ் வைச்சிருக்காராம்பா... அவர்கிட்டதான் சொல்லி இருக்கார்! அங்கிள்தான் இந்த மாசத்தோட அமெரிக்கா போறாரே! இல்லன்னா அங்கேயே வேலையைத் தொடர்ந்திருக்கலாம்!'' என்ற நந்தினி.

''நான் கிளம்பறேன்பா... டைம் ஆகுது... மூணு மணிக்கு வரச் சொல்லி இருக்காங்க!'' என்று பெற்றோரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

தந்தையைச் சமாதானம் செய்து, வேலைக்குச் செல்ல அனுமதியும் வாங்கிக் கொண்டு வெளியே வந்த நந்தினி, ஆட்டோ நிறுத்தம் வந்தது. ஒரு ஆட்டோவில் ஏறிக் கொண்டாள்.

ஆறு மாதத்துக்கு முன்பு வரை, தந்தை தனக்கு எதைச் செய்வதற்கும் தடை விதித்ததில்லை என்ற எண்ணம் தோன்றிய அதே நேரத்தில், இப்போதைய நிலைமைக்கு காரணமாக இருந்த சம்பவத்தை அவள் மனம் அவளையும் அறியாமல் அசை போட ஆரம்பித்தது.

நந்தினிக்கு ஆடிட்டர் படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆசை! திருமணம் ஆகி ஐந்து வருடம் கழித்து, தவ மாய்த் தவமிருந்து பெற்ற ஒரே பெண்ணின் எந்த ஒரு ஆசைக்கும், சிவராமன் - பார்வதி தம்பதியினர் எப் போதுமே குறுக்கே நின்றதில்லை.

பி.காம் படிக்கும்போதே, சி.ஏ. படிப்புக்கான பயிற்சியும் மேற்கொண்டபடி, தந்தையின் நீண்ட கால நண்பர் சுந்தரமூர்த்தியிடம், நந்தினி இரண்டு வருடங் களாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சொந்த பந்தங்களிடம் இருந்து நந்தினிக்கு வரன்கள் வரத் தொடங்கியபோதும், சிவராமன் பெண்ணின் விருப்பப்படி படிப்பை வெற்றிகரமாக முடித்த பிறகே திருமணம் என்று முடிவெடுத்து இருந்தார்.

'நல்ல வரன்கள் வரும்போதே திருமணத்தை முடித்து விடு!' என்று நெருங்கிய சொந்தங்கள் சொன்னபோது சிவராமன் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

அழகும், அறிவும் நிறைந்த தன் பெண்ணுக்கு வரன் கிடைப்பது பெரிய விஷயமில்லை என்ற பெருமித



கூட அவருக்கு இருந்தது. எல்லாம், ஒரு மாரடைப்பு வரும் வரையில்தான்!

சிவராமன் பெரிய பணக்காரர் இல்லை என்றாலும், சொந்த வீடு, பெண்ணுக்கு சிறப்பாக திருமணம் செய்ய இயலும் வகையில் சேமிப்பு என்று பணத்தைப் பொறுத்தவரை பெரிதாக, எந்தவிதப் பிரச்னையும் இருந்ததில்லை.

தனக்கு உடல் நலக் குறைவு வந்தபோது, சிவராம னுக்கு பயம் வந்து விட்டது. தன் மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்து தரும் வரையில் தனக்கு எதுவும் நேர்ந்து விடக் கூடாது என்பதே அவரது தினசரி பிரார்த் தனை ஆயிற்று.

அந்த நேரத்தில், தூரத்து உறவினர் வழியாக, ரமேஷின் குடும்பம் நந்தினியைப் பெண் கேட்டு வந்தபோது, அது கடவுளின் சித்தம் என்றே சிவராம னுக்குத் தோன்றியது. ஏனெனில், இப்போதைக்கு பெண்ணுக்குத் திருமணம் செய்யும் உத்தேசம் இல்லை என்று பறையறிவிக்காத குறையாக சிவராமன் தன் சொந்தங்களிடம் சொல்லி இருந்திருந்தார். அதையும் பொருட்படுத்தாது, மாப்பிள்ளை வீட்டினர் தாங்களா கவே மீண்டும் மீண்டும் தொடர்பு கொள்ள, மாப் பிள்ளை வீட்டினர் பற்றி விசாரித்த சிவராமனுக்கும் எல்லாம் திருப்திகரமாகவே இருந்தது.

மனைவியிடமும் கலந்து ஆலோசித்தவர், நந்தினி யிடம் விஷயத்தைச் சொன்னபோது, அவள் ஒத்துக் கொள்ளவில்லை.

"உங்களுக்கு எதுவும் ஆகாதப்பா! தேவை இல்லாமல் நீங்கள் வேண்டிய அவசியமே இல்லை என்று

டாக்டரே சொல்லி இருக்கார். இன்னும் ஒரு வருஷம் நான் படிப்பை முடித்த பிறகே, கல்யாணத்துக்கு பார்க்கலாம்!''

நந்தினி தன் முடிவில் தெளிவாக இருந்தாலும் சிவராமன் அவ்வளவு எளிதில் அவளை விட்டு விடவில்லை.

''நல்லா விசாரிச்சிட்டேன் நந்தும்மா... எல்லாரும் நல்ல விதமா தெரியறாங்க.. பையன் இப்போ பாரின்ல இருக்காராம்... இந்த மாச இறுதியில் இங்கேயே வந்து செட்டில் ஆகி விடும் ஐடியா இருக்காம்... உனக்கு படிக்க எந்தப் பிரச்னையும் இருக்காதும்மா...''

தந்தை வற்புறுத்தியபோது, நந்தினிக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

எப்படி பெற்றோர் அவளது விருப்பத்தை மதித்து நடப்பார்களோ, அப்படியேதான், நந்தினியும் அவர்களது எந்தப் பேச்சையும் மறுத்துப் பேசியதில்லை.

சரி என்றும் முழு மனதாக ஒத்துக் கொள்ள முடியாமல், வேண்டாம் என்று நிர்தாட்சண்யமாக மறுக்கவும் முடியாமல் அவள் தவித்தபோது, சிவராமனே தொடர்ந்து பேசினார்.

''உனக்கு ஒரு நல்லதை செய்து பார்க்கும் வரை எனக்கு பயம் இருந்துட்டேதான் இருக்கும்!''

தந்தையின் குரலில் இருந்த பயம், நந்தினியை திருமணத்துக்குச் சம்மதிக்க வைத்தது.

அடுத்த வாரத்தில், ரமேஷின் குடும்பத்தினர் நந்தினியைப் பெண் பார்க்க வந்தனர்.

வெளிநாட்டில் இருந்த படியால், ரமேஷ் வர இயலவில்லை! தேனொழுகப் பேசிய ரமேஷின் பெற்



றோரைப் பார்த்த பிறகு, நந்தினிக்குமே கொஞ்சம் திருப்தியாக இருந்தது.

மகளைப்பில் ரமேஷும், நந்தினியின் குடும்பத்தாரோடு பேச, எல்லாருக்குமே திருப்தியாக இருந்தது.

எளிமையாக ஒரு நிச்சயம், ரமேஷ் வராமலே நடந்தேறியது.

அவன் இந்தியா வந்த பிறகு, அடுத்த இரண்டு மாதத்தில் திருமணம் என்று நிச்சயிக்கப்பட்டது.

மற்றதற்காக என்று ஒத்துக் கொண்டிருந்த நந்தினிக்கு, திருமணம் என்ற ஆர்வமோ, எதிர்பார்ப்போ பெரிதாக இருக்கவில்லை.

அவ்வப்போது ரமேஷ் போனில் பேசும்போது கூட, அவளால் இயல்பாக பேச இயலவில்லை. எப்போதும், மற்றவை விசாரிப்பதோடு அவள் பேச்சை நிறுத்திக் கொள்வாள்.

அவன் சரியாகப் பேசுவதில்லை என்று ரமேஷ் கூட குறைபட்டுவான்.

அந்த மாத இறுதியில், ரமேஷ் இந்தியா வந்ததும், நந்தினியைச் சந்திக்க வந்தபோது கூட நந்தினிக்கு மனதில் எந்த ஈடுபாடும் தோன்றவில்லை.

அவளுக்கே அது விசித்திரமாகவும் இருந்தது. திருமணத்துக்கு மனதளவில் தயாராக இல்லை என்பதால், இப்படி இருக்கிறதோ என்று நினைத்துக் கொண்டாள்.

திருமண வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. திருமண நாளுக்கு ஒரு வாரம் முன்பு, ஒரு நாள் ரமேஷ் நந்தினியின் வீட்டுக்கு வந்து, அவளை வெளியே அழைத்துச் செல்ல விரும்புவதாகக் கூறிய சிவராமன் மறுப்பேதும் சொல்லவில்லை.

இருவரும் அதிகம் பார்த்துக் கொண்டது கூட இல்லை. அதனால், அவர்கள் இருவரும் தனித்து பேசுவது நல்லது தான் என்று அவர் எண்ணி இருக்க, நந்தினிக்கோ, அவனோடு வெளியே செல்வதில் எந்தவித ஆர்வமும் இருக்கவில்லை.

தந்தையே அனுமதி அளித்து விட்ட நிலையில், தான் எப்படி மறுப்பது என்று அவள் யோசித்துக் கொண்டிருக்க, ஆர்வத்துடன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ரமேஷைக் கண்ட பிறகு, மறுக்க முடியாமல் கிளம்பினாள்.

அவளை ஷாப்பிங் சென்டருக்கு அழைத்து வந்தவன், அவளுக்கென்று சில பொருட்களை வாங்கியபோது, சந்தோஷப் படுவதற்கு பதில், நந்தினியின் மனம் சுணங்கியது.

விலை உயர்ந்த பொருட்களை வாங்கியவன், அவளுக்குப் பிடித்திருகிறதா இல்லையா என்று ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை! எப்போதும், தன் விருப்பத்தைக் கேட்டே எதையும் வாங்கித் தரும் பெற்றோரின் நினைவில், அவளுக்கு ஏனோ கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

வளவளவென்று பேசிக் கொண்டு வந்தவனிடம் போனில் பேசிய அளவுக்கூட அவளால் பேச இயலவில்லை. நந்தினி அப்படி ஒன்றும் பேசா மடந்தை அல்ல! அதிகம் பேசுபவள் இல்லை என்றாலுமே, பெற்றோரிடமும், நெருங்கிய தோழிகளிடமும் கலகலப்பாக பேசுபவள்தான்! ஆனால், ரமேஷுடன் இயல்பாகப் பேச முடியாமல் எதோ ஒன்று அவளைத் தடுத்துக் கொண்டே இருந்தது.



இன்னும் ஒரு வாரத்தில் திருமணம் செய்து கொள்ளப் போகிறவனோடு, இந்த மாதிரி ஈடுபாடு தோன்றாமல் இருப்பது நல்லதா என்று அவள் தனக்குள்ளேயே பட்டி மன்றம் நடத்திக் கொண்டிருக்கையில், ''ஹே! நந்தினி! என்ன யோசனை! சாப்பிட போகலாம் என்று கூப்பிட்டுக் கொண்டு வரேன்! நீ பாட்டுக்கு ரெஸ்டாரண்டை தாண்டி போயிட்டே இருக்கே!''

மாலில் இருந்த உணவகத்தில் நுழைந்து விட்டவன், நந்தினி தன்னோடு வராமல் நேராக செல்வதைக் கண்டு வேகமாக அவளருகில் வந்து வினவியபோதுதான், தன் யோசனையில் இருந்து மீண்டவளாக நந்தினி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

தோளில் ஏதோ ஊர்வது போல இருக்க, தன்னிச்சையாய் அதை தட்டி விட முயன்றபோதுதான், ரமேஷின் கை தன் தோளில் படிந்திருப்பதை நந்தினி உணர்ந்தாள்.

அருவருப்போடு அவள் பார்த்ததும், ''ஹே! வாட் இஸ் திஸ் நந்தினி? ஏன் இப்படி பார்க்கிறே? என்ற ரமேஷின் கை தோளில் இருந்து இறங்கி, இடையைப் பற்ற முயல்வதைக் கண்ட நந்தினி, சட்டென்று அவனிடம் இருந்து விலகினாள்.

அவளை விசித்திரமாகப் பார்த்த ரமேஷ், ஒன்றும் பேசாமல் உணவகத்தில் நுழைய நந்தினியும் அவனைப் பின் தொடர வேண்டியதாயிற்று.

இடையைப் போலவே, இங்கும் அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்காமல் உணவை ஆர்டர் செய்துவிட்டு நந்தினியின் புறம் திரும்பியன், ''நீ ரொம்ப டல்லாடா இருக்கே, நந்தினி!'' என்றான்.

அவனது வார்த்தைகளில் சுறுசுறுவென்று எரிச்சல் மண்டினாலும், ''எதை வைச்சு அப்படி சொல்றீங்க?'' என்று நேராக அவனைப் பார்த்தபடி நந்தினி கேட்ட கேள்விக்கு,

''பின்னே! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஏன் அப்படி நடந்துகிட்டே? கொஞ்சம்கூட கர்டசியே இல்லாமல்!'' என்று பட்டென்று பதில் வந்தது எரிச்சலுடன்!

கடவுளே! ஒரு பெண்ணுக்கு பொருள் வாங்கும் போது, அவளுக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா என்று விசாரிக்கக் கூட முயலாதவன், இப்போது கூட அவனது விருப்பத்துக்கு உணவை ஆர்டர் செய்தவன், இங்கிதத்தைப் பற்றி பேசுகிறான்!

நறுக்கென்று ஏதாவது கேட்டு விடலாமா என்று யோசித்த நந்தினி, ஒரு கணம் தன் மனதை அமைதிப் படுத்திக் கொண்டாள்.

இல்லை! வாழ்நாள் முழுவதும் சேர்ந்து வாழப் போகிறவனோடு தேவை இல்லாமல் வாக்குவாதம் வேண்டாம்! மெதுவாக அவனது செயல்கள் அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர வைக்கலாம் என்றெண்ணியபடி, ''இல்லை! எனக்குக் கூச்சமா இருந்தது. அதான்!'' என்றதும், தோளைக் குலுக்கியபடி அவனும் விட்டுவிட அவளுக்கு 'ஹப்பாடா!' என்றிருந்தது.

அதன் பிறகு, அவளது வேலை, அவர்களது வீடு, அதன் மதிப்பு என்ன இருக்கும் என்று அவன் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லிக் கொண்டிருந்தவளுக்கு, அவன் வீட்டில் கொண்டு வந்து விட்டதும், எதில் இருந்தோ தப்பித்து வந்ததைப் போலிருந்தது.



அதன் பிறகு, இருமுறை, அவன் வெளியே செல்ல அழைத்தபோது, எதோ காரணம் சொல்லி அவனுடன் வெளியே செல்லுவதைத் தவிர்த்தாள். கணவனாக முடிவு செய்யப்பட்டவனோடு நேரம் செலவு செய்வதில் இருந்து தப்பித்துக் கொள்ளதான் செய்யும் காரியங்கள் சரிதானா என்ற கேள்வியோடு, இனம் தெரியாத ஒரு வகையும் நந்தினியைச் சூழ்ந்தது.

திருமணத்துக்கு முந்தைய நாள் மாப்பிள்ளை அழைப்பும் வந்தது. அழகான ஒப்பனையோடு அமர்ந்திருந்த நந்தினியை, அவள் தோழிகள், வயதுக்கேற்ற மாதிரியான குறும்போடு கேலி செய்து கொண்டிருக்க, தன் மனக்கலக்கம் எல்லாவற்றையும் ஒத்தி வைத்துவிட்டு, அவளும் தோழிகளின் கேலியில் இணைந்து கொண்டு சிரித்துக் கொண்டிருந்தாள்.

மகள் தயாராகி விட்டாளா என்று எட்டிப் பார்த்த சுப்பிரமணியனுக்கும், மகளின் முகத்தில் இருந்த சிரிப்பைக் கண்டதும், முறுவல் மலர்ந்தது. இந்த மகிழ்ச்சி, சிரிப்பு எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் அழியப் போவதை அப்போது அவர் உணர்ந்திருக்கவில்லை.

* * *

பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த நந்தினி, ஆட்டோ நின்றதை உணர்ந்தவளாக, கீழே இறங்கினாள். பணத்தைக் கொடுத்துவிட்டு, அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவள், அனுமதி கிடைக்கப் பெற்றதும், ''குட் ஆப்டர்நூன் சார்!'' என்றபடி மகேந்திரனின் அறைக்குள் நுழைந்தாள்.

''வெரி குட் ஆப்டர்நூன்! வாங்க... உட்காருங்க!'' என்று அவளை அமரச் சொன்ன மகேந்திரனுக்கு

நந்தனியின் முகம் பரிச்சயமானதாகத் தோன்றியது ஏனென்று விளங்கவில்லை.

முகமனுக்குப் பிறகு, சம்பிரதாயமாக சில கேள்விகளைக் கேட்டவன், ''போன டேர்மிலேயே நீங்க முடிச்சிருக்க முடியுமே? ஏன் எக்ஸாம்ஸ் எழுதலை?'' என்று விசாரித்தான்.

''அப்பாவுக்கு உடம்பு முடியாமல் போயிடுச்சு! அதான் எழுத முடியலை!''

''ஓ! நீங்க எப்போதிலிருந்து சுந்தரமூர்த்தி சார் கிட்ட வேலை பார்த்தீங்க?'' என்று விசாரித்தவன், அவள் பதில் கூறியதும், ''நாளையில் இருந்து வேலைக்கு வாங்க!'' என்று சொல்லிவிட, ''வேற எதுவும் கேள்விகள் இல்லையா?'' என்றாள் அவள் ஆச்சரியத்துடன்!

''சார் கிட்ட வேலை பார்த்திருக்கீங்க! அவர் சொன்ன பிறகு, எனக்கு எந்தக் கேள்வியும் இல்லை!'' என்றவன், அவள் நன்றி சொல்லிவிட்டு எழுந்ததும், ''ஒரு நிமிஷம்!'' என்று விட்டு, தன் மேஜையில் இருந்த இனிப்பு பெட்டியை எடுத்து அவளிடம் நீட்டி, ''எடுத்துக்கோங்க!'' என்றான்.

கொஞ்சமாக எடுத்துக் கொண்டவள், ''என்ன விசேஷம் சார்?'' என்று விசாரித்தாள்.

''நீங்க வேலைக்கு சேரப் போறீங்க இல்லை. அதான் விசேஷம்!'' புன்னகையுடன் சொன்னவனை, விடாபுடன் நோக்கியவளிடம், ''நம்ம ஆபீசுக்கு, ஒரு பெரிய கம்பெனி, கிளையன்டா கிடைச்சிருக்காங்க அதான்!'' என்றான்.

''கங்கிராட்ஸ்!'' நந்தினி மெல்லியப் புன்னகையோடு வாழ்த்தியதும், ''நீங்க இன்னைக்கு வேலைக்கு வந்த



...ங்க ஒரு பெரிய கிளையன்ட் கிடைச்சிருக்...!'' என்று மகேந்திரன் சொன்ன நொடி, நந்தினியின் முகத்தில் இருந்த முறுவல் மறைந்தது.

ஒரு மெல்லிய முறுவல், அவளது அழகான முகத்துக்கு மேலும் ஒளி சேர்ப்பதை, ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரனுக்கு, தான் சொன்ன வார்த்தையைக் கேட்டதும், அவளது முகம் மாறியதைக் கண்டு வியப்பாக இருந்தது.

தான் ஏதாவது தவறாகச் சொல்லி விட்டோமோ? என்று யோசித்தவனுக்கு, அவளது முக வாட்டம் ஏனோ மனதை உறுத்தும் தர, ''என்ன ஆச்சு?'' என்று மென்மையாக விசாரித்தான்.

நந்தினி உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தாள். முட்டாள்! எவ்வளவு படித்து என்ன? அவனது உழைப்பால் கிடைத்த பலன் என்று நினைக்காமல், ராசியாம்! மண்ணாங்கட்டியாம்!'

அவன் என்னவாயிற்று என்று விசாரித்ததும், அவன் அப்போதுதான் அறிமுகமானவன், அவனிடம் தான் வேலை செய்யப் போகிறோம் என்பதை எல்லாம் ஒரு நொடி மறந்து, ''எனக்கு இந்த ராசி மண்ணாங்கட்டியில் எல்லாம் நம்பிக்கை இல்லை. சார்! முட்டாள்கள்தான் இதை எல்லாம் நம்புவார்கள் என்பது என்னோட கருத்து!'' என்று மிடுக்காகச் சொல்ல,

என்னை முட்டாள் என்று அவள் சொல்லாமல் சொல்லியதில் கோபம் வராமல், மகேந்திரனுக்குச் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

வாய் விட்டு நகைத்தவன், ''சோ... என்னை முட்டாள் என்று சொல்றீங்க?'' புருவம் உயர்த்தி வினவ, உணர்ச்சி

வசப்பட்டு தான் பேசி விட்டதை தாமதமாக உணர்ந்த வளாக, ''சாரி சார்!'' என்று நந்தினி மெல்லியக் குரலில் மன்னிப்பு வேண்டினாள்.

''இட்ஸ் ஓகே!'' என்றவன், ''நீங்க என்னதான் என்னை முட்டாள் என்று சொன்னாலும், எனக்கு இந்த ராசியில் எல்லாம் கொஞ்சம் நம்பிக்கை இருக்கத்தான் செய்யுது! உங்க ராசி என்று சொன்னால் உங்களுக்கு சந்தோஷமா இருக்கும் என்று அப்படிச் சொன்னேன்! அது உங்களுக்குப் பிடிக்கலை என்பதால், இப்படிச் சொல்லட்டுமா?'' என்றவன், அவள் என்னவென்று பார்த்துக் கொண்டிருக்கும்போதே,

''அந்த கிளையன்ட் வந்த ராசிதான். நீங்க வேலையில் சேரப் போறீங்க என்று வைச்சிக்கலாமா?'' என்றவன் அவள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக் கவும்,

''அது ராசி மட்டும் இல்லைங்க... உண்மையும் கூட... புதுப் புது கிளையன்ட் வருவதால், வேலைக்கு இன்னும் ஆட்கள் வேண்டும் என்று சொன்னதால்தான் சுந்தர் சார் உங்களை அனுப்பி இருக்கார்!'' என்றதும், நந்தினி யின் முகத்தில் மீண்டும் முறுவல் மலர்ந்தது.

இவன் சரியான விடாக் கொண்டனாக இருப்பான் போல! என்று நினைத்தாலும், அவள் அப்படிப் பேசிய தற்கு கோபம் கொள்ளாமல், அவன் சிரித்தது இதம் தர, ''சாரி சார்! உங்க நம்பிக்கையை ஹர்ட் செஞ்சதுக்கு அகைன் சாரி!'' என்றாள்.

''ஹே! லீவ் இட்! ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு நம்பிக்கை! உங்க கருத்தை நீங்க சொன்னீங்க! அதில் தப்பு எதுவும் இல்லை! நாளையில் இருந்து வேலைக்கு



வந்துடுங்க! ஆல் தி பெஸ்ட்!'' என்று விடை கொடுத் தான்.



## 5

கல்லூரியில் இருந்து வீட்டுக்கு வந்த மதுமிதாவை, ஜானகியின் மடியில் மகேந்திரன் தலை வைத்துப் படுத்திருந்த தோற்றம்தான் வர வேற்றது.

சின்ன வயதில், இது போல மகேந்திரன் தன் அத்தையின் மடியில் தலை வைத்துப் படுப்பது அடிக்கடி நடக்கும். மது சண்டைக்கு வந்தால், ''எங்க அத்தை நான் படுத்துக்கறேன்! நீ உங்க அத்தை மடியில் படுத் துக்கோ!'' என்று மகேந்திரன் வம்பிழுப்பான்.

ஆனால், பெரியவர்கள் ஆன பிறகு, இந்த மாதிரி விளையாட்டுக்கள் குறைந்திருந்தன. ஜானகியின் மடியை மகேந்திரன் நாடுகிறான் என்றால், அவனுக்கு அவனது பெற்றோர் நினைவு அதிகம் வந்து விட்டது என்று அர்த்தம்.

என்னவாயிற்று என்ன ஆச்சு? என்று யோசித்தபடி உள்ளே வந்த மதுவுக்கு, மேஜையில் இருந்த வானவில் கம்பெனியின் ஒப்பந்தம் மற்றும் இனிப்பு பெட்டியைக் கண்டதும் விஷயம் புரிந்தது.

தன் வேலையில் ஒரு பெரிய முன்னேற்றம் வரும் வேளையில், அவன் மனம் தன் பெற்றோரை நாடி இருப்பதை உணர முடிந்தது.

எவ்வாயினும் மகேந்திரனை இயல்புக்குக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணியவளாக, ''அத்தை மடி

மெத்தையடி! என்று குழந்தைகளுக்கு பாடி வைச்சிருக் காங்க என்று, சில மாடு மாதிரி வளர்ந்த ஜென்மங் களுக்குப் புரியறதே இல்லை!'' உரத்த குரலில் சொல் லியபடி, ஒற்றை சோபாவில் தொப்பென்று வந்து அமர்ந் தாள்.

''என் அத்தைக்கு நான் எப்பவும் குழந்தைதான்! உனக்கெப்படி போச்சு?'' என்றபடியே எழுந்து அமர்ந்த மகேந்திரன், அத்தையின் தோளில் கை போட்ட படியே ''நான் கிழவன் ஆனாலும், எங்க அத்தை மடியில் படுத்துப்பேன்!'' என்று சவாலாகச் சொல்ல,

''டி போட்டு பேசினே? மகனே உண்டு இல்லை என்று செஞ்சுடுவேன்!'' என்று அதட்டிய மதுவிடம் ''இதோ பாருடா! இந்த மேடம்... வார்த்தைக்கு வார்த்தை என்னை டா போட்டு பேசுவாங்க! நாங்க மட்டும் டி போட்டா கோபம் வருதோ?'' என்று மகேந்திரனும் பதிலுக்கு சண்டை வளர்க்க, இது வழக்கம் தானே என்று நினைத்து சிரித்தபடியே எழுந்து சென்ற ஜானகி இருவருக்குமாக காபியும் டிபனும் எடுத்து வந்தார்.

ஜானகி வந்து அமர்ந்ததும், மது ஓடிச் சென்று அவர் மடியில் படுத்துக் கொள்ள மகேந்திரன் வாய் விட்டுச் சிரித்தான்.

''படுத்துக்கோ மத்து! தாராளமா படுத்துக்கோ! எதோ கல்யாணம் ஆகி போற வரையில்தான் இதெல்லாம்!''

விட்டுக் கொடுப்பவன் போல மகேந்திரன் பேசியதும் மது சிலிர்த்து எழுந்தாள்.

''என்னடா? என்ன கல்யாணம் ஆகிற வரை கும்தான்? ம்ம்ம்?''



''பின்னே... கல்யாணம் ஆகி நீ கிளம்பிட்டால், இந்த வீடும் சுகமும் எல்லாம் எனக்கு மட்டும்தானாக்கும்!''

''போடா.. போ! நான் எப்பவும் எங்க அம்மா கூடத்தான் இருப்பேன்! கல்யாணம் எல்லாம் செஞ்சுக்க மாட்டேன்!'' என்று மது சொன்னதும்,

''ஹப்பா! ஒரு இந்திய குடிமகன் தப்பிச்சான்!'' என்று மகேந்திரனும்,

''டேய்... மது... என்ன பேச்சு இது?'' என்று ஜானகியும், ஒரே நேரத்தில் சொல்ல,

''ஆமாம்மா! நான் உண்மையாத்தான் சொல்றேன்! எதுக்குக் கல்யாணம் செஞ்சுக்கணும்? உங்களை விட்டுப் பிரிஞ்சு போகணும்? எனக்கு உண்மையிலேயே இதுல் கல்யாணத்தில் எல்லாம் இஷ்டமே இல்லை!'' என்றாள் மது.

தன் திருமண வாழ்வைப் பற்றிச் சொல்லி, மகளைக் காயப் படுத்தி விட்டோமோ என்று ஒரு கணம் யோசித்த ஜானகி, இதைப் பற்றி அவளிடம் ஒரு சமயம் பேச வேண்டும் என்று முடிவெடுத்து, பேச்சை மாற்றும் விதமாக, ''நேற்று நைட் லேட்டா வந்தேன்... காலை யிலும் பேச முடியலை... இப்போ சொல்லுங்க... இரண்டு பேரும் என்ன செஞ்சீங்க, நான் ஊரில் இல்லாத இந்த இரண்டு நாளா?'' என்று விசாரித்தார்.

''நான் சொல்றேன்...'' என்று மகேந்திரன் ஆரம்பிக்க, ''நீ பேசக்கூடாது! வாயைத் திறந்தால், ஒரே பொய்'' என்று அவனை அடக்கிய மது,

''அம்மா அதை ஏன்மா கேட்கறீங்க? இவன் தொல்லை தாங்க முடியலை! நான் கிளம்பற அவசரத்திலும் சமைத் தும் போட்டால், எனக்குக் கூட மிச்சம் வைக்காமல்

மொக்கிட்டு, என் சமையலையே குறை சொல்லிட்டு இருந்தான்!'' என்று சிறு பிள்ளையாய் குற்றப் பத்திரிகை வாசிக்க ஆரம்பித்தாள்.

''அத்தை! யாருக்காவது தண்டனை கொடுக்கணும் என்று நினைத்தால், நம்ம மதுவோட சட்னி பேஸ்ட்டை கொடுத்தால் போதும்!'' என்று மகேந்திரன் அவள் பங்குக்கு காலை வார, மீண்டும் இருவரும் புதிதாக ஒரு சண்டையை ஆரம்பித்தனர்.

இருவரின் சண்டையையும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்த ஜானகி, சண்டைக் கோழிகளாக இருவரும் சிலிர்த்துக் கொண்டாலும், அடிப்படையில் ஒருவர் மேல் ஒருவருக்கு அளவு கடந்த பாசம் என்பதை அறிவார்.

ஒரு முறை, பக்கத்து வீட்டு பெண், மகேந்திரன் தன்னிடம் ஒரு மாதிரி பேசுகிறான் என்று ஜானகியிடம் குறை சொன்னபோது, ஜானகியால் நம்ப முடியவில்லை. தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளையிடம் இதைப் பற்றி விசாரிப்பது எப்படி என்று குழம்பியவர், மதுவிடம் விஷயத்தைச் சொல்ல, மது கோபத்தில் அன்னையையே கடித்து எடுத்து விட்டாள்.

''நம்ம மகேன் பற்றி உங்களுக்குத் தெரியாதா? அவன் எல்லா பொண்ணுங்க கிட்டயும் நல்லா பேசுவான்! ஆனால், யாரையும் தப்பான கண்ணோட்டத்தோடு பார்க்கவும் மாட்டான்! யார்கிட்டயும் தப்பா பழகவும் மாட்டான்! யாரு... அந்த பக்கத்து வீட்டு பல் வர்ணக் கிளி உங்க கிட்ட கம்ப்ளைன்ட் கொடுத்தாளா?'' என்று எரிச்சலுடன் கேள்வி கேட்டவள்,

''அவளுக்கு எல்லாரும் எப்ப பாரு அவ அழகை புகழ்ந்துகிட்டே இருக்கணும்... அவள் போக்கு கொஞ்



...சரி இல்லை என்றதும், நான்தான் இந்த மடையன் ...சொல்லி பேசாமல் இருக்கச் சொன்னேன்! அந்த ...த்தில்தான் உங்க கிட்ட வந்து வத்தி வைச்சிருக் ... இதுக்குத்தான் இவன்கிட்ட சொல்றேன்... ...கிட்டயும் ஒரே மாதிரி இருக்காதேடான்னு... ...ரானா?''

...ம்பித் தள்ளியதும், ஜானகிக்கும் குழப்பம் ...ராலும், ''பின்னே! நீ கூட அவன் சைட் அடிக் ...ன்று எப்ப பாரு சொல்லிட்டே இருப்பாயே ...ன்று விசாரிக்கவும் செய்தார்.

...யோ! அம்மா! ஒரு பொண்ணு பார்க்க ...மா இருந்தால், பசங்க பார்க்கிறதுதான்! ஏன்... ...ங்க நாங்க கூடத்தான் பசங்கள பார்ப்போம்! ... நாங்க கொஞ்சம் அமைதியா செய்யறதை... ...ர்ப்பாட்டமா செய்வாங்க... மற்றபடி நம்ம ...ல் ரியல்லி ஜெம் மா!'' என்ற மது,

...ன் இப்படி சொன்னேன் என்று அந்த மக்குப் ...கிட்ட சொல்லிடாதீங்க! அப்புறம் அவன் அலம்பல் ...முடியாது!'' என்று ரகசியமாகச் சொல்ல, ஜானகி ...தலையாட்டினார்.

...எப்படி மகேந்திரனை விட்டுக் கொடுக்காமல் ...னோ, அதே போலத்தான் மகேந்திரனும்.

...முறை, மது யாரோ ஒரு பையனை காவல் துறை ...பிடித்துக் கொடுப்பதற்காக, காவல் நிலையம் சென்று ...என்று தெரிந்து, ஜானகி அவளைக் கண்டிக்க, ...கோபத்துடன் தன் அறைக்குச் சென்று விட்டாள்.

...தேவை இல்லாமல், வம்பு என்று ஜானகி ...போது, மகேந்திரன் ஜானகியைத் தேற்றினாலும், ...தான் ஆதரவாகப் பேசினான்.

''தேவை இல்லாமல் வம்பு செய்யறவனை எல்லாம் சும்மா விடக் கூடாது அத்தை! நம்ம மது செஞ்சது சரிதான்!'' என்று மகேந்திரன் சொன்னதும்,

''துஷ்டனைக் கண்டால் தூர விலகு, என்று நம்ம வேலையைப் பார்த்துட்டுப் போறதை விட்டுட்டு இவளுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை?'' என்று ஜானகி அப்போதும் தாயாய்ப் பரிதவிக்க,

''அப்படி எல்லா விஷயத்தையும் விட முடியாது அத்தை! அந்தப் பொறுக்கி, ஸ்கூலுக்குப் போற பொண்ணு கிட்ட வம்புக்குப் போயிருக்கான்! பாவம் அந்தப் பொண்ணு! அதான் நம்ம மது ஈவ் டீசிங் கேசில பிடிச்சுக் கொடுத்திருக்கா... இது பெருமைப்பட வேண்டிய விஷயம், அத்தை! அதை விட்டுட்டு கவலைப் பட்டுட்டு இருக்கீங்களே!'' என்ற மகேந்திரனிடம்,

''எனக்கும் பெருமையாதான் இருக்கு! ஆனால் அவன் வெளியே வந்து ஏதாவது வம்பு செய்தால் என்ன செய்யறது சொல்லு?'' என்று ஜானகி தன் கவலையைச் சொல்ல,

''அதெல்லாம், நான் பார்த்துக்கறேன் அத்தை! நம்ம போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ எனக்குத் தெரிஞ்சவர்தான். அவனை நல்லா மிரட்டி வைக்கச் சொல்லி இருக்கேன். எந்தப் பிரச்னையும் வராது! நீங்க கவலைப் படாதீங்க!'' என்று ஆறுதல் அளித்தான்.

இருவரும் எப்போதும் சண்டை இட்டுக் கொண்டாலும், ஒருவருக்கு பிரச்சனை என்றால், மற்றவர் தயங்காமல் துணை நிற்பார்கள் என்ற எண்ணத்தில் ஜானகியின் முகத்தில் நிம்மதி கலந்த புன்னகை எழுந்தது.



''அத்தை! இந்த சன்டே பார்க் ஹோட்டல் போகலாமா என்று கேட்டேனே?'' என்று ஜானகியின் தோளைப் பற்றி மகேந்திரன் லேசாக உலுக்கிய பிறகு, தன் யோசனையில் இருந்து மீண்ட ஜானகி, ''என்ன மகேன்?'' என்று விசாரித்தார்.

''இல்லை! வானவில் டீலிங் கிடைத்ததைக் கொண்டாட பார்க் ஹோட்டல் போகலாமான்னு கேட்டேன்!'' என்று மீண்டும் ஒரு முறை, மகேந்திரன் சொன்னதும், ''போகலாம்!'' என்று ஒப்புதல் அளித்தார்.

''எங்க ஆபீஸ் ஸ்டாஃப் எல்லாரையும் கூட கூட்டிப் போகணும் என்று நினைச்சிருக்கேன், அத்தை! நாம போகும்போதே கூப்பிட்டுப் போகலாம் என்று தோணுது! நீங்க என்ன சொல்றீங்க?''

ஜானகியின் கருத்தை அறிய மகேந்திரன் விழைய, ''எனக்கு எதுவும் பிரச்சனை இல்லை. மகேன் நானா கூட்டிட்டு வா!'' என்று ஜானகி சொன்னதும்,

''நீ என்ன சொல்றே மது?'' என்று மகேந்திரன் அவளது கருத்தையும் அறிய முற்பட்டான்.

''நோ ப்ராப்ளம் மகேன்! நிறைய பேர் போனால் ஜாலியாதான் இருக்கும்! எனக்கு ஓகே!''

மதுவும் ஒப்புதல் அளித்ததும், நாளைக்கு அலுவலகத்தில் எல்லாரிடமும் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்போதே, நந்தினியின் முகம் அவன் மனதில் தோன்றி, அவனையும் அறியாமல் இதழ்களில் புன்னகை அரும்பியது.

அவளைப் பற்றி நினைக்கும்போதே, மனதில் ஒரு விளக்க முடியாத சுகம் உண்டாவதை வியப்புடன் உணர்ந்தான்.

அவன் முகத்தில் தெரிந்த மாறுதலைக் கண்டு அதிசயித்தவளாக, ''மக்கு மகேன்! என்னடா ஆச்சு?'' என்று மது அவன் தோளைப் பற்றி உலுக்க, தன் னிலைக்கு வந்தவன், இதுவரை அறிந்திராத அந்த உணர்வை எண்ணி ஒரு புறம் ஆச்சரியப்பட்டாலும்,

''ஹே! இனிமேல் அய்யாவை மரியாதையா கூப் பிடப் பாரு! உனக்குப் பிடிச்ச வானவில் டெக்ஸ்டைல்ஸ் இப்போ என் கிளையன்ட்! உனக்கு அங்கே வேலை வேணும் என்றால், அய்யாவோட சிபாரிசு முக்கியம் தெரிஞ்சுக்கோ!'' என்று தன் இயல்பான கேலியில் இறங்கினான்.

''ஹே! யாருக்கு வேணும் உன் சிபாரிசு! நானே, என் முயற்சியில் அங்கே வேலைக்குப் போவேண்டா! அப்படி முடியலை என்றால், வேற கம்பெனி வேலைக்கு போவேனே தவிர, உன்கிட்ட சிபாரிசுக்கு வந்து நிற்க மாட்டேன்!'' என்று விட்டு, மது நாக்கைத் துருத்தி அழகு காட்டி விட்டுச் சென்றாள்.

* * *

''சத்யா... உங்கிட்ட சொல்ல மறந்துட்டேன்! நேற்று சென்னை என்.ஐ.எப்.டி.ல இருந்து கூப்பிட்டு இருந் தாங்க. நம்ம விரிவாக்கத்துக்கு ஆட்கள் தேவைப்பட றாங்க. அதனால் கேம்பஸ் இன்டர்வியூ ஏற்பாடு செ யும்போது, சொல்லச் சொல்லி இருந்தோம், இல்லையா? இன்னும் ரெண்டு நாளில் ஏற்பாடு செஞ்சிருக்காங்கா எனக்கு அன்னைக்கு டெல்லியில் ஒரு மீட்டிங் இருக்கு நீயும், நம்ம ஜி.எம்மும் போய் பார்த்துட்டு வந்துடறீங் களா?''



தந்தை கோபிநாத் கேட்டவும், சத்யாவுக்கு காதில் தேன் வந்து பாய்வது போலிருந்தது. என்னதான், அவள் படிப்பு முடியும் வரை பார்க்க வேண்டாம்... பேச வேண்டாம்... என்று நினைத்திருந்தாலும், மதுவைப் பார்க்கும் வாய்ப்பு தானாக அமைவதை எண்ணி அவ னால் சந்தோஷப்படாமல் இருக்க முடியவில்லை.

''ஷ்யூர்பா... நானே போறேன்!'' என்றவன், எந்த எந்த துறைக்கு ஆட்களை எடுக்க வேண்டும் என்று ஏற்கனவே யே இருந்ததை, மீண்டும் ஒரு முறை உறுதிப் படுத்திக் கொண்டான்.

ஆடை வடிவமைப்பு துறைக்கு ஆள் எடுக்க வேண் டிய அன்று மது கல்லூரி வாசலில் விட்டுச் சென்ற பாவனைப் பார்த்ததில் இருந்தே, அவளது திறமை மதுவுக்கு புலப்பட்டிருந்தது.

திருமணத்தைப் பற்றி எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இருந்தபோதே, சத்யாவுக்கு தன் மனைவியும், தன்னோடு தங்கள் தொழிலில் பங்கேற்றால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால், அதை ஒரு நிபந்தனையாகச் சொல்ல அவனுக்கு விருப்ப மில்லை.

இப்போது, மதுவும் தான் இருக்கும் துறையிலேயே வேலையை மேற்கொண்டிருப்பதை நினைக்கும்போது, அவன் மனதில், 'இதெல்லாம் கடவுள் சித்தம்!' என்ற எண்ணம் அழுத்தமாகப் பதிந்தது.

மதுவைக் காணப் போகும் உற்சாகத்தோடு இரண்டு நாட்களும் பறந்து சென்றன.

* * *

''ஹே! மக்குப் பையா! என்னமோ உன்னோட சிபாரிசு இருந்தால்தான் வானவில்லில் வேலை கிடைக்கும் என்று பெருமை அடிச்சாய் இல்லை? இப்ப பாரு! என் திறமையாலேயே அங்கே எனக்கு வேலை கிடைக்கப் போகுது!''

பெருமிதமாய்ச் சொன்ன மதுமிதாவை, ஒரு மாதிரி பார்த்த மகேந்திரன், ''என்ன மத்து? காலையில் ஏதோ உளற ஆரம்பிச்சிட்டே? எதாவது கனவு கண்டாயா?'' என்று கிண்டலுடன் விசாரித்தான்

''உளறலும் இல்லை! கனவும் இல்லை! இன்னைக்கு எங்க காலேஜில் கேம்பஸ் இன்டர்வியூ! வானவில்லில் இருந்து வராங்க!'' என்று அமர்த்தலாக அறிவித்தாள்.

''சரிம்மா... இன்டர்வியூ செய்யத்தானே வராங்க? என்னமோ வேலையே கிடைச்ச மாதிரி பில்ட் அப் கொடுக்கிறே? அங்கே எல்லாம் திறமைசாலிகளுக்குத்தான் இடம்! உனக்கெல்லாம்...''

மகேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மது நங்கென்று அவன் மண்டையில் குட்டினாள்.

''ஸ்ஸ்ஸ்... ஆஆ... குட்டிப்பிசாசு! ஏண்டி இப்படி கொட்டுறே?'' ஒரு கையால், தன் தலையைத் தேய்த்து விட்டபடி மகேந்திரன் மதுவை முறைக்க, அவளும் அவனை உறுத்து நோக்கினாள்.

''உன்னை மாதிரி ஒரு மக்கு ஆடிட்டருக்கே, அங்கே இடம் இருக்கும்போது, எனக்கென்னடா? இன்னைக்கு சாயந்திரம், வேலை கிடைச்சதுக்கு ட்ரீட் தருவே பாரு!''

கோபமாகச் சொல்லிவிட்டு, மது தன் அறைக்குள் நுழைந்ததும், ''எதுக்கு மகேன் அவளை எரிச்சல் படுத்



அடி வாங்குகிறாய்?'' என்றபடியே வந்த ஜானகி, ''இருந்தாலும், இந்தப் பொண்ணுக்கு கை கொஞ்சம் நீளம்தான்!'' என்று அங்கலாய்த்தார்.

''இதெல்லாம் எங்களுக்குள்ள சகஜம்தானே அத்தை! சண்டை போடாமல் இருந்தோம்னு வைச்சுக்கோங்க... அன்னைக்கு முழுக்க ஏதோ மிஸ் ஆன மாதிரியே, இருக்கும்! இருந்தாலும்... இன்னைக்கு கொஞ்சம் அதிகமாவே கலாச்சிட்டேன் போல! எப்பவும் விட அடியில் டோஸ் அதிகமா இருக்கு!'' என்று மீண்டும் தலையைத் தேய்த்து விட்டான்.

அவன் சொன்ன பாவனையில் சிரித்தவாறே, ''ரெண்டு பேரும் சொன்ன பேச்சைக் கேட்க மாட்டீங்க!'' என்றபடி, ஜானகி வேலையைப் பார்க்கச் சென்றார்.

இருவரும், கிளம்பி வந்து சாப்பிடும்போது, மது மகேந்திரனிடம் எதுவும் பேசவில்லை.

அவள் அப்படி இருக்கும்போது, மகேந்திரனுக்கு மேலும் மேலும் சீண்டும் ஆவல் உண்டாகும். ஆனால், இன்று அவனுக்கே என்னவோ போலிருந்தது.

அமைதியாக உண்டு முடித்ததும், ''அம்மா... நான் கிளம்பறேன்!'' என்று அன்னையிடம் அவள் விடை பெற்றுக் கொண்டு கிளம்ப, பின்னாலேயே வந்த மகேந்திரன், ''மது...'' என்று அழைத்தது காதில் விழாதது போல், அவள் வேகமாக வண்டியை எடுக்கச் சென்றதும், மகேந்திரன், ஓடி வந்தான்.

''மதுக்குட்டி! சாரிடா! உனக்கில்லாமல் வேற யாருக்குடா வேலை கொடுப்பாங்க?'' என்று அவளைத்

தாஜா செய்து விட்டு, ''ஆல் தி பெஸ்ட்!'' என்று வாழ்த்தினான்.

அவனது மதுக்குட்டி என்ற அழைப்பிலேயே எப் போதும் போல கோபம் போய் விட, தான் கோபமாகக் கிளம்பிப் போனால், அவனுக்கு வேலை ஓடாது என்பதை உணர்ந்தவள் என்பதால், ''தேங்க்ஸ்!'' என்று புன்னகைத்து விட்டு வண்டியை எடுத்தாள்.

நேர்முகத் தேர்வுக்காக ஆவலுடன் காத்திருந்த மதுவுக்கு, நேர்முகத் தேர்வு நடந்து கொண்டிருந்த அறைக்கு வந்து, அங்கே அமர்ந்திருந்தவனைக் கண்டதும் விழிகள் அகல விரிந்தன.

'ஓ மை காட்! இவனா? வேலை கிடைத்த மாதிரி தான்!' என்று நொந்து கொண்டவள், வேக வேகமாக அன்று தான் அவனிடம் ஏதாவது ஏடாகூடமாகப் பேசி னோமோ என்று யோசித்தாள். எதுவும் பேசவில்லை தான்! ஆனால், அவள் பார்த்த பார்வையிலேயே, அவள் என்ன நினைத்தாள் என்று அவனுக்குத் தெரிந்திருக் குமே!

அதற்கு மேல் யோசிக்க முடியாமல், ''ப்ளீஸ் சீட்!'' கம்பீரமாக அவன் குரல் ஒலித்தது.

நன்றி சொல்லி விட்டு, அவனை நோக்கியவளுக்கு அவன் முகத்தில் அவளை அடையாளம் தெரிந்த கொண்டதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

'ஹப்பாடா!' என்று வெளியே தெரியாமல் பெருமூச்சு விட்டவள், நிமிர்ந்து அமர்ந்து அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாரானாள்.

கேட்ட கேள்விகளுக்கு, அவர்களுக்கு திருப்திகரமாக இருக்கும் வகையில் பதில் அளித்தவளின், கோப்பில்



இருந்த வடிவமைப்புகளும் அவர்களுக்குப் பிடித் திருந்தது.

அவர்களது முகத்தில் இருந்தே, அவளைப் பற்றிய நல்ல அபிப்ராயம் தோன்றி விட்டது என்பதை உணர்ந்த மதுவின் முகம் மேலும் மலர்ந்திருந்தது.

கோப்பைப் பார்த்துவிட்டு நிமிர்ந்த சத்யா, ''வெல்! மிஸ் மது..மிதா!'' என்று ஆரம்பிக்கும்போது கூட, இருந்த போது மேலாளரின் கைப்பேசி அழைக்க, ''அப்பாதான் கூப்பிடறார், தம்பி! அவசரம் என்பதால்தான் இன்டர் வியூ என்று தெரிஞ்சும் கூப்பிட்டு இருக்கார்... பேசிட்டு வந்துடறேன்!'' என்று அவர் அங்கிருந்து நகர்ந்த வுடன்,

''சோ... அன்னைக்கு பேப்பர் கொடுக்க வந்த நான் ரோட் சைட் ரோமியோ இல்லை என்று உங்களுக்குத் தெரிந்து விட்டதா?'' என்று வந்த கேள்வியில், மது முகம் வாரிப் போட்டு கொண்டு நிமிர்ந்தாள்.

'கடவுளே! இவனுக்கு எல்லாமே நினைவு இருக் கிறது!'

என்ன சொல்வதென்று புரியாமல் கொஞ்ச நேரம் விழித்தவள், புன்னகையோடு அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததை உணர்ந்து, ''வந்து... சாரி ஃபார் மை சாரி'' என்று மன்னிப்பு வேண்டினாள்.

''இட்ஸ் ஓகே! உண்மை தெரிஞ்சதா இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன்!''

''நான் உள்ளே வரும்போது, உங்களுக்கு அடையாளம் தெரிந்த மாதிரியே நீங்க காட்டிக் கொள்ளவில்லையே?''

ஆச்சரியத்துடன் வந்த அவளது கேள்விக்குப் பதிலாக மறுபடியும் புன்னகையை சிந்தியவன், ''நான் அப்படிக்

காட்டி இருந்தால் இன்டர்வியூவில் நீங்க கான் சென்ட்ரேட் செய்ய முடியாமல் போயிருக்கும், இல்லையா? அதனால்தான்...!'' என்றதும், மது அவனை நன்றியோடு நோக்கினாள்.

''தேங்க் யூ சார்! அண்ட் அகைன் வெரி சாரி!''

அவள் மீண்டும் மன்னிப்பு வேண்டியதில், அன்று அவளை அவன் இமைக்காமல் பார்த்ததை அவள் மறந்து விட்டாள் என்பதை உணர்ந்த சத்யாவுக்கு முறுவல் விரிந்தது.

''ஹே! லீவ் இட்! உங்க மேலயும் தப்பில்லை! அத்தோடு நீங்க என்னை எதுவும் திட்டவும் இல்லையே!''

புன்னகையுடன் அவன் சொன்னதும், மதுவின் முகத்தில் நிம்மதி புன்னகை பூத்தது.

மீண்டும் அவள் நன்றி சொல்லும் முன், சிதம்பரம் வந்து இருக்கையில் அமர்ந்தார்.

''என்ன சார்? ஓகேதானே?'' என்று மதுவின் கோப்பைப் பார்த்து வினவியவன், அவர் ஒப்புதலாகத் தலையசைத்ததும், ''மிஸ். மது... நீங்க எக்ஸாம்ஸ் முடிஞ்சதும், வந்து ஜாயின் செய்யலாம்! ரிசல்ட்ஸ் வரும் வரை காத்திருக்கத் தேவையில்லை!'' என்றதும் மதுவின் முகம் மலர்ந்தது.

''தேங்க் யூ சார்! தேங்க் யூ!'' என்று இருவரிடமும் நன்றி உரைத்து விட்டு வெளியே வந்தவளின் மனம் உற்சாகத்தில் இறக்கை இல்லாமல் பறந்தது.

வானவில் போன்ற ஒரு கம்பெனியில் தன் வேலை வாழ்க்கைத் துவங்கப் போவதை எண்ணி மனம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.



அன்னையை கைப்பேசியில் அழைத்து விவரத்தைச் சொல்லி, தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டவள், மகேந்திரனை அழைக்க எண்ணும்போதே, மகேந்திரனின் அழைப்பு வந்தது.

அழைப்பை எடுத்து ''திங்க் ஆஃப் தி டெவில்...'' என்று சொல்லிச் சிரித்தவள், மகேந்திரனின் ''மது? ஓகேதானே?'' என்ற அக்கறையான குரலில் மனம் நெகிழ்ந்தாள்.

காலையில் அவளிடம் அவ்வளவு வம்பு வளர்த்தாலும், விஷயத்தை அறிந்து கொள்ள சரியான நேரத்தில் அழைத்தவனை எண்ணி மனம் பெருமிதம் கொண்டது.

''ம்ம்ம்... ஓகேதான் மகேன்! எக்சாம்ஸ் முடிஞ்சதும் சொல்லி சொல்லி இருக்காங்க!'' என்று சந்தோஷமாகச் சொன்னவளிடம்,

''கங்க்ராட்ஸ் மது! ஐ அம் சோ ஹேப்பி ஃபார் யூ! பட் மது... வேலை இருக்கு... சாயந்திரம் பேசிக்கலாம்!'' என்றுவிட்டு அழைப்பைத் துண்டித்தான்.

மதுவிடம் பேசிவிட்டு தன் அறையை விட்டு வெளியே வந்த மகேந்திரன் ''ஹலோ பிரண்ட்ஸ்! வானவில் கம்பெனியோட டீலிங் கிடைத்தது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்! அந்த சந்தோஷத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்காக, இந்த சன்டே ஹோட்டல் பார்க்கில் டின்னருக்கு ஏற்பாடு செஞ்சிருக்கேன். நீங்க எல்லாரும் கண்டிப்பா வரணும்! நானே, வண்டி ஏற்பாடு செய்யறேன். வரும்போது மட்டும், ஒரே இடத்தில் மீட் செஞ்சிடுங்க. டின்னர் முடிந்தவுடன், அவங்க அவங்க வீட்டில் டிராப் செய்ய ஏற்பாடு

செய்யறேன்! உங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லையே?'' என்று வினவினான்.

எல்லாரும் தங்கள் சந்தோஷத்தை வெளியிட நந்தினி மட்டும் ஒன்றும் சொல்லவில்லை. அவள் ஏதாவது சொல்லுவாள் என்று அவளை ஒரு கணம் நோக்கிய மகேந்திரன், அவள் அமைதியாக நிற்கவும் தன் அறைக்குத் திரும்பினான்.

இரண்டு நாட்களாக வேலைக்கு வருகிறாள். தான் உண்டு தன் வேலை உண்டு இருக்கிறாள். மகேந்திரன் இயல்பிலேயே கலகலப்பானவன் என்பதோடு, அவனோடு பணி புரிந்தவர்களிடம் அவன் தோழனாகவே பழகினான். மூன்று பெண்களும், மூன்று ஆண்களுமாக வேலை செய்த அந்த இடத்தில், எல்லாருமே, கிட்டத்தட்ட ஒரே வயதினராக இருந்ததால், அதிக வேலை நேரம் தவிர, மற்ற நேரங்களில், ஒரு கலகலப்பு நிறைந்திருக்கும். நந்தினி, மட்டும் அங்கே வித்தியாசமாக இருந்தாள். பேசவே இல்லை என்று சொல்ல முடியாது! ஆனால், தேவைக்கு அதிகமாக எதுவும் பேசவில்லை!

நந்தினியைப் பற்றி மகேந்திரன் யோசித்துக் கொண்டிருக்கும்போது, அவளே கதவைத் தட்டி விட்ட உள்ளே வந்தாள்.

''வாங்க நந்தினி! என்ன விஷயம்?'' என்றான் மகேந்திரன்.

அவள் தயங்கி நிற்க, ''சொல்லுங்க, ஏதோ சொல்லணும் என்றுதானே வந்தீங்க?'' என்று மகேந்திரன் ஊக்கவும், நந்தினி வாயைத் திறந்தாள்.



''வந்து... என்னால் சன்டே டின்னருக்கு வர முடியாது!''

மகேந்திரன் ஏனோ இதை எதிர்பார்த்திருந்தான்.

''ஏன்? அன்னைக்கு வேற ஏதாவது வேலை இருக்கா?'' அவன் சட்டென்று கேட்டதும், ''இல்லை!'' என்பதாக நந்தினியின் தலை அசைந்தது.

''பின்னே?''

''இல்ல! எங்க வீட்டில் அனுப்ப மாட்டாங்க!''

''டோன்ட் பி சில்லி... நந்தினி! நீங்க என்ன சின்னக் குழந்தையா? வீட்டில் அனுப்ப மாட்டாங்க என்று சொல்றதுக்கு? அப்படி என்ன கண் காணாத தூரத்துக்கா உங்களைக் கூப்பிடறோம்! எல்லாரும் ஒண்ணா வேலை செய்யறோம். நட்பா பழகறோம்! ஒரு சந்தோஷத்தைக் கொண்டாட நேரத்தில், நீங்க மட்டும் வர மாட்டேன்னு சொன்னால் நல்லாவா இருக்கும்? சொல்லுங்க!''

படபடவென்று மகேந்திரன் பேசியதும், நந்தினிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவள் அமைதியாக நிற்கவும், மகேந்திரனுக்கு ஏனோ எரிச்சல் வந்தது.

''சரி! உங்க இஷ்டம்!'' என்றவன், அவளை நிமிர்ந்தும் பாராது, வேலையில் கவனம் செலுத்த ஆரம்பிக்க, நந்தினி வாடிய முகத்துடன் வெளியே வந்தாள்.

''என்ன சொன்னார்?'' கூட பணிபுரிந்த சுதா கேட்க, நந்தினி, ''உங்க இஷ்டம் என்று சொல்லிட்டார்!'' என்றாள்.

''மகேந்திரன் அப்படிச் சொன்னால், அவருக்குக் கோபம் என்று அர்த்தம்! இங்கே வேலை செய்யற

எல்லார்கிட்டயும், நட்பா பேசி வேலை வாங்கிறவர் அவர்! கலகலப்பா பேசற அதே சமயம், கோபம் என்று வந்தால், அதை தன் வார்த்தைகளில் காண்பிக்கவே மாட்டார்... அமைதியா ஆகிடுவார்!'' என்ற சுதா,

''இருந்தாலும் நீ ரொம்பத்தான் அலட்டிக்கிறே. ஒரு டின்னருக்கு வரதுல உனக்கு என்ன பிரச்சனை... அதுவும் அங்கே இருந்து வீட்டுக்குப் போகக்கூட அவர்தான் ஏற்பாடு செய்யறேன்னு சொல்லி இருக்கார் இல்லை?'' என்று அலுத்துக் கொள்ள, ஒன்றும் பேசாமல் நந்தினி தன்னிடத்துக்கு வந்து அமர்ந்தாள்.

அடுத்த இரண்டு நாட்கள், மகேந்திரன் அவளிடம் அதைப் பற்றி எதுவும் பேசவில்லை. கோபமாக இருப்பது போலவும் இல்லை! வேலை விஷயம் மட்டும் பேசினான்.

நந்தினிக்கு என்னவோ போலிருந்தது. தான் ரொம்பவும் அலட்டிக் கொள்கிறோமோ? என்று தோன்ற, பெற்றோரிடம் இதைப் பற்றிப் பேச, தந்தை முதலில் தயங்கினார்.

''வேலைக்கு என்று போயாச்சு! அவங்களோட சேர்ந்து பழகறதுதானே நல்லது நந்தும்மா?'' என்று பார்வதி சொன்னதும், சிவராமனுக்கும், நந்தினி எல்லோரிடமும் சகஜமாகப் பழகினால், அவளது மனதுக்கு இதமாக இருக்கும் தோன்றியது. அவரும், ஞாயிறு அலுவலக தோழர்களுடன் வெளியே செல்ல ஒப்புதல் அளித்தார்.

தானும் வருவதாக மகேந்திரனிடம் சொல்லிவிட எண்ணி, சனிக்கிழமை மாலை, கிளம்பும்போது, அவனது அறைக்கு வந்தாள்.



மகேந்திரனுக்குமே, தான் அவளிடம் பேசாமல் இருப்பது, எதோ ஒன்று குறைவதைப் போலவே இருந்தது. புதிதாக சேர்ந்திருக்கிறாள். இப்போதுதான் அறிமுகமானவர்கள் என்பதால், அவர்களோடு வெளியே செல்ல அவளுக்கும் தயக்கம் இருந்திருக்கலாம். அவளிடம் அமைதியாகப் பேசிப் புரிய வைத்து, வர வைக்காமல், தான் ஏன் அப்படிக் கோபம் கொண்டோம் என்று யோசித்துக் கொண்டிருந்தவன், நந்தினி உள்ளே வந்ததும், தன் சிந்தனையில் இருந்து மீண்டான்.

''நான்... நாளைக்கு டின்னருக்கு வரேன் சார்!''

நந்தினி சொன்னதும், மகேந்திரன் முகம் மலர்ந்தது.

''கிரேட்! தேங்க்ஸ்!'' என்றவன்,

''நந்தினி... எத்தனை முறை சொல்றது... இங்கே எவருமே பெயர் சொல்லித்தான் என்னைக் கூப்பிடுவாங்க... நீங்களும் என்னை பெயர் சொல்லியே கூப்பிடுங்க!'' என்று விட்டு,

''நாளைக்கு மாலை ஆறு மணிக்கு, நம்ம ஆபீஸ் வாசலில் வண்டி இருக்கும், நைட் நான் சொன்னபடியே, உங்க வீட்டிலேயே டிராப் செய்யச் சொல்றேன்!'' என்றான்.

தலையாட்டி விட்டு நந்தினி சென்று விட, மகேந்திரன் மனம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

எல்லாப் பெண்களிடம் சகஜமாக, எந்தவித தயக்கமும் இல்லாமல், பழகும் மகேந்திரனுக்கு, நந்தினியிடம் பேசும்போது மட்டும், ஏனோ மனத்தில் ஒருவித படபடப்பும், சந்தோஷமும் குடி கொள்வதை உணர முடிந்தது. அவனுக்கு அது ஆச்சரியமாகவும் இருந்தது.

அந்த உணர்வு அவனுக்குப் பிடித்தும் இருந்தது. அதற்கான காரணத்தை அதிகம் யோசிக்காமல், புன்னகையோடு தானும் வீட்டுக்குக் கிளம்பினான்.



# 6

தன் அறையில் உள்ள கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டிருந்த சத்யாவின் விரல்கள், கைப்பேசியின் திரையில் தெரிந்த மதுவின் முகத்தை வருடிக் கொண்டிருந்தன. நேர்முகத் தேர்வில் மிக நெருக்கத்தில் பார்த்தபோது தெளிவாகத் தெரிந்த, உதட்டுக்கு மேலே இருந்த அவளது அழகிய மச்சம், இப்போதும், அவனது மனதில் தோன்றி அவனை இம்சித்துக் கொண்டிருந்தது.

புகைப் படத்தைப் பெரிதாக்கி, அவளது உதட்டின் மேல் இருந்த மச்சத்தை வருடிக் கொடுத்தான். நிழல் படத்திடம் செய்வதை, நிஜத்தில் செய்ய மனம் ஏங்கியது.

'எங்கேடி இருந்துடி வந்தாய்? நான் உண்டு... என் வேலை உண்டு என்று இருந்தவனை, இப்படி ஏங்க விட்டு விட்டாயே?'

மானசீகமாக, அவளிடம் பேசிக் கொண்டிருந்தவனுக்கு, எப்போதும் போல் குற்ற உணர்வும் தோன்றியது.

ஏதோ ஒரு உத்வேகத்தில், கல்லூரி விழாவில் அவளைப் பார்த்த அன்று புகைப்படங்கள் எடுத்து விட்டாலும், அவனுக்குக் குற்ற உணர்வு இருந்து கொண்டே தான் இருந்தது.



ஒரு பெண்ணை, அவள் அனுமதி இல்லாமல் புகைப்படம் எடுத்தது தவறில்லையா என்று மனசாட்சி தன்னைக் கேள்வி கேட்டது.

ஆனால், நான் எந்தத் தவறான நோக்கத்துடனும் எடுக்கவில்லையே? என்று காதல் கொண்ட மனம் பதில் சொல்ல, என் மனம் கவர்ந்தவளின் புகைப்படத்தை வைத்திருக்க எனக்கு உரிமை இருக்கிறது என்று தர்க்கத்தானே சமாதானம் செய்து கொண்டான்.

நேர்முகத் தேர்வில் மதுவைப் பார்த்துப் பேசியதில் இருந்து எப்போது இன்னும் மூன்று வாரங்கள் ஓடும், எப்போது மதுவைத் தன் அலுவலகத்தில் சந்திப்பது என்று ஆர்வத்துடன் காத்திருக்க ஆரம்பித்தான்.

கல்லூரி முடியும் நேரம், வெளியே நின்று அவளைப் பார்க்கலாமா என்று யோசித்து விட்டு, அது சரியாக இருக்காது என்று விட்டு விட்டவனுக்கு, நாளுக்கு நாள், மதுவைப் பற்றிய எண்ணங்களும், ஆசைகளும் கூடிக் கொண்டே போயிற்று.

இடையில், வேலை விஷயமாக மகேந்திரனிடம் பேச நேர்ந்தபோது, முன்பு தோன்றிய கலக்கம் தோன்றி மறைந்தாலும், அதையும் தாண்டி மது தன்னோடு இணைவது நிச்சயம் என்ற நம்பிக்கையும் முளைத்திருந்தது. அந்த நம்பிக்கைக்கு அடிப்படை எதுவும் இல்லை என்று தனது அறிவுக்குப் புரிந்தாலும், அவன் அதை அதிகம் ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை.

'விரைவில் வா மது!' என்று மனதுக்குள் அவளிடம் பேசியவன், புன்னகையுடன் உறங்கிப் போனான்.

* * *

ஞாயிறு மாலை!

''மது... எங்க ஆபீஸ் ஸ்டாஃப் எல்லாருக்கும் கார் அரேஞ்சு செஞ்சிருக்கேன்... நம்ம ஆட்டோவில் போன நல்லாவா இருக்கும்? கால் டாக்சியிலாவது போகலாம் மது...'' நயந்த குரலில் மகேந்திரன் வினவ, அவனை உணர்ச்சியற்ற முகத்தோடு ஏறிட்ட மது, ''நீயும் அம்மாவும் வேணா காரில் போங்க... நான் ஆட்டோவில் வரேன்...'' என, பெருமூச்சுடன் திரும்பிய மகேந்திரன், அவர்கள் மூவருமாக வெளியே செல்லும்போது, வழக்கமாக ஏற்பாடு செய்து கொள்ளும் ஆட்டோ காரரை அழைத்தான்.

ஆட்டோவில், மகேந்திரன் மற்றும் மது, பார்த ஹோட்டலில் வந்து இறங்கினார்கள்.

புதிய கணக்கு துவங்கும் ஏப்ரல் ஒன்றாம் தேதி ஆயுத பூஜை கொண்டாட்டம் போன்ற தினங்களில் ஜானகியும் மதுவும், மகேந்திரனின் அலுவலகத்திற்கு வருவது வழக்கம் என்பதால், வந்தவர்கள் அனை ரிடமும், மது சகஜமாகப் பேசத் துவங்கினாள்.

அவர்களும், மதுவுடன் கலகலக்கத் துவங்க, அவ களுக்கு இடையில் அமைதியாக நின்று கொண்டிருந்த நந்தினியை அப்போதுதான் கவனித்த மது, ''ஹாய் நீங்கதான் புதுசா சேர்ந்திருக்கிற நந்தினி? எங்க மகேஷ முதல் நாளே லெப்ட் அண்ட் ரைட் வாங்கின ஆ ரைட்?'' என்று வினவ, நந்தினி, கூச்சத்துடன் புன்னை தாள்.

அவள் அருகில் வந்து அவளது கையைப் பிடித்த ''யூ ஆர் லுக்கிங் சோ ப்ரெட்டி!'' என, ''நீங்களும் ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்றாள், நந்தினி.



ஜானகியை நந்தினியிடம் மகேந்திரன் அறிமுகப் டுத்த, ''வணக்கம், ஆன்ட்டி!'' என்று ஜானகிக்கு வணக்கம் தெரிவிக்க, ஜானகியும் பதில் வணக்கத்தோடு புன்னகைத்தார்.

அனைவரும் கலகலப்பான பேச்சுடன் உணவை உண்ண, அதிகம் பேசாவிட்டாலும், நந்தினிக்கும், அவர்களோடு நேரம் செலவு செய்வது, சந்தோஷமாக இருந்தது.

மற்றவர்கள் பேசுவதை சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்த, நந்தினியிடம்,

''நந்தினி, நீங்க அதிகம் பேச மாட்டீங்களா? ரொம்ப ஷைன்டா இருக்கீங்களே?'' என்று மது வினவ,

''அவங்க பார்க்கத்தான் சைலன்ட், மது! எப்போ தேவையோ அப்போ சும்மா பிச்சு உதறிடுவாங்க... இல்லை நந்தினி?'' என்று மகேந்திரனும், அவளைப் பேசில் இழுக்க, நந்தினி, மீண்டும் புன்னகைத்தாள்.

''ஹே! நீங்க சிரிக்கும்போது இன்னும் அழகாதான் இருக்கீங்க! அதுக்காக இப்படி பேசாமல் சிரிச்சிட்டே இருந்தால், எப்படி?'' என்று மது மீண்டும் அவளைப் பேச வைக்க முயல, மகேந்திரனின் பார்வை, புன்னகை சிந்திக் கொண்டிருந்த நந்தினியின் முகத்தில் நிலைத்து, ரசனையுடன் அவளை நோக்கியது.

உள்ளுணர்வு உந்த, மகேந்திரனிடம் பார்வையைச் சுழற்றிய நந்தினிக்கு, அவனது பார்வை, இனம் புரியாத ஒரு உணர்வைத் தோற்றுவிக்க, அதில் இருந்து தப்பிக்க வேண்டியவளாக, ''எக்ஸ்க்யூஸ் மீ...'' வாஷ் ரூம் வரைக்கும் போயிட்டு வரேன்!'' என்று எழுந்தாள்.

படபடத்த நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டு வேகமாக வந்தவள், எதிரே வந்த பெண்மணியின் மேல் லேசாக மோதி விட, ''என்ன கண்ணு தெரியலையா?'' கடுப்புடன் வந்த வார்த்தைகளில், விதிர்த்து நிமிர்ந்த அந்தப் பெண்மணியைக் கண்டதும் முகம் மாறினாள்.

நந்தினியின் முகத்தைக் கண்ட அந்தப் பெண்மணியின் முகமும் மாறியது.

''நீயா? இங்கே எங்கே வந்தே?'' என்று விசாரிக்க, அந்தப் பெண்மணிக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்து, அவளைத் தாண்டிக் கொண்டு நந்தினி செல்ல முயல, ''கல்யாணம் நின்னு போச்சேன்னு கொஞ்சம் கூட கவலை இல்லாமல், எவ்வளவு தைரியமாக மினுக்கி கிட்டு அலைகிறாள் பார்!'' என்ற வார்த்தைகள், கோபத்தை வா வழைக்க நந்தினி நின்றாள்.

''இங்கே பாருங்க! உங்க கூட நின்று பேசறதைக் கூட நான் கேவலமா நினைக்கிறேன்! மரியாதையா எதுவும் பேசாமல் போயிடுங்க!'' என்று அடிக் குரலில் மிரட்ட அந்தப் பெண்மணிக்கு மேலும் கடுப்பாகிப் போனது போலும்.

''ஹப்பா! என்ன வாய்! என்ன வாய்! நல்ல வேளை என் பிள்ளை தப்பிச்சான்!'' என்று அந்தப் பெண்மணி நொடிக்க, ஏதோ சொல்ல வாய் திறந்த நந்தினி மகேந்திரன் வருவதைக் கண்டதும், வாயை இறுக மூடினாள்.

''என்ன நந்தினி? போய் ரொம்ப நேரம் ஆச்சேன்னு பார்க்க வந்தேன்! ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கு?'' என்று அவன் அக்கறையுடன் விசாரிக்க,



''ஓ! இதானா விஷ்யம்? இதுக்குத்தான் கல்யாணம் வேண்டாம் வேண்டாம் என்று குதிச்சியா?'' வன்மத்துடன் அந்தப் பெண்மணி பேச ஆரம்பிக்க, அதுவரை இருந்த தயக்கமும் படபடப்பும் முழுமையாக விலகி,

''நான் வேண்டாம் என்று சொன்னதற்கான காரணம், எனை விட உங்களுக்கு நல்லாவே தெரியும்! இதுக்கு மேல என்னைப் பற்றி பேசறதுக்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. அருகதையும் இல்லை!'' அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டு, நந்தினி அந்த இடத்தை விட்டு நகர, மகேந்திரனும் பின் தொடர்ந்தான்.

கொஞ்ச தூரம் வந்ததும், ''என்ன ஆச்சு நந்தினி, ஏன் அவங்க ஒரு மாதிரி பேசறாங்க? நீங்க ஏன் இவ்வளவு கோபமா இருக்கீங்க?'' கவலை நிறைந்த குரலில் மகேந்திரன் கேட்டதும், நடந்து கொண்டிருந்த நந்தினி, ஒரு கணம் நின்று மகேந்திரனை ஆழ்ந்து நோக்கி, ''தேங்க்ஸ்!'' என்றாள்.

''தேங்க்ஸ்? எதுக்கு?'' குழப்பத்துடன் மகேந்திரன் கேட்க, ''சில பேரைப் பார்த்தால் நான் எப்படி ரியாக்ட் செய்வேன் என்று யோசிப்பேன்! அதுக்கான விடை, இவனுக்கு உங்களால் கிடைச்சுது! என்னவோ மனசு லேசான மாதிரி இருக்கு! அதுக்குத்தான் தேங்க்ஸ்!'' என்றாள், நந்தினி புன்னகையுடன்!

''நீங்க பேசறது புரியலை! பட், கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இருந்த நிலை மாறி, இப்போ நீங்க இப்படிப் பேசறது எனக்கு சந்தோஷமா இருக்கு!''

அவளது புன்னகையைக் கண்ட மகேந்திரனுக்கும் முகமும் மலர்ந்தது.

இருவரும் புன்னகைத்தபடியே வந்து அமர, மீதி நேரம், நந்தினியும் மற்றவர்களுடன் பேச்சில் கலந்து கொண்டாள்.

உணவு முடிந்து அனைவரையும் வழி அனுப்ப வந்த மகேந்திரன், அலுவலகத்தினருக்கு ஏற்பாடு செய்திருந்த வண்டியின் ஓட்டுனரிடம், அனைவரையும் பத்திரமாக வீட்டில் விடச் சொல்லிப் பேசிக் கொண்டிருந்த நேரம், நந்தினியின் கைப்பேசி அடித்தது.

எடுத்துப் பேசியவளின் முகம் பதட்டத்தைப் பூசிக் கொள்ள, ''என்ன நந்தினி?'' என்று விசாரித்தான் மகேந்திரன்.

''அப்பா... அப்பாவுக்கு நெஞ்சு வலி வந்திருக்குன்னு அம்மா போன் செய்யறாங்க! ஹாஸ்பிடலுக்கு போயிட்டு இருக்காங்களாம்!'' என்றவளின் குரல் நடுங்கியது.

''பதட்டப்படாதீங்க, நந்தினி!'' என்ற மகேந்திரன் போனை வாங்கி, எந்த மருத்துவமனை என்று விசாரித்துக் கொண்டு, ஜானகியிடம் வந்தான்.

''அத்தை, நான் நந்தினியோட நாம வந்த ஆட்டோவில் ஹாஸ்பிடல் போறேன்! பக்கத்தில்தான் ஹாஸ்பிடல்... போயிட்டு ஆட்டோவை அனுப்பி வைக்கிறேன்... அது வரைக்கும் இங்கேயே இருக்கீங்களா?'' என்று வினவ,

''நீ கிளம்பு மகேன்! நாங்க பார்த்துக்கறோம்!'' என்றாள், மது.

''ஒண்ணும் ஆகாது! பயப்படாதீங்க!'' ஆறுதல் சொல்லியபடி நந்தினியை அழைத்துக் கொண்டு மகேந்திரன் புறப்பட்டான்.



''ஏற்கனவே ஒரு பெரிய அட்டாக் வந்து பிழைச்சவர்... எனக்கு பயமா இருக்கு மகேந்திரன்!''

கண்களில் பயமும், கலக்கமும் சூழ நந்தினி சொன்னாலும், ''ஒண்ணும் ஆகாது! நீங்க இப்படிப் பயப்படறதை விட்டுட்டு அமைதியா வாங்க! நீங்கதானே உங்க அம்மாவுக்கு ஆறுதலா இருக்கணும்?'' மகேந்திரன் மென்மையாகச் சொல்ல, நந்தினி கண்களை மூடி கடவுளிடம் வேண்ட ஆரம்பித்தாள்.

அவளது கவலை படிந்த முகமும், பயத்தில் லேசாக நடுங்கிக் கொண்டிருந்த தேகமும், மனதை வருத்த, அவளை அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போல ஒரு உந்துதல் தோன்ற, மகேந்திரன் ஒரு கணம் நிலைகுத்தான். அடுத்த கணமே, தலையைக் குலுக்கிக் கொண்டு, அவள் அப்பாவுக்கு எதுவும் ஆகக்கூடாது என்று பிரார்த்திக்க ஆரம்பித்தான்.

மருத்துவமனை வந்ததும் ஆட்டோவை அனுப்பி விட்டு, வரவேற்பில் வேகமாக விசாரித்துக் கொண்டு சிவராமன் இருந்த அறையின் உள்ளே சென்றபோது, ''ஒண்ணும் பயப்பட வேண்டாம்! நீங்க டென்ஷன் ஆகாம இருக்கணும் சிவராமன். உங்க உடல் நிலையை விட உங்க மனசாலதான் இந்த மாதிரி பிரச்சனைகள் வருது. அமைதியா இருக்க முயற்சி செய்யுங்க!'' என்ற படி மருத்துவர் வெளியேறினார்.

''அப்பா! என்னப்பா?'' என்று கண்கலங்க நந்தினி தந்தையிடம் வர, அமைதியாகக் கண்களை மூடிக் கொண்டார் அவர்.

''என்ன ஆச்சும்மா?'' அன்னையிடம் நந்தினி விசா

''அவரோட ப்ரண்ட் வந்திருந்தார்... பழைய கதைகளைப் பேச ஆரம்பிச்சதில், உங்கள் அப்பாவுக்கு பிரஷர் ஜாஸ்தி ஆகிடுச்சு... அதான்!''

பெருமூச்சுடன் சொன்ன பார்வதி, அப்போதுதான் மகேந்திரனைக் கவனித்தார்.

''நந்து! யாரும்மா இது?'' அவர் மெல்லியக் குரலில் விசாரிக்க, அப்போதுதான் அவன் நினைவு வந்தவளாக நந்தினி மகேந்திரனிடம் திரும்பினாள்.

''சாரி சார்!'' என்றவள் ''இவர்தான் மிஸ்டர். மகேந்திரன், எங்க பாஸ்!'' என்று பெற்றோருக்கு அறிமுகப் படுத்தினாள்.

''நான் ஜஸ்ட் மகேந்திரன் மட்டும்தான்... இவங்க என்னமோ கொள்ளைக் கூட்ட தலைவன் மாதிரி பாஸ் என்றெல்லாம் சொல்லி பயமுறுத்தறாங்க!'' கேலியாகச் சொல்லி, சூழ்நிலையை இலகுவாக்கிய மகேந்திரன், சிவராமன் அருகில் வந்து நின்றான்.

''அங்கிள்! உங்களுக்கு என்ன மனக் கஷ்டம் என்று எனக்குத் தெரியாது! ஆனால், எந்தக் கஷ்டமும் நிரந்தரமானது இல்லை! எல்லாத்துக்கும் ஒரு நல்ல தீர்வு கண்டிப்பா இருக்கும்! அதனால், நீங்க மனசை அலட்டிக் காமல் இருக்க முயற்சி செய்யுங்க! நீங்க நல்லா இருந்தால்தான், நந்தினிக்கும், ஆன்ட்டிக்கும் பலம்! அதை மட்டும் எப்பவும் மனசுல வைச்சிக்கோங்க!''

மென்மையான அழுத்தத்துடன் மகேந்திரன் சொன்னது, சிவராமனது நொந்து போன உள்ளத்துக்கு இதமாக இருந்தது.

நன்றியுடன் நந்தினி அவனை ஏறிட, பார்வதியின் முகத்திலும் மெச்சுதல் தெரிந்தது.



''உங்க வேலை எல்லாம் விட்டுட்டு என் கூட வந்ததுக்கு நன்றி சார்!'' என்று நந்தினி சொன்னதும், ''இருங்க! இருங்க! நான் இன்னும் கிளம்பலை! டாக்டர் கிட்ட போய் எப்போ கிளம்பலாம்னு கேட்டுட்டு வரேன்! இப்போவே கிளம்பலாம் என்று சொன்னால், உங்களை வீட்டில் விட்டு விட்டுத்தான் நான் கிளம்பப் போறேன்!'' என்று மருத்துவரைப் பார்க்க வெளியே வந்தவனோடு, நந்தினியும் வந்தாள்.

* * *

ஆட்டோ வருவதற்காக ஜானகியும் மதுவும் காத்திருக்க, தன் நண்பரின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு விட்டு வெளியே வந்த சத்யா, மதுவை வாசலில் கண்டதும் இனிமையாக அதிர்ந்தான்.

''ஹாய்!'' பிங்க் நிற சுடிதாரில் இளம் ரோஜாவாக மின்னியவளின் அருகில் வந்தவன், ''மது வாட் எ சர்ப்ரைஸ்! நீங்க எங்கே இங்க?'' என்று விசாரித்தான்.

மதுமிதா, சத்யாவை அங்கு சற்றும் எதிர்பார்க்க வில்லை. அதிலும், அவன் தானாக வந்து பேசியதில், ஆச்சரியம் அடைந்து, எழுந்து நின்றவள், ''ஹாய்! ஒரு பர்த்டேக்கு வந்தோம்!'' என்ற மது, சத்யாவை ஜானகிக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

அவர்கள் ஆட்டோ வர காத்திருக்கிறார்கள் என்றும் அறிந்ததும், ''மது! வாங்களேன்... நானே உங்களை டிராப் பண்ணிடறேன்!'' என்று அவர்களை அழைத்தான்.

''இல்லை சார்! இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆட்டோ வந்துடும்'' மது சொன்ன நேரம், அவளது கைப்பேசி அழைத்தது.

''மதும்மா! நான் கதிர் பேசறேன்... இங்கே வர வழியில் ஒரு ஆக்சிடென்ட் நடந்திருக்கு... ரோடை ப்ளாக் பண்ணி வைச்சிருக்காங்க! வர லேட் ஆகும் என்று நினைக்கிறேன்... வெயிட் பண்றீங்களா? இல்லை வேற ஏதாவது ஏற்பாடு செஞ்சுக்கறீங்களா?''

எப்போதும் வழக்கமாக அவர்கள் ஏற்பாடு செய்து கொள்ளும் ஆட்டோக்காரர் விவரம் சொன்னார்.

''ஓ! விவரம் சொன்னதுக்கு தேங்க்ஸ் அண்ணா... நாங்க பார்த்துக்கறோம்!''

அவள் கைப்பேசியில் பேசிக் கொண்டிருந்த நேரம், சத்யா ஜானகியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

'எப்படி இவனிடம் மறுத்து விட்டுக் கிளம்புவது?' என்று மது யோசித்துக் கொண்டிருக்க, ''என்ன ஆச்சு மது? என்ன தீவிரமா யோசிச்சுட்டு இருக்கீங்க?''

சத்யா கேட்டதும், மது விஷயத்தைக் கூற, ''இதுக்கா இவ்வளவு யோசிக்கிறீங்க? வாங்க, நானே உங்களை டிராப் செய்யறேன்! வாங்க ஆன்ட்டி!'' ஜானகியின் புறம் திரும்பி, அவரை அழைத்து விட்டு நடக்க ஆரம்பித்தான்.

ஏற்கனவே நேரமாகி விட்டது. இனிமேலும், வேறொரு வண்டிக்கு ஏற்பாடு செய்து கிளம்ப மேலும் நேரமாகி விடும் என்று உணர்ந்து, ஜானகி மதுவை நோக்க, மதுவின் முகம் வெளிறிப் போயிருந்தது.

மகளின் முகத்தை நோக்கிய ஜானகி, ''ஒரு நிமிஷம் தம்பி... மகேந்திரன் இப்போ வந்துடுவான்... அவனோடு சேர்ந்தே நாங்க கிளம்பறோம்!'' என்று சொல்ல, இப்போதுதானே அவன் மருத்துவமனைக்கு போயிரு



கிறான் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்று எண்ணிய சத்யா, மதுவை நோக்க, அவளோ அவனது முகத்தை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

''ஓ! இவளுக்கு என்னோடு காரில் வரப் பிடிக்க வில்லையோ! அதனால்தான் அவள் அம்மா இப்படிச் சொல்கிறார்களோ?' என்று எண்ணியவன் முகம் மாறியது.

விருப்பம் இல்லாதவர்களை வற்புறுத்த மனமில் லாமல், ''சரி... ஆன்ட்டி... நான் கிளம்பறேன்!'' என் றவன், மதுவிடம் சொல்லாமல் கிளம்பிச் செல்ல, மனதுக்கு வருத்தமாக இருந்தது.

மகளின் முகம் வாடி இருப்பதைக் காணப் பொறுக் காமல், ''அந்த சத்யா தம்பி ரொம்ப நல்ல டைப்பா தெரியறார். கொஞ்சம் கூட பந்தாவே இல்லாமல், எவ்வளவு இயல்பா பழகறார்! இந்த மாதிரி ஒருத்தர் கிட்ட நீ வேலைக்குப் போகப் போறதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்மா, மது!'' என்று சத்யாவுக்கு நற்சான்றிதழ் வழங்கினார்.

நேர்முகத் தேர்வின்போது, அவன் தன்னுடன் பேசி யதை நினைவு கூர்ந்த மதுவும், ''ஆமாம்மா... ஹி இஸ் ரியலி எ நைஸ் ஜென்டில்மேன்!'' என்று ஆமோதித்தாள்.

இருவரும் பேசிக் கொண்டே வெளியே, ஆட்டோவில் ஏறிச் செல்வதைக் கண்ட சத்யாவின் மனம்

* * *

''ரொம்ப தேங்க்ஸ் சார்!'' என்ற நந்தினியிடம்,

''எதுக்கு?'' என்றான் மகேந்திரன்.

''என் கூட வந்ததுக்கு! அப்பாகிட்ட ஆறுதலாப் பேசினதுக்கு! எல்லாத்துக்கும்!''

''நந்தினி! இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை! நாளைக்கு லீவ் வேணுமானால் எடுத்துக்கோங்க!'' என்று சொன்னவன்,

''அப்புறம்...'' என்று இழுக்க,

''சொல்லுங்க சார்!'' என்ற நந்தினியை நோக்கியவன், ''இந்த சார் மோர் என்றெல்லாம் கூப்பிடாமல், பெயர் சொல்லிக் கூப்பிட்டு பழகுங்க!'' என்று சொல்ல, நந்தினி புன்னகையுடன் தலையாட்டினாள்.

மகேந்திரன் சென்றதும், பார்வதியும் சிவராமனும் அவனைப் பற்றி நல்ல விதமாகப் பேசப் பேச நந்தினியின் மனதுக்குள் ஏன் என்று தெரியாமல் ஒருவித சந்தோஷம் பரவியது.

வீட்டுக்கு வரும் வழியெல்லாம் நந்தினியின் புன்னகை நிறைந்த முகமே, மனதை ஆக்கிரமிக்க, கண்களை மூடிக் கொண்டு அதை ரசிக்க ஆரம்பித்த மகேந்திரனுக்கு, அப்பா மருத்துவமனையில் இருக்கிறார் என்ற செய்தி வந்ததும், கலங்கி நின்ற நந்தினியின் முகம் நினைவுக்கு வந்து, மனம் வலித்தது.

மருத்துவமனைக்கு செல்லும் வழியெல்லாம், கலகலங்கப் பேசிக் கொண்டு வந்தவளை அணைத்து ஆறுதல் படுத்த வேண்டும் என்று தோன்றிய எண்ணம் நினைவுக்கு வர, நிமிர்ந்து அமர்ந்தான்.

அப்போது வித்தியாசமாகத் தோன்றாதது, இப்போது மிகவும் விசித்திரமாகத் தோன்றியது.



அந்த இடத்தில், நந்தினி இல்லாமல், அவனது அறுவலகத்தில் வேறு யாராக இருந்தாலும், அவன் கூடச் சென்று உதவி இருப்பான்! ஆனால், அணைத்து ஆறுதல் சொல்வது, இதெல்லாம்... மற்றவரிடத்தில் தோன்றி இருக்காது என்று உணர்ந்தவனுக்கு, நந்தினி அவனுக்கு மிகவும் நெருக்கமானவள் என்பது புரியத் துவங்கியது.

நெருக்கமானவள் என்றால் எந்த அளவுக்கு? என்று மனம் கேள்வி எழுப்பியது.

ஹோட்டலில் அந்தப் பெண்மணி பேசிய விஷயம் முற்றித் தெளிவாகப் புரியவில்லை என்றாலும், அவரது பேச்சு நந்தினியை வருத்தப் படுத்துகிறது என்று தெரிந்ததும், அவனுக்கு அந்தப் பெண்மணியை முறைத்தக்க வேண்டும் போலத் தோன்றியதும் நினைவுக்கு வந்தது.

எந்த துன்பமும் அவளை நெருங்க விட முடியாத அளவுக்கு, அவளுக்குப் பாதுகாப்பாக, துணையாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு நெருக்கமான வள் என்று அவன் மனம் நினைக்கிறது என்றால், என்ன அர்த்தம் என்று யோசித்தவன் முகம், ஏற்றி வைத்த விளக்காக பிரகாசித்தது.

மகேந்திரன், நந்தினியை விரும்புகிறான்!

அந்தை ஜானகியை வருத்தப்படுத்தும் எதையும் செய்யத் தயங்கும் மகேந்திரன், அவருக்கு சற்றும் விருப்பமில்லாத காதலில் விழுந்து விட்டான்!

காதல் என்பது திட்டமிட்டு செய்வதல்லவே! செடியில் பூ பூப்பதைப் போல, இயல்பாக மலர்ந்த காதலுக்கு, நாம் என்ன செய்ய முடியும்?

அத்தைக்கு தவறான ஆளைத் தேர்ந்தெடுத்த தாங்கள் வாழ்வில் தோற்று விடக்கூடாது என்பதுதானே கவலை? நந்தினியிடம் பேசிப் பழகினால் அவருக்கு பிடித்து விடும் என்று காதல் கொண்ட அவன் மன அவனை சமாதானப் படுத்தியது.

தன் காதலை உணர்ந்த நொடி, அது தந்த சுகத்தையும் முழுமையாக அனுபவித்தவன். உடனே அதை நந்தினியிடம் வெளிப்படுத்த விழைந்தான்.

பார்த்து ஒரு வாரமே ஆன பெண்ணிடம் காதலைச் சொல்வது முறையா என்று மூளை கேள்வி கேட்க, எப்போதென்றாலும், அவளிடம் சொல்லியாக வேண்டியதுதானே என்று எண்ணியவன் மறுநாள், நந்தினியிடம் தன் நேசத்தை சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

எப்போதும் போல் தன் மனதில் தோன்றுவதை மதுவிடம் தோழமையுடன் பகிர்ந்து கொள்ளும் மகேந்திரனுக்கு, தன் காதலையும் அவளிடம் சொல்ல வேண்டும் எனத் தோன்றியது.

அன்னையின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, மதுவுக்கும் காதல் பற்றி நல்ல அபிப்ராயம் இல்லை. இப்போது அவளிடம் சொன்னால் நிச்சயம் எதிர்மறையாகத்தான் ஏதாவது சொல்லுவாள்.

இன்னும் நான்கு நாட்களில் அவளுக்குத் தேர்வு வேறு தொடங்குகிறது. இந்த நேரத்தில், அவளிடம் இதைச் சொல்லிக் குழப்ப வேண்டாம் என்று எண்ணியவன், நந்தினியிடம் தன் நேசத்தைச் சொன்ன பிறகு மதுவிடம் சொல்லலாம் என்று தீர்மானித்தான்.

* * *

இதழில் உறைந்த புன்னகையோடு அடுத்த நாள் அலுவலகத்துக்குக் கிளம்பிய மகேந்திரனை, மது மறித்தாள்.



"முகத்தில் பயங்கரமா லைட் எரியுது? என்ன விஷயம் மேன்?"

ஆராய்ச்சிப் பார்வையுடன் விசாரித்தவளிடம், "ஒண்ணும் இல்லை மது! நார்மலாதான் இருக்கேன்" என்றான்.

"ம்ம்ம்... அப்படியா சரி!" என்று மது சொன்னதில் இருந்தே,' அவள் தான் சொன்னதை நம்பவில்லை என்பதை உணர்ந்தாலும், அதற்கு மேல் பேச்சை வளர்க்காமல் கிளம்பினான்.

அன்று நந்தினி, அலுவலகம் வரவில்லை!

மகேந்திரனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

அன்று நாள் முழுதுமே, எதோ குறைவதைப் போலவே தோன்ற, மாலை அடக்க முயன்றும் முடியாமல், அவளது கைப்பேசிக்கு அழைத்தான்.

"சொல்லுங்க சா... மகேந்திரன்!"

ஒரு பெண்ணின் குரல், இவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடும் என்பதை அனுபவத்தில் உணர்ந்திராவிட்டால், மகேந்திரன் நம்பியே இருக்க மாட்டான். அந்த சந்தோஷத்தை அனுபவித்தபடி அவன் அமைதியாக இருக்க,

"மகேந்திரன்? லைன்ல இருக்கீங்களா?" மீண்டும் கேட்டாள், அவள்!

"ம்ம்ம்... இருக்கேன்! அப்பா எப்படி இருக்காங்க? நாளைக்கு ஆபீஸ் வந்துடுவீங்கதானே?" தன் ஆர்வத்தை வெளிக்காட்டாமல் இயல்பாக மகேந்திரன் விசாரித்தான்.

"நல்லா இருக்கார்... ஒரு நாள் அவர் கூடவே இருக்கலாம் என்றுதான் லீவ் எடுத்தேன்! நாளைக்குக்

கண்டிப்பா வந்துடுவேன்! சரி... வந்த ஒரு வாரத்துக்குள்ள லீவ் எடுத்ததுக்கு!''

''இட்ஸ் ஓகே! குழ்நிலை அந்த மாதிரி! சரி! அவரை உடம்பு பார்த்துக்கச் சொல்லுங்க!'' என்று லைனை அழைப்பைத் துண்டித்தான்.

நாளை தன் நேசத்தை சொல்லும்போது, நந்தினி அதை ஏற்றுக் கொள்வாளா? என்ற கேள்வி பிறந்தது.

உடனே ஏற்றுக் கொள்வாள் என்று எதிர்பார்க்க முடியாது! ஆனால், நிச்சயம் தன்னைப் புரிந்து கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் அடுத்த நாள் அலுவலகத்துக்கு வந்தவன், மாலை அனைவரும் கிளம்பிய பிறகு, கொஞ்சம் வேலை இருப்பதாகச் சொல்லிக் கொள்ள வந்த நந்தினியை இருக்க வைத்தான்.

முதல் நாள் விடுமுறை எடுத்தால், அதிக வேலை இருக்கிறது போல என்றெண்ணிய நந்தினி, என்ன வேலை என்று விசாரிக்க அவனது அறைக்கு வந்தாள்.

அவளை இருக்கையில் உட்காரச் சொன்னவன், எப்படி ஆரம்பிப்பது என்று புரியாமல், மேஜையில் இருந்த பொருட்களை அங்கே இங்கே மாற்றி வைத்துக் கொண்டிருக்க, நந்தினி அவனை விசித்திரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எதையும் பட்டென்று பேசி விடும் பழக்கமுள்ள மகேந்திரனுக்கு, தன் காதலைச் சொல்வது அத்தனை எளிதாக வரவில்லை! அவள், எதிர்மறையாக ஏதாவது சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயமே விஞ்சி நிற்க, அவளை நீண்ட நேரமாக காத்திருக்க வைக்கிறோம் என்று உணர்ந்தவன்,



''நந்தினி... நான் உங்ககிட்ட ஒண்ணு சொல்லப் போறேன்! நீங்க உடனே அதுக்கு எதுவும் சொல்லணும் என்று இல்லை! நல்லா யோசிச்சு சொன்னால் போதும்! ஆனால், எதிர்மறையா எதுவும் உடனே சொல்லக் கூடாது!''

பலமாக பீடிகை போட்டவனை ஆச்சரியத்துடன் நோக்கியவளின் மனமும், ஏனென்றே தெரியாமல் படபடக்க ஆரம்பித்தது.

''சொல்லுங்க...''

மெல்லியக் குரலில் அவள் சொன்னதும், நிமிர்ந்து அமர்ந்து அவளது கண்களை நேராக நோக்கியவன், ''நான் உங்களை மனசார விரும்பறேன் நந்தினி... உங்களைக் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்படறேன்!'' என்றதும், நந்தினி அதிர்ந்து நோக்கினாள்.

இதை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை!

அவளது அதிர்ச்சியை கவனித்தவன், ''உங்களோட அதிர்ச்சி எனக்குப் புரியுது! என்னடா பார்த்து ஒரு வாரம் ஆகறதுக்குள்ள, காதலைச் சொல்றானே என்று நினைக்கிறீங்க! பட், எனக்கு இது காதல்தான் என்று உறுதியான பிறகு, உங்களிடம் உடனே சொல்லிடணும் என்று தோணுச்சு! அதான் சொல்லிட்டேன்! நீங்க உடனே பதில் சொல்லணும் என்று அவசியம் இல்லை! நல்லா யோசிச்சு பதில் சொன்னால் போதும்! ஆனால், அது நம்ம ரெண்டு பேருக்கும் சாதகமான பதிலா இருக்கணும் என்று ஆசைப் படறேன்!''

முதலில் சொல்லத் தயங்கியவன், சொல்லத் தொடங்கிய பிறகு சரளமாகப் பேசத் துவங்க, நந்தினிதான் வாயடைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

உண்மையில், இதற்கு என்ன பதில் சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை! ஆறு மாதத்துக்கு முந்தைய நிகழ்வுகள், மனதுக்குள் முட்டி மோத, கொஞ்ச நேரம் கலங்கிப் போய் அமர்ந்தவள், ஒரு முடிவுடன் நிமிர்ந்து அமர்ந்தாள்.

'சாரி சார்! எனக்கும் உங்களுக்கும் ஒத்து வராது! இத்தோட இந்தப் பேச்சை விட்டுடுங்க! இதுக்கு மேல் இதைப் பற்றி நீங்க பேசுவதாக இருந்தால், நான் இந்த வேலையை விட்டுப் போக வேண்டி இருக்கும்!''

மெல்லியக் குரலில் என்றாலும், உறுதியாக உரைத்த வளை, மகேந்திரன் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண் டிருக்கும்போதே, கதவைத் திறந்து கொண்டு நந்தினி வெளியேறி விட்டாள்.

அவளை நிறுத்தவும் தோன்றாமல், மகேந்திரன் திகைத்து நின்றான்.

உடனே சம்மதம் சொல்வாள் என்று நினைக்க வில்லைதான்! ஆனால்... இப்படி வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவாள் என்று எதிர்பாராத காரணத்தால் அவனது மனம் அதிர்ந்து போயிருந்தது.

தன்னுள் மலர்ந்த காதலுக்கு, முடிவு இவ்வளவு சீக் கிரம் வந்து விடும் என்று அவன் கனவிலும் நினைக்க வில்லையே!

இத்தனை சீக்கிரம் அவளிடம் சொன்னது தவறோ? கண்டதும் காதல் சொல்லும் கயவன் என்று எண்ணிக் கொண்டாளோ? என்று கலங்கியவனின் மனம். அவள் சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்தது.

''ஒத்து வராது!'' என்று சொன்னாளே ஒழிய, தனக்கு விருப்பமில்லை என்று அவள் சொல்லவில்லைதானே?



...று தன்னைத் தேற்றிக் கொண்டவன், 'அந்த ஒத்து ...தை' ஒத்துப் போக வைக்கிறேன் என்று மனதுக் ...உறுதியாக முடிவெடுத்தான்.

## 7

மகேந்திரனிடம் தனக்கும் அவனுக்கும் ஒத்து வராது என்று சொல்லி விட்டு வெளியே வந்த நந்தினியின் மனதில், அவளையும் அறியாமல் ஆறு மாதத்துக்கு முன் ...ந்த நிகழ்வுகள் வளம் வரத் துவங்கின.

...ருமண மண்டபத்தில் மணமகள் அறையில், ...ழிகளின் கேலியில் மனக்கலக்கம் எல்லாம் குறைந்து ...தோஷமாகப் பேசிக் கொண்டிருந்த நந்தினியின் ...பேசி அழைத்தது. ரமேஷ்தான்!

''ஹே! யாரு? மாப்பிள்ளை சாரா? கொஞ்ச நேரத் ...தான் இங்கே வரப் போறாரே? அதுக்குள்ளே ...?''

...ழிகள் கேலி செய்து சிரிக்க, நந்தினி அழைப்பை ...தாள்.

''நந்தினி... நான்தான்! யூ எஸ்ல இருந்து என்னோட ...ட்ல எல்லாம் வந்தி...ருக்காங்க! அவங்க வந்து ...துக்கும்...போது பட்டிக்காடு மாதிரி விழிச்சிட்டு ...காமல், ஒழுங்கா சகஜமா பேசு!'' என்றவன் குரலில் ...ந்த வேறுபாடு, அவன் குடித்திருக்கிறானோ என்ற ...தத்தை ஏற்படுத்தியது.

''என்ன பேச்சு இது?' பொது இடத்தில் கை போட் ...என்று விலகினால், நட்பாக கைகுலுக்கக் கூடத்

தெரியாதவள் என்றா நினைத்துக் கொண்டான் என்று மனதுக்குள் குமுறும்போதே, இன்னும் கொஞ்ச நேரத்தில் வரவேற்பு துவங்கி விடும். இந்த நேரத்தில் குடித்திருக்கிறானே என்று மனம் கலங்கத் துவங்கியது. எரிச்சல் அடைந்தவள், எதுவும் பேசாமல் அழைப்பைத் துண்டித்தாள்.

மீண்டும் அழைப்பு வந்தது.

''ஹே! என்ன இது? கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்...லாமல் பேசி...ட்டு இருக்கும்...போதே கட் பண்றே?''

அவன் குரலில் இருந்த குழறலில் இருந்து தெள்ளத் தெளிவாக நந்தினிக்குப் புரிந்து போனது! குடித்திருக்கிறான்! வெளிநாட்டில் இருப்பவனுக்கு பார்ட்டியில் குடிப்பது ஒரு பழக்கமாக இருக்கலாம். ஆனால், அதற்கு நேரம் காலம் இல்லையா? இன்னும் ஒரு மணி நேரத்தில் மேடையில் நிற்க வேண்டியவன், குடித்து விட்டு மேனர்ஸ் பற்றி பேசுகிறான்! என்று குமுறியவளின் மனதில், மீண்டும் எதிர்காலத்தைப் பற்றிய கலக்கம் சூழ்ந்தது.

அவனுடன் பேசவே விருப்பம் இல்லாதவளாக, கைப்பேசியை அணைத்தாள்.

தோழி பேசுகிறாள் என்று தள்ளி நின்று கொண்டிருந்த தோழியர், அவளது முக வாட்டத்தைக் கண்டு என்னவென்று விசாரிக்க, ஒன்றுமில்லை என்று சொன்னவள், முகத்தைச் சீராக வைத்துக் கொள்ள ரொம்பவே போராட வேண்டியிருந்தது.

வரவேற்பு என்று முடிவு செய்திருந்த நேரம் தாண்டியும், ரமேஷ் மண்டபத்துக்கு வரவில்லை.



சிவராமன், சம்மந்தி வீட்டினரிடம் விசாரிக்க, ''அவனோட பிரண்ட்ஸ் எல்லாம் வெளிநாட்டில் இருந்து வந்திருக்காங்க! அவங்களைக் கூப்பிட போயிருக்கான்! வந்துடுவான்!'' என்று பதில் வந்தது.

கொஞ்ச நேரத்தில் வந்த செய்தியால், மண்டபமே, அமளி துமளி பட்டது.

நந்தினியின் தோழியர் வெளியே சென்று என்ன வென்று விசாரித்து விட்டு வர, அவர்கள் முகத்தில் இருந்தே, எதோ சரியில்லை என்று உணர்ந்த நந்தினி, ''என்ன ஆச்சுப்பா?'' என்று பயத்துடனே விசாரித்தாள்.

''ரமேஷுக்கு ஆக்சிடென்ட் ஆகிடுச்சாம்!'' என்றாள் ஒரு தோழி.

''கடவுளே!'' என்று தலையைப் பிடித்துக் கொண்டு ஒரு கணம் அமர்ந்த நந்தினி. ''ஹய்யோ! அப்பாவுக்கு ஏற்கனவே உடம்பு சரியில்லையே!'' என்று பதறிக் கொண்டே வெளியே வர, அவள் நினைத்தது போலவே சிவராமன், நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

''அப்பா! என்னப்பா இது? எதுவும் ஆகாது! நீங்க பதட்டப் படாமல் இருங்க!'' என்று தேற்ற ஆரம்பித்த மகளைக் கண்ட சிவராமனின் கண்கள் கலங்கியது.

''என்னப்பா இது? என்னாச்சுன்னு இப்படி இருக்கீங்க? எல்லாம் சரி ஆகிடும்!''

நந்தினி சொன்னது போல எதுவும் சரியாகவில்லை! நிலைமை மோசமாகித்தான் போனது.

சம்மந்தி வீட்டினரோடு, மருத்துவமனை சென்று இருந்த நந்தினியின் மாமா கொஞ்ச நேரத்தில் திரும்பி

வர, பயத்துடன் சிவராமன் அவரை நெருங்கி, என்ன நடந்தது என்று விசாரித்தார்.

''பெரிசா எதுவும் அடிபடலை... கை கால் எல்லாம் ரத்தம் வர மாதிரி அடிபட்டிருந்தாலும், நல்லவேளை, எலும்பு முறிவெல்லாம் இல்லை!''

முதலில் நல்ல விஷயத்தைச் சொல்லி நிம்மதிப் பெருமூச்சு விட வைத்தவர் அடுத்து சொன்னது, அனை வரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''நம்ம பொண்ணு ராசியினால்தான் இப்படி நடந்தது என்று சம்மந்தி அம்மா பேசறாங்க! கல்யாணத்தை நிறுத்திடலாம்னு பேசிக்கிறாங்க!''

''என்ன?'' வார்த்தைகள் கூட வெளிவராமல், தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டுவிட, அதிர்ந்து நின்றார் சிவராமன்.

தந்தையின் தோற்றம் பயத்தை விளைவித்தாலும், மாமாவின் புறம் திரும்பிய நந்தினி, ''காரை யார் ஓட்டிட்டு வந்தாங்களாம்?'' என்று விசாரித்தாள்.

''மாப்பிள்ளைதான்!'' என்றார் அவர்.

நடந்தது என்னவென்று நந்தினிக்குத் தெளிவாகப் புரிந்தது.

குடித்து விட்டு வண்டியை ஓட்டி வந்து விபத்து ஏற்படக் காரணமாக இருந்தவன் அவன்! பழி என் மீதா? என்ற கோபம் தலைக்கேற, ''அவங்க என்ன கல்யாணத்தை நிறுத்தறது? நாமே நிறுத்திடலாம்!'' என்றாள் அழுத்த மாக!

சூழ்ந்து நின்றவர்கள் அதிர்ந்து, நிற்க, ''அபசகுனமா ஏதாவது பேசாதே, நந்தினி'' என்று கண்டித்தார் பார்வதி.



''இல்லைம்மா! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் அவர் பேசினார்! நல்லா குடிச்சிருந்தார் என்று போனில் பேசும்போதே தெரிஞ்சுது! தப்பெல்லாம் அவங்க பக்கம் இருக்க, என் ராசி மேல் பழியைப் போடுறவங்க எப்படிப் பட்டவங்களா இருப்பாங்க?''

ஆத்திரத்துடன் பேசிக் கொண்டு போனவளை, கைப்பிடித்து நிறுத்தி பார்வதி உள்ளே அழைத்துச் சென்றார்.

''நந்து! ஆத்திரத்தில் என்ன பேசறோம் என்று தெரியாமல் பேசாதே! நாங்க எல்லாம் பார்த்துக்கிறோம்! நீ அமைதியா உட்காரு!'' என்று அவளை அறையில் இருந்த நாற்காலியில் அமர்த்தியவர், ''எக்காரணம் கொண்டும் நீ வெளியே வரக்கூடாது!'' என்று கட்டளை இட்டு விட்டுச் சென்றுவிட, நந்தினிக்கு ஆத்திரம் அதிகரித்தாலும், தான் ஏதாவது பேசி அப்பாவுக்கு ஏதாவது ஆகி விடக்கூடாது என்று பயந்தவளாக அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.

மேலும் ஒரு மணி நேரம் ஆன பிறகு, பெற்றோர் இருவரும் உள்ளே வர, எழுந்து நின்றவளைக் கண்டு கொள்ளாமல் இருவரும் பேச ஆரம்பித்தனர்.

''என்னங்க இப்படிப் பேசறாங்க?''

அழுங்கிப் போன குரலில் பார்வதி வினவ,

''அவங்க சொல்றபடி செய்யறதுதான் இப்போ நமக்கு நல்லது'' என்ற சிவராமனின் குரலும் கலங்கித்தான் போயிருந்தது.

இரண்டு பேரும் இவ்வளவு கலங்கும் அளவுக்கு என்ன நடந்தது என்று குழம்பிய நந்தினி, ''என்னப்பா என்ன விஷயம்?'' என்றாள்.

''ஒண்ணுமில்லை நந்தும்மா! நீ பயப்படாம இரு! அப்பா எப்படியும் இந்தக் கல்யாணத்தை நடத்திடு வேன்!'' என்றார் தந்தை.

''ப்ச்! அப்பா ப்ளீஸ்... என்ன விஷயம்னு சொல் லுங்க!'' என்று மேலும் மேலும் வற்புறுத்திய பிறகே பார்வதி நடந்ததைக் கூற, நந்தினியின் உள்ளம் உலைக் கலனாக கொதிக்கத் துவங்கியது.

''ச்சே! என்ன மாதிரி மனிதர்கள் இவர்கள்? எரியும் வீட்டில் பிடுங்க நினைப்பவர்கள் வீட்டில் தான் மரு மகளாகப் போவதா?'' என்று சீற்றத்துடன் நிமிர்ந் தவள்,

''அப்பா! ப்ளீஸ் இந்த கல்யாணத்தை நிறுத்திடுங்க'' என்று பெற்றவர்களை அதிர வைத்தாள்.

''நந்து... வாயை மூடு!''

பார்வதி அதட்ட, ''பின்னே! என் ராசிதான் அந்த ஆ விபத்துக்குக் காரணம் என்று சொன்னாங்க! சரி, ஏதே ஆதங்கத்தில் சொல்றாங்க என்று சமாதானப் படுத்தி கிட்டேன். இப்போ கல்யாணம் நடக்கணும் என்றால் நம்ம வீட்டை அந்த ஆள் பேரில் எழுதி வைக்கணும் என்று சொல்றது எந்த விதத்தில் நியாயம்? வீடு அவங்க கைக்குப் போனால், என் ராசி நல்லதா ஆகிடுமா நினைக்கவே அருவெறுப்பா இருக்குப்பா!'' என்று தன் மனக்குமுறலை வெளியிட்டாள்.

''நீ சொல்றது எல்லாம் சரிதான்! இப்போ கல்யாண நின்னால், பாதிப்பு நமக்குத்தான் நந்தும்மா... எப்ப இருந்தாலும் வீடு உனக்கு கொடுக்கப் போறதுதானே என்றார் தந்தை.



''அப்பா... நீங்க விரும்பிக் கொடுக்கிறதுக்கும், அவங்க பிடுங்கி வாங்கிக்கிறதுக்கும், நிறைய வித்தியாசம் இருக்கு! என்ன ஆனாலும் சரி! எனக்கு இந்தக் கல் யாணம் வேண்டாம்!''

உறுதியாகச் சொன்னவள், இருவரும் பேச ஆரம் பிக்கும் முன், தொடர்ந்து பேசினாள்.

''நான் புரியாமல் பேசலைப்பா! கல்யாண மேடை வரை வந்து ஒரு பெண் கல்யாணம் நின்றால், என்ன என்ன பேச்சு வரும் என்று எனக்கும் தெரியும்! ஆனா மேலேயிருக்கவங்க பேசிட்டு அவங்க வேலையைப் பார்க்கப் போயிடுவாங்க! நான்தான்பா அங்கே போய் வாழ வேண்டும்! ஒரு இக்கட்டான நேரத்தில்தான் மக்களோட உண்மையான குணம் என்னவென்று தெரியும்னு நீங்க சொல்லுவீங்க! இப்போ அவங்க குணம் என்னனு வெளியே தெரிஞ்சிடுச்சு! இப்படிப்பட்ட வீட்டில் எனக்கு எந்த மாதிரியான வாழ்க்கை கிடைக்கும்னு நீங்க எதிர் பார்க்கறீங்கப்பா?''

''இப்போ இந்த நேரத்து இக்கட்டில் இருந்து தப்பிக்க வேண்டி வாழ்நாள் முழுக்க ஒரு இக்கட்டான நிலையில் என்னைத் தள்ளிடாதீங்கப்பா... ப்ளீஸ்... எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்! தயவு செய்து புரிஞ்சிக்கோங்க! அவங்களே மனசு மாறி இந்தக் கல்யாணம் நடக்கும் வரைக்கும் கூட, எனக்கு வேண்டாம்ப்பா!''

சொல்லிவிட்டு கண் கலங்க நின்றவளைக் கண்டு மற்றோர் இருவருக்கும் கண்கள் கலங்கியது.

அவள் சொல்வது உண்மைதான்! மனசாட்சி இல் லாமல் பேசும் இந்த மக்களிடம், வாழ்நாள் முழுக்க ஒரு பெண் கண்ணீர் விட நேர்ந்தால் அது எவ்வளவு

கொடுமை என்பதை உணர்ந்து சிவராமன் யோசிக்க ஆரம்பிக்க, பார்வதிக்கும் அதே யோசனையே மனதை ஆக்கிரமித்தது.

பெண்ணுக்கு உடனே திருமணம் நடப்பதை விட அவள் வாழ்க்கை நல்லபடியாக அமைய வேண்டியது முக்கியம் என்பதை உணர்ந்த சிவராமன், ரமேஷின் தந்தையிடம் பேசப் போனார்.

''பொண்ணு கொஞ்சம் கூட ராசியே இல்லாதவள் சரி நம்மால் ஒரு பொண்ணு வாழ்க்கை கெட வேண் டாம் என்றுதான் கல்யாணத்துக்கு ஒத்துக்கறோம்'' பெருமையாக ரமேஷின் தாய் ஒரு உறவினரிடம் பேசி கொண்டிருக்க,

''நீ பெரிய ஆள்தான்... இதைக் காரணம் காட்டி கல்யாணத்துக்குப் பிறகு வரப்போற சொத்தை இப்பவே வர வைத்து விட்டாயே?'' என்று இன்னொரு உறவினர் ரமேஷின் தந்தையிடம் பேச, சிவராமனுக்கு வெறுத்து போயிற்று.

திருமணம் நடக்க நிபந்தனை எல்லாம் போட்டு விட்டு, எவ்வளவு வாய் கூசாமல் தன் பெண்ணையே குற்றம் சாட்டுகிறார்கள். இப்போது திருமணம் வேண் டாம் என்று நாமே நிறுத்தினால் எப்படி இருக்கும் என்று எண்ணியவராக உள்ளே வந்து விஷயத்தைச் சொல்ல ரமேஷ் வீட்டினர் முகத்தில் ஈயாடவில்லை.

வரவிருந்த சொத்து பறிபோன ஆத்திரத்தில் ரமேஷின் தாய், நந்தினியை மேலும் தூற்றிப் பே ''வாயை மூடுங்க! எங்க குழந்தையைப் பற்றி பே உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை! இதற்கு மே இங்கே நின்று கொண்டிருந்தால், வரதட்சணை கே



பண்ணி உங்களை உள்ளே தள்ளுவேன்!'' என்று சிவராமன் குரல் உயர்த்தி மொழிந்த பிறகே, அவர்கள் இடத்தை காலி செய்தனர்.

தவறு யார் மீது என்று எல்லோருக்கும் தெரிந்தாலும், அந்தக் குற்றத்தையும் பெண்ணின் மீதே சாட்டும் பழக்கம் உள்ளவர்கள் உலகில் அதிகம் என்பதால், நந்தினியைப் பற்றியும் அங்கே இருந்தவர்கள் பேசத் துவங்க, காது கொடுத்து கேட்க முடியாமல், சிவராமன் மனைவியையும் நந்தினியையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

அன்று இரவு, சிவராமனுக்கு மீண்டும் மாரடைப்பு வந்தது. இந்த முறை சற்றே கடுமையாக!

திருமணம் நின்று போனதில் வருத்தம் இல்லை எனினும், தன் பொருட்டு தந்தையின் உடல்நலக் குறைவு வந்ததில் நந்தினி மனம் உடைந்தாள்.

வெளியே வந்தால், மற்றவர்களின் கேலிப் பேச்சு மற்றும் கேள்விகளும் படையெடுக்க, நந்தினி வீட்டி லேயே அடைந்து கிடக்க வேண்டியதாயிற்று.

உடல்நலமின்றி இருந்த தந்தைக்கு ஆதரவாக இருக்க வேண்டிய அவசியமும், அவளை வெளியே செல்ல விடாமல் தடுத்தது.

ஒரு வழியாக, காயங்கள் ஆறி வெளியே வரத் துவங்கிய நேரத்தில் இதென்ன புதுப் பிரச்சனை என்கிறாள் நந்தினிக்கு, முதல் நாளே மகேந்திரன் பேசியைப் பற்றி பேசியது நினைவுக்கு வந்துதான், அவனுக்கும் தனக்கும் ஒத்து வராது என்று உறுதியாகக் கூறி விட்டாள்.

இந்த ஒரு வாரத்தில், மகேந்திரன் அந்த கம்பெனி கணக்கை நீ பார்த்துக் கொள்! போன முறை நீதான் அதை சரியாக முடித்தாய்! உனக்கு அந்த கம்பெனி ராசி!'' என்று தன்னிடம் வேலை பார்ப்பவர்களிடம் பேசுவதை நந்தினி கேட்டிருக்கிறாள்.

தன் திருமணம் நின்ற விஷயம் தெரிந்து என்றாவது ஒரு நாள் அவன், நந்தினியின் ராசி சரி இல்லை என்று சொன்னான் என்றால்... ஏன் அப்படி நினைத்தான் என்றாலுமே, அவளால் தாங்கவே முடியாது என்று எண்ணும்போதே, நந்தினியின் கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கன்னத்தில் இறங்க, நந்தினி திகைத்துப் போனாள்.

மகேந்திரன் தன்னை ராசி இல்லாதவள் என்று நினைத்தால், அது அவளுக்கு இவ்வளவு வேதனையாக இருக்குமா? என்ற கேள்வி எழுந்த அதே நேரத்தில், அந்த சம்பவத்துக்குப் பிறகு தன்னைப் பற்றி பிறர் பேசுவதைக் கேட்டாலும், அலட்டிக் கொள்ளாமல் இருக்க கற்றுக் கொண்ட நந்தினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அந்த அளவா மகேந்திரன் தன்னைப் பாதிக்கிறான் என்று யோசித்தவளுக்கு, அவனைப் பார்த்த முதல் நாளில் இருந்தே தன்னுள் மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணர முடிந்தது.

யாரிடமும் கோபம் காட்டாமல் பேசுபவளுக்கு, அவன் ராசி பற்றி பேசியதும் கோபம் வந்ததை, இப் போது மனம் ஆராயத் துவங்கியது.

அவன் அருகாமையில், தன் மனதில் ஒரு அமை தியும், இதமும் பரவுவதை அவள் உணர்ந்தேதான் இருந்தாள்.



தனது திருமணம் நின்றது தெரிந்தால், அவன் நட்பைத் தொடர்ந்து விரும்புவானா? என்ற கேள்வி எழ, மீண்டும் அவன் தன் விருப்பத்தைப் பற்றிப் பேசினால், அவனிடம் முழு விவரத்தையும் கூறி விட்டு விலகிவிட வேண்டும் என்று தீர்மானித்தவளின் மனதில் தனையும் அறியாமல் வலி எழுந்தது. கூடவே, மந்திரனை ஒரு ஆறு மாதத்துக்கு முன் சந்தித்திருக்கக் கூடாதா என்ற ஏக்கமும் எழுந்து கண்கள் கலங்கின.

## 8

சத்யா பயங்கர பரபரப்பாக இருந்தான். இன்றுதான் முதன் முதலாக அலுவலகத்துள் நுழைபவனைப் போல அவன் மனம், அலுவலக வாசலில் கால் வைத்ததும் படபடத்தது.

இந்த உணர்வு ஆச்சரியத்தையும், புன்னகையையும் வரவழைக்க, விரிந்த புன்னகையோடு தனது அறைக்குள் வந்து அமர்ந்தவன், தன் கைப்பேசியில் இருந்த மதுவின் புகைப்படத்தைப் பார்த்து, ''பட்டு! இன்னும் கொஞ்ச நேரம் நீ வந்து விடுவாய்! அதன் பிறகு உன்னை எவ்வளவு சந்தோஷமா இருக்கு, தெரியுமா? கம் சூன்!'' என்று சொல்லி முடிக்கும்போது, அவனது அறைக் கதவு தட்டப்பட்டது.

மதுமிதா தான் வருகிறாள் என்று உள்ளுணர்வு சொல்ல, ''யெஸ்... கம் இன்!'' என்றவன் குரல் மென்மை யாக ஒலித்தது.

''குட் மார்னிங், சார்!''

வேலையின் முதல் நாள் என்ற படபடப்பையும் மீ
புன்னகை தவழும் முகத்தோடு, இள மஞ்சள் நிற சல்வ
அணிந்து புத்தம் புது மலராய் வந்து நின்றவளை
கண்டவன், ஒரு கணம் மூச்சு விட மறந்தான்.

அடுத்த கணம், தன்னை சமாளித்துக் கொண்
வனாக, ''வெரி குட் மார்னிங், மது! உட்காருங்க
என்றான்.

''உங்களுக்கு டிசைனிங் துறையில்தான்
போதைக்கு வேலை! அந்த டிபார்ட்மெண்ட் ஹெ
நம்ம யூ.எஸ். ஆபீசில் அடுத்த வருஷம் சார்ஜ் எடுக்க
போறதால்தான், மேலாண்மை படிச்ச உங்களை இ
வேலைக்கு எடுத்திருக்கோம்! அவரோட இருந்த எல்
விஷயங்களும் கற்றுக்கோங்க! அடுத்த வருஷம் நீ
தான் டிபார்ட்மெண்டை ஹெட் செய்ய வேண்டி இருக்கு
வேலை விஷயத்தை மடமடவென சொல்லியவ
அவளது திகைத்த தோற்றத்தைக் கண்டு நிறுத்தினா

''என்ன ஆச்சு?''

''இல்லை சார்! இன்னும் ஒரு வருஷத்துக்கு
எல்லாத்தையும் கத்துகிட்டு... ஒரு டிபார்ட்மெண்
ஹேண்டில் செய்யற அளவுக்கு என்னால முடி
என்று யோசிச்சேன்!''

''முடியாது என்று எதுவுமே இல்லை. மது! கண்டி
உங்களால் முடியும் என்று நம்புங்க! உங்களுக்கு
சந்தேகம் என்றாலும் அதை தீர்த்து வைக்க, இ
நிறைய பேர் இருக்கோம்! எல்லா விஷயத்தையும் ந
அப்சர்வ் பண்ணுங்க! அது போதும்!''

ஒரு வேலைக்குப் போனோமா, தன் வேலை
மட்டும் பார்த்தோமா என்று வருவது மதுமிதாவுக்
என்றுமே உடன்பாடானது இல்லை.



...அனுபவம் பெற்றுக் கொண்டு, சிறியதாக இருந்
...தானே ஒரு நிறுவனத்தை உருவாக்கி நிர்வகிக்க
...னவோடுதான், அவள் மேலாண்மைப் படிப்பை
...தான்.

...கனவுகளே நிறைவேற்றுவதற்கு முதல் படியாக
...வேலை அமையப் போகிறது என்ற சந்தோஷத்தில்
...நிறைய, ''கண்டிப்பா சார்! என்னால் முயன்ற
...என்னோட பெஸ்ட்டை கொடுப்பேன்!'' என்று
...உரைத்தாள்.

...மைப்பு துறையின் மேலாளரைக் கூப்பிட்டு
...அறிமுகப் படுத்தியவன், வாழ்த்துச் சொல்லி
...அனுப்பி வைத்தான்.

...தனுக்கு இனியவள், தன் அருகில் இல்லை
...தன் அலுவலகத்தின் ஒரு மூலையில்
...செய்து கொண்டிருக்கிறாள் என்பது உற்சாகத்
...கொடுக்க, அன்று முழுதுமே, புன்னகை நிரந்தர
...சத்யாவின் இதழ்களில் ஒட்டிக் கொண்டிருந்தது.

...தன் வேலைகளை முடித்துக் கொண்டு
...சத்யாவிடம் சொல்லிக் கொண்டு போக வந்

...வாஸ் தி பர்ஸ்ட் டே அட் ஆபீஸ்?''

...இண்டரெஸ்டிங் சார்!''

...என்ன பதில் அளித்தவளிடம், உடனே தன்
...சொல்லி விட வேண்டும் என்ற ஆவல்
...கிளம்ப, சத்தமில்லாமல் ஒரு பெரு
...வெளியேற்றியவன், ''தட்ஸ் குட்!'' என்று
...அனுப்பினான்.

'கடவுளே! இவள் அருகில் இருந்தால், மனம் ஒரு நிலையில் இருக்காது போலவே!'

தலையை அழுந்தக் கோதியவன், மது செல்வதைக் காணும் ஆவலில், தன் அறையில் இருந்த ஜன்னல் வழியே கீழே நோக்க, கையை ஆட்டி ஆட்டி பேசியபடி மகேந்திரனின் வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டிருந்தாள் அவள்.

அதுவரை இருந்த சந்தோஷம் எல்லாம் துணி கொண்டு துடைத்தாற் போல மறைந்து, மீண்டும் சத்யாவின் மனதில் சஞ்சலம் எழுந்தது.

மகேந்திரனுக்கும் மதுவுக்கு இடையில் எந்த மாதிரியான உறவு என்று, இந்த நொடியே தெரிந்து விட வேண்டும் போல மனம் அலை பாய்ந்தது.

ஒருவேளை அவள் மனதில் வேறு ஏதாவது எண்ணம் இருந்தால், தான் அவளைப் பற்றி இப்படி யோசித்துக் கொண்டிருப்பது தவறு என்று தோன்ற, விரைவில் இதற்கு தீர்வு காண வேண்டும். அதற்கு என்ன செய்வது என்ற யோசனையில் ஆழ்ந்தவனுக்கு, அன்றே அவனது குழப்பத்துக்கு விடை கிடைக்கும் என்று தெரிந்திருக்க வில்லை.

மது முதல் நாள் வேலை அனுபவத்தைப் பற்றி கலகலத்துக் கொண்டு வர, மகேந்திரன் அமைதியாகவே இருப்பதை கொஞ்ச நேரத்துக்குப் பிறகே உணர்ந்தாள்.

''மகேன்! என்ன ஆச்சு? எதுவுமே பேச மாட்டேங்கிறாய்? இன்னைக்குன்னு இல்லை... இரண்டு வாரமாகவே நீ சரியில்லை! என் கூட எந்த சண்டையும் போடறதில்லை! வம்பிழுக்கிறதில்லை! சரி, எனை



எங்காவது என்று அமைதியா இருக்கே என்று நான் நினைச்சேன்! ஆனால், இப்பவும் நான் இவ்வளவு பேசினதுக்கு ஒண்ணுமே சொல்லாமல் வரே? என்னடா ஆச்சு?''

தக்கறையும் கவலையும் கலந்து அவள் வினவ,

''ஒரு விஷயம் இருக்கு மது! எக்ஸாம்ஸ் டைம்ல உனக்கிட்ட சொல்லி உன்னையும் குழப்ப வேண்டாம்னுதான் சொல்லலை!'' என்ற மகேந்திரன்,

''மது, இன்னைக்கு நாம் வடபழனி கோயில் போகலாமா? வீட்டில் பேச முடியாத விஷயம்!'' என்று கேள்விக்கை எவக்க, அவனது குரலில் இருந்தே, முக்கிய மான விஷயம் பேசப் போகிறான் என்று உணர்ந்த மதுவும் ஒத்துக் கொண்டாள்.

வீட்டுக்குச் சென்று அன்னையிடம் கோயிலுக்குப் போக வேண்டும் என்று சொல்லி விட்டு இருவரும் வடபழனி முருகன் கோவிலுக்கு வந்து, முருகனை தரிசித்துவிட்டு, ஒரு தூண் அருகில் அமர்ந்தனர்.

''என்ன மகேன்! தீவிரமா முருகன் கிட்ட அப்ளி கேஷன் போட்டுட்டு இருந்தே? என்ன விஷயம்?''

மகேந்திரனின் முகம் தீவிரமாக இருப்பதைக் கண்டு, அதிலிருந்து அவனை விடுவிக்கும் முயற்சியாக கேலி செய்தாள், மது.

அவளது கேள்விக்கு விடை அளிக்காமல் சிறிது நேரம் அமைதியாக இருந்தவன், ''மது... நான் சொல்லப் போறது உனக்கு ரொம்ப ஆச்சரியமா... ஏன்... அதிர்ச்சி யாக கூட இருக்கலாம்...'' என்று சொல்லி நிறுத்த

அவள் முகத்தில் குழப்பத்தின் நிழல் படிவத்தைக் கண்டதும், தொண்டையைச் சீர் செய்து கொண்டு, ''மது... ஐ அம் இன் லவ்!'' என்று இரு உள்ளங்களை அதிர வைத்தான்.

ஆம்! இரு உள்ளங்களைத்தான்! ஒவ்வொரு திங்களும், சத்யன் தன் அபிமானக் கடவுளான வடபழனி முருகன் கோவிலுக்கு வருவது வழக்கம்.

தரிசனத்தை முடித்துவிட்டு, கோவிலின் வாயிலுக்கு வந்தவன், சற்று தூரத்தில் மகேந்திரனும் மதுவும் வருவதைக் கண்டு மீண்டும் கோவிலுக்கு உள்ளே சென்று ஒரு தூண் அருகில் வந்து அமர்ந்தான்.

உள்ளுக்குள், இன்று எதோ ஒரு விஷயம் நடக்கப் போகிறது என்று தோன்றிக் கொண்டே இருந்தது. அது தனக்குச் சாதகமானதாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டே அமர்ந்தவனுக்கு, தூணின் மறு புறத்தில் யாரோ வந்து அமர்வது தெரிந்தது.

வந்தவர்கள் மகேந்திரனும் மதுவும் என்று புரிந்து அவர்கள் பேசுவதைக் கேட்கக் கூடாது என்று அறிவு புத்திமதி சொன்னாலும், என்னதான் பேசுகிறார்கள் என்று அறிந்து கொள்ள விழைந்த மனதின் ஆவலை அவனால் கட்டுப்படுத்த இயலவில்லை.

மகேந்திரன் சொன்ன வார்த்தைகள் அவனை அதிர சிக்குள்ளாக்கியது. இத்தனை நாட்களாக இருவரும் குள்ளும் உறவினர்கள் என்பதைத் தாண்டி எதுவும் இருக்காது என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு இடி விழுந்ததைப் போலிருந்தது.

இதைக் கேட்கவா, இங்கே வந்து அமர்ந்தேன் என்று வேதனையோடு அங்கே இருந்து எழப் போனவனை மதுவின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.



''மகேன்! என்னடா சொல்றே? உண்மையாத்தான் சொல்றியா? இல்லை என் கூட விளையாடறியா?''

படபடவென கேள்விகளை அடுக்கியவள், மகேந்திரன் அமைதியாக இருப்பதைக் கண்டதும், அவன் உண்மையைத்தான் சொல்கிறான் என்று உணர்ந்து, ''மாரு... நந்தினியா?'' என்றாள்.

இப்போது அதிர்ச்சியடைந்தது, மகேந்திரனும், சத்யனும்!

இருவருக்குமே இன்ப அதிர்ச்சி என்பதை சொல்லவும் வேண்டுமா என்ன?

''எப்படி மது?''

ஆச்சரியத்துடன் மகேந்திரன் கேட்க, ''எப்படின்னு எனக்கும் தெரியாது! எதோ தோணுச்சு! சொன்னேன்!'' என்று விட்டேத்தியாக பதில் சொன்னவள்,

''ஆனால், மகேன் இந்த காதல் கண்றாவி எல்லாம் நம்ம வீட்டில் வேண்டாம் என்று ஏற்கனவே முடிவு செய்திருந்த விஷயம்தானே?'' என்று சத்யாவை மீண்டும் அதிர வைத்தாள்.

''காதல்... கண்றாவி! கடவுளே! காதலைப் பற்றி இவ்வளவு உயர்ந்த எண்ணமா என் தேவதைக்கு?'' என்று நொந்து கொண்டவன், அவர்கள் பேச்சில் மீண்டும் கவனம் வைத்தான்.

''ப்ச்... இதெல்லாம் நாம் ப்ளான் செய்யறபடி நடக்காது மது! எனக்கே ஆச்சரியமாதான் இருக்கு! உனக்கும் அது வரும்போது தெரியும்!''

''சான்சே இல்லை! அம்மாவுக்குப் பிடிக்காது என்று தெரிந்ததும் அதைச் செய்ய நான் ஒண்ணும் முட்டாள்

இல்லை!'' என்றவள் மகேந்திரனை முறைத்தபடி ''உன்னை மாதிரி! என்று முடித்தாள்.

''கோபப்படாதே மது இயல்பா வர விஷயத்துக்கு நாம் தடை போட முடியுமா? நீயே சொல்லு நான் மட்டும் காதலிச்சே ஆகணும் என்று கங்கணம் கட்டிகிட்டா அலைந்தேன்?''

பரிதாபமாக சொன்னவனைக் கண்டதும் மதுவுக்குக் கோபத்தையும் மீறி, சிரிப்பு வந்தது.

''ஹப்பாடா! சிரிச்சிட்டியா? நீதான் அத்தைக்கிட்ட என் காதலுக்கு அனுமதி வாங்கணும்! நீயே கோபிச்சக் கிட்டா எப்படின்னு பயந்துட்டே இருந்தேன்!'' என்றவனிடம்,

''ஹலோ! ஹலோ! நிப்பாட்டுங்க சார்! காதலிக்கிறது நீங்க! அனுமதி வாங்கறது நாங்களா? அதெல்லாம் நடக்கவே நடக்காது! ஸெல்ப் ஹெல்ப் இஸ் தி பெஸ்ட் ஹெல்ப்! கேள்விப்பட்டதில்லையா?'' என்று வாரி விட்டு,

''எல்லாத்தையும் என்கிட்ட ஷேர் பண்றவன், இதைப் பற்றி மூச்சே விடலை! இப்போ மட்டும் ஹெல்ப்பாம்!'' என்று குறைபட்டாள்.

''உன்கிட்ட சொல்லக் கூடாது என்று இல்லை. மது நம்ம வீட்டில் காதல் என்ற பேச்சே வரக்கூடாது என்று நாம் முடிவெடுத்திருந்தோம்... இதைப் பற்றி உன்கிட்ட பேசினால், நிச்சயம் எதிர்மறையாத்தான் பேச்சு வரும் என்று பயந்துதான், நந்தினிகிட்ட சொன்ன பிறகு உன்கிட்ட சொல்லலாம் என்று நினைத்தேன்... அதுவும் இல்லாமல், உனக்கு எக்ஸாம்ஸ் இருக்கிற நேரத்தில்



இதை எல்லாம் சொல்லி, உன்னைக் குழப்ப வேண்டாம் என்று நினைத்தேன்... ப்ளீஸ் மது... புரிஞ்சுக்கோ!''

கெஞ்சுதலாகச் சொன்னவனைக் கண்டதும், மதுவுக்கும் மனம் இளகியது. இருந்தாலும், ''புரியுது! இருந்தாலும்... இந்த விஷயத்தில் என்னால் உனக்கு உதவி செய்ய முடியாது!'' என்றாள்.

''மதுக்குட்டி! இப்படிச் சொன்னால் எப்படிடா? நீ இப்போ எனக்கு ஹெல்ப் பண்ணு! உனக்கு ஹெல்ப் தேவைப்படும்போது இந்த மகேந்திரன் உனக்கு துணையா நிற்பான்!''

பெரிய மனித தோரணையில், மகேந்திரன் சொல்ல, ''போடா லூசு! நான் உன்னை மாதிரி காதலிக்கவும் போறதில்லை! உன் ஹெல்ப் கேட்டு வந்து நிற்கவும் போறதில்லை!'' அலட்சியமாக பதில் சொன்னவளிடம்,

''யார் கண்டா மது? நான் கூட காதலிப்பேன் என்று நினைக்கவே இல்லைதான்! இப்போ காதலிக்கலையா? அது போல உனக்கும் ஒரு நாள் காதல் வரலாம்!''

மகேந்திரன் சொன்ன நேரம். கோவில் மணி ஒலிக்க, ''காது மணி கூட அடிக்குது!'' என்றான் அவன்!

கேட்டுக் கொண்டிருந்த சத்யாவுக்கு, மகேந்திரனின் காலையப் பிடித்துக் குலுக்கி அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

''விடு! நடக்காததைப் பற்றி எதுக்கு பேச்சு? உன் விஷயத்தை சொல்லு? நந்தினிகிட்ட சொல்லிட்டயா? என்ன சொன்னாங்க?'' என்று விசாரித்தாள்.

அவன் தன் கோபத்தை விடுத்து அக்கறையாக விசாரிப்பதே சந்தோஷத்தைத் தர, மகேந்திரன் பதில்

சொல்ல ஆரம்பித்த நேரம், சத்யா மெதுவாக அங்கிருந்து நகர்ந்தான்.

மகேந்திரனுக்கும் மதுவுக்கு இடையில் எதுவும் இல்லை என்ற விஷயம், மனதை லேசாக்கி இருந்தது.

'ம்ம்ம்... மேடம்க்குதான் காதல் என்றாலே ஆகாது போல! ரொம்பவே போராட வேண்டி இருக்கும்!'' என்று எண்ணியவன்,

'பட்டு! உன் காதலைப் பெற என்ன வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன்!' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவன், ''முருகா! நன்றி!'' என்று கடவுளுக்கும் நன்றி சொல்ல மறக்கவில்லை!

நந்தினி என்ன சொன்னாள் என்ற கேள்விக்கு ஒரு கணம் அமைதியாக இருந்த மகேந்திரன், ''சொல்லிட்டேன் மது! அவள் ஓகே என்றும் சொல்லலை! நோ என்றும் சொல்லலை!'' என்றான்.

''சுத்தம்! நீ எப்பவுமே குழப்பமாதான் பேசுவே! இப்போ காதல் வந்த பிறகு நல்லாவே குழப்பறேடா!''

மது சலித்துக் கொள்ள, நந்தினி சொன்னதைச் சொன்னவன், ''தனக்கு விருப்பமில்லை என்று சொல்லலை தானே மது? அதுவே எனக்கு சாதகமான விஷயம் தானே?'' என்று ஆர்வத்துடன் வினவ, மது புன்னகைத்தாள்.

காதல் என்றாலே பாகற்காய் என்ற நினைப்பிலிருந்தாலும், நந்தினியைப் பற்றி பேசும்போது, மகேந்திரன் முகம் மலர்வதில் இருந்தே, அவன் அவளை எவ்வளவு விரும்புகிறான் என்பதை உணர்ந்த மது, எதிர் மறையாக எதுவும் சொல்லி விடக்கூடாது என்று முடிவெடுத்தாள்.



''அப்படித்தான் நினைக்கிறேன் மகேன்! பிடிக்கலை என்றால் பிடிக்கலை என்று சொல்லி இருப்பாங்க தானே?'' என்றதும், அவள் நினைத்ததைப் போலவே மகேந்திரனின் முகம் மலர்ந்தது.

''ஆமாம் மது! ஆனால், இது பற்றி நீங்க திரும்பவும் பேசினால், நான் வேலையை விட்டுப் போக வேண்டி இருக்கும் என்று சொன்னாளேன்னு, நான் கொஞ்ச நாள் அமைதியாக இருக்கேன் மது... ஆனாலும் அவள் ஏன் அப்படிச் சொன்னாள் என்று எப்படி தெரிஞ்சிக்கிறது?'' என்று அவளிடம் யோசனை கேட்டான்.

''ம்ம்ம்... ஏதோ ஒரு விஷயம் இருக்கு மகேன்! அது மட்டும் நிச்சயமா தெரியுது! அதை தெரிஞ்சிகிட்டால், மனங்களை அணுகறது இன்னும் கொஞ்சம் ஈசியா இருக்கும்னு தோணுது!''

மதுவும் அவன் நினைத்திருந்ததையே சொல்ல, மகேந்திரனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

''மது... நந்தினியோட அப்பாவும் சுந்தரமூர்த்தி சாரும் க்ளோஸ் ஃப்ரண்ட்ஸ்! அவர்கிட்ட கேட்டால் என்ன?''

ஒரு வழி கண்டுபிடித்த ஆர்வத்தோடு மகேந்திரன் கேட்க, மது எரிச்சல் காட்டினாள்.

''மகேக்கு என்று நிரூபிக்கிறாய் பார்த்தாயா? அதெப்படி ஒரு பெண்ணைப் பற்றி, தெரிஞ்சவரே என்றாலும் விசாரிக்கிறது? அப்படியே நாம விசாரிச்சாலும், அவர் எப்படி சொல்வார்?''

''ம்ம்ம்... கரெக்ட்தான்! பட் நான் ஒண்ணும் வம்பு பேசறதுக்கு விசாரிக்கப் போறதில்லையே மது! அவள் மௌனம் என்ன காரணம் இருந்தாலும், நான் அவளை விடறதாயில்லை.''

உறுதியாகச் சொன்னவன், ''நான் அவர்கிட்ட அவளை விரும்புவதைச் சொல்லியே விசாரிக்கிறேன் மது! அவர் இன்னும் ஒரு வாரத்தில் அமெரிக்கா கிளம்ப றார்... அதுக்குள்ளே அவரைப் பார்த்துப் பேசிடறேன்!'' என்று முடித்தான்.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு, மதுவும் ஒத்துக் கொள்ள, அடுத்த நாளே, சுந்தரமூர்த்தியிடம் பேசி விடுவது எனத் தீர்மானித்தான்.

* * *

நந்தினி குழம்பிப் போயிருந்தாள்.

இரு வாரம் முன்பு காதலைச் சொன்ன மகேந்திரன், அதை முற்றிலும் மறந்தவனைப் போல, இயல்பாக நடந்து கொண்டது ஒரு புறம் நிம்மதியாகவும், மற்றொரு புறம் ஏமாற்றமாகவும் இருந்தது.

''இதைப் பற்றி மற்றொரு முறை பேசினால், வேலையை விட்டுப் போய் விடுவேன் என்று மிரட்டியது நீதானே? மனசாட்சி கேள்வி கேட்க,

'ஒத்து வராது!' என்று சொல்லி விட்டால், அப்படியே விட்டு விடுவானா? அவ்வளவுதான் அவன் காதலா?'

மகேந்திரனிடம் தன் வசம் இழக்கத் துவங்கி இருந்த மனம், உரிமையுடன் பதில் கேள்வி கேட்டதும், நந்தினி திகைத்துப் போனாள்.

மீண்டும் தன்னிடம் அவன் தன் காதலைப் பற்றிப் பேச வேண்டும் அவள் எதிர்பார்க்கிறாளா என்ன?

ஒத்து வராது! என்று முடிவு செய்துவிட்ட பிறகு இந்த அலைபாய்தல் ஏன்?



தடைவிடாமல் எழுந்த கேள்விக்கு பதில் யோசித்த போது, நந்தினிக்கு தானும் அவனை விரும்புவது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

இப்போது புரிந்து என்ன பயன்? அவன் சொல்லும் போது, வீம்பாக மறுத்து விட்டு, இப்போது அவன் அமைதியாக இருக்கும்போது ஏக்கப்படுவதில் பயன் இல்லை என்று தெரிந்தாலும், அன்று காலையில் அவனைப் பார்த்தபோது, அவள் கண்களில் எதிர்பார்ப்புத் தோன்றாமல் இல்லை.

மகேந்திரன் அதைக் கவனித்தானோ என்னமோ? ஒரு கணம் அவளையே கூர்ந்து நோக்கியவன், அலுவலகம் வந்த கொஞ்ச நேரத்திலேயே, வெளியே போக வேண்டும் என்று கிளம்பி விட்டான்.

அவன் வரும் வரை அலுவலகத்தில் இருக்குமாறு சொல்லிவிட்டுச் சென்றதால், எல்லாரும் கிளம்பிய பிறகும், அலுவலகத்தில் காத்திருந்தவள், கையில் இருந்த வேலையை முடித்து விட்டு, மகேந்திரனின் அறைக்குள் ஒரு கோப்பை வைக்கச் சென்றாள்.

கோப்பை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து விட்டு, திரும்பியவளின் பார்வை மகேந்திரனின் நாற்காலியில் படிய, மெல்ல அந்த இருக்கையை அவள் கைகள் வருடி. ஏதோ தோன்ற, அந்த நாற்காலியில் அமர்ந்தவளின் மனதில் இனம் புரியாத அமைதியும், இதமும் படர கண்களை மூடி அந்த உணர்வை ரசித்துக் கொண்டிருந்தபோது, உள்ளே நுழைந்த மகேந்திரனின் உள்ளம் துள்ளியது.

'இவ்வளவு ஆசையை வைத்துக் கொண்டு மேடம், ஒத்து வராது என்று சொல்லி இருக்காங்க!' என்று

கேலியாக நினைத்துக் கொண்டவன், அதற்குக் காரணத்தையும் சுந்தரமூர்த்தியின் வாயிலாக அறிந்து கொண்டிருந்ததால், மனம் இளகினான்.

ஒரு நிமிடம் கழித்து கண்களைத் திறந்த நந்தினி, தன் எதிரே நின்று கொண்டிருந்த மகேந்திரனைக் கண்டதும், பதறி அடித்து அவனது இருக்கையில் இருந்து எழுந்தாள்.

என்ன பேசுவதென்று புரியாமல் அவள் தவிக்க, அவளை மேலும் தவிக்க விடாமல், ''வேலை எல்லாம் முடிஞ்சிடுச்சா, நந்தினி?'' சாதாரணக் குரலில் விசாரித்தான் அவன்.

''முடிஞ்சிடுச்சு... நான் கிளம்பவா?''

உடனே அங்கிருந்து கிளம்பி விட வேண்டும் என்ற உந்துதலில் அவள் வினவ, அவளையே பார்த்தவன், இன்றே எல்லாவற்றையும் பேசி விட வேண்டும் என்று முடிவு செய்தவனாக, ''இல்லை! கொஞ்சம் பேசணும் உட்கார்!'' என்றான்.

சற்று முன் அவள் அமர்ந்திருந்த நிலை, அவளது மனதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட, உரிமையாக அவளை ஒருமையில் விளித்தவன்,

''நான் அன்னைக்கு கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லலையே நந்தினி?'' கனிவான குரலில் வினவினான்.

எதைப் பற்றி பேசுகிறான் என்று புரிந்ததும், நந்தினி பதில் சொல்ல முடியாமல் தலையைத் தாழ்த்தினாள்.

''ப்ளீஸ் நந்து... உனக்கு என்னைப் பிடிக்கலை என்றால் நான் கண்டிப்பா உன்னை வற்புறுத்த மாட்டேன்!



உனக்குப் பிடிச்சிருக்கு... அப்புறம் எதுக்கு வேண்டாம்ன்னு சொன்னே என்றுதான் புரியலை!''

திகைப்புடன் அவனை நோக்கியவள், சற்று முன் தான் அமர்ந்திருந்த நிலையிலேயே தன் மனதை யூகித்து விட்டான் என்று உணர்ந்து முகம் சிவந்தாலும், அன்று அவள் மறுத்ததற்கான காரணம் இன்றும் அப்படியே இருந்த காரணத்தால், அமைதி காத்தாள்.

''நந்து... ப்ளீஸ்!''

தவிப்புடன் சொன்ன மகேந்திரன், எழுந்து அவள் அருகில் வர, நந்தினியும் பதட்டத்துடன் எழுந்து நின்றாள்.

''ப்ச்... எதுவும் செய்ய மாட்டேன்... உட்கார்!'' என்று அதட்டியவன்,

''எனக்குக் காரணம் தெரியணும்! சொல்லு!'' என்றான் அழுத்தத்துடன்!

பதில் தெரியாமல் அவன் விடப் போவதில்லை என்பதை உணர்ந்தவள், விஷயத்தைச் சொல்லி விடத் தீர்மானித்தவளாக அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

''உங்களுக்கு என்னைப் பற்றி எதுவும் தெரியாது! எனக்கு ஏற்கனவே திருமணம் நிச்சயமாகி, கல்யாண மேடை வரைக்கும் வந்து நின்னு போயிடுச்சு!''

மாத்த குரலில் சொன்னவள், ''எனக்குத் தெரியும்!'' என்று மகேந்திரனிடம் இருந்து வந்த பதிலில் அதிர்ந்து நோக்கினாள்.

''சாரி! சுந்தரமூர்த்தி அங்கிள் கிட்ட கேட்டுத் தெரிஞ்சுகிட்டேன்! நீ மறுத்ததற்கு என்ன காரணம் என்று தெரிந்தால், சரி செய்யலாமே என்றுதான் கேட்டேன்!'' என்றவன் குரல் தழைந்து வந்தது.

அவன் அவளைப் பற்றி மற்றவரிடம் விசாரித்திருக்கிறான் என்பது கோபத்தை உண்டு செய்தாலும், தனக்காகத்தான் அதைச் செய்தான் என்பது மனதுக்கு இதமாக இருந்தது.

சிறிது நேரம் அமைதியில் கழிய, ''ஆனா... அதுக்கும் நீ ஒத்து வராது என்று சொன்னதற்கும் என்ன சம்மந்தம் நந்து?'' புரியாமல் கேட்டவனை ஆச்சரியத்துடன் நோக்கிய நந்தினிக்கு, அவன் அவளது திருமணம் நின்றதை ஒரு விஷயமாகவே மதிக்கவில்லை என்பது ஆறுதலாக இருந்தது.

''இல்லை! அந்தத் திருமணம் நின்றதற்கு என் ராசி தான் காரணம் என்று எல்லாரும் சொன்னாங்க! நீங்களோ ரொம்ப ராசி பார்க்கிற ஆள்... அதான்...''

அதற்கு மேல் என்ன சொல்வது என்று புரியாமல் தயக்கத்துடன் நந்தினி நிறுத்த, ''மை காட்!'' என்று தலையில் கை வைத்த மகேந்திரன், ''யாரோ ஒருத்தன் செய்த தப்புக்கு ஒரு பெண்ணின் ராசி சரி இல்லை என்று, குற்றம் சாட்டும் அளவுக்கு முட்டாள் என்றுதான் என்னைப் பற்றி நீ நினைத்திருக்கிறாயா?'' என்றபோது அவனது குரலில் கோபம் இருந்தது.

அந்தக் கோபம் நந்தினிக்கு இனித்தது!

அதுவரை பாரமாக இருந்த நெஞ்சம், இலவம் பஞ்சாய் லேசாக, ''இல்லை... அப்படி இல்லை!'' என்று வேகமாக மறுத்து விட்டு, ''பட்... உங்களுக்கு இந்த ராசியில் எல்லாம் நம்பிக்கை இருக்குதானே?'' என்றவள் குரலில் தயக்கம் இருந்தாலும், 'அது உண்மைதானே?' என்ற தொனி இருந்தது.



''நந்தினி... நான் ராசியில் நம்பிக்கை வைத்திருப்பவன்தான்! இல்லை என்று சொல்லலை! இங்கே ஆபீஸில், உங்க ராசி, சீக்கிரம் அந்த வேலை முடியும் என்று மற்றவர்களை உற்சாகப்படுத்த சொல்லி இருக்கிறேனே தவிர, எதிர்மறையாக நான் ஏதாவது பேசி இருக்கிறேனா? உங்க ராசி சரி இல்லை... நீங்க செய்ய வேண்டாம்... அப்படின்னு?ம்ம்ம்?''

இன்னமும் கோபம் குறையாமல், மகேந்திரன் வினவ, அவன் சொன்னது உண்மை என்று நந்தினிக்கும் புரிந்தது.

''இல்லை... எங்க சொந்தக்காரங்க கூட எல்லா விஷயமும் தெரிஞ்சும், இன்னமும் என் ராசிதான் என்று காரணம் சொல்லுவாங்க தெரியுமா? இதை எல்லாம் பொருட்படுத்தக் கூடாது என்று புரிஞ்சாலும், கேட்கும் போது கஷ்டமாதான் இருக்கும்! ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நீங்க அந்த மாதிரி சொல்லிட்டா என்னால் தாங்க முடியாது என்றுதான்...''

சிறு குழந்தை போல, கண் கலங்க நந்தினி சொன்னதும் மகேந்திரனின் மனம் இளகியது.

''விடு நந்து... நம்மைக் கஷ்டப்படுத்தணும் என்ற நோக்கத்தோட சொல்றாங்க என்று தெரிஞ்சும், அதுக்கு மதிப்புக் கொடுக்கிறது முட்டாள்தனம்!'' என்று தேற்றினான்.

''அந்த நேரத்தில், பின் விளைவுகளைப் பற்றி கவலைப் படாமல் நீ தைரியமாக முடிவெடுத்ததில் எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?'' என்றவன் குரலில் பெருமிதம் வழிந்தது.

குழப்பம் எல்லாம் அகன்றுவிட அவனை நோக்கியவள், அவன் பார்வையில் மீண்டும் தலை கவிழ்ந்தாள்.

கண்களில் ரசனையுடன் அவளை நெருங்கியவன், ''இப்போ பதில் சொல்லலாம் இல்லையா?'' என்று கிசுகிசுப்புடன் வினவ, அவனது அருகாமையில், உள்ளம் இனிதாகப் படபடக்க, மெல்ல நிமிர்ந்தவள், ''பதில் தெரிஞ்சிகிட்ட பிறகும், இதென்ன கேள்வி?'' என்றாள்.

''ஒத்து வராது என்று கட் அண்ட் ரைட்டாகச் சொல்ல முடிந்த மேடமுக்கு, ஒத்து வரும் என்று சொல்ல மட்டும் வாயில்லையா?''

விடாமல் மகேந்திரன் கேட்க, ''சரிப்பா! எனக்கு ஓகே!'' புன்னகையுடன் நந்தினி பதில் தர, ''எதுக்கு ஓகே?'' என்றான் அந்தக் குறும்புக்காரன்!

''நீங்க கேட்டதுக்கு... ஓகே!'' நந்தினியின் கண்ணிலும் குறும்பு மிளிர்ந்தது.

''அதான் கேட்கிறேன்! நான் என்ன கேட்டேன்?''

யோசிக்கும் பாவனையில் மகேந்திரன் வினவ, தன் வாயில் இருந்து அவனைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் என்று வரவேண்டும் என்று நினைக்கிறான் என்று புரிந்தாலும், விட்டுக் கொடுக்காமல்,

''ப்ச்! இப்ப என்ன கேட்டோம் என்று மறந்து போய் ஆள்கிட்ட போய் மாட்டிக்கிட்டேனே?''

போலியாக வருத்தப்பட்டுக் கொண்டு, அவள் உதட்டைப் பிதுக்க, மகேந்திரனின் விரல்கள், அவளது இதழ்களை வருடுவதற்காக மேலெழுந்தன.

அவனது உத்தேசம் புரிந்து, தன்னிச்சையாக நந்தினி பின்னே நகர, பக்கத்தில் இருந்த நாற்காலியில் இடித்து



கொள்ள போனவளைத் தன் கைகளால் பிடித்து நிறுத்தினான் மகேந்திரன்.

''என கிட்ட நீ வசமா மாட்டிகிட்டதான்!'' என்றவன் கைகள் அவளைத் தன் புறம் இழுக்க, ''மகி... ப்ளீஸ்... இது ஆபீஸ்!'' என்றாள், அவனது மனம் கவர்ந்தவள்.

''வாவ்! மகி என்றா கூப்பிட்டே? சோ ஸ்வீட்!'' என்றவன், ''எங்க அம்மா அப்படித்தான் கூப்பிடுவாங்க நந்து!'' என்றபோது, அவனது குரல் நெகிழ்ந்திருந்தது.

அவனது பெற்றோர் இப்போது உயிருடன் இல்லை என்பதை அலுவலகத் தோழர்கள் மூலம் அறிந்திருந்த நந்தினி, ஆதூரத்துடன் அவனது தோளை வருடினாள்.

அந்த வருடலில் இதம் கொண்டு இயல்புக்குத் திரும்பியவன், ''நீ இன்னும் பதில் சொல்லலை!'' என்று மீண்டும் ஆரம்பிக்க,

''நீங்க வேணா இன்னொரு முறை அந்தக் கேள்வியை கேளுங்க! நான் பதில் சொல்றேன்!''

வெட்கத்துக்காக சொல்லிக் கொண்டே அவனிடம் இருந்து விலகியவள், ஆர்வத்துடன் அவனை நோக்க,

சடாரென்று மேஜை மேல் இருந்த பூச்சாடியில் இருந்து ஒரு ரோஜாவை எடுத்த மகேந்திரன், அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து, ரோஜாவை நீட்டி, ''ஐ லவ் யூ சின்சர்லி... வில் யூ மேரி மீ?'' என்றான்.

நாடக பாணியில் அவன் கேட்டதைக் கண்டு முதலில் சிரித்தவள், அவனது கண்களில் நிரம்பி இருந்த காதலில் மயங்கித்தான் போனாள். உள்ளம் நெகிழ்ந்து கண்களில் கண்ணீர் வரப் பார்த்தது.

சமாளித்துக் கொண்டு, அவனை நோக்கியவள், ''ரொம்ப கெஞ்சி கேட்கறீங்க என்பதால், ஒத்துக்கறேன் பிரின்ஸ்!'' கேலியாகச் சொல்ல முயன்றாலும், அவனது காதலுக்கு ஈடாக, அவனது கண்களும் அவளது நேசத்தை வெளிப்படுத்த குரலும் குழைந்தே வந்தது.

''தேங்க் யூ பிரின்சஸ்!'' என்றவன், அவளது வெட்கம் நிறைந்த முகத்தை நெஞ்சத்தில் நிரப்பியபடி, அவளது புறங்கையில் மென்மையாக முத்தமிட, வெட்கத்துடன் கையை இழுத்துக் கொண்டவள், மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு புன்னகைத்தாள்.



## 9

மதுமிதா, சத்யாவின் அலுவலகத்தில் வேலைக்கு சேர்ந்து ஒரு மாதம் ஆகி இருந்தது.

எந்த வேலை கொடுத்தாலும் முழு ஈடுபாட்டுடன் அவள் செய்யும் விதம், மற்றவர்களிடம் பழகும் விதம் என்று நாளுக்கு நாள் அவள் மீதிருந்த நேசம் அதிகரித்துக் கொண்டே போனது.

அதுவும், கடந்த இரண்டு வாரங்களாக, ஒரு புது ஆர்டருக்காக புது வடிவமைப்புகளைத் தயாரிக்கும் பணியில் இருவரும் சேர்ந்து ஈடுபட வேண்டி இருக்க, அவளது அருகாமை மனதுக்கு சந்தோஷம் தந்தாலும், தன் மனதிலிருப்பதை வெளிக்காட்ட முடியாமல் சத்யா தினறித்தான் போனான்.

மதுவுக்கு எதுவும் வித்தியாசமாகத் தெரியவில்லை போலும்!



முதலில் பேசத் தயக்கம் காட்டினாலும், பின்னர் தன் இயல்பு படி சகஜமாகப் பேசத் துவங்கி விட்டாள். அதிலும், தான் முதலாளி என்ற தோரணையை சத்யா யாரிடமும் காட்டியிராத காரணத்தால், அவனிடம் சகஜமாகப் பேசுவது அவளுக்கும் இயல்பாகவே வந்தது.

அவள், தன்னுடன் சகஜமாகப் பேசுவது ஒரு புறம் சந்தோஷமாக இருந்தாலும், இவளுக்குத் தன்னைப் போல எந்த பாதிப்பும் இல்லையா என்ற எண்ணம் சத்யாவை அலைக்கழித்தது.

தான் முதல் பார்வையில் இருந்து விரும்புகிறோம் என்பதால், அவளிடமும் அதையே எதிர்பார்ப்பது சரி இல்லை என்று மூளை அறிவுறுத்தினாலும், ஆசை கொண்ட மனம் தன் ஆதங்கத்தை விட மாட்டேன் என்றது.

அன்று இரவு வேலை முடிய நேரம் ஆகி விட, அவளை வீட்டில் கொண்டு வந்து விடுவதற்கு சத்யா முன் வந்தான்.

''இல்லை... மகேந்திரன் வருவான்'' என்று அவள் மறுக்க, ''அவர் வேலை விஷயமா வெளியூர் போயிருக்கார். இன்னைக்கு நைட்தான் வரார் என்று எனக்குத் தெரியும் மது!'' என்று சத்யா சொன்னதும், மது தவறு செய்து மாட்டிக் கொண்ட குழந்தை போல திருதிரு வென்று விழித்துக் கொண்டு நின்றாள்.

அவளையே ஒரு கணம் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன், ''ஏன் என்னோட வர தயக்கமா இருக்கா?'' என்று வினவினான்.

''இல்லை... அப்படி எல்லாம் இல்லை!'' அவசரமாக மறுத்தவளைக் கூர்ந்து நோக்கிய சத்யா, ''உன் பயம் அவசியமற்றது மது!'' என்றான் கனிவான குரலில்.

திகைப்புடன் அவள் நிமிர, ''எனக்குத் தெரியும்! அன்றைக்கு ஹோட்டலில் நீ என் காரில் வர மறுத்த விஷயம் தெரிந்து, மகேந்திரன் என்கிட்டே அடுத்த நாள் எல்லாம் சொன்னார். நான் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று நினைத்து சொன்னார்.''

இதற்கு என்ன சொல்வது என்று புரியாமல் அமைதியாக அவள் நிற்க, ''இவ்வளவு தைரியமான, புத்திசாலியான பொண்ணு... இந்த மாதிரி நடந்துக்கிறது ஆச்சரியமா இருக்கு!'' என்றவன்,

''எந்தப் பொருள் மீதுமே, அதீதப் பற்றோ, அதீத வெறுப்போ வைத்துக் கொள்ளக் கூடாது மது! நீ அந்த விபத்தைப் பற்றி மட்டுமே நினைத்து காரையே ஒதுக்குகிறாய்! ஆனால், அந்த காரோடு சம்மந்தப்பட்ட எத்தனையோ நல்ல விஷயங்கள் இருந்திருக்கும் இல்லையா? அதை எல்லாம் நினைவு வைத்துக் கொள்ளலாம் இல்லையா?''

சத்யா சொன்னதும், முதல் முதலில் மாமா காரை வாங்கி வந்த நாளன்று, மகேந்திரனும் தானும் அதைச் சுற்றிச் சுற்றி வந்து, தொட்டுப் பார்த்துச் சந்தோஷப்பட்டதும், ஆரவாரித்ததும் மதுவின் மனதில் நிழலாடியது.

அந்தக் காரில் மாமா, சில முறை அவளைப் பள்ளியில் கொண்டு விடும்போது, அந்த வயதுக்கே உரிய விதத்தில், நண்பர்களிடம் பெருமை அடித்துக் கொண்டது இப்போதுதான் நடந்ததைப் போலிருந்தது.

காரின் முன் இருக்கையில் அமர, தான் மகேந்திரனோடு சண்டையிட்டதும், அந்த நிகழ்வுக்குப் பிறகு



...னுக்கும் தனக்கும் இடையே இருந்த தோழமை ...ப்பட்டதும் நினைவுக்கு வந்தது.

ஆனால்... அவள் யோசிக்கும்போதே, சத்யா தொடர்ந்து பேசினான்.

''நம்ம ஆபீஸ்ல இருக்கிற லிப்ட்ல நடந்த ஒரு வி...த்துலதான் எங்க தாத்தா இறந்து போனார், மது. எங்க ...த்தாவும் நானும் ரொம்ப க்ளோஸ்! அதனால ...ருடைய இழப்பு, என்னை ரொம்பவே பாதிச்சுது. ...ம்ப நாளைக்கு அந்த லிப்டில் ஏறவே மாட்டேன். ...தைப் பார்த்தாலே, தாத்தாவை பலி வாங்கியது என்...னைப்புதான் இருக்கும். இங்கே என்று இல்லை, ...ங்கேயுமே லிப்டில் ஏற மாட்டேன்! அப்புறம் அப்பா ...தான் புரிய வைச்சாங்க. இந்த லிப்ட் பொருட்களை ...ுக்கிட்டு போறதுக்கு, மாடிப்படி ஏற முடியாதவ...துக்கு என்று எத்தனை பயனுள்ளதா இருக்கு! ஒரு ...ரு சம்பவத்தை வைச்சு முழுசா எதையும் புற...னிக்கறது புத்திசாலித்தனம் இல்லை என்...அப்போதான் புரிஞ்சுது! இப்போ, எனக்கு லிப்ட்தா...ங்க தாத்தாவோட இறப்புக்குக் காரணம் என்...ண்ணம் வருவதே இல்லை!''

மென்மையான குரலில் உரைத்தவன், அவள் ...கத்தை ஆதூரத்துடன் நோக்கி, ''அந்த சின்ன வயசி...ல நீ பார்த்த விபத்து உன்னை எந்த அளவு பாதி...ச்சிருக்கும்னு என்னால் உணர முடியாது! ஆனா...அதைத் தாண்டியும் வாழ்க்கை நகர்ந்து கொண்டேதா...இருக்கு... இல்லையா? அவங்க உடலால் உன்னை...விட்டுப் பிரிந்திருந்தாலும், அவங்க கற்றுக் கொடு...விஷயங்கள், அவங்க காட்டின அன்பு... இதெல்லா

உன்னோடதானே இருக்கு?'' என்று முடித்தபோது, மாமா அத்தையின் விபத்தை நினைத்து கலங்கத் தொடங்கி இருந்த கண்கள், அவனது மென்மையான ஆறுதல் வார்த்தைகளில் ஆறுதல் கொண்டு நன்றியை வெளிப் படுத்தின.

தான் சொன்னதை அவள் புரிந்து கொண்டாள் என் பதை உணர்ந்தாலும், அவளைக் காரில் வரவேண்டும் என்று வற்புறுத்தாமல், காவலாளியை தொலைபேசி வழியே அழைத்த சத்யா, ''நமக்குத் தெரிந்த ஆட் டோக்காரர் ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தால்...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவனது கைப் பற்றி நிறுத்தினாள்.

அவள் ஏதோ சொல்ல வருகிறாள் என்று பேச்சை நிறுத்தியவன், என்னவென்று கண்களால் வினவ, ''நீங்களே என்னை டிராப் செய்யறீங்களா? ப்ளீஸ்!'' என்று அவள் வினவியதைக் கேட்டு முகம் மலர்ந்தான்.

''ஒண்ணுமில்லை ஆறுமுகம்... நீங்க வேலையைப் பாருங்க!'' என்று சொல்லிவிட்டு பேசியை வைத்தவன், ''ஆர் யூ ஷ்யூர்?'' என்று விசாரித்தான்.

மது ஆமோதிப்பாகத் தலையாட்டினாள்.

அவன் பேசிய பேச்சில் தைரியம் வந்தவளாக காரில் ஏறி அமர்ந்து விட்டாலும், பழைய நினைவுகளின் தாக்கத்தில், மதுவின் கைகள் நடுங்கின.

அதை உணர்ந்தவனாக, சத்யா மெல்ல அவள் கையைப் பற்றி அழுத்தினான். அந்த மெல்லிய அழுத்தம், மனதில் ஒரு இதத்தைப் பரப்ப, மதுவின் நடுக்கம் குறையத் துவங்கியது.



அவளது நடுக்கம் முழுமையாக நின்ற பிறகே, சத்யா வண்டியைக் கிளப்பினான்.

பயண நேரம் அமைதியாகவே கழிய, வீடு வந்ததும் இறங்கிக் கொண்ட மது, கண்கள் மலர, ''தேங்க்ஸ்!'' என்றாள்.

அவளது நன்றி, வீட்டுக்குக் கொண்டு வந்து விட்ட தற்கு மட்டுமல்ல என்பதை அவள் கண்கள் உணர்த்த, ''யூ ஆர் மோஸ்ட் வெல்கம்!'' என்று புன்னகையுடன் சொன்னவன், மன நிறைவோடு காரைக் கிளப்பினான்.

வீட்டுக்குள் வந்து மதுவிடம், ''மது... ரொம்ப நேரம் ஆகிடுச்சே? எப்படி வந்தாய்?'' என்று ஜானகி விசாரிக்க, ''எங்க பாஸ் சத்யாவுடன் காரில் வந்தேன்!'' என்றவளை, விழி பிதுங்க நோக்கியவர், ''மது!'' ஆச்சரியத்துடன் விசாரிக்க,

''இந்த மகேந்திரனை முதலில் கார் வாங்கச் சொல் லணும்! சரியான கஞ்சன்! நல்லாதானே சம்பாதிக் கிறான்! ஒரு கார் வாங்கினால் என்னவாம்?''

அலுப்புடன் அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது, உள்ளே நுழைந்த மகேந்திரன், ஆச்சரியத்துடன் மதுவைப் பார்த்து விட்டு, 'என்ன ஆச்சு?' என்று சைகையில் அத்தையிடம் வினவ, 'தெரியவில்லை!' என்று தோளைக் குலுக்கியவரின் முகம் சந்தோஷத்தில் நிறைந்திருந்தது.

அடுத்த நாள், வேலை விஷயமாக சத்யாவைச் சந்திக்க வந்திருந்த மகேந்திரன், சத்யாவுக்கு நன்றி கூறினான்.

''எத்தனை வருஷமா நானும் அத்தையும் அவளை அந்த மனக்குழப்பத்தில் இருந்து வெளியே கொண்டு

வரணும் என்று பேசி இருக்கோம், தெரியுமா சார்? கவுன்சிலிங் கூட போய் வந்தோம்! எந்த பலனும் இருக்கலை. நேற்று ஒரே நாளில் எப்படி அவளை மாத்தினீங்க?'' என்று ஆச்சரியம் குறையாமல் விசாரித்தான்.

''எல்லாத்துக்கும் ஒரு நேரம் வரணும் தானே மகேன்?'' என்ற சத்யா,

''மகேன், உங்ககிட்ட எத்தனை முறை சொல்லி இருக்கேன்! இப்படி நீங்க என்னை சார் போட்டுக் கூப்பிடாதீங்க என்று? உங்களுக்கும் எனக்கும் ஒரே வயசுதான் இருக்கும்... சும்மா பெயர் சொல்லியே கூப்பிடுங்க!'' என்றதும்,

''ஒரே வயசா இருந்தாலும், நீங்களும் நானும் ஒன்றாகி விட முடியுமா சார்?''

மகேந்திரன் சொன்னதும், சத்யா அவனை முறைத்தான்.

''இந்தப் பொருளாதார நிலைதான் எனக்கும் உங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்றால், அதற்குக் கூட நீங்க எனக்கு கிரெடிட் கொடுக்க முடியாது மகேன்! இது எல்லாம் எங்க அப்பாவுடைய உழைப்பு! அப்படிப் பார்த்தால், உங்கள் உழைப்பிலேயே முன்னேறி இருக்கும் நீங்கதான் என்னை விட உயர்ந்தவர்!''

தொழிலில் ஈடுபட ஆரம்பித்த இந்த நான்கு வருடங்களில் அவன் என்னென்ன செய்திருக்கிறான் என்று சுந்தரமூர்த்தி வாயிலாக அறிந்திருந்த மகேந்திரனுக்கு, சத்யாவின் பேச்சு, அவன் பாலிருந்த மரியாதையை மேலும் அதிகப்படுத்தியது.



''அதுவும் இல்லாமல், உறவுக் காரங்க ஆகப் போற ஆட்கள் இப்படி ஒருத்தருக்கொருத்தர் ரொம்ப மரியாதை கொடுத்துப் பேசறது நல்லாவா இருக்கும்?''

சத்யாவின் பேச்சில் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து நோக்கிய மகேந்திரன், சத்யாவின் பார்வை அறையின் வாயிலில், உள்ளே வர அனுமதி கேட்டு நின்று கொண்டிருந்த மதுவின் மேல் படிந்திருந்ததைக் கண்டதும், முகம் சுருங்கினான்.

உள்ளே வந்த மது, மகேந்திரனைக் கண்டு ஒரு சின்னப் புன்னகை மட்டும் காட்டி விட்டு, வேலை பற்றி சத்யாவிடம் பேசி விட்டுச் செல்ல, சத்யாவின் பார்வை அவள் வெளியே செல்லும் வரை அவளையே தொடர்ந்திருந்தது.

குழப்பத்துடன் அமர்ந்திருந்த மகேந்திரனைக் கண்ட சத்யாவுக்கு, ஏனோ அவனிடம் தெளிவாக தன் மனதைச் சொல்லி விட வேண்டும் என்று தோன்றியது.

''மகேன்... நான் மதுவை விரும்பறேன்! அவளைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படறேன்!''

சட்டென்று சத்யா சொல்லிவிட, மகேந்திரனுக்கு என்ன சொல்வதென்றே ஒரு கணம் புரியவில்லை.

அவன் அறிந்த வரையில், சத்யா மதுவுக்கு ஏற்றவன் என்பதில் அவனுக்கு எள்ளளவும் சந்தேகம் வரவில்லை.

பொருளாதார விஷயம் தவிர, மதுவும் சத்யாவுக்கு எந்த விதத்திலும் குறைந்தவள் இல்லை!

ஆனால், காதல் என்பதில் நம்பிக்கை இல்லாத மது இதற்கு ஒத்துக் கொள்வாளா? என்ற கேள்வி எல்லாவற்றையும் மீறிக் கொண்டு பூதாகாரமாகத் தெரிய,

அதையே அவன் சத்யாவிடம் வெளிப்படுத்த, ''என் மேல் நம்பிக்கை வைங்க மகேன்! எனக்கு நம்பிக்கை

இருக்கு, என் நேசத்துக்கான எதிரொலி அவள்கிட்டையும் இருக்கும்னு! என்ன? கொஞ்ச நாள் ஆகும்!'' என்றவன், ''அவள் மனசை மாற்றுவதில் எனக்கு உங்க உதவியும் தேவை!'' என்ற வேண்டுதலோடு நிறுத்தினான்.

''சத்யா! உங்களை மாதிரி ஒரு கணவர் கிடைக்க மது கண்டிப்பா கொடுத்து வைச்சிருக்கணும்! ஆனாலும்... உங்க வசதியை ஒப்பிடும்போது...'' என்று நடைமுறை பிரச்னையை எடுத்துச் சொன்ன மகேந்திரனை இடைமறித்த சத்யா,

''இல்லை மகேன்! அதெல்லாம் ஒரு பிரச்சனையே இல்லை... எங்க வீட்டிலும் குணத்துக்குதான் மதிப்பு கொடுப்பாங்க... அதுவும் எனக்கு விருப்பம் என்றால், வேற எந்தப் பேச்சுக்கும் அங்கே இடமே இருக்காது... நீங்க என்னைத் தாராளமா நம்பலாம்!'' என்று உறுதியாக உரைக்க, மகேந்திரனின் முகம் மலர்ந்தது.

''கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு சத்யா! என் உதவி என்று ஏதோ சொன்னீங்களே? என்னன்னு சொல்லுங்க!'' என்றான்.

''முதல் உதவி... நீங்க என்னை நீங்க வாங்க என்று கூப்பிடாமல் உரிமையா வா போ என்று கூப்பிடணும்! அடுத்தது, நானும் உங்களை அப்படிக் கூப்பிட அனுமதி தரணும்!''

மகேந்திரன், புன்னகையுடன், ''டன்!'' என்று கட்டை விரலை உயர்த்திக் காண்பித்து விட்டு, ''நெக்ஸ்ட்?'' என்றான்.

''மதுவுக்கு ஏன் காதல் என்றாலே பிடிக்கவில்லை என்று தெரியணும்!''



சத்யா வினவியதும், அதுவரை புன்னகையுடன் இருந்த மகேந்திரன் அமைதியானான்.

''சொல்ல முடியாத விஷயம் என்றால் பரவாயில்லை மகேன்!''

''இல்லை சத்யா! இது எங்க அத்தை சம்மந்தப் பட்ட விஷயம்... அதனால்தான் தயங்கறேன்!'' என்றவன், சிறிது நேர அமைதிக்குப் பிறகு பேசத் துவங்கினான்.

''பரவாயில்லை! எப்படியும் நீங்க... சாரி... நீ உறவுக்காரன் ஆகப் போகிறாய்! அதனால் உன்னிடம் சொல்லுவதில் தவறில்லை!'' என்றவன் சொல்ல ஆரம்பித்தான்.

''எங்க அத்தையின் திருமணம் காதல் திருமணம்தான்! எங்க மாமா அவங்க கிட்ட முதலில் நல்ல முறையில் தான் நடந்துகிட்டார்... ஆனால், தன்னுடைய குடிப்பழக்கத்தின் காரணமா அவரோட நடவடிக்கைகள் மாற ஆரம்பிச்சுது... அத்தை எவ்வளவு கெஞ்சியும், அவர் அந்தப் பழக்கத்தை விடவே இல்லை... ஒரு நாள், அதுவே அவர் உயிர் போகவும் காரணமா அமைஞ்சிடுச்சு... அப்போ மதுவுக்கு ஒரு வயசு கூட ஆகலை! காதலிச்சு தன்னை நம்பி வந்த பெண்ணுடைய சந்தோஷத்தை விட, தன்னுடைய விருப்பம்தான் முக்கியம்னு இருந்தார் என்று மதுவுக்கு அவங்க அப்பா மேல் அவ்வளவு கோபம்! காதல் என்ற பேரில் தன் அம்மாவை அடைய வைச்சிட்டார் என்று அவர் மேல் இருந்த கோபம், அப்படியே அந்த காதல் மேலயும் வந்துடுச்சு! அத்தையும் காதல் என்ற பெயரில் நாங்க வாழ்க்கையை இழந்துடக் கூடாது என்று கண்டிப்பா சொல்லி வைச்சிருக்காங்க!''

மகேந்திரன் சொல்லி முடித்ததும், சத்யா அமைதியாக இருந்தான். மதுவின் கருத்தில் நியாயம் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

'பட்டு! உன் மேல் எனக்கிருக்கும் காதல் உண்மையானது! அதை நான் உனக்கு கண்டிப்பா புரிய வைப்பேன்!'

மனதுக்குள் முடிவெடுத்தவன், ''அவளுக்கு காதல் என்றால் இஷ்டமில்லை என்றால், நான் உங்க அத்தைகிட்ட நேரிடையா பெண் கேட்டே கல்யாணம் செஞ்சுக்கிறேன்!'' என்றான்.

''ஹே! சூப்பர்! ஆனால், அவளும் உன்னை விரும்பி கல்யாணம் முடித்தால் உனக்கு சந்தோஷமா இருக்கும் இல்லை? நாம் விரும்புகிற பெண் நம்மை விரும்புகிறாள் என்பது எவ்வளவு சந்தோஷமான விஷயம்!''

ரசனையுடன் மகேந்திரன் சொல்ல, ''ம்ம்ம்... அனுபவம் பேசுது! நந்தினி ஒத்துக்கிட்டாங்க போலிருக்கே!'' என்று சொல்லிவிட்டு சத்யா சிரிக்க ஆரம்பிக்க, மகேந்திரன் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினான்.

மகேந்திரனின் ஆச்சரியத்தைக் கண்டு மேலும் சிரித்து விட்டு, ''எனக்குத் தெரியும் மேன்!'' என்று தான் அறிந்த விவரத்தை சத்யா விவரிக்க,

''வாவ்! அப்போ நீ மது இங்கே வேலைக்குச் சேர ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியில் இருந்தே விரும்ப ஆரம்பிச்சிட்டியா? அப்போ கண்டிப்பா மதுவும் உன்னை விரும்பி கல்யாணம் செஞ்சுக்கிறதுதான் சரியா இருக்கும்!'' என்றான்.

''எல்லாம் சரிதான்! இன்னும் கொஞ்ச நாள்... அவள் மனதில் இடம் பிடிக்க முடியுமா என்று பார்க்கிறேன்!



அப்படியும் முடியலை என்றால், நேரா கல்யாணம் பேசி முடிச்சிட வேண்டியதுதான்!'' என்றவன்,

''மகேன்... உன் அத்தை மதுவை எனக்குக் கல்யாணம் செஞ்சு வைக்க சம்மதிப்பாங்கதானே?'' ஆர்வம் கலந்த பயத்துடன் விசாரித்தான்.

என்னை ஏற்றுக் கொள்ள என்ன தயக்கம் என்று நினைக்காமல், எல்லாத் தகுதிகளும் இருந்தாலுமே, மதுவின் தாய் தன்னை ஏற்றுக் கொள்வார்களா என்று தவன் பயப்படுவதில் இருந்தே, அவன் எந்த அளவு மதுவை நேசிக்கிறான் என்பது புரிந்து விட மகேந்திரனுக்கும் மனம் நிறைந்தது.

சத்யாவின் காதலுக்கான எதிரொலி, மதுவிடம் கூடிய சீக்கிரம் ஏற்பட வேண்டுமென பிரார்த்திக்க ஆரம்பித்தவன், ''கண்டிப்பா சத்யா... உனக்கென்ன குறை? மதுவும் உன் காதலைப் புரிந்து உன்னை விரும்ப ஆரம்பிப்பாள்... ஆல் தி பெஸ்ட்!'' என்று வாழ்த்துத் தெரிவித்து விட்டுக் கிளம்பினான்.

அதன் பிறகு ஒரு வாரம் அமைதியாகக் கழிந்தது. சத்யாவின் அன்றைய பேச்சுக்குப் பிறகு, மது சத்யாவைப் பார்க்கும் விதம் அவளையும் மீறி மாறி இருந்தது.

அன்னையும், மகேந்திரனும் வருடக்கணக்காய் சொல்லியபோது மாறாத மனம், சத்யாவின் ஒரு நாள் பேச்சில் மாறியதைக் கண்டு அவளுக்கே ஆச்சரியம்தான்!

நாட்கள் அமைதியாகச் செல்ல, ஒரு நாள் தாமதமாக அலுவலகம் வந்த மது, சத்யாவின் அறைக்கு வந்து அவனிடம் நன்றி சொல்ல, என்னவென்று புரியாமல் சத்யா குழம்பி நின்றான். ஏற்கனவே, எப்போதும்

சரியான நேரத்துக்கு அலுவலகம் வந்து விடும் வழக்கமுடையவள், ரொம்ப நேரம் ஆகியும் வராததில் அவன் கவலை கொண்டிருந்தான்.

''என்ன மது? என்ன விஷயம்?'' என்று அவன் விசாரிக்க,

''இன்னைக்குக் காலையில் நான் ஆபீசுக்கு வந்துட்டு இருக்கும்போது, ஒரு விபத்து சார்!'' என்றவளை அவசரமாக இடைமறித்த சத்யா,

''என்ன மது? என்ன ஆச்சு? உனக்கேதும் அடி படலையே?'' என்று பதட்டமாக விசாரித்தபடி, அருகில் வந்தவனது விழிகள் அவளை தலை முதல் பாதம் வரை ஆராய, அவனது பதட்டம் மதுவுக்கு ஆச்சரியத்தை உண்டு செய்தது.

''ஹய்யோ! எனக்கெதுவும் இல்ல சார்'' என்று அவசரமாக பதில் சொன்னவள், ''ஒரு பெண் மேல் ஒரு கார் மோதி விட்டு போய் விட்டது. பின்னாடியே காரில் வந்த ஒருவர் கிட்ட உதவி கேட்டு, அந்தப் பெண்ணை ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போயிட்டு வந்தேன். பழைய மாதிரி இருந்திருந்தால், உதவி செய்ய எண்ணம் இருந்தாலும், காரில் போயிருப்பேனா என்று தெரியலை. ஆனால், இன்னைக்கு நான் ஒருத்தங்களுக்கு உதவி செய்ய முடிந்தது என்றால், அதுக்கு நீங்கதான் காரணம்! அதுக்குத்தான் தேங்க்ஸ் சொன்னேன்!''

முகம் மலர மது சொல்ல, சத்யாவுக்கு சந்தோஷமாக இருந்தது. அன்றிலிருந்து இருவருக்கும் இடையே, ஒரு நல்ல தோழமை உருவானது. வேலை விஷயம் தவிர, சொந்த விருப்பு வெறுப்புகளையும் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தனர்.



சில நேரங்களில், சத்யா வாய் விட்டுச் சிரிக்கும் போது, மதுவின் மனம் தடுமாறுவது உண்டு. அவன் சிரிப்பது நன்றாகத்தான் இருக்கிறது. அதற்காக தான் இப்படி பார்த்துக் கொண்டு நிற்க வேண்டுமா என்ன? என்று தன்னையே அதட்டிக் கொள்வாள்.

அன்றும், அவள் பேச்சு வாக்கில் சொன்ன ஒரு ஜோக்குக்கு, சிரிக்க ஆரம்பித்தவனை நிமிர்ந்து பார்க்கக் கூடாது என்று அறிவுறுத்திக் கொண்டு கையில் இருந்த வேலையில் கவனமாக இருந்தவளை, ''மது இன்னைக்கு நான் சீக்கிரம் கிளம்பணும்... அதற்குள் நான் சொல்கிற வேலையை முடித்துவிட்டு என்கிட்டே காண்பித்து விட்டு, கஸ்டமர் அப்ரூவலுக்கு அனுப்பி விடு!'' என்ற சத்யாவின் வார்த்தைகள் நிமிர்ந்து நோக்க வைத்தன.

தன் கீழே வேலை செய்பவர்களிடம், வேலையைக் கட்டி விட்டுக் கிளம்பி விடும் வழக்கம் இல்லாதவன் என்பதால், அப்படி எங்கே போகிறான் என்ற ஆர்வம் தலை தூக்க, ''ஏதாவது முக்கியமான மீட்டிங்கா, சத்யா?'' என்று மது விசாரித்தாள்.

''ம்ம்... ரொம்ப முக்கியம்தான்!'' என்றவன், என்ன விஷயம் என்பதைச் சொல்லாமல், வேலையைப் பற்றி பேச ஆரம்பிக்க, இடையே பேச விரும்பாமல் அமைதியாக இருந்த மதுவுக்கு அப்படி என்ன முக்கியமான வேலை என்ற கேள்வி குடைந்து கொண்டே இருந்தது.

ஓரக் கண்ணால், மதுவின் முகத்தைக் கவனித்த சத்யாவுக்கு உற்சாகம் குமிழிட்டது!

வேண்டும் என்றே கொஞ்ச நேரம் அவளை அலைக் கழித்தவன், ''நான் எங்கே போறேன்னு தெரிஞ்சிக்கணும்

போல இருக்கா மது?'' என்று வேலையின் நடுவில் திடீர் என்று வினவ, திடுக்கிட்டு நிமிர்ந்த மதுவின் தலை தானாக ஆமோதிப்பாக அசைய, ''அப்படி எல்லாம் எதுவும் இல்லை!'' என்று வாய் மட்டும் தோரணையாக மொழிந்தது.

அவள் தலை அசைவை கவனித்தாலும், அவளது வாய் வார்த்தையை மட்டும் எடுத்துக் கொண்டவன், ''அப்படியா சரி!'' என்று மீண்டும் வேலையைத் தொடர, மதுவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

'சொல்லு என்று நான் கேட்டேனா? சொல்வது போல வந்து விட்டு ஒன்றும் சொல்லாமல் இருக்கிறான் பார்! அழுத்தக்காரன்!'

மனதுக்குள் நன்றாக வைதவளுக்கு, அவன் எங்கே போனால் தனக்கென்ன? ஏன் இப்படி மண்டையை உடைத்துக் கொள்கிறோம் என்று மட்டும் புரியவில்லை!

வேலை முடிந்து, அவன் ஒப்புதல் சொன்னதும், மின்னஞ்சல் அனுப்பி விட்டு வருகிறேன் என்று விட்டு வெளியே செல்ல முயன்றவளை, ''மது... நான் எங்கே போறேன் தெரியுமா?'' என்ற குரல் தடுத்து நிறுத்த, ஆர்வமாக இருந்தாலும், ''சொல்லலாம் என்றால் சொல்லுங்க சார்!'' என்று விட்டேத்தியாக அவள் பதில் கொடுத்த விதத்திலேயே, கடுப்பாக இருக்கிறாள் என்று சத்யாவால் உணர முடிந்தது.

''ரொம்ப நாளா அம்மா என்னைக் கல்யாணம் செஞ்சுக்கச் சொல்லி வற்புறுத்தறாங்க மது! அதான் இன்னைக்கு பெண் பார்க்கப் போறோம்!'' சாதாரணமான குரலில் சொன்னபடி, மதுவையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சத்யாவின் கண்களுக்கு மதுவின்



முகத்தில் ஒரு நொடிக்கும் குறைவாக தோன்றி மறைந்த திடுக்கிடல் தப்பவில்லை.

ஆக, தான் நினைத்தது போல மேடம் மனதிலும் ஏதோ இருக்கத்தான் செய்கிறது!

மனதுக்குள் சிரித்துக் கொண்டவன், அவளையே பார்த்திருக்க, அவன் பெண் பார்க்கப் போனால் தனக்கென்ன வந்தது என்று தலையைக் குலுக்கிக் கொண்ட மது, ''அப்படியா சார்! ஆல் தி பெஸ்ட்!'' சொல்லி விட்டுப் போய்விட, இப்போது சத்யா திகைத்து நின்றான்.

அடிப்பாவி! ஒரே நிமிடத்தில் இப்படி என் ஆசையில் மண் அள்ளிப் போட்டு விட்டுப் போய் விட்டாளே?

ம்ம்ம்... இதுதானே ஆரம்பம்! உடனே அவள் மனம் மாறிவிட வேண்டும் என்று நினைப்பது அதிகப்படி என்று எண்ணியவன், பெண் பார்க்கப் போகிறேன் என்றதும், அவள் முகத்தில் தோன்றிய மாறுதலே, இப்போதைக்கு வெற்றிதான் என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தான்.

அன்று இரவு, ''மகேன்? மேடம் இன்னைக்கு வீட்டில் எப்படி இருந்தாங்க?'' என்று மகேந்திரனிடம் விசாரிக்கவும் தவறவில்லை!

''என்ன சத்யா செஞ்சே? மேடம் இன்னைக்கு வீட்ல யோசிச்சது யோசிச்சபடி, அப்படி ஒரு சைலன்டா இருந்தாங்க? நான் வழக்கம் போல செஞ்ச எந்த வம்படிக்கும் பொங்கி எழவே இல்லை!''

ஆச்சரியமாக மகேந்திரன் சொன்னதும், சத்யாவுக்கு எல்லாம் சரியான பாதையில் போகிறது என்ற நம்பிக்கை தோன்றியது.

''இதுதான் ஆரம்பம் மகேன்! இனிமேல் பாரு!'' என்று சொல்லிவிட்டு, உற்சாகமாக விசில் அடித்தபடி போனை வைத்தான்.

அடுத்த நாள், மது கண்களில் எதிர்பார்ப்புடன் சத்யாவையே பார்த்துக் கொண்டிருக்க, அவளது எதிர் பார்ப்பு புரிந்தும் புரியாதவனாக, சத்யா வேலையைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருந்தான்.

எப்போதும் கலகலத்துக் கொண்டே வேலை பார்க்கும் மதுவும் அமைதியாக இருந்தாள்.

நேற்று பெண் பார்க்கப் போன விஷயம் என்னவாகி இருக்கும்? என்பதிலேயே அவள் மனம் உழன்று கொண்டிருந்தது.

ஏதாவது சொல்லுகிறானா பார்? சத்யாவை மனம் கரித்து கொட்டிக் கொண்டிருக்க, கைகள் தன்னிச்சையாக வேலையைச் செய்து கொண்டிருந்தன.

மாலை அவன் கிளம்பும் வரையிலும், அவன் எதுவும் சொல்லாமல் இருக்க, மதுவுக்கு பொறுமை பறந்தது.

வேலையில் ஒரு கண்ணும், மதுவிடம் ஒரு கண்ணும் வைத்தபடியே இருந்த, சத்யாவுக்கு அவளது அலைப்புறுதல், கோபம் எல்லாம் சந்தோஷத்தை அளித்தன.

இந்த நொடியே, தன் காதலைச் சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வத்துக்கு தற்காலிகத் தடை விதித்தவன், ''மது... நேற்று என்ன ஆச்சு என்று நீ கேட்கவே இல்லையே?'' என்று ஆரம்பித்தான்.

'மகானுபாவா! இப்போதாவது உனக்குச் சொல்லணும் என்று தோன்றியதா?' என்று மனதுக்குள் நொடித்தவள்,



''என்ன விஷயம் சத்யா?'' என்று புரியாத பாவனையில் விளிக்க, சத்யாவுக்கு உள்ளுக்குள் சிரிப்பு பொங்கியது.

'அழுத்தக்காரி! என்னமா நடிக்கிறாள் பார்!' என்று எண்ணியவன், அமைதியாக இருந்து விடலாமா என்று யோசித்துவிட்டு, வேண்டாம் அவளை ரொம்பவும் தவிக்க விடக் கூடாது என்று தீர்மானித்து,

''நேற்று பெண் பார்க்கப் போறேன் என்று சொன்னேனே? அதைப் பற்றித்தான்!'' என்று நிதானமாக விளக்கினான்.

''ஓ! அதுவா? என்ன ஆச்சு? உங்களுக்கு பெண் எதுவும் பிடிச்சிருக்கா?'' இழுத்து வைத்த புன்னகையோடு அவள் கேட்டதும்,

''அதையேன் கேட்கிறே மது? நேற்று அந்த ப்ளான் கேன்சல் ஆகிடுச்சு!'' என்று சொல்லி அவள் மனதைக் குளிர வைத்தான்.

ஏன் என்றே தெரியாமல், மதுவுக்கு சந்தோஷம் பொங்கியது. இதென்ன முட்டாள்தனம் என்று தன்னையே கடிந்து கொண்டவள், ''என்ன ஆச்சு?'' என்று விசாரித்தாள்.

''ச்சே... ஏதோ ஒரு காரணம் பெண் சைடில் இருந்து!''

அவன் அலுப்புடன் சொன்னதில், அவனுக்கு ரொம்ப வேலையாக இருக்கிறதோ என்று எண்ணியவளுக்கு, அவன் மனம் வாடுவதும் வருத்தமாகத்தான் இருந்தது.

''விடுங்க சத்யா! உங்களுக்கு பெண் கிடைக்கிறதுகஷ்டமா என்ன?'' என்றவள், ''ஆனாலும் இந்த பெண் பார்க்கிற ஏற்பாடு எல்லாம் கொஞ்சம் கட்டுப் பெட்டித்தனமா இல்லை?'' என்றாள்.

''பின்னே! என்ன செய்யறது மது? எல்லாரும் காதலிச்சே கல்யாணம் செஞ்சுக்க முடியுமா என்ன?'' என்று முக்கியமான புள்ளியைப் பிடித்தவன், ''அப்படியே காதல் கல்யாணம் செஞ்சுக்கணும் என்றாலும் என்னை யார் காதலிப்பா?'' என்று சோகமாகச் சொல்ல,

''ஏன்? ஏன்? உங்களுக்கு என்ன குறைச்சல்?'' என்று வேகமாக பதில் வந்தது மதுவிடமிருந்து!

ஆச்சரியம் கலந்த சந்தோஷத்துடன், அவன் நோக்கும் போதே, ''யூ ஆர் எ ஜென்டில் மேன், சத்யா! வேலை செய்யறவங்க கிட்ட எம்.டி. என்ற பந்தா இல்லாமல் எவ்வளவு தோழமையா பழகறீங்க... ஆண், பெண் என்ற வித்தியாசம் பார்க்காமல் திறமைக்கு மதிப்புக் கொடுக்கறீங்க... உங்க ட்ரஸ்ட் வழியா படிக்க வசதி இல்லாதவங்களை, அவங்க விருப்பத்துக்கேற்ற படிப்பைப் படிக்க வைக்கறீங்க! இன்னும் உங்களைப் பற்றி சொல்ல எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கு!'' மது அடுக்கிக் கொண்டே போக,

உற்சாகத்தில் பறக்கத் துவங்கி இருந்த மனதைப் பாடுபட்டு கட்டுக்குள் கொண்டு வந்தவன், ''வாவ்! சூப்பர்! எனக்கே நீ சொல்லித்தான் என்கிட்டே இவ்வளவு நல்ல விஷயங்கள் இருக்கிறது தெரியுது, மது!'' என்று ஆச்சரியப்பட்டான்.

''எல்லாம் சொன்ன நீ, என் தோற்றத்தைப் பற்றி மட்டும் எதுவும் சொல்லவே இல்லையே மது? சொல்லிக்கிற மாதிரி எதுவும் இல்லையா?'' போலி சோகத்துடன் வினவினான்.

''தோற்றத்தில் என்ன இருக்கு! நம்ம நடவடிக்கைகள்தானே நம்மை அழகா காட்டும்!'' என்றவளிடம்,



''சுத்தி வளைச்சு நான் பார்க்க சுமாராதான் இருக்கேன் என்று சொல்றே?'' மீண்டும் சத்யா கொக்கி போட, மதுவின் கண்கள் அவளையும் அறியாமல், அவனை வருடத் துவங்கின.

இவனுக்கென்ன? ஹீரோ மாதிரித்தான் இருக்கிறான்! என்று எண்ணியவள், அவனது கண்களை நேருக்கு நேர் சந்தித்த கணம், தன் மனம் தடுமாறுவதை உணர்ந்த வளாக தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''என்ன மது? இவ்வளவு நேரம் ஸ்கேன் செஞ்ச பிறகும், சொல்லிக்கிற மாதிரி எதுவும் இல்லையா?''

குறும்புடன் வந்த கேள்வியில், மெல்லத் தலையை நிமிர்த்தியவளுக்கு ஏனென்று தெரியாமல் நெஞ்சம் படபடத்தது.

அவன் சுவாரசியமாக தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தவள், மெல்ல தன் மனதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, அவளது இயல்பான குறும்பு தலை தூக்கியது.

''எல்லா விஷயமும் ஒருத்தருக்கு பெர்ஃபெக்டா இருக்க முடியுமா?'' கேலியாகச் சொன்னவளிடம்,

''சும்மாவாவது நீங்க அழகுதான் என்று சொல்வே என்று நினைத்தேன்! பரவாயில்லை! உன் நேர்மை எனக்குப் பிடிச்சிருக்கு!'' என்று புன்னகைத்தவன்.

''சரி அதை விடு... ஒரு பொண்ணு என்னை விரும்பற அளவுக்கு எனக்கு தகுதி இருக்கா இல்லையா? அதில உன் முடிவு என்ன என்று சொல்லு!'' என்று கேட்டு விட்டு ஆர்வமாக அவள் முகம் நோக்க,

''ஒரு பெண் தான் விரும்பறவன் கிட்ட என்ன என்ன குணங்கள் இருக்கணும் என்று நினைக்கிறாளோ அது

எல்லாம் உங்ககிட்ட கண்டிப்பா இருக்கு என்பதுதான் என்னோட முடிவு! விருப்பங்கள் மாறுபடலாம்! ஆனால், அதையும் தாண்டி யாரும் உங்களை மறுக்கக் காரணம் இல்லை என்பதுதான் என்னோட கருத்து!''

அவளது வார்த்தைகளும், அதில் இருந்த உறுதியும், மழைச்சாரலாய் மனதை நனைக்க, அவள் அருகில் வந்து நெருங்கி நின்றவன், ''அப்போ இவ்வளவு நாள் என் னோட பழகியும், உனக்கேன் என் மேல், ஏன் அந்த விருப்பம் வரலை மது?'' என்று ஆழ்ந்த குரலில் வினவ, மதுமிதா அதிர்ந்து போய் நின்றாள்.

மலங்க மலங்க விழித்தபடி அவள் நின்ற தோற்றம் மனதை இளக்க, ''ஜஸ்ட் எ ஜோக்! ஃபர்கெட் இட்!'' என்று மென்மையான குரலில் உரைத்தவன், கதவைத் திறந்து கொண்டு வெளியேறிய பிறகும், மது தன் னிலைக்குத் திரும்பவில்லை.

தன் கைப்பேசி அழைக்கும் ஒலி கேட்டு, தன்னி லைக்குத் திரும்பியவள், எடுத்துப் பேசி விட்டு, இயந்திர கதியில் வீட்டுக்கு வந்து, அமைதியாக சாப்பிட்டு விட்டு தன் அறைக்கு வந்த பிறகு, அன்றைய நிகழ்வைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்.

யோசனையை விட கேள்விகள்தான் மனதை நிறைத்தன.

இன்று சத்யாவிடம் பேசிய மாதிரி, தன்னால் வேறொரு ஆணிடம் பேசி இருக்க முடியுமா? என்ற முதல் கேள்விக்கு, இல்லை என்று உறுதியான பதில் வந்தது.

அவனிடம் இந்த அளவு பேசத் தூண்டியது எது என்ற கேள்விக்கு சரியான விடை கிடைக்கவில்லை



என்றாலும், தன் மனதளவில் ஏற்பட்டிருக்கும் மாற் றத்தை அவளால் மறுக்க இயலவில்லை!

கல்யாணமே வேண்டாம் என்று அன்னையிடம் சில சமயம் சொல்லி வந்திருந்தாலும், அன்னை தன்னை அப்படி விட்டு விட மாட்டார்கள் என்பது அவள் அறிந் ததே. ஆனால்... தன் திருமண விஷயத்தில், அன்னை யின் முடிவுதான் தன் முடிவு என்று உறுதியாக இருந்த வளின் மனதில், சத்யாவால் சலனம் ஏற்பட்டிருப்பது உண்மைதான்.

சலனம் மட்டும்தானா? என்று மனசாட்சி கேள்வி எழுப்ப, பதிலும் உடனே கிடைக்கத்தான் செய்தது. மேலே யோசிக்கத் தோன்றாமல், கண்களில் நீர் சுரந்தது.

காதல் என்றாலே முகத்தைச் சுழித்த தனக்கு, சத்ய நந்தன் மேல் காதல் வந்து விட்டதை எண்ணி அவளால் சந்தோஷப் பட முடியவில்லை!

சத்யநந்தனும் தன்னை விரும்புகிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

'என்னை ஏன் நீ விரும்பவில்லை?' என்று ஒரு பெண்ணிடம் விளையாட்டாய் கேட்கும் குணம் கொண்டவன் இல்லை அவன்!

அதைத் தன்னிடம் அவன் கேட்டதே, அவனுடைய மனநிலையை எடுத்துக் காட்ட, அவளது கலக்கம் அதிகரித்தது.

அன்னைக்கு விருப்பம் இல்லாத ஒன்றைச் செய்ய மனத்தால் கூட நினைத்திராத மதுவுக்கு, இந்தக் காதல் ஏன் வந்து தொலைத்தது என்று அவள் மேலேயே கோபம் வந்தது.

சரி! வந்தது வந்து விட்டது! அதை வெளிப்படுத்தாமலே விட்டு விடுவதுதான் நல்லது என்று முடிவெடுத்தாள்.

எடுத்த அந்த முடிவும் நிம்மதியைத் தராமல் வேதனையையே தர, மனம் தாங்காமல் இரவு முழுதும் அழுது தீர்த்தாள் அவள்!

* * *

எப்போதும், மகேந்திரனை அழைத்து, மதுவைப் பற்றி விசாரிக்கும் சத்யாவுக்கு அன்று ஏனோ அவ்வாறு செய்யத் தோன்றவில்லை. மது தன்னை விரும்பத் துவங்கி விட்டாள் என்று அவன் உள்ளுணர்வுக்குத் தெளிவாகப் புரிந்தது.

தன் காதலைச் சொல்லும் நேரம், அவள் மறுப்பாக எதுவும் சொல்லி விடக் கூடாது என்று எண்ணியே இத்தனை நாள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தவனுக்கு, இப்போது மது அவனது காதலை ஏற்றுக் கொள்வாள் என்ற நம்பிக்கை பிறந்திருந்தது.

ஆனால், அடுத்த நாள் அந்த நம்பிக்கையை குலைக்கும் வண்ணம் எல்லாம் நடந்தன.

முதலில் மகேந்திரனிடம் இருந்து அழைப்பு வந்தது.

''சத்யா என்ன ஆச்சு? மது, நேற்றில் இருந்தே சரியே இல்லை! காலையில் பார்த்தால், நைட் முழுக்க அழுத மாதிரி முகம் எல்லாம் வீங்கி இருக்கு! கேட்டால், எதுவும் சொல்ல மாட்டேங்கிறாள். அத்தை வேற கவலையா இருக்காங்க!''

கவலை நிறைந்த குரலில் மகேந்திரன் சொன்னதும், சத்யாவின் முகம் சுருங்கியது.



''என்னவாகிற்று? எல்லாம் நல்லபடியா போய்க் கொண்டிருக்கிறது என்று சந்தோஷமாக இருக்கும் வேளையில் இது என்ன? என்று குழம்பியவன், ''கவலைப் படாதே மகேன்! நான் பார்த்துக்கிறேன்!'' என்று ஆறுதல் சொல்லி போனை அணைத்தான்.

இரவு முழுவதும் அழுது வீங்கி இருந்த முகத்தை, ஒப்பனைகளால் சரி செய்தபடி மது வேலைக்கு வந்த போது சத்யாவுக்கு வேதனையாக இருந்தது.

தலை குனிந்தபடி வேலை விஷயம் மட்டும் பேசிக் கொண்டு இருந்தவளை, அவனும் தொந்தரவு செய்ய வில்லை!

ஆனால், என்ன நடந்திருக்கும்? என்று அடுத்த இரண்டு நாட்களும் இடைவிடாத யோசனையில் இருந்தவனுக்கு, விஷயம் விளங்கியது.

மது என்னை விரும்புகிறாள்! தன் அன்னைக்குப் பிடிக்காத எதையும் செய்யாதவள் என்பதால், அதை வெளிப்படுத்தத் தயங்கிக் கொண்டு தனக்குள்ளேயே மறுகுகிறாள் என்று முடிவெடுத்தவன், அவளிடம் பேச எண்ணி அவள் வேலை செய்து கொண்டிருந்த அவளது அறைக்கு வர, அவன் வந்ததைக் கூட உணராமல், மேஜையில் இருந்த பேப்பரில், சத்யாவின் முகத்தை வரைந்து வைத்துவிட்டு, அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள், அவள்.

தான் நினைத்தது சரிதான் என்பது உறுதியாகி விட சற்றும் போடாமல் தன் அறைக்குத் திரும்பி வந்தவன், மிட்டு! நீ என்னை விரும்பாமல் இருந்திருந்தால் உன்னை வற்புறுத்தாமல் இருந்திருப்பேன்! ஆனால், இப்போது நீ என்னை விரும்ப ஆரம்பித்து விட்டாய்

என்று தெரிந்ததோ, இனிமேல் உன்னை விட மாட்டேன்!' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அவள் வாயில் இருந்து அவளது விருப்பத்தை வெளிக் கொணர வேண்டும் என்று முடிவெடுத்தவன், என்ன செய்வதென்று யோசிக்க ஆரம்பித்தான்.

* * *

'ஒரு பெண் விரும்பும் அளவுக்கு என்னிடம் எல்லாத் தகுதிகளும் இருக்கு என்று சொல்லும் நீ, ஏன் என்னை விரும்பவில்லை?' என்ற மில்லியன் டாலர் கேள்வியைக் கேட்ட நாளைக்குப் பிறகு, அதைப் பற்றிய எண்ணமே இல்லாமல், சத்யா தன்னுடன் பழகுவதை எண்ணி மதுவுக்கு நிம்மதியாக இருந்தது.

ஆனாலும், மனதின் ஒரு ஓரத்தில், அவனுக்குத் தன் மேல் நேசம் என்று தான் நினைத்தது உண்மை இல்லையோ என்பது வலியை உண்டு செய்தது.

அவன் விரும்பினால் மட்டும், நீ அதை ஏற்றுக் கொள்ளப் போகிறாயா என்ன? என்று மனசாட்சி கேள்வி கேட்டது.

அவன் அவளது காதலைத் தன்னிடம் வெளிப் படுத்தினால், அதைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாத போது, எதற்கு இந்த வீண் சிந்தனை என்று மனதை அடக்கிக் கொண்டு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முயன்றாள்.

முயன்றாளே தவிர, அதில் முழு வெற்றி கிடைக்க வில்லை என்பதுதான் உண்மை!

ஒவ்வொரு முறை அவனைப் பார்க்கும்போதும், இவனைத் தவற விடப் போகிறேன் என்ற நினைப்பே அவளைக் கொன்று தின்றது.



அன்னையின் பயத்துக்குக் காரணம் என்ன? தவறான ஆளைத் தேர்ந்தெடுத்து, வாழ்வை வீணாக்கி விடக் கூடாது என்பதுதானே? சத்யாவைப் பற்றித் தெரிந்து கொண்டால், தன் சந்தோஷத்தைப் பெரிதாக நினைக் கும் அன்னை ஒத்துக் கொள்ள மாட்டார்களா என்ன? என்று காதல் கொண்ட மனம் எண்ணும்போதே,

தன்னையும் மகேந்திரனையும் மட்டுமே வாழ்வின் ஆதாரமாகக் கொண்டு இயங்கும் அன்னையின் மனதை, நோகடிக்க போகிறாயா என்று அறிவு கேள்வி கேட்டது.

காதல் கொண்ட அவளது மனம், ஆசைக்கும் அறிவுக்கும் இடையே பெண்டுலமாக ஊசலாட, அவள் மனதளவில் களைத்துப் போனாள்.

அன்று மாலை, வேலை முடிந்து வீட்டுக்குச் சென்றவள், ஹாலில் யாருடனோ ஜானகி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதும், யாரோ தெரிந்தவர் வந்திருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டே உள்ளே நுழைய, அடுத்து காதில் விழுந்த கேள்வியில், உள்ளே செல்லாமல் தயங்கி நின்றாள்.

"ஜானகி அக்கா... மதுவுக்கு எப்போ கல்யாணத் துக்குப் பார்க்கப் போறீங்க?"

"இப்போதான் வேலையில் சேர்ந்திருக்கா... ஒரு பெண்ணுக்கு தன் காலில் நிற்கிறது எவ்வளவு முக்கியம் என்று அனுபவத்தில் உணர்ந்தவள் நான்... அதனால்... இன்னும் ஒண்ணு ரெண்டு வருஷம் கழிச்சுப் பார்க்க லாம் என்று நினைக்கிறேன்!"

"நீங்க சொல்றது சரிதான்! ஆனா... இப்போதான் படிக்கும்போதே பசங்க காதல் என்று வந்து நிற் கிறாங்களே! அதுக்குப் பயந்தே சீக்கிரம் பார்க்க வேண்டி இருக்கு!" என்று வந்த பெண்மணி அலுத்துக் கொள்ள,

''எங்க பசங்க அப்படி எல்லாம் இருக்க மாட்டாங்க! எனக்கு அவங்க மேல் நம்பிக்கை இருக்கு!''

உறுதியாக வந்த ஜான்கியின் வார்த்தைகளில் மதுமிதா உறைந்து நின்றாள்.

பேசாமல், தன் விருப்பத்தை சத்யாவிடம் சொல்லி விட்டால் என்ன? என்று இரண்டு மூன்று நாட்களாக, லேசாகத் தோன்ற துவங்கி இருந்த எண்ணம், அன்னை யின் வார்த்தைகளில் வந்த இடம் தெரியாமல் மனதின் மூலையில் ஓடிச் சென்று ஒளிந்தது.

இல்லை! அன்னைக்கு மன வருத்தம் தரும் எதையும் செய்யவே கூடாது! என்று தனக்குத் தானே அறி வுறுத்திக் கொண்டவள், முதலில் வேறு வேலை தேட வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

வேலையை விட்டுச் சென்று விட்டால், சத்யாவைப் பார்க்கும் பாக்கியம் கூடத் தனக்குக் கிடைக்காது என்ற எண்ணமே மனதைப் பிசைந்தது.

இங்கேயே இருந்தால், என்றாவது ஒரு நாள், தன் மனதில் இருப்பது தன்னை அறியாமலே வெளியே வந்து விடக் கூடிய அபாயம் இருப்பதை உணர்ந்து, தன் தவிப்பை அடக்கிக் கொள்ள அவள் போராடிக் கொண் டிருந்த வேளையில், அவளது தவிப்பை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக ஒன்று நடந்தது.



# 10

தன் காதலை உணர்ந்த மது அதை வெளிப்படுத்தவும் முடியாமல்



மறைக்கவும் முடியாமல், தன் உணர்வுகளோடு போராடிக் கொண்டிருக்க, அன்று அவளது விருப்பத்தை வெளிக் கொணர ஒரு வழி கண்டு பிடித்த சந்தோஷத்தோடு அலுவலகம் வந்தான் சத்யா.

அவளை இன்டர்காமில் அழைத்தவன், ''மது! ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு! இன்னும் அரை மணி நேரத்தில் கான்பரன்ஸ் ரூம் வா!'' என்று கட்டளை யிட்டவன். அரை மணி நேரம் கழித்து, ஒரு கவரை எடுத்துக் கொண்டு கான்பரன்ஸ் அறைக்குச் சென் றாள்.

எப்போதும் இது போல கூட்டங்கள் நடப்பது வழமை என்பதால், அவளும் அவன் சொன்ன நேரத்துக்கு வந்து விட்டு, வேறு யாரும் இல்லாமல் போகவே, அவனுடன் தனித்திருக்கப் பயந்து, ''மற்றவங்களை கூட்டிட்டு வரேன்!'' என்று வெளியே போக எத்தனிக்க,

''நம்ம ரெண்டு பேருக்கு மட்டும் தான் மீட்டிங் மது, கதவை சாத்தி விட்டு வா!'' என்று சத்யா அவளை அழைக்க, தயக்கத்துடன் உள்ளே நுழைந்தவளை அமரச் சொன்னவன்,

''எனக்கு ஒரு விஷயத்தில் ரொம்பக் குழப்பமா இருக்கு மது— அதில் உன்னோட ஹெல்ப் தேவை... அதான் கூப்பிட்டேன்!'' என்றான்.

''சொல்லுங்க!'' சுருக்கமாக சொல்லிவிட்டு, அவனை நிமிர்ந்து பார்க்கும் சக்தி இல்லாமல், அவள் அவளது கை விரல்களை ஆராய ஆரம்பித்ததும், புன்னகையுடன் ஒரு கவரை அவள் முன் வைத்தவன்,

''இதில் நாலு பொண்ணுங்க போட்டோ இருக்கு!'' என்றான்.

விளம்பரத்துக்கென மாடல்கள் போட்டோ வரும் போது, தேர்ந்தெடுக்க மதுவும் உதவுவது வழக்கம்தான்!

இப்போதும் அதேதான் போல் என்றெண்ணிக் கொண்டு கவரை எடுத்தவள் கரம், அடுத்து அவன் சொன்ன வார்த்தைகளில் அப்படியே தூக்கிய நிலையில் நின்றது.

''அம்மா எனக்காக கல்யாணத்துக்கு பார்த்திருக்கும் பெண்கள் போட்டோ இது! நிறைய வந்ததில், எங்க எல்லாருக்குமா பிடிச்ச நாலு போட்டோவை செலக்ட் செஞ்சிருக்கோம்! எல்லாரையும் போய் பார்ப்பதை விட ஒரே ஒரு பெண்ணை செலக்ட் செஞ்சு அவளையே போய் பார்த்து முடிவு செஞ்சிடலாம் என்று நான் நினைக் கிறேன்! அதான் உன்கிட்ட ஆலோசனை கேட்கலாம் என்று நினைத்தேன்!''

தனது திருமணத்துக்கு நான்கு பெண்களில் ஒருத் தியைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி, பிசிர் இல்லாத குரலில் சத்யா சொல்லிக் கொண்டே போக, மதுவின் மனம் உலைக் கலனாக கொதித்தது.

'ராஸ்கல்! என்கிட்டேயே வந்து உன் கல்யாணத்துக்கு பொண்ணு செலக்ட் செய்யச் சொல்றீயா? உன்னை என்ன செய்தால் தகும்!' மனதுக்குள் வெடித்தவள், நிமிர்ந்து அவனைப் பார்த்த பார்வையில், சத்யாவுக்கே அச்சமாக இருந்தது.

''ஏன்... நல்லா இருந்தால் நாலு பேரையுமே கல்யாணம் செஞ்சுக்க வேண்டியதுதானே?''

ஆத்திரத்துடன் அவள் வார்த்தைகளை உமிழ, அவளது பார்வைக்கான அர்த்தம் முழுதாக விளங்கி, சத்யனின் மனம் கும்மாளமிட்டது.



''ப்ச்... அதெல்லாம் சட்டப்படி குற்றம் மது!'' அப்பாவியான குரலில் சொன்னவனை, மீண்டும் தன் பார்வையால் எரித்தவள், ''ஓ! சட்டம் அனுமதிச்சா சார் அதையும் செய்வீங்க போலிருக்கு!'' என்று எகத்தாள மாகச் சொன்னாள்.

''ப்ளீஸ் மது... உன் செலக்ஷன் நல்லா இருக்கும் என்றுதானே கேட்கிறேன்! பிகு செஞ்சுக்காமல் சொல்லு!'' என்று அவள் கீழே மேஜை மேல் தூக்கி எறிந்திருந்த கவரை எடுத்து, மீண்டும் அவள் கையில் திணித்தான்.

அதுவரை, தன் காதலை தன் மனதுக்குள் பொத்தி வைத்திருந்த மதுவுக்கு, சத்யா கல்யாணத்துக்கு வேறு பெண் பார்க்கிறான் என்றதும், எங்கிருந்துதான் அவ்வ ளவு ஆத்திரம் வந்ததோ?

''என்டா... கல்யாணத்துக்கு பொண்ணு செலக்ட் செய்யச் சொல்லி என்கிட்டே சொல்லுவியா? உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்?'' என்று கேட்டுக் கொண்டே, ''பொண்ணா பார்க்கிற பொண்ணு... கண்ணை நோண்டிடுவேன்!'' என்று அதீத எரிச்சலுடன் மொழிந் தவள், கவர் உள்ளே இருந்த போட்டோவை எடுத்துக் கிழிக்க முயல,

''நோ... மது... நோ... அப்படிச் செய்யாதே!'' என்று கெஞ்சிக் கொண்டே, சத்யா அவளது கையைப் பற்றி தடுக்க, மதுவின் பார்வை தன் கையில் இருந்த புகைப்படத்தில் நிலை குத்தி நின்றது. அந்தப் புகைப் படத்தில் புன்னகையுடன் இருந்தது அவளே அல்லவா?

அவசரமாக அவனிடம் இருந்து கையை விடுவித்துக் கொண்டு, உள்ளே இருந்த மீதி புகைப்படங்களை

எடுத்துப் பார்த்தவள், கண்களில் நீர் பொங்க, அவனை நிமிர்ந்து நோக்க, அவனோ குறும்புடன் சிரித்துக் கொண்டிருந்தான்.

''யூ.. சீட்! லையர்! என்னை இவ்வளவு நேரம் தவிக்க விட்டுட்டு சிரிக்கிறாயா? உன்னை என்ன செய்யறேன் பார்!'' என்று பாய்ந்து வந்து அவனது சட்டையை பிடித்தவள், சரமாரியாக அவனது மார்பிலும், தோளிலும் அடிக்க ஆரம்பித்தாள்.

முதலில் அவளது அடிகளை ரசிக்க ஆரம்பித்தவன், அவள் இப்போதைக்கு நிறுத்தப் போவதில்லை என்று உணர்ந்து அவளது கைகளை அழுந்தப் பற்றி, தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

கொஞ்ச நேரம் அவனிடம் இருந்து விடுபட போராடியவள், பின்பு, அவன் மார்பிலேயே, முகத்தைப் புதைத்து அழ ஆரம்பித்தாள.

''ஹே! பட்டு! என்னடா? இப்போ எதுக்கு அழுகை?''

''ப்ளீஸ் அழாதே!''

''அழாதேடா! என் செல்லம் இல்லை? ப்ளீஸ்!''

விதம் விதமாக சத்யா கெஞ்சி, கொஞ்சியும் அவளது அழுகை நிற்கவில்லை என்றதும், ''சாரிடா! வெரி சாரி! ரொம்ப ஹர்ட் செஞ்சிட்டேனா?'' வருத்தம் நிறைந்த குரலில், அவன் வினவியதும், மெல்ல அழுகை குறைந்து அவனை நிமிர்ந்து நோக்கியவள்,

''ஒரு நிமிஷம் உயிரே போயிடுச்சு! ஏன்டா அப்படி செஞ்சே?'' என்று மீண்டும் அடிக்க ஆரம்பிக்க,

''நோ வயலன்ஸ்!'' என்று அவளது கையைப் பற்றி தன் கைகளுக்குள் அடக்கிக் கொண்டவன்,



''பின்னே! உன்னை லவ் பண்ண வைக்கவே எனக்கு மூச்சு வாங்கிடுச்சு! அப்பறம் லவ் வந்த பின்னாடியும் மேடம் அதை சொல்றதுக்கு கூட தயங்கிட்டு இருந்தீங்க! நானும் என்னதான் செய்யறது? அதான்.. இந்த அதிர்ச்சி வைத்தியம்!'' என்றவனை விழி விரித்துப் பார்த்தவள்,

''நானும் உங்களை விரும்பறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் ஆச்சரியத்துடன்!

''யூனை தன் கண்ணை மூடிட்டு, உலகம் இருண்டு போயிடுச்சுன்னு நினைக்குமாம்! அது மாதிரி இருக்கு நீ சொல்றது!'' என்று சிரித்தவன், அவள் முறைக்க ஆரம்பிக்கவும்,

''சரி! சரி! விடு! நீ என்கிட்டே இருக்கிற நல்ல விஷயங்களை லிஸ்ட் செய்யும்போதே எனக்கு தெரிஞ்சிடுச்சு! அப்புறம் மேடம், உன்னோட கேபினில் உட்கார்ந்து அய்யாவோட முகத்தை வரைந்து வைத்து சைட் அடிக்கும்போது ஹண்ட்ரட் பெர்சன்ட் கன்ஃபர்ம் ஆகிடுச்சு!'' என்று வெற்றிப் புன்னகை பூத்தான்.

''அச்சோ... நீங்க அப்போ வந்தீங்களா? எனக்குத் தெரியவே தெரியாதா?''

கூச்சத்துடன் அவள் வினவ, ''அதான் சொன்னேனே... யூனை கண்ணை மூடிட்டு இருந்ததைப் பற்றி!'' கேலியாகச் சொன்னவன்,

''அதென்ன நானும் உங்களை விரும்பறேன் என்று சொன்னே? நான் உன்னை விரும்பறது உனக்கு எப்படி தெரியும்?''

அவள் எப்போது அதைக் கண்டுபிடித்தாள் என்று தெரிந்து கொள்ளும் ஆவலோடு, சத்யா வினவ,

''ஆமாம்... நீங்க என்னைப் பார்க்கிற பார்வையிலேயே தெரியாதாக்கும்!'' என்றவளிடம்,

''ஆஹா... பார்வையைப் பார்த்து கண்டு பிடிக்கிற ஆளைப் பாருடா... பார்வையை வைத்துக் கண்டு பிடித்திருந்தால், முதல் நாள் ஆபீசில் நான் உன்னைப் பார்த்த பார்வையிலேயே கண்டு பிடிச்சிருப்பாயே!'' கேலியாக சொல்லிவிட்டு,

''எனிவேஸ்... என்னோட நீண்ட நாள் காத்திருப்புக்கு இன்னைக்குதான் பலன் கிடைச்சிருக்கு! தேங்க்ஸ் எ லாட் பட்டு!'' என்று ஆத்மார்த்தமாக உரைத்தான்.

''முதல் நாளேவா? அதென்ன நீண்ட நாளா? அப்ப டின்னா?''

ஆச்சரியத்துடன் கேள்விகளை அடுக்கியவளிடம், அவன் முதலில் இருந்தே நடந்ததை எல்லாம் பகர, கேட்டுக் கொண்டிருந்த மதுவின் உள்ளம் நெகிழ்ந்தது.

தன் காதலை வெளிப்படுத்தத் தயங்கி இருந்த காரணங்கள் எல்லாம் அந்த கணத்தில் மறந்து போக, மெல்ல அவள் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். அவள் தலையில் கன்னம் பதித்து சத்யாவும் கண்களை மூடிக் கொண்டு, அந்த நேரத்து இனிமையை அனுபவித்தான்.

கொஞ்ச நேரம் கழித்து தலையை நிமிர்த்தியவள், ''இந்த போட்டோஸ் எல்லாம் எப்படி கிடைச்சுது?'' என,

சத்யா, தன் கைப்பேசியை அவளிடம் கொடுத்தான்.

ஆச்சரியத்துடன் அவன் கைப்பேசியில் இருந்த தன் புகைப்படங்களைப் பார்த்தவள், ''திருடா... எனக்கே



தெரியாமல் இதெல்லாம் எப்போ எடுத்தீங்க?'' என்று அவன் முதுகில் செல்லமாக ஒரு அடி வைத்தாள். சந்தோஷத்துடன் அதை வாங்கிக் கொண்டவன், ''பட்டு.. ஐ அம் சோ ஹேப்பி!'' என்றான்.

''எனக்கும்தான்!'' என்றவளுக்கு, அன்னையின் நினைவில் கண்கள் கலங்கின.

''அம்மா... அம்மாவுக்கு இதெல்லாம் பிடிக்காது!'' கம்மிய குரலில் மது மொழிய,

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்!'' ஆறுதலாக அவன் சொன்னதும், ''ப்ச்... அம்மாவுக்கு பிடிக்காததை செய்கிறாயே என்று மகேந்திரன் கிட்ட கோபம் காட்டி னேன்... கடைசியில் நானே அதை செய்யறேன்!'' என்றவள் கண்களில் குற்ற உணர்வு தெரிய,

''பட்டு! நாம் ஒண்ணும் தப்பு செய்யலைடா! அதனால் இப்படி கில்டியா ஃபீல் செய்யறதை முதலில் விடு! நான் வேணா முறைப்படி பொண்ணு பார்க்கிற மாதிரியே வந்து உன்னை கல்யாணம் செஞ்சுக்கறேன்! அத்தைக்கு நம்ம காதல் விஷயம் தெரியாமலே பார்த்துக்கலாம்! சரியா?''

''இருந்தாலும்...''என்று இழுத்தவளிடம், ''வேண் டாம் பட்டு! இப்போ நான் ரொம்ப சந்தோஷமா இரு கேன்! எதையாவது சொல்லி என் மூடை கெடுக்காதே.. ப்ளீஸ்!'' என்றவன்,

''உனக்கும் சந்தோஷம் தானே?'' என்று வினவ ''ம்...'' என்று அவள் புன்னகைத்தாள்.

''இதுதான் அழகா இருக்கு! நீ இப்படியே இரு இன்னும் ஒரு மாசம்... நம்ம யூ.எஸ். ஆபீஸ் செ

ஆனவுடன், அம்மா அப்பாவை கூப்பிட்டு வந்து உங்க வீட்டில் பேசறேன்!'' என்றான்.

சந்தோஷத்துடன் தலையாட்டியவள், ''அம்மாவுக்கு உங்களைப் பிடிக்கும்தானே?'' என்று அச்சத்துடன் வினவ,

''ஹே...என்னை நல்லவன் வல்லவன் என்று லிஸ்ட் போட்டு சொன்னவள், பேசற பேச்சா இது?'' என்று செல்லமாக அதட்டியவன், ''கவலைப்படாதே! எனக்கு நல்ல சர்டிபிகேட் கொடுக்க நிறைய நல்லவங்க இருக்காங்க!'' என்றான்.

''அடேங்கப்பா... அப்படி யாரு அத்தனை நல்லவங்க?'' கேலியாக கேட்டவளிடம்,

''முதல் நல்லவர்... மிஸ்டர். மகேந்திரன்!'' கண் சிமிட்டியபடி சத்யா சொன்னதும்,

''மகேனா? அவனுக்கு எப்படி நம்ம விஷயம் தெரியும்? ஓ! அவனும் கூட்டு களவாணியா? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லலையே... இருக்கட்டும்... அவனை கவனிச்சிக்கிறேன்!'' என்று கறுவியவளிடம்,

''விடு பட்டு! அவன் நமக்கு நல்லதுதான் செஞ்சிருக்கான்!'' என்றான்.

''உங்க வீட்டில்...'' என்று மது தயக்கத்துடன் நிறுத்த,

''ஹே! எங்க வீட்டில் உனக்கு ஒரு பெரிய விசிறி இருக்காள்... அவளே எல்லாம் பார்த்துப்பா...'' என்று விட்டு சத்யா புன்னகைத்தான்.

மது குழப்பத்துடன் அவனை நோக்க, ''என் தங்கையோடு உன் கல்லூரி விழாவுக்கு வந்தேன் என்று சொன்னேனே, அந்த தங்கை உன்னோட ஜூனியர் நித்யாதான்!'' என்றான்.



''ஹே... நித்யாவா?'' என்று முகம் மலர்ந்தவளிடம், ''ம்ம்ம்...அவளேதான்! உண்மையில் அவளுக்குத் தான் நான் நன்றி சொல்லணும்! அவளால்தானே என் தேவதையைப் பார்க்க முடிஞ்சது!'' என்று ரசனையுடன் சொன்னவனின் பார்வையில் சிவந்தவள்,

''யூ.எஸ் ஆபீஸ் வேலைக்காக இனிமேல் அடிக்கடி அங்கே போக வேண்டி இருக்கும் இல்லை?'' இப்போதே பிரிவை நினைத்து கவலை கொண்டு, வினவினாள்.

''இல்லைடா... லீகல் பார்மாலிட்டீஸ் செய்ய வேண்டி இருக்கும்போது போனால் போதும்.. இன்னும் ஒரு மாசத்துக்குள்ள போக வேண்டி இருக்கும்! அது கூட ரெண்டு ஒரு பத்து நாளைக்குத்தான்!'' என்று,

தன் மனம் கவர்ந்தவளைத் தேற்றி, ''வந்த உடனே கல்யாண வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்! இனிமேல் ரொம்ப நாள் தாங்காது!'' கிறக்கத்துடன் சொன்னவனின் கரம் மனதுக்கு இனியவளை அணைக்க முயல, லாவகமாக அவனிடம் இருந்து விலகியவள், ''இது ஆபீஸ்! நினைவு இருக்கட்டும்!'' என்று மிரட்டினாள்.

''போடா! இவ்வளவு நேரம் என்னை அடி அடின்னு அடிச்ச போதெல்லாம் மேடம்க்கு இது ஆபீஸ் என்று நினைவு வரலை! இப்போ என்னமா மிரட்டறாங்க!''

கேலியாக சொன்னவன், ''ஓடு! இதுக்கு மேல் இங்கே நின்னால், அதுக்கப்புறம் நடக்கிறதுக்கு நான் பொறுப்பில்லை!'' என்று சொன்னதும், முகம் சிவக்க அங்கிருந்து ஓடினாள் அவள்.

★★★

சத்யா மூலம் விஷயம் அறிந்த மகேந்திரன், மது வந்தவுடன் அவளை நன்றாக கேலி செய்ய வேண்டும் எனக் காத்திருக்க, அவனைத் தேடி வந்த மது, ''சாரி மகேன்!'' என்றதும், ஒன்றும் புரியாமல் குழம்பினான்.

''நீ நந்தினியை விரும்பறேன்னு சொன்னதும், அம்மாவுக்கு விருப்பம் இல்லாத விஷயம் என்று தெரிந்தும் காதலிக்கிறேன்னு உன் மேல் கோபப் பட்டேன்... இப்போ எனக்கே அந்த நிலை வரும்போது தான் உன்னோட உணர்வுகள் எனக்குப் புரியுது!''

''மது.. என்னை எப்படி எல்லாம் சொன்னே... இப்போ நீயே மாட்டினாயான்னு உன்னை என்னவெல்லாம் கிண்டல் செய்யணும் என்று நினைச்சிட்டு இருந்தேன்... இப்படி சப்புன்னு முடிச்சிட்டாயே!'' என்று அங்காலய்த்த மகேந்திரன்.

''விடு மது! நமக்குள்ள எதுக்கு சாரி எல்லாம்! ஐ அம் சோ ஹோப்பி ஃபார் யூ! சத்யா ஒரு ஜென்டில்மேன்! உனக்கு ஏற்ற ஆளும் கூட! கங்கிராட்ஸ்!'' என்று வாழ்த்தினான்.

''நந்தினியைப் பார்க்க வா என்று நீ எத்தனை முறை கூப்பிட்டுட்டு இருக்கே... நான்தான் தட்டி கழிச்சிட்டே இருக்கேன்! நாளைக்கு பார்க்க வரவா?''

ஆவலுடன் கேட்டவளிடம், ''ஷ்யூர் மது! பட், அவள் கிட்ட என்னைப் பற்றி ஏதாவது வத்தி வைக்காமல் இருந்தால் சரி'' என்று எப்போதும் போல அவளை வம்பிழுக்க,

''ஹ... பின்னே எதுக்கு பார்க்க வரேன்னு நினைச் சிட்டு இருக்கே? அதானே என்னோட முதல் வேலையே!''



என்று மதுவும் பதிலுக்கு கொடுக்க, இருவரும் இணைந்து சிரித்தனர்.

அடுத்த நாள், ஒரு உணவகத்தில் நந்தினியைச் சந்திப்பது என்று முடிவெடுத்தனர்.

ஏற்கனவே மதுவை சந்தித்து இருந்தாலும், மகேந்திரனின் மனைவியாகப் போகிறவள் என்ற முறையில் அவனது வீட்டினரை சந்திப்பது முதல் முறை என்பதால் நந்தினி பதட்டமாக இருக்க, மது கொஞ்ச நேரப் பேச்சிலேயே அந்தப் பதட்டத்தை நீக்கினாள்.

இருவரும், மகேந்திரன் அருகில் இருக்கிறான் என்பதையே மறந்து தோழமையாக பேசிக் கொண்டிருக்க மகேந்திரனுக்கு சந்தோஷமாக இருந்தது.

ஒரு முக்கியமான அழைப்பு வந்தது என்று மகேந்திரன் தள்ளி நின்று பேசப் போன நேரத்தில் நந்தினியிடம், ''மகேன் ரொம்ப நல்லவன் நந்தினி... கிண்டலா பேசுவானே தவிர, ரொம்ப கேரிங் டைப்! யூ ஆர் லக்கி டு கெட் ஹிம்! உங்க கிட்ட பேசினதில் எனக்குமே லக்கி என்றுதான் தோணுது! ஐ அம் சோ ஹோப்பி ஃபார் போத் ஆப் யூ!'' என்று மது சொல்லிக் கொண்டே இருக்கும்போது, அருகில் வந்த மகேந்திரன்

''நந்து! மது என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லுவாள்! எதையும் நம்பாதே!'' என்று எச்சரிக்கை விடுக்க, பெண்கள் இருவரும் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

''ஹே! என்ன ஆச்சு? என்னை வைச்சு ரெண்டு பேரும் காமெடி பண்றீங்களா என்ன?''

''மகேன்! உன்னை வைச்சு நாங்க காமெடி பண்ணலை! நீயேதான் அதை செய்யறே!'' என்று சொல்லி விட்டு மது மீண்டும் சிரிக்க,

''என்ன நந்து?'' பரிதாபமாக கேட்டான் மகேந்திரன்.

''மது உங்களை ரொம்ப நல்லவர்... வல்லவர் என்று சொல்லிட்டு இருந்தாள்... நீங்க வந்து அவள் சொன்னது எதையும் நம்பாதே என்று சொல்றீங்க! நான் என்ன செய்யட்டும்?''

விழி விரித்து அப்பாவியாக நந்தினி கேட்டதும், ''அடடா! நானேதான் செல்ப் ஆப்பு வைச்சிகிட்டேனா?'' என்று அசடு வழிந்தான்.

''சரி மகேன்! நீங்க ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் இருந்துட்டு வாங்க! நான் கிளம்பறேன்! பை நந்தினி!'' என்று மது கிளம்பி விட,

மகேந்திரன், ''எங்க மது எப்படி?'' என்று நந்தினியிடம் விசாரித்தான்.

''ரொம்ப ப்ரண்ட்லி! எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு!'' என்றவள், சற்றே தயங்கி, ''மகி.. நான் உங்களை ஒண்ணு கேட்கட்டுமா!'' என்றாள்.

''ஒண்ணு என்ன நந்து... நீ எவ்வளவு கேட்டாலும் நான் தர தயாரா இருக்கேன்!''

குறும்புடன் மகேந்திரன் சொன்னதும், புரியாமல் அவனைப் பார்த்தவள், அவனது கண் சிமிட்டலில் விஷயம் புரிந்து, ''கொஞ்ச நேரம் சீரியஸா இருங்க!'' என்று அதட்ட,

''ஓகே! மேடம் எப்படி சொல்றீங்களோ... அப்படி!'' என்று முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டான்.

''வந்து... மது ரொம்ப அழகா இருக்காங்க இல்லை?''

இதையா சொல்ல வந்தாய் என்பதாக நந்தினியை நோக்கிய மகேந்திரன், அவள் முகத்தில் தயக்கம்



தெரியவும், ''நந்து.. என்ன கேட்கணுமோ அ
தயங்காமல் கேளு! நமக்குள் எந்த தயக்கமும் தே
இல்லை!'' என்றான்.

''இல்லை.. மது உங்க அத்தைப் பொண்ணு! கூட
வளர்ந்தவங்க வேற! ரொம்ப அழகா இருக்காங்க! உ
களுக்கு... உங்களுக்கு அவங்களையே கல்யாண
செஞ்சுக்கணும் என்று தோணலையா?''

தான் நினைத்ததை ஒரு வழியாக கேட்டு விட்டாலு
அவன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்று பய
தோடு அவனது முகத்தை நோக்கியவளைக் கண்
புன்னகைத்த மகேந்திரன்,

''இதுதான் உன்னோட சந்தேகமா? வெளிப்படை
உனக்கு தோன்றியதைக் கேட்டதுக்கு தேங்க்ஸ்!'' என்
விட்டு,

''இல்லை நந்து! எனக்கும் மதுவுக்கு அந்த மாதி
எண்ணங்கள் இருந்ததே இல்லை! கூடவே சேர்ந்
வளர்ந்ததாலோ என்னமோ... அதைப் பற்றி நாங்
நினைச்சதே இல்லை! அதுக்காக நாங்க ரெண்டு பேரு
அண்ணன் தங்கை மாதிரி என்று சொல்ல மாட்டேன்
என்னா.... ஒரு தங்கை கிட்ட ஒரு அண்ணன் எல்ல
விஷயத்தையும் பேச முடியுமா என்று எனக்கு
தெரியலை... ஆனால், நான் எந்த தயக்கமும் இல்லாம
மதுகிட்ட எல்லா விஷயத்தையும் ஷேர் செஞ்சிரு
கேன்! அதே போல அவளும் என்கிட்டே எல்லா
தையும் டிஸ்கஸ் செய்வா! நாங்க ரெண்டு பேரு
ரொம்ப ரொம்ப நல்ல பிரண்ட்ஸ்...''

நீண்ட விளக்கம் கொடுத்த மகேந்திரன், ''உனக்கு எ
ரெண்டு பேரையும் புரியுது இல்லை?'' என்றான்.

''நல்லாவே புரியுது!'' என்ற நந்தினி, ''சாரி மகி.. நான் தப்பா நினைச்சு எதுவும் கேட்கலை!'' எனவும், ''நானும் தப்பா எதுவும் நினைக்கலை!'' என்றான் மகேந்திரன்.

''உங்க அத்தை? அவங்களுக்கு உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செய்யணும் என்ற ஆசை இருக்குமா?''

தன் மேல் இருக்கும் நேசத்தின் விளைவே, இந்தக் கேள்விகள் என்று புரிந்ததில், மகேந்திரனுக்கு புன்னகை விரிந்தது.

''நந்து! அத்தை இது வரைக்கும் அந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் கூட அப்படி பேசியதில்லை!'' என்று உறுதியாகச் சொன்னவனிடம்,

''அப்போ... உங்க வீட்டில் நம்ம காதலுக்கு எந்த தடையும் இருக்காது!'' நிம்மதி கலந்த புன்னகையோடு நந்தினி சொன்னதும், மகேந்திரன் முகம் மாறியது.

அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த நந்தினிக்கு, அவனது முக மாற்றம் அச்சத்தைத் தர, ''என்ன மகி?''என்று பயத்துடன் வினவினாள்.

''அத்தைக்கு காதல் என்றாலே பிடிக்காது!'' என்று அவரது விருப்பமின்மைக்கு காரணத்தை விரிவாக சொன்னவன், நந்தினியின் முகம் வெளுப்பதைக் கண்டதும்,

''நீ பயப்பட வேண்டிய அவசியம் இல்லை நந்து! அத்தைக்கு நாங்க தவறான வாழ்க்கையை தேர்ந்தெடுக்க கூடாது என்ற பயம்தான் காரணம்! மற்றபடி, அவங்களுக்கு எங்க சந்தோஷம் மட்டும்தான் எதையும் விட முக்கியம்! முதலில் மது-சத்யா கல்யாணம் முடியட்டும்!



அப்புறம் சுந்தரமூர்த்தி சார் சொன்னார் என்று அத்தையைக் கூட்டிட்டு வந்து, பெண் பார்க்க வர மாதிரியே வந்து நம்ம கல்யாணத்தை முடிச்சிடலாம்!''

உற்சாகமாக சொன்னவனிடம், ''எதுவும் பிரச்சனை வராது இல்லை?'' இன்னமும் பயம் விலகாமல் நந்தினி வினவ,

''உனக்கு என் மேல் நம்பிக்கை இருக்கில்லை?'' என்ற மகேந்திரனின் கேள்விக்கு, நந்தினியின் தலை நல்லிச்சையாய் ஆமோதிப்பாக அசைந்தது.

''அது போதும்! மற்றதை நான் பார்த்துக்கறேன்!'' என்றவன், அவளது கைகளைப் பிடித்து ஆதரவாக அழுத்த, நந்தினியின் முகத்திலும் முறுவல் மலர்ந்தது.

* * *

அடுத்து வந்த ஒரு மாதம் சந்தோஷமாக கழிய, அன்று மாலை, ''மது... நாளைக்கு மகேந்திரன், நந்தினி, நான், நீ எல்லாம் ஒரு சின்ன கெட்-டு-கெதர் வைத்துக் கொள்ளலாம்!'' என்ற சத்யா எங்கே போகலாம் என்று வினவ, மது அமைதியாக இருந்தாள்.

அருகில் வந்த சத்யா, ''என்னடா?'' என அக்கறையுடன் வினவ, ''இல்லை... அம்மாக்குத் தெரியாமல்.. இந்த மாதிரி... எனக்கு கஷ்டமா இருக்கு...'' என்றவளிடம்,

''ப்ளீஸ் மது... நாளை மறுநாள் நான் யூ.எஸ். கிளம்பணும்! அதுக்கு முன்னாடி ஒரு நாளாவது உன்னோட ஸ்பெண்ட் செய்யணும் என்ற ஆசையில்தான் கேட்கிறேன்! உனக்கு இஷ்டமில்லை என்றால் வேண்டாம்!'' வருத்தமான குரலில் அவன் சொன்னதும், மதுவுக்கு மனம் இளகிற்று.

''இஷ்டம் இல்லைன்னெல்லாம் இல்லை சத்யா... நாம போகலாம்!''

நேரம் கிடைக்கும்போது, மதுவுடன் வெளியே செல்ல சத்யா விரும்புவதுண்டு. ஆனால்.. மதுவுக்கு பயம்! யாராவது பார்த்து விட்டு அன்னையிடம் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் இருப்ப வளுக்கு, முழு மனதுடன் அவனுடன் வெளியே செல்ல மனம் வராது. ஆனால்... சத்யா ஆசைப்படுகிறானே என்று செல்வாள்.

அவள் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், தன்னோடு வெளிய வரும் நேரங்களில், அவள் இயல்பாக இல்லை என்பதை சத்யாவால் நன்றாகவே உணர முடிந்தது. அதனாலேயே, ஆசை இருந்தாலும், அவளை வெளியே அழைத்துச் செல்வதை நிறுத்தி விட்டான்.

''இந்த ஒரு நாள் அட்ஜஸ்ட் செஞ்சுக்கோ பட்டு! யூ.எஸ். போயிட்டு வந்த உடனே அம்மா அப்பாவோட உங்க வீட்டுக்கு வந்து பேசறேன்! அதுக்கப்புறம் உன் கண்ணில் இந்த குற்ற உணர்வே இருக்காது!''

அக்கறையுடன் சத்யா சொன்னதும், மதுவுக்கு மனம் நெகிழ்ந்தது. எப்போதும், தன் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து அவன் நடந்து கொள்வதை எண்ணும்போது, அவனளவு தனக்கு அவன் மீது நேசம் இல்லையோ, என்று கூடத் தோன்றும்.

''நீங்க என்னை லவ் பண்ற அளவுக்கு நான் உங்களை லவ் பண்றேனா என்று எனக்கு அப்பப்போ டவுட் வருது!''



''உன் சந்தேகம் தேவையே இல்லாதது பட்டு! அன்னைக்கு நான் என் கல்யாணத்துக்கு பொண்ணு செலக்ட் செஞ்சு தா என்று சொன்ன போது, அடிச்சே பாரு! அந்த ஒவ்வொரு அடியும் சொல்லுச்சு! நீ என்னை எந்த அளவுக்கு விரும்பறேன்னு!''

கேலியான பாவனையில் சொன்னாலும், அவன் குரலும், பார்வையும் பெருமிதத்தையே வெளிப்படுத்தின.

''அச்சோ... இந்த ஒரு மாசமா அதையே சொல்லிச் சொல்லி என்னை வெறுப்பேற்றிகிட்டே இருக்கீங்க, வேண்டாம்! சொல்லிட்டேன்!'' என்று ஒரு விரல் நீட்டி அவள் மிரட்ட,

''என்ன செய்வே பட்டு?'' என்றபடி அவளை நெருங்கியவன், அவளது கரத்தைப் பற்றி தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டு, ''இந்த பட்டு கையால் எத்தனை அடி வாங்கவும் நான் தயார்! என்ன? உன் பட்டுக் கைக்கு வலிக்குமேன்னுதான் பார்க்கிறேன்! நீ வேற ஏதாவது ட்ரை செய்யேன்! லைக்... இங்கே.. இல்லை... இங்கே ஏதாவது கொடுத்து பாரேன்!'' என்று தன் கன்னத்தையும், உதட்டையும் தொட்டு காண்பிக்க,

''ரொம்பத்தான்!'' என்றபடி கைகளை உருவிக் கொண்டவள், ''ஆபீசிலேயே இந்த பேச்சுன்னா, நாளைக்கு வெளியில் போய் என்ன என்ன பேசப் போறீங்களோ தெரியலையே?'' என்று விழிகளை விரித்தாள்.

''நாளைக்கு பேச்செல்லாம் கிடையாது ஒன்லி ஆக்ஷன்தான்! யூ.எஸ். போயிட்டு வர வரைக்கும் தாக்குப் பிடிக்கிற மாதிரி உன்னை பலமா கவனிப்பேன்! நீயும் அப்பாவை நல்லா கவனிக்கணும்!''

"நினைப்புதான்!" என்று உதட்டைச் சுழித்து, "எனக்கு காத்தே எல்லாம் தெரியும்!" என்று அமர்த்தலாக அறி வித்தாலும், அவளது கண்கள் குறும்பில் ஒளிர்ந்தன.

"ஹே! மது! வாட் இஸ் திஸ்? நான் உன் ஹீரோம்மா! ஏதோ வில்லன் கிட்ட பேசற மாதிரி பேசறே! எனக்கு ஒரே பயம்ம்ம்மா இருக்கு!" என்றவன் சிரிக்க ஆரம்பிக்க, மதுவும் அந்த சிரிப்பில் இணைந்தாள்.

அடுத்த நாள், பாண்டிச்சேரி அன்னை ஆசிரமத்துக்கு செல்வதென்று முடிவானது!

* * *

காலையில் எழுந்ததும், மதுவுக்கு மனதில் சந் தோஷமும் கலக்கமும் சேர்ந்து எழுந்தது.

இன்று அலுவலகத்தில் பிக்னிக் போவதாக ஜானகி யிடம் சொல்லி இருந்தாள்.

கம்பெனியின் ஆடிட்டர் என்ற முறையில், தனக்கும் அழைப்பு வந்திருக்கிறது என்று மகேந்திரன் சொன்ன போது, ஜானகிக்கு எந்த சந்தேகமும் தோன்றவில்லை!

முழு நாளும், சத்யாவுடன் செலவு செய்யப் போவது ஒரு புறம் மகிழ்ச்சியைத் தந்தாலும், அன்னையிடம் இதுவரை எந்த விஷயத்திலும் பொய் சொன்னது இல்லை என்பதால், மதுவுக்கு படபடவென்று இருந்தது.

மகேந்திரனும் மதுவும் வண்டியில் கிளம்பிச் செல்ல, வாசலில் நின்று கையை ஆட்டி விடை கொடுத்த ஜானகியைக் கண்டதும், மதுவுக்கு சஞ்சலம் அதிக மாயிற்று.

"மகேன்! அம்மாகிட்ட பொய் சொல்லிட்டு வந்ததை நினைச்சால்... எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குடா...



நான் இப்படியே இறங்கி வீட்டுக்கு போயிடவா?" என்றாள்.

"ஹே லூசு! உனக்கு ஸ்திர புத்தியே கிடையாதா? அங்கே நமக்காக இரண்டு ஜீவன்கள் காத்திருக்கும் என்று தெரிஞ்சும் உளறுகிறாய்?" என்று எரிந்து விழுந்தவன், "மது பேக் அடிக்காதம்மா... நீ வருகிறாய் என்று சொல்லித்தான், வரவே மாட்டேன் என்று அடம் பிடித்த நந்துவை வர வைச்சிருக்கேன்!" என்று அடுத்த கணமே கெஞ்சி,

"ப்ளீஸ் மது... ஜாலியாய் இரு! நாளைக்கு ஊருக்கு கிளம்பற மனுஷன் கிட்ட இப்படி முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு இருக்காதே!" என்று அறிவுரை கூறினான்.

மதுவுக்கும் மகேந்திரன் சொல்வது சரி என்றே பட்டது.

எப்படியும் அன்னைக்கு தெரியாமல் கிளம்பி வந் தாயிற்று. இனிமேல் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு, எதற்கு மற்றவர்கள் மனநிலையையும் கெடுக்க வேண்டும் என்று நினைத்தவளின் முகம், வழக்கமான புன்னகையை பூசிக் கொண்டது.

ஒரு பேருந்து நிறுத்தத்தில், சத்யா காருடன் காத் திருக்க, மதுவை அங்கே விட்டு விட்டு, நந்தினியை அழைத்து வந்தான் மகேந்திரன்.

அன்று நந்தினியைச் சந்தித்த பிறகு, இருவரும் அடிக்கடி கைப்பேசியில் பேசிப் பேசி நல்ல தோழிகள் ஆகி விட்டிருந்தனர்.

இன்று சந்தித்ததுமே இருவரும், கலகலப்பாகப் பேச ஆரம்பித்தனர்.

காலை உணவுக்காக ஒரு உணவகம் செல்ல, அங்கே பஃபே முறையில் உணவு வைக்கப்பட்டிருந்தது.

பெண்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஆண்கள் இருவரும் எடுத்து வரச் சென்றனர்.

மதுவும் நந்தினியும் ஏதோ பேசிக் கொண்டிருக்க, அங்கே வந்த மகேந்திரன், ''என்ன பேசிட்டு இருக்கீங்க?'' என்று விசாரிக்க,

''மது உங்களைப் பற்றி ஒண்ணு சொன்னாள்! அதை நம்பலாமா வேண்டாமா? என்று தெரியலை! நீங்களே சொல்லுங்க மகி.. நம்பவா.. வேண்டாமா?'' குறும்புடன் நந்தினி வினவ,

பழைய நினைவில் அசடு வழிந்த மகேந்திரன், ''இந்த வாயாடி கூட சேர்ந்து நீயும் பயங்கரமா என்னை கிண்டல் செய்ய ஆரம்பிச்சிட்டே!'' என்று சலித்துக் கொண்டு,

''எதுவா இருந்தாலும், அவள் சொன்னது என்ன என்று கேட்காமல், நான் எதையும் சொல்ல முடியாது!'' என்று முன் ஜாக்கிரதையுடன் சொல்ல, இருவரும் மீண்டும் நகைத்தனர்.

சத்யா வந்ததும், என்னவென்று விசாரிக்க, மீண்டும் ஒரு முறை மகேந்திரனை அசடு வழிய வைத்தனர் பெண்கள் இருவரும்!

''இதுக்குதான் மது! இந்த மாதிரி ஆளுங்களுக்கு சப்போர்ட்டே செய்யக் கூடாது!'' என்று சத்யாவும் கூடச் சேர்ந்து கொள்ள,

''இன்னைக்கு எனக்கு நேரமே சரி இல்லை போலவே!'' என்று தலையில் கை வைத்தபடி சொல்ல,



உணவை முடித்து விட்டு தொடர்ந்த பயணம் முழு வதும், நால்வரும் கலகலத்துக் கொண்டே சென்றனர்.



## 11

போகும் வழியில், பஞ்ச முக ஆஞ்சநேயர் கோவிலுக்கு போக வேண்டும் என்று மதுவும் நந்தினியும் விரும்ப, உள்ளே சென்று ஆஞ்ச நேயரைத் தரிசித்து விட்டு மன நிறைவோடு பயணத்தைத் தொடர்ந்தனர்.

பாண்டிச்சேரி வந்து மணக்குள விநாயகரைத் துதித்து விட்டு, அன்னையின் ஆசிரமத்தில் அமர்ந்து கண்களை மூடி பிரார்த்தனை செய்த நால்வருக்கும், மனதில் இனம் புரியாத அமைதி சூழ்ந்திருந்தது.

அன்னையின் ஆசிரமத்தில் நிறைந்திருக்கும் பூக்களின் வாசமும், அந்த ஏகாந்தமான அமைதியும் எவரையும் அமைதி கொள்ள செய்யும்!

இன்னும் கொஞ்ச நேரம், இன்னும் கொஞ்ச நேரம் என்று ஆசையுடன் அந்த அமைதியை அனுபவித்து விட்டு மௌனமாக வெளியே வந்தவர்கள், உணவகத்துக்கு சென்று அமர்ந்து, என்ன வேண்டும் என்று ஹோட்டல் பணியாள் வந்த கேட்ட பிறகே, தங்கள் மோன நிலையில் இருந்து மீண்டனர்.

தேவையானதைச் சொல்லி அவரை அனுப்பிய பிறகு, ''சொல்லு சத்யா? என்ன சொல்லி, மதுவை பெண் கேட்டு வர போகிறாய்?'' என்று மகேந்திரன் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

ஒரு கணம் மதுவைத் திரும்பி பார்த்த சத்யா, அவள் எதுவும் பேசாமல் தலை குனிந்தபடி அமர்ந்திருக்கவும், ''நீதான் ஏதாவது ஐடியா சொல்லேன், மகேன்!'' என்று மகேந்திரனிடமே திரும்ப,

''அத்தைக்கு இந்த காதல் விவகாரம் தெரியாமல் பார்த்துக்கணும்! அதனால் கொஞ்சம் யோசித்துதான் ஏதாவது செய்யணும்!'' என்றான் அவன்.

''நான் ஒண்ணு சொல்லட்டா?''

மது கேட்டதும், எல்லார் கவனமும் அவளிடம் பதிய, அடுத்து அவள் சொன்ன வார்த்தைகளில், மூவரும் அதிர்ந்துதான் போனார்கள்.

''என்ன சொல்றே மது?''

மகேந்திரன் தன் அதிர்ச்சியை மீறி வினவ,

''ஆமா மகேன்! பொய் சொன்னால், அதை மறைக்க, என்று அடுத்தடுத்து பொய் சொல்ல வேண்டி இருக்கும்! எல்லாம் முடிஞ்ச பிறகும், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், அம்மாவுக்கு தெரிஞ்சிடுமோன்னு கவனமா நடந்துக்க வேண்டி இருக்கும்! வாழ்நாள் முழுக்க ஒரு பொய்யை மறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்! அதை விட உண்மையைச் சொல்றதே நல்லது என்று எனக்குத் தோணுது! அம்மாகிட்ட நம்ம விஷயத்தை சொல்லிடலாம்!''

மது உறுதியாகச் சொன்னதும், சத்யாவுக்கும் அதுவே சரி என்று தோன்றியது.

மகேந்திரன் இன்னும் குழப்பத்தில் இருக்க, ''உனக்கே தெரியும் மகேன்! அம்மாவுக்கு நம்ம ரெண்டு பேரோட சந்தோஷம்தான் மற்ற எல்லாத்தையும் விட முக்கியம்!



முதல்ல கஷ்டமா இருந்தாலும், சத்யாவையும் நந்தினியையும் பார்த்த பிறகு அம்மா ஒத்துப்பாங்க என்று தான் எனக்கு தோணுது!'' என்ற மதுவை நிமிர்ந்து நோக்கிய மகேந்திரன்.

''சரிதான்! நமக்கும் அத்தைகிட்ட பொய் சொல்றோம் என்ற குற்ற உணர்வு இருக்காது! நீ சொல்றதுதான் சரி!'' என்று ஒத்துக் கொள்ள, ஒரு தீர்வு கண்டு பிடித்த சந்தோஷத்தில், அனைவரின் முகங்களும் மலர்ந்தன.

சத்யா யூ.எஸ். சென்று வந்ததும், ஜானகியிடம் விஷயத்தைச் சொல்லி விட வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

உணவை முடித்து விட்டு, கடற்கரைக்கு வந்தவர்கள் கடல் அலைகளில் சேர்ந்து நின்று, கால் நனைத்த பிறகு மணலில் வந்து அமர்ந்தனர்.

''நந்து... வாயேன்.. கொஞ்ச தூரம் நடந்துட்டு வரலாம்!'' என்று மதுவுக்கும் சத்யாவுக்கும் தனிமை கொடுக்க விரும்பி, மகேந்திரன் அழைக்க, நந்தினியும் எழுந்த அவனோடு நடந்தாள்.

''என்ன நந்து? நல்ல இருக்கா அவுட்டிங்க?''

''ம்ம்... நல்லா இருக்கு!'' என்ற நந்தினி,

''மது சொல்றது சரிதான் இல்லை மகி? பொய் சொல்லி வாழ்க்கையை ஆரம்பிக்கிறதை விட, உண்மையை ஜானும்மா கிட்ட சொல்றதே நல்லது!'' என்றதும்,

''ஹே.. ஜானும்மா என்று சொல்றே?'' என்ற மகேந்தினின் குரலில் மகிழ்ச்சி பொங்கியது.

''ம்ம்... உங்களுக்கு அத்தை என்றால் எனக்கு அவங்க அம்மாதானே? நீங்க அவங்களைப் பற்றி சொன்னதை

எல்லாம் கேட்ட பிறகு, எனக்கு எப்போ உங்க வீட்டுக்கு வருவோம், அவங்களோடு இருப்போம் என்று இருக்கு!''

''சோ... மேடமுக்கு கல்யாண ஆசை வந்துடுச்சு போலவே!'' என்று கேலி செய்தவன்,

''எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு நந்து... என்னைக் கல்யாணம் செஞ்சுக்க போற பொண்ணு, அத்தையை நல்ல படியா வைச்சிக்கணும் என்று அடிக்கடி நினைப்பேன்! இப்போ நீ பேசறதைப் பார்த்து எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? அத்தைக்கும் உன்னை ரொம்ப பிடிக்கும்! எனக்கு நம்பிக்கை இருக்கு! மது கல்யாணம் முடிஞ்ச கையோடு நம்ம விஷயத்தை அத்தை கிட்ட சொல்லிடறேன்!'' என்று வாக்களித்தான்.

''ஏன்... மது கல்யாணத்தோடவே நம்ம கல்யாணமும் நடக்கிற மாதிரி செய்தால் என்னவாம்?''

ஏதோ ஒரு உந்துதலில் வேகமாக கேட்டு விட்ட நந்தினி, மகேந்திரன் தன்னை ஆச்சரியமாகப் பார்ப்பதை உணர்ந்ததும், முகம் சிவக்க திரும்பிக் கொண்டாள்.

''நந்து...'' என்று ஆசையாக அழைத்து அவளது முகவாயைப் பற்றித் திருப்பிய மகேந்திரன், ''நான் தான் எப்ப பாரு கல்யாணத்தைப் பற்றி பேசுவேன்! நீ இப்படி பேசறதைக் கேட்கும்போது எனக்கு அப்படியே பறக்கிற மாதிரி இருக்கு தெரியுமா?'' என்று அவளது கையைப் பற்றி முத்தமிட, அந்த முத்தத்தில், சிலிர்த்தாலும்,

''கொஞ்ச இடம் கொடுத்தால் போதுமே?'' என்று கையை மெல்ல உருவிக் கொண்டாள்.



உற்சாகத்துடன் மகேந்திரன் ஒரு பாடலை வி... பாடுக்க, ''என்ன பாட்டு மகி?'' என்று ஆர்வத்துடன் வி... ரித்தவளிடம்,

''நிலா காயுது... நேரம் நல்ல நேரம்!'' என்று மகே... தின் பாடியதைக் கேட்டு,

''ஹப்பா! வெயில் இப்படி கொளுத்துது! உங்களுக்கு நிலா காயுற மாதிரி இருக்கா?'' என்று நந்தினி வினவ...

''ம்ம்ம்... பௌர்ணமி நிலவே என் பக்கத்தில் நடந்து வரும்போது, இந்த வெயில் கூட எனக்கு நிலா காய்கி... மாதிரிதான் இருக்கு!'' என்றான் அவன்.

''ஹய்யோ! ரொம்ப வழியுது துடைத்துக்கோங்க!'' ...றவளது கையைப் பற்றி தன் உதட்டருகில் கொண்... சென்றவன், ''இங்கேயா வழியுது, நீயே துடைத்... விடேன்!'' என்று சொல்லும் சாக்கில், மீண்டும் அவள... ...ந்தில் முத்தமிட,

''நீங்க இருக்கீங்களே! பயங்கரமான ஆளு!'' என்... சிரித்த நந்தினி, அவனது தோளில் சாய்ந்தபடி நடக்... ...ம்பித்தாள்.

* * *

''என்ன இருந்தாலும் மகேன் ஜென்டில்மேன்! பா... நம்ம ரெண்டு பேருக்கும் ப்ரைவசி கொடுத்துட்... போயிட்டான்!'' என்று சத்யா சிலாகிக்க,

''அவனா? சரியான ஃபராட்! நமக்கு ப்ரைவ... கொடுக்கிற மாதிரி பில்ட் அப் கொடுத்துட்டு, அய்... அவருக்கு ப்ரைவசி ஏற்பாடு செஞ்சிகிட்டான்!'' என்... சொல்லி விட்டு மது சிரிக்க, அவளது அருகில் நெருங்... ...ந்த சத்யாவின் கரம், தனது மனம் கவர்ந்தவளி... தோளில் படிந்தது.

''என்ன சத்யா? நிறைய பேர் இருக்காங்க!'' என்று தள்ளி அமர முயன்றவளைத் தடுத்து, மேலும் நெருங்கி அமர்ந்தவன், ''யாரும் இங்கே நம்மை பார்க்கலை! நானே இன்னும் பத்து நாள் தேவியின் தரிசனம் கிடைக்காதேன்னு கவலையில் இருக்கேன்!'' என்று சொல்ல,

அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல், மதுவும் அவனது தோளில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் மோன நிலையில், இருவரும் தங்கள் மனதுக்கு இனியவர்களின் அருகாமையை ரசித்து கொண்டிருக்க,

''என்னடா பட்டு! திடீர்னு அத்தை கிட்ட உண்மையை சொல்லிடலாம் என்று முடிவெடுத்திட்டே?'' என்று விசாரித்தான் சத்யா.

''ம்ம்ம்... அதுதான் பெட்டர் என்று தோணுச்சு சத்யா! அம்மாவுக்கு அதிர்ச்சியாவும் வருத்தமாவும்தான் இருக்கும்.. பட், கண்டிப்பா புரிஞ்சிப்பாங்க என்றுதான் தோணுது! அவங்களுக்கு காதல் என்றால் பிடிக்காததற்கு காரணம் அவங்களுடைய வாழ்க்கையில் நடந்த கசப்பான அனுபவம் மட்டும் காரணம் இல்லை! நாங்க காதல் என்ற பெயரில் தவறான ஆளை தேர்ந்தெடுத்திட போறோம் என்ற பயமும்தான் காரணம். உங்களையும் நந்தினியையும் பார்த்தால் அம்மா மனசு கண்டிப்பா மாறும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கு!''

''எப்படி திடீர்னு இப்படி ஒரு நம்பிக்கை?''

''அன்னை ஆசிரமத்தில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்யும்போது, மனசு ரொம்ப அமைதியா இருந்தது



சத்யா! அங்கே கொஞ்ச நேரம் தியானம் செஞ்சிட்டு வந்த பிறகுதான் எனக்கு இந்த நம்பிக்கையே வந்துச்சு. இவ்வளவு நாளா, அம்மாவுக்கு பிடிக்காததை செய்கிறோம் என்ற குற்ற உணர்வில் எதையும் சரியா யோசிக்க முடியலை. இப்போ மனசு அமைதியா இருக்கும்போது யோசிச்சா, உண்மையை சொல்றதுதான் நல்லது என்று மனசுக்குத் தோணுது!''

''நீ கரெக்டா சொல்றே மது! எனக்கு முன்னாடியிருந்தே அப்படித்தான் தோணுச்சு... நீ ரொம்ப பயந்து போய் இருந்தாயா என்றுதான், நம்ம விஷயத்தை சொல்லாமலே கல்யாணத்தை நடத்திடலாம்னு நினைச்சேன். இப்போதான் எனக்கும் திருப்தியா இருக்கு!''

''உங்க வீட்டில் சொல்லிட்டீங்களா?'' என்ற மதுவின் கேள்விக்கு, ''முதலில் கல்யாண ஏற்பாட்டுக்கு சம்மதம் சொன்ன நான், அதை எல்லாம் நிறுத்த சொன்னதே, அம்மாவுக்கு சந்தேகம் என்று நினைக்கிறேன். நீ வேற அத்தைக்கு எதுவும் தெரியக் கூடாதுன்னு நினைத்ததால், வீட்டில் நான் எதுவும் சொல்லலை. ஊருக்கு போய் வந்ததும் சொல்லிடறேன்! எங்க வீட்டில் எந்த பிரச்சனையும் இருக்காது மது!'' அவன் வீட்டில் பிரச்சனை இருக்குமா என்ற தயக்கத்தை உடைத்து அவன் உறுதியாக சொன்னதும்,

மது, ''தேங்க்ஸ் நந்தா!'' என்றாள்.

''ஹே! இதென்ன புதுசா நந்தா?''

''அது அப்படித்தான்... ஆசை ஜாஸ்தி ஆகிடுச்சுன்னு இந்த மாதிரி ஸ்பெஷல் அழைப்பெல்லாம் வரும்'' கண்சிமிட்டியபடி மது சொன்னதும்,

''சோ... இப்போ மேடம்க்கு ஆசை ஜாஸ்தியா இருக்கு! கேட்டதெல்லாம் கிடைக்கும்!'' என்றான் அவன் கண்சிமிட்டலுடன்!

''கேட்காதது கூட கிடைக்கும்!'' குறும்புடன் சொன்ன மதுவின் கரம், அவனது தோளில் செல்லமாக ஒரு அடியை வைக்க,

சத்யா, மெல்ல கையைத் தூக்கி, அவளது உதட்டின் மேலிருந்த மச்சத்தை வருட, மதுவுக்கு முகம் சிவந்து உடல் சிலிர்த்தது.

சத்யாவின் பார்வை, மதுவின் சிவந்த கன்னங்களின் மேல் ரசனையுடன் படிந்தது.

''மதூ...''

அவன் அழைப்பில் இருந்த கிறக்கம், அவளையும் கிறங்கச் செய்ய, முகத்தை மறு புறம் திருப்பி, தன் உணர்வுகளை அடக்க முயன்றாள் அவள்.

''மது... பத்து நாள் பிரிவை தாங்குகிற மாதிரி, நல்லா கவனிக்கணும் என்று சொல்லித்தானே கூட்டிட்டு வந்தேன்?''

அதற்குள் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட மது, ''நல்லா கவனிக்கணும்! அவ்வளவுதானே? கவனிச்சிட்டா போச்சு!'' என்று கையைத் தூக்கி, அவன் தோளில் அடிக்க வர,

''ஹே! நான் சொன்னது இதில்லை என்று உனக்கும் தெரியும்!'' என்று அவளது கையைப் பற்றினான் அவன்.

''எல்லாம்... கல்யாணத்துக்கு பின்னாடிதான்!''

விளையாட்டாக சொல்கிற மாதிரி சொன்னாலும், மதுவின் குரலில் இருந்த அழுத்தம் அவனுக்கும் புரிந்தது.



''ஓகே!'' பெருமூச்சு விட்டபடி எழுந்தவன், ''நாமு கொஞ்ச நேரம் நடந்துட்டு வரலாம்! வா...'' என்றப கையை நீட்ட, மதுவும் அவனது கையைப் பற்றி கொண்டு எழ, இருவரும் விரல்களைக் கோர்த்தப நடக்கத் துவங்கினர்.

சிறிது நேரத்தில், மகேந்திரனும் நந்தினியும் எதி வந்தார்கள்.

''என்ன? விடை பெறல் எல்லாம் நல்ல படிய முடிஞ்சதா?''

குறும்புடன் மகேந்திரன் வினவ, ''இங்கே வி அங்கேதான் லைட் பிரகாசமா எரியற மாதிரி இருக்கு! என்று சத்யாவும் வம்பிழுக்க, இருவருக்கும் தத்த தனிமையிடம் இருந்து ஒரு கிள்ளல் பரிசாகக் கிடைத்தது

வரும்போது இருந்த உற்சாகத்தை வி கிளம்பும்போது, நால்வர் மனமும் நெகிழ்ந்து நிறைந்து இருந்தது.

* * *

ஜானகிக்கு மதுவும் மகேந்திரனும் வீட்டில் இ மாமல், வீடே வெறிச்சோடிக் கிடந்த மாதிரி இருந்தது

வேலையும் அதிகம் இல்லாமல், பிள்ளைகளி அறையை சுத்தம் செய்யலாம் என்று போனால், அதுவு சுத்தமாகவே இருந்தது.

ஞாயிற்றுக் கிழமை மாலைகளில், ஒரு வார மதுவுக்கு பிடித்தது, ஒரு வாரம் மகேந்திரனுக்கு பிடித்த என்று ஏதாவது சிற்றுண்டி செய்வது வழக்கம்!

ஆனால், இன்று இருவரும் வர இரவாகி விடு என்பதால், அதையும் செய்யாமல் நேரத்தை ஓட்டி கொண்டிருந்தவரின் கைப்பேசி அழைத்தது.

''ஜானு! நான்தான் கற்பகம் பேசறேன்.''

கற்பகம் ஜானகியோடு பணி புரியும் தோழி. பன்னிரண்டு ஆண்டு பழக்கம்!

''சொல்லுங்க கற்பகம்? ஏன் குரலே ஒரு மாதிரி இருக்கு?'' என்று ஜானகி அக்கறையுடன் விசாரிக்க, ''நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்க வீட்டுக்கு வரேன்!'' எனக் கூறி விட்டு அழைப்பைத் துண்டித்தார் அவர்.

சொன்ன மாதிரியே, கற்பகம் அரை மணி நேரத்தில் வந்து விட, அவரது முகமே, பெரிய பிரச்சனை என்பதைச் சொல்லி விட, உள்ளே சென்ற ஜானகி, பழச்சாறு எடுத்து வந்து பருக வைத்தார்.

''என்ன கற்பகம்? என்ன ஆச்சு?'' அக்கறையுடன் ஜானகி விசாரித்ததும், கற்பகம் உடைந்து அழத் துவங்கினார்.

கவலை கொண்ட ஜானகி, ''என்னனு சொல்லுங்க... எதுவா இருந்தாலும், ஏதாவது தீர்வும் இருக்கும்!'' என்று ஆதரவாகக் கூற, கற்பகம் அழுகையை நிறுத்தி விட்டு நிமிர்ந்து அமர்ந்தார்.

''ஜானு.. எனக்கு கொஞ்சம் அவசரமா ஒரு இரண்டு லட்சம் பணம் வேணும்! ரெண்டு மூணு மாசத்தில் திருப்பி கொடுத்துடறேன்!''

''கண்டிப்பா தரேன்! அவசரம் இல்லை! நீங்க எப்போ முடியுமோ அப்போ திருப்பி கொடுங்க! ஆனால்... அதுக்கு முன்னாடி என்ன பிரச்சனை என்று சொல்லுங்க!''

''சொல்றேன்! உன்கிட்ட சொல்லாமல் யார் கிட்ட சொல்லப் போறேன்! தீபா... இப்போ முழுகாம இருக்கா!''



''அப்படியா? ரொம்ப சந்தோஷமான விஷயம்! அதை ஏன் இப்படி சுரத்தே இல்லாமல் சொல்றீங்க?'' ஆச்சரியத்துடன் ஜானகி வினவ, பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கற்பகம் சொல்லத் துவங்கினார்.

''அவள் அங்கே சந்தோஷமா இல்லை ஜானு! குழந்தை எப்போ போன் செஞ்சாலும், ஒண்ணும் சொன்னதில்லை.... நல்லா இருக்கேன்மா என்று சொல்ற தோடு சரி.. அவங்க வீட்டில் அவளை ரொம்பவே கொடுமைப் படுத்தறாங்க... எப்ப பாரு பணம்... பணம்... இப்போ குழந்தை வேண்டாம் என்று அதை கெடுக்க, ஏதேதோ மாத்திரை தராங்களாம்... ரொம்ப பயந்து போய் நேற்றுதான் எனக்கு எல்லாம் சொன்னாள்!''

கற்பகம் சொன்ன தகவலில் ஜானகி அதிர்ந்து போய் அமர்ந்திருந்தார்.

தந்தை இல்லாத பெண் என்று கற்பகம், தீபாவை வளர்த்த முறையும், கல்யாணத்தை, கையில் இருந்த சேமிப்பை எல்லாம் கொட்டி, சீரும் சிறப்புமாக திருமணம் செய்து வைத்ததும் கண் முன் வந்து போனது.

தூரத்து உறவினர் சொன்ன மாப்பிள்ளை என்ற போதும், தன்னால் இயன்ற வரை விசாரித்தே கற்பகம் திருமணம் செய்து வைத்தார். அவ்வளவுக்குப் பிறகும்... இத்தனை கொடுமை என்றால்? நினைக்கும்போதே ஜானகிக்கு நெஞ்சம் பதறியது.

''அவங்க ஏதாவது செய்யறதுக்கு முன்னே என் பெண்ணை நான் போய் கூட்டிட்டு வரணும்! அங்கே என் ஒண்ணு விட்ட அண்ணன் வீடு இருக்கு.. அவர் போய் கூப்பிட்டதுக்கு பொண்ணை அனுப்ப மாட்டேன்

என்று சொல்லிட்டாங்களாம்... நான் உடனே கிளம்பி போகணும்.. கையில் பைசா இல்லை... கொஞ்ச நாள் முன்னாடிதான், ஏதோ அவசர தேவை என்று கேட்டாங்க என்று லோன் போட்டு பணம் அனுப்பினேன். விசா எல்லாம் என் பக்கத்து வீட்டுக்காரர் ஏற்பாடு செய் திட்டார். பணம் கிடைத்தால் உடனே கிளம்பிடு வேன்!''

''கற்பகம்! நாளைக்கு காலையில் என்னோட வைப்பு நிதியை உடைச்சு எடுத்து துரேன்... நீங்க பார்த்து ஜாக்கிரதையா போயிட்டு வாங்க... இன்னும் பணம் வேணும் என்றாலும் தயங்காமல் கேளுங்க!'' என்று விட்டு,

கேட்டால் அவருக்கு மனம் வேதனைப்படும் என்று தெரிந்தாலுமே, அவரால் அந்தக் கேள்வியைக் கேட் காமல் இருக்க முடியவில்லை.

''எப்படி கற்பகம் இப்படி? நல்லா விசாரித்துதானே செஞ்சீங்க?''

''என்னால் முடிந்த வரை நல்லாத்தான் விசாரிச்சேன்... யூ.எஸ்ல இருக்கிற என் ஒண்ணு விட்ட அண்ணா கூட, விசாரிச்சிட்டு நல்லபடியாதான் சொன்னார்... ஆனால், ஒவ்வொருவருக்கும் இரண்டு முகம் இருக்கும்னு சொல்லுவாங்க.. அவங்க வெளியில் காட்டுகிற ஒரு முகத்தைத் தான் நம்மால் பார்க்க முடியுது... மற்றதை நம்மால் பார்க்க முடியறதில்லையே!''

''ஜானு... பொண்ணுக்கு ஒரு நல்ல பையனா பார்த்து கல்யாணம் செஞ்சு வைக்கிறது ரொம்பவே கஷ்டமா ஆகிடுச்சு...'' என்று வேதனையுடன் சொன்ன கற்பகம்,



''உன் பொண்ணுக்கு நீ மகேந்திரனையே கல்யாணம் செஞ்சு வைத்து விடு!'' என்று முடித்தார்.

கற்பகம் திடீர் என்று அப்படி சொன்னதும், ஜானகி திகைக்க, ''ஆமாம் ஜானு... சீரும் சிறப்புமா குழந்தையை வளர்த்துட்டு அவள் இப்படி வேதனைப்படறதை நேட்கவே மனசுல சக்தி இல்லை... மகேந்திரன் நீ பார்த்து வளர்ந்தவன்... மதுவை சின்ன வயசில் இருந்து பார்க் கிறான்.. அவளை நல்ல படியா வைச்சுப்பான்!'' என்று அறிவுறுத்திய கற்பகத்திடம்,

''நான் இதுவரை அப்படி நினைச்சு பார்த்ததே இல்லை கற்பகம்!'' என்று ஜானகி சொல்ல,

''இனிமேல் நினைச்சு பார்.. எப்படியும் கல்யாணம் என்று ஒண்ணு செய்யப் போறோம்! அதை அவங்க ரெண்டு பேருக்குமா செய்து வைத்து விட வேண் டியதுதான்... மதுவுக்கு மாப்பிள்ளை பார்த்தாலும், நீயும் ஒத்தை ஆளாகத்தான் அலையணும்.. மகேந்திரனுக்கு வரப் போற பொண்ணும் எப்படி இருப்பாளோ... உனக்கும் வயசான காலத்தில் கஷ்டம்... அவங்க ரெண்டு பேருக் கும் கல்யாணம் செய்து வைத்து விட்டால், உனக்கும் எந்தப் பிரச்சனையும் இருக்காது... குழந்தைகளும் சந்தோஷமாக இருப்பாங்க!''

அதற்கு மேல் கொஞ்ச நேரம் பேசிவிட்டு கற்பகம் போனை வைத்து விட, ஜானகியின் உள்ளம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

கற்பகம் சொன்ன மாதிரி, மகேந்திரனுக்கும் மது வுக்கும் திருமணம் என்பதை ஜானகி எப்போதுமே எண்ணிப் பார்த்ததில்லை.

மகேந்திரனையும் தன் பிள்ளையாகவே வளர்த்த காரணத்தால், அவரால் அப்படி நினைத்துப் பார்க்க முடிந்ததில்லை என்பதுதான் உண்மை.

மதுமிதா படித்து நல்ல வேலையில் அமர்ந்து தன் சுய சம்பாத்தியத்தில் நிற்க வேண்டும் என்று ஜானகி விரும்பினார். அதனால், இப்போதைக்கு அவளது திருமணத்தைப் பற்றி அவர் நினைக்கவும் இல்லை.

கற்பகம் தன் பெண்ணைப் பற்றிப் பேசியதைக் கேட்டதில் இருந்து, ஜானகிக்குமே தன் மகளைப் பற்றிய வாழ்வை நினைக்கும்போது, கலக்கமாக இருந்தது.

மதுவுக்கு கணவனாக வரப் போகிறவன் நல்லவனாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை எழும்போதே, வெளித் தோற்றத்தை வைத்து யாரைத் தான் நம்ப முடியும் என்ற கேள்வியும் கூடவே எழுந்தது.

தன்னைக் காதலித்த போது இருந்த புருஷோத்தமனுக்கும், திருமணம் முடிந்த பிறகு இருந்த புருஷோத்தமனுக்கும் இடையே, ஆயிரம் வித்தியாசங்களைக் கண்டவர் ஆயிற்றே!

மகேந்திரன் அவர் வளர்த்த பிள்ளை! இருவரும் அனுதினமும் சண்டை போட்டாலும், உள்ளுக்குள் அன்பும் பாசமும் கொண்டவர்கள் என்பது ஜானகியும் அறிந்த ஒன்றுதான்!

ஆனால்.. அவர்கள் இருவருக்கும் திருமணம் என்பது தனக்கே இத்தனை திகைப்பைத் தரும்போது, அவர்கள் நிலை எப்படி இருக்கும் என்று அவரால் யூகிக்க இயலவில்லை!

எது எப்படி இருந்தாலும், மகேந்திரனும் மதுவும் வாழ்நாள் முழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும்



என்பதைத் தவிர வேறு எந்த எண்ணமும் ஜானகிக்கு கிடையாது.

குழப்பமான மன நிலையில் எதை யோசித்தாலும், தெளிவான தீர்வு பிறக்காது!

அண்ணன் இறந்து பிள்ளைகளைத் தனியாக வளர்க்க தொடங்கிய நாளில் இருந்து, ஜானகிக்கு நிறைய குழப்பங்கள் தோன்றி இருக்கின்றன. அது அனைத்தையும் தன் மன உறுதி கொண்டு, அண்ணனுடைய ஆத்மாவின் வழி நடத்துதலால் சீராக செய்து முடித்திருக்கிறார். இதுவும் அப்படியே நடக்கும் என்று மனதை திடப்படுத்திக் கொண்டவர். இதைப் பற்றி விரைவில் பிள்ளைகளிடம் பேச வேண்டும் என்று முடிவெடுத்தார்.

அன்று இரவு இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டே உள்ளே வந்த போது, வைத்த கண் வாங்காமல் இருவரையும் பார்த்தவருக்கு, ஜோடிப் பொருத்தம் வெகு அழகாக இருப்பதாகத் தோன்றியது!

ஒரே நாளில், தன் எண்ணப்போக்கில் ஏற்பட்டிருந்த மாற்றம் அவருக்குத் திகைப்பை அளித்தது.

பிள்ளைகளின் விருப்பம் தெரிந்து கொள்ளாமல் தான் இவ்வாறு யோசிப்பது தவறு என்று தன் எண்ண ஓட்டத்துக்கு தடை விதித்துக் கொண்டு, இருவரிடமும் சகஜமாகப் பேசத் துவங்கினாலும், விரைவில் திருமண விஷயத்தைப் பேசி விட வேண்டும் என்ற எண்ணம் உள்ளே ஓடிக் கொண்டே இருந்தது.



## 12

சத்யநந்தன் இன்று யூ.எஸ். கிளம்புகிறான் என்பது ரொம்ப

நாளைக்கு முன்பே தெரிந்த விஷயம்தான் என்றாலும், கிளம்பும் நாள் வந்த உடன் மதுவுக்கு மனதில் ஏதோ ஒரு கலக்கம் இருந்து கொண்டே இருந்தது.

அவள் வெளிப்படையாக எதுவும் சொல்லா விட்டாலும், அவள் முகத்தில் இருந்தே, அவளை உணர்ந்தவனாக, கிளம்பும் நேரம் வரையிலும், அவளை அருகிலேயே வைத்துக் கொண்டிருந்தான் சத்யா.

இப்போது கிளம்பினால்தான், வீட்டுக்குச் சென்று பொருட்களை எடுத்துக் கொண்டு கிளம்ப சரியாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டே, மேஜையில் இருந்தவற்றை ஒழுங்குபடுத்த தொடங்கியவனைப் பார்க்கும்போதே, மதுக்கு ஏனோ தவிப்பாக இருந்தது.

உள்ளுணர்வு உந்த சட்டென்று மேஜையில் இருந்த கவனத்தை மதுவின் புறம் திரும்பிய சத்யாவை, அவளது கண்களில் இருந்த தவிப்பு ஏதோ செய்ய, ''பட்டு! ரிலாக்ஸ்! ஏன் என்னவோ மாதிரி இருக்கே? பத்து நாள்தான்டா! அப்புறம் என் பட்டுவைப் பார்க்க ஓடி வந்துடுவேன்!''

மென்மையாக உரைத்தவன், ''உன்னை ரிலாக்ஸ் செய்ய வைக்கட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வர, மதுவுக்கு உள்ளம் படபடத்தது.

விழிகளில் ஆவலை நிரப்பியபடி, தன்னை நோக்கிய வளை இழுத்து அணைத்து முத்தமழை பொழிய வேண்டும் போன்ற ஆவல் தோன்ற, முயன்று தன்னைக் கட்டுப்படுத்தியவன், மெல்ல அவள் கையைப் பற்றி மென்மையாக வருட, அவள் உள்ளத்தில் இனம் புரியாத அமைதி பரவியது.

''ஆர் யூ ஓகே நவ்?''



''ம்..'' தலையாட்டிவள், ''ஆல் தி பெஸ்ட்!'' என்று கையை நீட்ட, அழுத்தமாக அவளது கையைப் பற்றியவன், மெல்ல அதைத் தூக்கி தன் இதழருகில் கொண்டு சென்று மென்மையாக ஒரு முத்திரையைப் பதிக்க, எப்போதும் போல கையை விருட்டென்று இழுத்துக் கொள்ளாமல், மதுவும் அந்த இதழ் ஒற்றுதலை விழிகளை மூடிக் கொண்டு ரசிக்கத் துவங்கினாள்.

அவளது புன்னகை தவழ்ந்த முகத்தைக் கண்டவன், இதற்கு மேல் நின்றால், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது கடினம் என்று உணர்ந்து, மெல்ல அவள் கையை விடுவித்து விட்டு நகர்ந்தான்.

''ஏதாவது என்றால் எனக்கு தயங்காமல் கூப்பிடு!'' என்று விட்டு, அவன் கிளம்பிச் செல்ல, ''சீக்கிரம் வேலை முடிஞ்சிட்டால், உடனே கிளம்பி வந்துடுவீங்க தானே நந்தா?'' என்றவளிடம், ''கண்டிப்பா டா!'' என்று அவன் உறுதி கூற, அவளும் புன்னகையோடு அவனுக்கு விடை கொடுத்தாள்.

* * *

வீட்டுக்கு வந்த சத்யா, அவசரமாக அனைத்தையும் எடுத்துக் கொண்டு அன்னையிடமும் தங்கையிடமும் விடை பெற்றுக் கொண்டு ''நித்திம்மா... உனக்கு அங்கே இருந்து என்ன வேண்டும் என்று கேளு...'' என்று சொல்லிக் கொண்டே கிளம்ப, ''சத்யா.. நீ இரண்டு மாசத்தில் உன் கல்யாண விஷயம் பற்றி சொல்றேன் என்று சொல்லி இருந்தாய்!'' என்று நினைவு படுத்திய சுமித்ராவிடம்,

''அம்மா... ஊருக்கு வந்த பிறகு கண்டிப்பா சொல்றேன்மா! இப்போ எனக்கு டைம் ஆகுது!'' என்று சத்யா அவசரப்பட்டான்.

''என்னம்மா இது? எதுக்கு அண்ணனை இப்போ போய் தொந்தரவு செய்யறீங்க? என்கிட்டே கேட்டால் நான் அண்ணன் மனசில இருக்கிறதை சொல்ல போறேன்!'' என்ற தங்கையை சத்யா ஆச்சரியமாக பார்க்கும்போதே,

''சொல்லு நித்தி... அவன்தான் சொல்ல மாட்டேங் கிறான்... நீயாவது சொல்லு!'' என்றார் சுமித்ரா புன்னகையை அடக்கிக் கொண்டு!

''அண்ணன் மனசில ஒரு பொண்ணு இருக்காங்க... அவங்க பெயர்...'' என்று நித்யா இழுக்க, சத்யாவின் ஆச்சரியம் கூடியது.

''சொல்லு... சொல்லு...'' என்று சுமித்ரா ஊக்க,

''அவங்க பெயர் ம'வில் ஆரம்பிச்சு தா'ல முடியும்!'' கண்களை உருட்டியபடி நித்யா சொல்ல,

''நடுவில் இரண்டு எழுத்து வரும்! சரியா?'' என்ற சுமித்ராவின் முகம், சத்யாவின் முகத்தில் இருந்த திகைப்பைக் கண்டதும் புன்னகையில் மலர்ந்தது.

இருவரும் சிரிக்க, திகைப்பில் இருந்து மீண்டவன், ''ஏய் குட்டிம்மா! உனக்கெப்படி தெரியும்?'' என்று ஆச்சரியத்துடன் விசாரிக்க,

''ம்ம்... பூனை கண்ணை மூடிகிட்டு உலகமே இருண்டு போயிடுச்சுன்னு நினைக்குமாம்!'' என்று தங்கை, தான் மதுவிடம் சொன்னது போலவே சொல்ல, சத்யாவுக்கும் சிரிப்பு வந்தது.

''எனக்கு எப்பவோ தெரியும்! உங்க போன்ல அண்ணி யோட போட்டோவை பார்த்த நாளில் இருந்தே!'' பெருமையாக நித்யா அறிவிக்க,



''வாலு..'' செல்லமாக தங்கையின் காதைப் பிடித்து திருகியவன், புன்னகையுடன் தன்னை பார்த்துக் கொண் டிருந்த சுமித்ராவிடம் திரும்பி, ''சாரிம்மா... உங்ககிட்ட சொல்லக் கூடாதுன்னு இல்லை... யூ.எஸ். போயிட்டு வந்து நானே சொல்லணும் என்று நினைச்சிட்டு இருந் தேன்!'' மன்னிப்பு கேட்கும் குரலில் சொல்ல,

''இருக்கட்டும் சத்யா... நீயா சொல்வே சொல்வே என்று எதிர்பார்த்துட்டு இருந்தேன். நேற்று நீங்க எல் லாரும் வெளியே போயிட்டு வந்த பிறகாவது சொல்வே என்று நினைச்சேன்!'' என்று அவனை ஆச்சரியப் படுத்தியவர், ''இல்லை என்றதும், நாங்களே வரவழைக்க வேண்டியதா போச்சு!'' என்று சிரித்தபடியே சொல்ல, அன்னையின் அனுமதி கிடைத்து விட்ட திருப்தியில் சத்யநந்தனின் மனம் நிறைந்தது.

''நீங்கதாம்மா அப்பா கிட்ட பேசணும்!'' வேண்டு கோள் வைத்த மகனிடம், ''உங்க அப்பாவுக்கு ஏற்கனவே சொல்லியாச்சு! அப்பாவுக்கும் அவள் மேல் நல்ல அபிப்ராயம்தான்! உன் வார்த்தைக்குத்தான் காத்திருந் தோம். நீ ஊரில் இருந்து வந்ததும் அவங்க வீட்டில் போய் பேசலாம்!'' என்று அவன் மனதைக் குளிர வைத் தார், அவனது அன்னை.

சத்யாவின் வீட்டில், அவனது காதலுக்கு எதிர்ப்பு இருக்காது என்பது அவன் அறிந்ததுதான் என்றாலும், தான் சொல்வதற்கு முன்பே அவர்களுக்கு எல்லாம் தெரிந்து, அவர்களுக்கு அதில் சம்மதம் என்பதை அறிந் ததும், அவன் மனம் இறக்கை இன்றி பறந்தது. தனது சந்தோஷத்தை உடனே மதுவை அழைத்து பகிர்ந்தவன், சந்தோஷமாக கிளம்பிச் சென்றான்.

* * *

தனக்குப் பிடித்த வேலை என்பதால், மதுவுக்கு எப்போதுமே அலுவலகம் செல்வதில் மிகுந்த விருப்பம் தான்! ஆனால், சத்யா இல்லாமல் அலுவலகமே வெறிச்சோடி விட்டதைப் போலத் தோன்ற, எப்போது இந்த பத்து நாள் முடியும் என்று எதிர்பார்க்க ஆரம்பித்தாள்.

சத்யா, அவள் அலுவலகத்தில் இருக்கும்போது ஒரு முறை பேசினாலும், தினமும் இரவிலும் அழைத்துப் பேசுவான்.

அவனுடன் பேசிய பிறகே, உறக்கம் அவளைத் தழுவும்!

சத்யா கிளம்பிச் சென்ற நாட்களாய் மது வீட்டில் அதிகம் பேசுவதில்லை. சத்யாவுடன் பேசியதை அசை போட்டபடியே, அவள் சிந்தனையில் மூழ்கி இருக்க, மகேந்திரனும் அவளது மனநிலை அறிந்து வம்பிழுக்காமல் இருந்தான். ஜானகியும் திருமண விஷயம் பேச, நல்ல நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க, வீடே அமைதியாக இருந்தது.

இன்று பிள்ளைகளோடு பேசி, அவர்களது விருப்பத்தையும் அறிந்து விட வேண்டும் என்று முடிவெடுத்த ஜானகி, நல்ல விஷயம் பேசுவதற்கு முன் கோவிலுக்கு சென்று வரலாம் என்றெண்ணி, மதுவிடம் சொல்லி விட்டுக் கிளம்பினார்.

இன்னும் மூன்று நாட்களில் சத்யா வந்து விடுவான் என்ற நிலையில், நாளை அன்னையிடம் தங்கள் விஷயத்தை சொல்லி விடுவது எனத் தீர்மானித்திருந்த



மகேந்திரனும், மதுமிதாவும் எப்படி ஜானகியிடம் பேச்சை ஆரம்பிப்பது என்பதைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர்.

எது எப்படி இருந்தாலும், அன்னையின் மனம் புண்படாமல் பேச வேண்டும் என்பதில் மது உறுதியாக இருந்தாள்.

''இப்போ நினைச்சால் கூட எனக்கு ஆச்சரியமா இருக்கு மகேன்... அம்மாவுக்கு கொஞ்சம் கூடப் பிடிக்காது என்று தெரிந்தும், எப்படி நான் காதலில் விழுந்தேன் என்றே தெரியவில்லை!''

இருவரும் பேசிக் கொண்டிருந்த போது உள்ளே நுழைந்த ஜானகியின் செவிகளில் மது சொன்னது விழ, அவர் அதிர்ந்து போய் நின்றார்.

'கடவுளே! எது வேண்டாம் என்று நினைத்தாரோ அது நடந்தே விட்டதா என்ன?' என்று அவர் மனம் அலங்குகையில், மகேந்திரன் சொன்ன வார்த்தை அவரை யோசிக்க வைத்தது.

''விடு மது! அதையே எத்தனை நாள் சொல்லிச் சொல்லி குழம்பிட்டு இருப்பே? இயல்பா நமக்கு வந்த காதலுக்கு நாம் என்ன செய்ய முடியும்?''

'இவன் என்ன சொல்கிறான்? இவனுமா காதலிக்கிறான்?'

ஜானகி யோசிக்கும்போதே, மதுவின் குரல் இடை மிட்டது.

''அம்மா கிட்ட நம்ம விஷயத்தைப் பற்றி சொல்லணும் என்று முடிவெடுத்து விட்டாலும், கொஞ்சம் பயமாத்தான் இருக்கு!''

மது அச்சம் நிறைந்த குரலில் சொல்லிக் கொண்டு போக, மகேந்திரன் அவளுக்கு ஆறுதல் தரும் விதமாகப் பேசினான்.

''அத்தைக்கு நம்ம ரெண்டு பேர் சந்தோஷம்தான் எல்லாத்தையும் விட முக்கியம்! அதனால், அவங்க நம்ம காதலுக்கு எந்த வித எதிர்ப்பும் சொல்ல மாட்டாங்க என்றுதான் எனக்குத் தோணுது! நீ வேணும்னா பாரு! அத்தையோட முழு சம்மதத்தோடு, அவங்க ஆசீர் வாதத்தோடு நம்ம கல்யாணம் நடக்கப் போகுது!''

உறுதியாக மகேந்திரன் சொன்னதும், ஜானகியின் கண்கள் ஆச்சர்யத்தில் அகன்றன. ஆனந்தத்தில் விழிகளில் நீர் கோர்த்தது.

'கடவுளே! மதுவும் மகேந்திரனும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்களா?'

இங்கே அவர்களது திருமணத்தைப் பற்றி எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று தான் குழம்பிக் கொண் டிருக்க, தங்கள் காதலைப் பற்றி என்னிடம் எப்படி சொல்வது என்று அவர்கள் குழம்பிக் கொண்டிருக் கிறார்கள் என்று நினைத்தவருக்கு, முகத்தில் முறுவல் மலர்ந்தது.

இப்போதே உள்ளே போய், சம்மதம் என்று சொல்லி விடலாமா எனத் தோன்ற, 'ம்ஹூம்... இத்தனை நாளாய் ஒரே வீட்டில் இருக்கிறோம்! எனக்குத் தெரியாமல் இந்த சிறுசுகள் இவ்வளவு வேலை செய்கிறதுகள்! நாம் மட்டும் ஏன் அவசரப்பட வேண்டும்?' என்று எண்ணி யவர், 'அவர்கள் என்னதான் செய்கிறார்கள் என்று பார்ப் போம்!' என்று முடிவு செய்தார்.

இரவு உணவு அமைதியாக முடிந்ததும், உறங்கப் போன ஜானகிக்கு ஆச்சரியமாக இருந்தது. மதுவுக்கு எதுவாக இருந்தாலும் அம்மாவிடம் சொல்லி விட வேண்டும்! மகேந்திரனுக்கும் அப்படியே!



ஆனால்... தாங்கள் ஒருவரை ஒருவர் விரும்புவதை மட்டும் இருவரும் மறைத்து இருக்கிறார்கள் எனும்போது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

உள்ளம் மகிழ்ச்சியில் நிறைந்திருக்க உறக்கம் வர மறுத்தது.

இருவருக்கும் எப்படி எல்லாம் திருமணம் செய்ய வேண்டும்! யார் யாரை எல்லாம் அழைக்க வேண்டும்? என்று மனம் இனிய கற்பனைகளோடு விழித்திருக்க, உறக்கம் எங்கிருந்து வரும்?

* * *

''ப்ளீஸ் மது! உன் உதட்டு மச்சம் என்னை ரொம்ப டெம்ப்ட் பண்ணுது! ஒரே ஒரு தரம் ப்ளீஸ்!''

சத்யநந்தன் அவளை கொஞ்சி, கெஞ்ச, ''ம்ஹூம்!'' லெட்சுத்துடன் மது மறுத்தாலும், அவளது கண்களில் இருந்த மின்னல், அவனை அவளிடம் மேலும் நெருங்கச் செய்தது.

''இல்லை நந்தா! வேண்டாம்!''

அவளது பலவீனமான மறுப்பை, ஒரு புன்னகையுடன் ரசுக்கித் தள்ளி விட்டு, அவளது மேல் உதட்டின் அருகே இருந்த மச்சத்தில் முத்தமிட்ட சத்யநந்தனின் இதழ்கள், அதில் திருப்தி கொள்ளாமல் அவளது இதழ் களையும் மென்மையாக வருட,

''திருடா!'' என்று அவனைத் தள்ளி விட்ட மதுவின் கரங்கள், காற்றில் அலைபாய்ந்தது.

அப்போதுதான் மதுவுக்கு, இதுவரை தான் கண்டது கனவு என்று புரிய, முகம் சிவக்க எழுந்து அமர்ந்தவள், தன் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டாள்.

கைப்பேசி அடிக்கும் ஒலி கேட்டு, வேகமாக அதை எடுத்தவளுக்கு, சத்யாவின் அழைப்பு என்று தெரிந்ததும், கன்னங்கள் மீண்டும் சூடானது.

நடுங்கும் விரல்களால் போனை அழுத்தியவள், ''ஹலோ!'' என்று சொல்ல முயல, குரல் எழும்பாமல் சதி செய்தது.

''ஹே! பட்டுக்குட்டி! என்ன செஞ்சிட்டு இருக்கே?''

அவன் குரலுமே குழைந்து வர, தன்னை சமாளித்துக் கொண்ட மது,

''நல்லா தூங்கிட்டு இருந்தவளை எழுப்பி, என்ன செஞ்சிட்டு இருக்கேன்னு விசாரணை செய்யற நேரமா இது?'' என்றாள்.

அப்போதுதான் நேரம் பார்த்த சத்யா, ''சாரிடா! டிஸ்டர்ப் செஞ்சிட்டேனா? நீ போய் தூங்கு!'' என்று சொல்ல,

எங்கே அவன் போனை வைத்து விடுவானோ என்றெண்ணிய மது, அவசரமாக, ''இருக்கட்டும்! பத்து மணிக்கு பேசினீங்க தானே? வேலை நேரத்தில் வேலை பார்க்காமல் என்ன செஞ்சிட்டு இருக்கீங்க? என்ன இந்த நேரத்தில போன் செஞ்சு இருக்கீங்க?'' என்று விசாரித்தாள்.

''ப்ச்! அதெல்லாம் உனக்குப் புரியாது!'' என்று அவன் சலித்துக் கொள்ள,

''எனக்கா புரியாது?'' என்று அவள் சண்டைக்கு வர,

மது எதிரே நின்று இடுப்பில் கை வைத்து முறைப்பதைப் போலத் தோன்றி விட, சத்யாவுக்கு சிரிப்பு வந்தது.



''ஹே! இப்போ எதுக்கு சிரிக்கறீங்க?''

''பின்னே! நானே உன்னோட நினைப்பில் நைட் எல்லாம் தூங்க முடியாமல் இங்கே தவிச்சிட்டு இருக்கேன்! அங்கே மேடமும் அப்படித்தான் இருப்பீங்க என்று நினைச்சு கால் செஞ்சால், நீ குறட்டை விட்டு தூங்கிட்டு இருந்தேன்னு சொல்றே! கொஞ்சம் கூட ஃபீலிங்சே இல்லையாடி உனக்கு?''

சத்யநந்தனின் அங்கலாய்ப்பில் சிரிப்பு வந்தாலும், ''ஆமாம்! இங்கே மட்டும் என்னவாம்?'' என்று மெதுவாக முணுமுணுத்தாள்.

''என்னடா சொல்றே பட்டு? காதில விழலை!''

சத்யா கேட்டதும், ஏதாவது சொல்லி தானே மாட்டிக் கொள்ளப் போகிறோம் என்று எண்ணிய மது, ''சரி... இப்போ என்ன வேணும் உங்களுக்கு?'' என்று விசாரிக்க,

''அதெல்லாம் சொன்னால் நீ போன்லயே அடிப்பே! அட்லீஸ்ட் உன் உதட்டோர மச்சத்தில சின்னதா ஒரு முத்தம்...'' என்று அவன் ஆரம்பித்ததும், தன்னுடைய கனவின் நினைவில் அவளுக்கு இதயம் ஏகத்துக்கும் படபடக்க,

''என்ன பட்டு! உன் ஹார்ட் பீட் இங்கே கேட்குது எனக்கு!'' என்று வியந்தான் அவளது இதயத்தில் சிற்றிருப்பவன்.

'பக்கத்தில் இருக்கிற மாதிரியே பேசறான் பாரு!' என்று மனதுக்குள் அவனை செல்லமாகத் திட்டி விட்டு,

''உதை வாங்கப் போறீங்க! ஒழுங்கா போய் வேலையைப் பாருங்க!'' அதட்டலாக சொல்வதைப்

போலச் சொல்லி, தன் படபடப்பை அடக்க முயன்றாள்.

''நீ கொடுக்க வேண்டியதைக் கொடு! நான் போய் வேலையைப் பார்க்கிறேன்! இல்லன்னா... வேலை டிலே ஆகி நான் இந்தியா வருவதும் டிலே ஆகும்! சொல்லிட்டேன்!''

மிரட்டலாக சத்யா சொல்ல, அவளுக்கு புன்னகை மலர்ந்தது.

புன்னகையுடன் படுக்கையில் சரிந்தவள், ''சரி! இப்போ என்ன செய்யணும்?'' என்று மென்மையாக, மிக மிக மென்மையாக வினவ,

''நான் ஒரு முத்தம் கொடுப்பேனாம்! நீயும் எனக்கு ஒண்ணு கொடுப்பாயாம்! நானும் சமத்தா போய் வேலையைப் பார்ப்பேனாம்!''

ஏற்கனவே கனவின் பாதிப்பில் இருந்த மயக்கம் இன்னும் தீர்ந்த பாடில்லை!

'இவன் வேற!' என்று செல்லமாக சலித்துக் கொண்டாலும், ''ம்...'' என்று அவள் முனகினாள்.

''ரெடியா?'' என்று கிசுகிசுத்தவன், கைப்பேசியில் தன் இதழ்களைப் பதிக்க, மதுவின் விரல்கள் அவளையும் அறியாமல் அவளது உதட்டோர மச்சத்தை வருட, தேகமெங்கும் ஒரு சிலிர்ப்பு ஓடி மறைந்தது.

சிவந்த முகத்தைத் தலையணையில் புதைத்தபடி அவள் அமைதியாக இருக்க,

''ஹே! பட்டுக்குட்டி! இப்போ உன் முறை!'' என்ற சத்யாவின் குரல் அவளைத் தீண்டியது.

தன் மயக்கத்தில் இருந்து விடுபட்டால் அல்லவோ, அவளால் எதுவும் செய்ய முடியும்?



எதிர்முனையில் இருந்து எந்த சத்தமும் வராமல் போகவே, ''மது? மது?'' என்று சத்யா குரல் உயர்த்தி அழைக்க,

உள்ளே போய் இருந்த குரலை, வெகுவாக முயன்று வெளியே கொண்டு வந்த மது, ''ம்...'' என்றாள்.

''நான் என்ன கதையா சொல்லிட்டு இருக்கேன்? ம் கொட்டி கேட்டுட்டு இருக்கே! பதில் முத்தம் தாடி என் செல்லமே!''

''ப்ளீஸ் நந்தா!'' என்றாள், அவனது உள்ளம் கவர்ந்தவள்.

''ஹே! இதெல்லாம் அநியாயம்! அப்புறம் நேர்ல வட்டி போட்டு வசூல் செஞ்சுடுவேன்!'' என்று அவன் மிரட்ட,

இப்போதைக்கு தப்பித்தால் போதும் என்று அவளும், ''சரி! கணக்கு வைச்சிக்கோங்க!'' என்று அவசரமாக சொல்லி, அழைப்பைத் துண்டித்து விட்டு, உறங்க முயன்றாள்.

அந்தப் பக்கம், அவளது நிலையை உணர்ந்தவனாக, சத்யாவும் புன்னகையுடன் வேலையை கவனிக்க போனான்.

* * *

உறக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்த ஜானகி, நீர் அருந்தலாம் என்று தன் அறையில் இருந்து வெளியே வர, மதுவின் அறையில் இருந்து வந்த பேச்சு சத்தம் அவள் யாருடனோ பேசிக் கொண்டிருப்பதைத் தெரிவித்தது.

'இந்த நேரத்தில் யாருடன் பேசுகிறாள்?' யோசித்தபடியே, அவர் திரும்ப, வெளிப்புற கதவு திறந்திருப்பது கண்ணில் பட்டது.

வெளியே எட்டிப் பார்த்தவர் கண்களில், மகேந்திரன் கைப்பேசியில் பேசிக் கொண்டிருந்தது கண்ணில் பட, மது யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது அவருக்குத் தெளிவானது!

'ஒரே வீட்டில் இருந்து கொண்டு இருவரும் போனில் பேசிக் கொள்கிறார்களா?' என்று புன்னகையுடன் எண்ணியவர், 'இனிமேல் நேரம் கடத்தக் கூடாது! கல்யாணத்துக்கு நாள் பார்க்க வேண்டியதுதான்!' என்று முடிவெடுத்தார்.

அடுத்த நாளே, இருவரின் ஜாதகங்களையும் எடுத்துக் கொண்டு தனக்குத் தெரிந்த ஒரு ஜோசியரிடம் செல்வது என முடிவெடுத்து, நிம்மதியாக உறங்கப் போனார்.

அடுத்த நாள், மூவரும் தத்தம் யோசனையில் மூழ்கியபடியே வேலையைத் தொடர, காலை உணவின் போது மகேந்திரன் மதுவிடம் 'இப்போ பேசலாமா?' என்று கண்களாலேயே வினவ, 'இப்போ வேண்டாம்! மாலை பேசலாம்!' என்று மதுவும் கண்களாலேயே பதில் அளிக்க, நேற்றில் இருந்தே இருவரையும் கவனமாக கவனித்துக் கொண்டிருந்த ஜானகிக்கு புன்னகை மலர்ந்தது.

'நீங்க ரெண்டு பேரும் இப்படி கண்ணாலேயே பேசிட்டு இருங்க! நான் போய் கல்யாண நாள் பார்த்துட்டு வரேன்!' மனதுக்குள் சொல்லிக் கொண்டவருக்கு புன்னகை மேலும் விரிந்தது.

இருவரும் கிளம்பியதும், இருவரின் ஜாதகங்களையும் பீரோவில் இருந்து எடுக்கும்போது, அவருடைய மாங்கல்ய கோடி கண்ணில் பட, இதை மாற்றி மதுவுக்கு



ஏதாவது நகை எடுத்து கொண்டு வரலாம் என்று அனைத்தையும் எடுத்துக் கொண்டு கிளம்பியவர், கல்யாண நாளை குறித்துக் கொண்டு வந்து இருவருக்கும் இன்ப அதிர்ச்சி தர வேண்டும் என நினைக்க, ஆனால் அவருக்குத்தான் ஜோசியர் இடத்தில் அதிர்ச்சி காத்திருந்தது.

பிள்ளைகள் மனம் விரும்பி விட்டது எனத் தெரிந்த பிறகு, ஜானகிக்கு ஜாதகப் பொருத்தம் பார்க்க விருப்பமில்லை! ஆனால், இருவரின் ஜாதகத்துக்கும் ஏற்ற ஒரு நல்ல நாளில் திருமணம் செய்ய வேண்டும் என்று எண்ணியே அவர் ஜோசியரை நாடி வந்தது!

வெகு நேரம் இருவரின் ஜாதகங்களையும் பார்த்து கணிதத்தில், ஏதோ ஏதோ எழுதிக் கொண்டிருந்த ஜோசியர், அமைதியாக திருப்பி தந்து விட, ஜானகி அவரை கேள்வியுடன் நோக்கினார்.

''இந்த ரெண்டு ஜாதகத்துக்கும் கொஞ்சம் கூட திருமணப் பொருத்தம் இல்லைம்மா!''

சட்டென்று அவர் சொல்லி விட, ஜானகி திகைத்துப் போனார்.

ஜாதகப் பொருத்தம் இல்லை என்றால் என்ன? இருவருக்கும் இடையே இருக்கும் அன்புதானே இல்வாழ்க்கைக்கு முக்கியம் என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்ட ஜானகி,

''இல்லை அய்யா! அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறாங்க! நீங்க கல்யாணத்துக்கு ஒரு நல்ல நாள் மட்டும் பார்த்து சொல்லுங்க!'' அமைதியாக வினவ,

அவரை விநோதமாகப் பார்த்த ஜோசியர், ''ஜாதகம் என்று பார்க்க வந்து விட்டால், எல்லாம் சரியாய் இருந்தால்தான்மா நான் திருமண நாளை குறிச்சு தருவேன்! இதுதான் என்னோட பழக்கம்!'' என்று விட, மேற் கொண்டு என்ன சொல்வது என்று புரியாமல் ஜானகி கிளம்ப எத்தனிக்க,

''சொல்றேன் என்று தப்பா நினைக்காதீங்கம்மா! இவங்க ரெண்டு பேர் கல்யாணமும் நீங்க நினைக்கிற அளவுக்கு அவ்வளவு எளிதா நடக்காது!'' என்ற ஜோசியரின் வார்த்தைகள் ஜானகியின் மனதில் கலக்கத்தை ஏற்படுத்த,

''ஏதாவது பரிகாரம் செய்ய முடியுமா அய்யா?'' என்றார்.

''ரெண்டு பேருக்கும் வேற வேற இடத்தில திருமண ஏற்பாடு செய்யறதுதான் நல்ல பரிகாராம்!''

சின்னப் புன்னகையோடு ஜோசியர் அமைதியாக சொன்ன விதம், ஜானகிக்கு அமைதி தரவில்லை! மாறாக உள்ளம் மேலும் கலங்கிப் போயிற்று!

இரண்டு நாட்களாக, மகேந்திரனுக்கும் மதுவுக்கும் திருமணம் என்று அவர் கட்டி வைத்திருந்த கற்பனை கோட்டை, சீட்டு கட்டு மாளிகையாக சரிந்து போனதில் மனம் நொந்தது.

இதுவரை, மகேந்திரனும் மதுவும் ஆசைப்பட்டது எதையும் அவர் மறுத்ததில்லை!

இப்போது அவர்கள் விரும்பும் வாழ்க்கையை, அமைத்து தர முடியாமல் போய் விடுமோ என்ற அச்சம் வெகுவாய் மனதை வாட்டியது.



'இல்லை! எதையும் விட, என் குழந்தைகளின் மகிழ்ச்சி எனக்கு முக்கியம்! ஜாதகப் பொருத்தம் என்ன பெரிய விஷயமா? ஜாதகப் பொருத்தம் பார்த்து திருமணம் செய்து கொள்பவர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று உத்தரவாதம் இருக்கிறதா என்ன? அவர்கள் திருமணம் எப்படியும் நடக்கும்! நடத்திக் காட்டுவேன்!'

மனதில் உறுதி மொழி எடுத்துக் கொண்டு, தன் யோசனையில் மூழ்கியபடி அக்கம் பக்கம் கவனம் செலுத்தாமல் சாலையைக் கடந்த ஜானகியின் மீது, வேகமாக வந்த ஒரு கார் பெரும் சப்தத்துடன் மோதி நின்றது.

* * *

கொஞ்ச நேரம் முன்பு கைப்பேசியில் சத்யாவுடன் பேசிய வார்த்தைகள் மனதில் நிழலாட, புன்னகையுடன் செல்லையைப் பார்த்துக் கொண்டிருந்த மதுமிதாவின் கைப்பேசி ஒலித்தது.

கைப்பேசியின் திரையில் மகேந்திரனின் எண் ஒளிர, புன்னகையுடன் எடுத்து, ''சொல்லு மகேன்!'' என்ற வளுக்கு, எதிர் முனையில் இருந்து வந்த வேகமான மூச்சு சத்தம் அச்சத்தைக் கிளப்ப, ''மகேன்? என்னடா?'' என்று பதறினாள்.

''மது... மது... அத்தைக்கு.. அத்தைக்கு ஆக்சிடென்ட் ஆகிடுச்சு... உடனே சுகம் ஹாஸ்பிடல் கிளம்பி வா!''

பதட்டத்துடன் மகேந்திரன் சொன்னதும், ''என்ன? என்ன ஆச்சு? என்ன சொல்றே மகேன்? எப்படி?

எங்கே?'' கேள்விகளை அடுக்கத் துவங்கியவளின் குரல் நடுங்கத் தொடங்க,

''பேச நேரமில்லை! எனக்கே இப்பத்தான் ஹாஸ்பிட்டல்ல இருந்து கால் வந்தது... சீக்கிரம் வா!'' என்றதோடு மகேந்திரன் அழைப்பைத் துண்டித்து விட, அடுத்த நிமிடம் சத்யாவின் தந்தைக்கு இன்டர்காம் வழியாக, விவரம் சொல்லி விட்டு கிளம்ப முயன்ற வளிடம்,

''இரும்மா... நான் டிரைவரை காரில் கொண்டு விட்டு சொல்றேன்! ஏதாவது உதவி தேவை என்றால் தயங்காமல் கூப்பிடு!'' என்றார் அவர்.

'கடவுளே! அம்மாவுக்கு எதுவும் ஆகக் கூடாது! எதுவும் ஆகக் கூடாது!'

இதை மட்டுமே மனதில் உருப்போட்டுக் கொண்டு வந்து அவர் மருத்துவமனை வந்து சேர, மகேந்திரனும் அதே நேரம் தன் வண்டியில் வந்து இறங்கினான்.

ஓட்டமும் நடையுமாக வரவேற்பில் விசாரித்துக் கொண்டு உள்ளே சென்றவர்கள், ஜானகி அனுமதிக்கப் பட்டிருந்த அறைக்குள் நுழைய எத்தனிக்க, ''இப்போ போக முடியாது!'' என்று ஒரு நர்ஸ் தடுத்தார்.

ஜானகியை இங்கே கொண்டு வந்து சேர்த்தவர், ''சார்... என் காரில்தான் அடிபட்டது. ஆனால், தப்பு அவங்க பேர்லதான் சார். அவங்களை கேட்டாலே சொல்வாங்க. அதனால்தான், தைரியமா நான் அவங்களைக் கொண்டு வந்து சேர்த்தேன். அவங்க கைப்பையில் இருந்த போனில் இருந்துதான் எமர்ஜென்சி நம்பர்ஸ் என்று இருந்த உங்களுக்கு போன் செஞ்சேன். இந்தாங்க அவங்க பேக்! இது என் போன் நம்பர்'' என்று அவரது



கைப்பேசி எண்ணை கொடுத்து விட்டு கிளம்ப, மகேந்திரன் நன்றி சொல்லி ஜானகியின் கைப்பையைப் பெற்றுக் கொண்டான்.

என்ன நிலவரம் என்று தெரியாமல், இருவரும் தவித்துக் கொண்டிருக்க, அடுத்த பத்து நிமிடத்தில் மருத்துவர் வெளியே வந்தார்.

''டாக்டர்... என்ன ஆச்சு டாக்டர்?''

இருவரும் பதட்டமான குரலில் விசாரிக்க, ''ஒரு நிமிஷம் என் ரூமுக்கு வாங்க!'' என்று அழைத்து சென்றார் மருத்துவர்.

இருவரிடமும் விவரங்கள் கேட்டவர், ''தலையில் பயங்கர அடி பட்டிருக்கு! ஹெவி பிளட் லாஸ்! உண்டிப்பா ஆபரேஷன் செய்ய வேண்டி இருக்கும்! இப்போதைக்கு முதல் உதவி செய்திருக்கோம்! சில டெஸ்ட் முடிவுகள் வந்த பிறகுதான் ஆபரேஷன் செய்ய தைப் பற்றி முடிவெடுக்கணும்!'' என்று விளக்கம் கூற,

''உயிர்.. உயிருக்கு எந்த ஆப..த்தும் இல்லையே?'' என்று கேட்டு முடிப்பதற்குள், மகேந்திரன் குரல் தடுமாறியது.

மதுவுக்கு அது கூட முடியவில்லை! கண்ணாடித் தடுப்பின் வழியே அன்னையை பார்த்தவளுக்கு மயக்கம் வரவில்லை என்பதுதான் அதிசயம்! மற்றபடி, வாய் திறந்து ஒரு வார்த்தை கூட பேச முடியாமல், தொண்டை அடைத்தது.

''இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது மகேந்திரன்! ஸ்கேன் முடிவுகள் வந்த பிறகுதான், எந்த மாதிரி பாதிப்பு என்று தெரியும்!''

''ஓ...!'' சோர்வுடன், மகேந்திரன் நாற்காலியில் சாய, மது சிலையென அமர்ந்திருந்தாள்.

''டாக்டர்! அந்த பேஷண்ட் கண்விழிச்சு பார்க்கிறாங்க!''

வேகமாக உள்ளே வந்த நர்ஸ் சொன்னதும், மருத்துவரும் மகேந்திரனும் வேகமாக ஜானகி இருந்த அறைக்கு விரைய, மதுவும் தன்னுணர்வு பெற்றவளாக வேகமாக பின் தொடர்ந்தாள்.

மருத்துவர் ஜானகியைப் பரிசோதிக்க, கலங்கிய முகங்களோடு தன்னருகில் வந்து நின்ற மகேந்திரனையும், மதுவையும் கண்ட ஜானகி லேசாக புன்னகைக்க முயன்றார்.

ஒரு ஊசி மருந்தை செலுத்தி விட்டு, ''ரொம்ப நேரம் பேச்சு கொடுக்காதீங்க... சீக்கிரம் கிளம்புங்க!'' என்று இருவரிடமும் சொல்லி விட்டு நகர, ''அம்மா...'' ''அத்தை...'' என்ற அழைப்போடு இருவரும் ஜானகியின் அருகில் வர, ஜானகிக்கு தன் இறுதி நேரம் நெருங்கி விட்டதைப் போன்ற உணர்வு எழுந்தது.

ஜோசியரின் வார்த்தைகள் மனதில் எதிரொலிக்க, ''மகேன்... மது...'' என்று மெல்லிய குரலில் அழைக்க முயன்றவரின் குரல் வெளியே வரவே இல்லை! இவ்வுலகத்தை விட்டு போவதற்கு முன் தான் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான கடமையை, செய்துவிட வேண்டும் என்று அவரது உள்ளம் தவித்தது.

''என்ன அத்தை?'' என்றபடி மகேந்திரன் அவர் வாயருகில், தன் செவியைக் கொண்டு செல்ல, ''என்கை...ப்பை...'' என்று தட்டுத் தடுமாறி பேச முயன்ற வருக்கு ஒரு வார்த்தை பேசியதற்கே மூச்சு வாங்கியது.



சட்டென்று மகேந்திரன் அவரது கைப்பையை எடுத்துக் கொண்டு வந்தான்.

'அதைத் திற!' என்று சைகையில் சொன்னவர், அவன் திறந்ததும், உள்ளே ஒரு சின்ன நகைப் பெட்டியை எடுத்து திறந்து, மகேந்திரனிடம் கொடுத்தார்.

என்னவென்று புரியாமல் அத்தை கொடுத்ததை வாங்கி கொண்ட மகேந்திரன், அந்தப் பெட்டியில் மாங்கல்ய கொடி இருந்ததைக் கண்டதும், திகைத்து அவரை நோக்க, ''மதுவின் கழுத்தில் கட்டு!'' என்று ஜானகி சைகை செய்தார்.

மகேந்திரனும் மதுவும் எதிர்பாராமல் தீயை மிதித்து விட்டதைப் போன்ற அதிர்ச்சியில், திகைத்து நின்றனர்.



## 13

ஜானகி, ''மதுவின் கழுத்தில் மாங்கல்யத்தைப் பூட்டு!'' என்று தன்னைப் பணித்ததும், திகைத்து நின்ற மகேந்திரன், ஜானகியின் கண்களில் தவிப்பு மிகுவதைக் கண்டதும், முயன்று தன்னை மீட்டுக் கொண்டான்.

அத்தை, தனக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயத்தில், தங்கள் திருமணத்தைப் பற்றி பேசுகிறார்கள் என்று உணர்ந்தவனாக, ''அத்தை... உங்களுக்கு எதுவும் ஆகாது! பயப்படாதீங்க! நீங்க நல்ல படியா எழுந்து வந்ததும், உங்க ஆசீர்வாதத்துடன் எங்கள் கல்யாணம் நடக்கும்!'' ஆறுதலாகச் சொன்னவன்,

'நீயும் சொல்லேன்!' என்ற கெஞ்சுதலோடு மதுவை நோக்க, மகேந்திரன் பேச ஆரம்பித்ததுமே தன்னிலை

அடையய் ஆரம்பித்திருந்த மதுவுக்குமே, தனக்கு ஏதாவது ஆகிவிடக் கூடும் என்ற பயத்திலேயே அன்னை இப்படி பேசுகிறார் என்று தோன்றியது.

அவள் ஏதோ பேச ஆரம்பிக்கும் முன், ஜானகி தன் கையை நீட்டித் தடுத்தார். கண்களில் தவிப்பு மேலிட, தான் சொன்னதையே சைகையில் மீண்டும் அவர் வலியுறுத்த, மகேந்திரன் இயலாமையோடு மதுவை நோக்கினான்.

அச்சம் நிறைந்த விழிகளோடு மகேந்திரனையும், அன்னையையும் மாற்றி மாற்றி பார்த்த மது, அன்னையின் அருகில் குனிந்து, ''அம்மா.. இப்போதைக்கு கொஞ்சம் அமைதியா இருங்க... நீங்க வீட்டுக்கு வந்த பிறகு பேசிக் கொள்ளலாம்!'' கெஞ்சுதலாக மொழிந்ததும், புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்களே என்ற ஆயாசத்தோடு அவளை நோக்கியவரின் கண்கள் மெல்ல செருகத் துவங்கியது.

''டாக்டர்!'' என்ற கூவலோடு மது மருத்துவரைப் பார்க்க விரைய, மகேந்திரனும் பின் தொடர்ந்தான்.

''அவங்க இவ்வளவு நேரம் விழிச்சு இருந்ததே பெரிசு! நான் போட்ட ஊசி மருந்தின் விளைவுதான் இந்த மயக்கம்!'' என்று இருவரையும் அவர் சமாதானப் படுத்திக் கொண்டிருக்கும்போதே, ஒரு நர்ஸ் ஜானகியின் பரிசோதனை முடிவுகளைக் கொண்டு வர, அவற்றை அமைதியாக கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த மருத்துவரின் முகம் மாற மாற, மகேந்திரனுக்கும் மதுவுக்கும் கலக்கம் ஏறிக் கொண்டே போனது.

அவர் தலை லேசாக நிமிரத் தொடங்கியதுமே, ''என்ன டாக்டர்? எனி ப்ராப்ளம்?'' மெல்லியக் குரலில்



[illegible]யத்துடன் மகேந்திரன் கேட்டதும், மருத்துவர் ஆமோதிப்பாகத் தலையசைத்தார்.

''பரிசோதனை முடிவுகளைப் பார்க்கும்போது, அவங்களுக்கு உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று தெளிவாகுது..ஆனால்...'' என்று மருத்துவர் தயங்க,

இருவரும் 'ஆனால்...என்ன?' என்று கேள்வியை விழிகளில் தாங்கியபடி அவரையே அச்சத்துடன் நோக்கினர்.

''ஆபரேஷன் முடிஞ்சதும்... அவங்க முழுமையாக குணமாகலாம்!'' என்று அவர்களை மலர வைத்தவர், அடுத்த கணமே, ''இல்லை... கோமாவில் இருக்க வைத்திடலாம்!'' என்று அவர்களை அதிர வைத்தார்.

''உங்க ரெண்டு பேருடைய அதிர்ச்சி எனக்குப் புரியுது! ஆனால்.. சிகிச்சையின் விளைவுகளைப் பற்றி உங்களுக்குத் தெளிவாக சொல்ல வேண்டியது என் கடமை! இந்த பேப்பரில் கையெழுத்து போடுங்க! இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் ஆபரேஷனுக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யணும்!''

மருத்துவர் சொல்லிவிட்டு போய் விட, அவர் சொன்ன இடத்தில் கையெழுத்து போட்டு விட்டு மதுவிடம் திரும்பிய மகேந்திரனுக்கும், மது சிலையாய் அமர்ந்திருந்த நிலை கண்ணீரை வரவழைத்தது.

இப்போது கண்ணீரை விட, தானும் நம்பிக்கையோடு இருந்து அவளுக்கும் நம்பிக்கை அளிப்பதுதான் தேவை என்பதை உணர்ந்தவன், ''மதும்மா... அதான் டாக்டர்... அத்தை நல்ல படியா குணமாகவும் வாய்ப்பு இருக்கு

என்று சொன்னார் இல்லை? நாம் அதுதான் நடக்கும் என்று நம்புவோம்!'' என்று ஆறுதலாக சொல்ல,

மெல்ல அவன் புறம் திரும்பிய மது, ''அம்மா... அம்மாவுக்கு ஒண்ணும் ஆகாதுதானே மகேன்?'' கேவலுடன் வினவ, ''ஒண்ணும் ஆகாதுடா!'' என்று தனக்கும் சேர்த்து சொல்லிக் கொண்டவன்,

''நீ முதலில் இப்படி அழுது கரையறதை நிறுத்து! எனக்கு இது எங்க மதுவா என்று சந்தேகமா இருக்கு!'' என்று அதட்டி அவளை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போனான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், அறுவை சிகிச்சை நடக்கும் அறைக்கு ஜானகியைக் கொண்டு சென்று விட, மகேந்திரனும் மதுவும், காத்திருப்போர் அறையில் பிரார்த்தனைகளோடு அமர்ந்திருந்தனர்.

சத்யாவின் தந்தை கோபிநாத் மீட்டிங் முடிந்ததும், நினைவு வந்தவராக, மதுவிடம் அவளது அன்னையைப் பற்றி விசாரிக்க, அவளது கைப்பேசிக்கு அழைக்க, அது அணைக்கப்பட்டிருந்தது.

காரின் ஓட்டுனர் மூலம், எந்த மருத்துவமனை என்று அறிந்தவர், மருத்துவமனை எண்ணுக்கு அழைத்தார். மகேந்திரன் தான் வந்து பேசினான். அவன் மூலம் விஷயம் அறிந்தவர், எந்த உதவி வேண்டுமானாலும் கேட்க சொல்லி அவனிடம் சொல்லி விட்டு, நாளை தான் வருவதாக சொன்னார்.

மனைவி மூலம், மகன் மதுவை விரும்புகிறான் என்று தெரிந்ததும், மதுவை நேரிடையாக அலுவலகத்தில் தினமும் பார்த்துக் கொண்டிருப்பவர் என்ற முறையில்,



தன்ல பெண்ணைத்தான் மகன் தேர்ந்தெடுத்து இருக்கிறான் கோபிநாத்துக்கு அதில் சந்தோஷமே! மதுவின் அன்னையின் நிலை அவருக்கும் வருத்தத்தை தந்தது. இதைப் பற்றி சத்யாவிடம் இப்போது சொல்லலாமா என்று யோசித்தவர், நாளை அறுவை சிகிச்சை முடிந்ததும் சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தார். எப்போதும் போல, இந்திய நேரம் இரவு பத்து மணிக்கு மதுவை அழைத்த சத்யாவின் அழைப்புகள் எடுக்கப்படவே இல்லை!

தன் அன்னையைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லாமல் இருந்த மதுவுக்கு தன் கைப்பையில், முழுதும் சார்ஜ் இறங்கிப் போயிருந்த நிலையில் இருந்த கைப்பேசியைப் பற்றிய எண்ணமே இருக்கவில்லை!

சத்யா எப்போது அழைப்பான் என்று தினமும் காத்திருக்கும் மதுவின் கைப்பேசிக்கு, பத்து முறைக்கும் மேலாக அழைத்த சத்யாவுக்கு, நெஞ்சில் கலக்கம் குழ்ந்தது.

என்னவாயிற்று என்று தெரிந்து கொள்ளா விட்டால், மண்டை வெடித்து விடும் போலத் தோன்ற, இரவு வெகு நேரம் ஆகிவிட்டது என்பதை அலட்சியம் செய்து, மகேந்திரனின் கைப்பேசி எண்ணுக்கு அழைத்தான்.

கண் மூடி பிரார்த்தனையில் அமர்ந்திருந்த மகேந்திரன், கைப்பேசியின் அழைப்பு சத்தத்தில் உணர்வு பெற்று, கைப்பேசியை எடுத்து நோக்க, சத்யாவின் அழைப்பு என்று புரிந்தது.

தன்னிச்சையாக கண்கள் மதுவிடம் பாய, சுற்றுப் புறத்தை மறந்து, கண் மூடி அமர்ந்திருந்த மதுவுடன்

உதடுகள் ஏதோ ஒரு ஸ்லோகத்தை சொல்லிக் கொண்டிருந்தன.

மெதுவாக எழுந்து, தாங்கள் இருந்த இடத்தில் இருந்து நகர்ந்து வந்தவன், அழைப்பை எடுத்ததும், ''மகேன்... என்ன ஆச்சு? ஏன் மது போனை எடுக்க மாட்டேங்கிறா?'' என்ற சத்யாவின் பதட்டம் நிறைந்த குரல் ஒலித்தது.

''சத்யா... அத்தைக்கு ஆக்சிடென்ட்...''

மகேந்திரன் முடிக்கக் கூட இல்லை!

''என்ன ஆச்சு? என்ன ஆச்சு மகேன்? இப்போ எப்படி இருக்காங்க?''

பதட்டத்துடன் சத்யநந்தனிடம் இருந்து கேள்விகள் பாய்ந்து வந்தன.

விவரத்தைச் சொன்னவன், ''ஆபரேஷன் நடந்துட்டு இருக்கு! டாக்டர் எ..ன்ன... என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்று சொல்றார்...'' என்று சொல்லும் போதே, கண்கள் கலங்கி விட, குரலிலும் அது எதிரொலித்தது.

''மகேன்... பயப்படாதே.. அத்தை நல்ல படியா பிழைச்சு வருவாங்க... நீயே இப்படி கலங்கினால் மது எப்படி தாங்கிப்பா? மது எப்படி இருக்கா?''

கவலை நிறைந்த குரலில் விசாரித்த சத்யா, ''ரொம்ப பயந்து போயிருக்கா!'' என்ற மகேந்திரனின் பதிலில்,

''உனக்கு நான் சொல்லத் தேவை இல்லை! இருந்தாலும் மனசு கேட்கலை... மதுவை நல்லபடியா பார்த்துக்கோ.. அவளுக்குத் தைரியம் சொல்லு... என்றவன், ''மதுகிட்ட இப்போ பேச முடியுமா?'' என்றான்.



''இல்லை சத்யா. அத்தையை ஆபரேஷன் தியேட்டருக்குள் கூட்டிட்டு போனதில், கண் மூட வேண்ட ஆரம்பிச்சவதான். சுற்றி என்ன நடக்குதுன்னே அவளுக்குத் தெரியலை!''

மகேந்திரன் சொன்னதும், சத்யாவுக்கு மதுவின் நிலையை உணர முடிந்தது.

''தைரியமா இரு மகேன்! நான் உடனே கிளம்பி வர பார்க்கிறேன்!'' என்று கூற,

''இல்லை சத்யா... நீ உன் வேலையை முடிச்சிட்டே வா.. நான் பார்த்துக்கறேன்!''

நண்பனுக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாகப் பேசிய மகேந்திரனிடம், ''இல்லை மகேன்... இந்த நிலைமையில் என்னாலும் இங்கே நிம்மதியா வேலையைப் பார்க்க முடியாது... இந்த நேரத்தில், மது பக்கத்தில் இருக்க முடியலையேன்னு எனக்கு ஒரே தவிப்பா இருக்கு! எவ்வளவு சீக்கிரம் கிளம்பி வர முடியுமோ... வரேன்!'' என்று அழைப்பைத் துண்டித்தவனின் உடலும் உள்ளமும், உடனே மதுவிடம் போகத் துடித்தன.

தன் அன்னையின் பால் மது கொண்டிருந்த அன்பை புரிந்தவன் என்பதால், இப்போது அவள் மனம் எவ்வளவு வேதனையில் ஆழ்ந்திருக்கும் என்பதை உணர்ந்தவனது உள்ளம், தன்னிச்சையாக, ஜானகிக்காக பிரார்த்தனை செய்தது.

அங்கிருந்த உதவியாளரிடம், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தியா செல்வதற்கான, டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டு, தன் மனதைத் திசை திருப்ப வேலையில் ஆழ்ந்தாலும், மனம் முழுக்க, மதுவிடமே நிலை கொண்டிருந்தது.

அடுத்த ஐந்து மணி நேரம், ஐந்து நீண்ட யுகங்களாகக் கழிய, அறுவை சிகிச்சை அறையில் இருந்து மருத்துவர் வெளியே வந்ததும், மகேந்திரன் வேகமாக அவரிடம் விரைந்தான்.

ஆவலும் பயமுமாக அவன் நோக்க, ''ஆபரேஷன் முடிஞ்சாச்சு! ஆனால், இப்போதைக்கு நான் எந்த உறுதியும் தர முடியாத நிலையில் இருக்கேன்! அவங்க கண் விழிச்சால்தான் எதையும் சொல்ல முடியும்!'' மென்மையாகச் சொல்லி விட்டு மருத்துவர் நகர, சோர்ந்து போய், தான் அமர்ந்திருந்த இடத்துக்கு வந்த மகேந்திரன், மதுவை நோக்க, சுற்றுப்புறம் அறியாதவளாக மது இன்னமும் ஸ்லோகங்களைச் சொல்லிய வண்ணம் இருந்தாள்.

தான் செய்வதற்கு ஒன்று இல்லாத நிலையில், கடவுளிடம் சரணடைவதைத் தவிர வேறு வழி தெரியாமல் மகேந்திரனும் தன் பிரார்த்தனையைத் தொடர்ந்தான்.

அடுத்த நாள், கோபிநாத் சுமித்ராவையும் நித்யாவையும் அழைத்துக் கொண்டு மருத்துவமனை வந்ததை மது உணரக் கூட இல்லை! சுமித்ராவுக்கும் அவளது நிலை வேதனையாக இருந்தது. மகேந்திரனிடம் ஆறுதல் சொல்லி விட்டு, எந்த உதவி என்றாலும் தயங்காமல் கேட்க வேண்டும் என்று வலியுறுத்தி விட்டு, அவர்கள் கிளம்பிச் சென்றனர்.

அடுத்த இரண்டு நாட்களும், இதே தவிப்பில் கழிய, விவரம் அறிந்து மருத்துவமனை வந்த நந்தினி, இருவருக்கும் ஆறுதலாக இருந்தாள்.

மகேந்திரனை அழைத்த மருத்துவர், ''சாரி மகேந்திரன்! இந்த இரண்டு நாட்களில் அவங்களுக்கு



விழிப்பு வந்திருந்தால் பிரச்சனை இருந்திருக்காது.. இப்போ, அவங்க கோமா நிலைக்கு போயிட்டாங்க என்பது துரதிஷ்டமான விஷயம்!'' என்று இப்போதைய நிலையை விளக்க, மகேந்திரனுக்கு கட்டுப்பாட்டையும் மீறி கண்களில் நீர் சுரந்தது.

முகத்தை மூடிக் கொண்டு கண்ணீரில் கரைந்தவன், சில நிமிடங்களில் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு, ''எப்போ நினைவு திரும்பும் டாக்டர்?'' என்று வினவ,

பெருமூச்சுடன் அவனை நோக்கிய மருத்துவர், ''எங்க சிகிச்சைக்கு சரியான முறையில் அவங்க உடல் முந்துழைத்திருக்கும் பட்சத்தில், இந்த நேரம் அவங்களுக்கு நினைவு திரும்பி இருக்கணும்...ஆனால்... அவங்க நார்மலான நிலைக்குத் திரும்பலாம்... திரும்பாமலும் போகலாம்...'' என்று கூற, மகேந்திரனுக்கு ஆயிரம் கேள்விகள் பிறந்தாலும், வாயில் இருந்து வார்த்தைகள் வரவில்லை.

மேஜையில் இருந்த தண்ணீரை எடுத்து குடித்து தொண்டையில் அடைத்ததை விழுங்கியவன், ''உ...உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே?'' என்று ஒரு வழியாக கேட்டு முடித்தான்.

ஒரு கணம் அமைதியாக இருந்த மருத்துவர், ''அதை சொல்லத் தான் உங்களைக் கூப்பிட்டேன் மகேந்திரன். அவங்க இருக்கிற நிலைமையில், கோமா நிலை வெகு நாட்கள் நீடித்தால், உயிருக்கு ஆபத்து ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டிருந்த போது, மகேந்திரன் மருத்துவர் அறைக்கு சென்று வெகு நேரமாகியும் வராததால், என்ன நடக்கிறது என்று

தெரிந்து கொள்ள உள்ளே நுழைந்த மது, அவர் சொன்ன வார்த்தைகளின் வீரியம் தாங்காமல் மயங்கிச் சரிந்தாள்.

அவள் மீண்டும் தன்னுணர்வு பெற ஒரு நாள் ஆயிற்று.

மருத்துவ உபகரணங்களால் மட்டுமே இதயம் துடித்துக் கொண்டிருந்த ஜானகிக்கு, மேற்கொண்டு சிகிச்சை அளிப்பதற்கு வசதியாக, மருத்துவமனையில் ஒரு அறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அவருடன் தங்குவதற்கு என்று யாரும் அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாளைக்கு ஒரு முறை வந்து பார்க்கலாம் என்ற அளவில்தான் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மகேந்திரனும் மதுவும், வீட்டுக்கு வந்து இரண்டு நாட்கள் ஆகிற்று!

எந்நேரமும் வெறித்த பார்வையோடு அமர்ந்திருப் பதும், சின்ன சத்தத்துக்கு கூட தூக்கி வாரிப் போடு வதுமாக அமர்ந்திருந்த மதுவைக் கண்டு மகேந்திரனுக்கு மனம் கலங்கியது.

அன்று மருத்துவர் சொன்னதும் மயங்கி விழுந்தவள், உணர்வு பெற்று எழுந்ததில் இருந்து அழக் கூட இல்லை!

அவளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு மகேந்திரன் பேசிய ஆறுதல் வார்த்தைகளுக்கும், அவளிடம் இருந்து எந்த எதிரொலியும் இருக்கவில்லை!

நந்தினிதான், பகலில் வந்து சமையல் செய்து மற்ற வேலைகளையும் பார்த்து விட்டு, இரவு மட்டும் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தாள்.



பசி என்ற உணர்வு முற்றிலும் மரத்திருந்த மதுவுக்கு, உயிர் வாழத் தேவையான உணவை உண்ண வைப் பதே நந்தினிக்குச் சவாலாக இருந்தது.

''நந்து... உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை! என்னால் தனியா கண்டிப்பா மதுவை சமாளிச்சிருக்க முடியாது! நீ வரலன்னா, அவள் சாப் பிடாமலே இருந்துடுவா போலிருக்கு! எனக்கு அத்தையை விட இவளை நினைச்சால்தான் ரொம்பக் கவலையா இருக்கு!''

எப்போதும் கண்களில் துருதுருப்புடன் இருக்கும் மகேந்திரன், இந்த ஐந்து நாட்களில் சக்தி எல்லாம் வடிந்தார்போல, சோர்ந்து போயிருப்பதைக் கண்ட நந்தினிக்கு வேதனையாக இருந்தது.

''ஜானும்மாவை அப்படி உணர்வில்லாமல் பார்க்கும்போது, அவங்களோடு பழகாத எனக்கே மனம் கலங்கும்போது, அவளுக்கு எப்படி இருக்கும் மகி? கொஞ்ச நாளில் சரி ஆகிடுவா! நீங்க கவலைப்படா தீங்க!''

நாற்காலியில் அமர்ந்திருந்த மகேந்திரனின் தலையை மென்மையாக கோதியபடி நந்தினி ஆறுதலாகப் பேச, ''நீ மட்டும் வந்து போயிட்டு இருக்கலைன்னா, நான் என்னவாகி இருப்பேனே தெரியலை! ரொம்ப தேங்க்ஸ் நந்து!'' என்று மகிழ்ந்தவன், அவளது கையைப் பற்றி தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டான்.

''நமக்குள்ளே தேங்க்ஸ் எல்லாம் தேவை இல்லை, மகி!'' என்ற நந்தினி, ''இப்படியே வீட்டில் இருந்தால், இன்னும் கஷ்டமாதான் இருக்கும் மகி... நாளையில்

இருந்து ஆபீசுக்கு போங்க... நான் வீட்டில் இருந்து மதுவைப் பார்த்துக்கறேன்!'' என்றதும்,

''நானும் அதையேதான் நினைச்சேன்!'' என்று மகேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ''மதூ...!'' என்ற அழைப்புடன் சத்யா வரும் அரவம் கேட்டது.

இரண்டு நாட்களாக, மகேந்திரனும் நந்தினியும் மாற்றி மாற்றி பேசும்போதெல்லாம், கேட்கும் சக்தியை இழந்தவளைப் போல, எந்த உணர்ச்சியும் காட்டாமல்... உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் எந்த உணர்வையும் காட்ட இயலாமல் இருந்த மதுவின் செவிகளில், சத்யாவின் குரல் ஒலித்து, அவள் உடலில் புத்துணர்வைப் பாய்ச்சியது.

தன்னையும் அறியாமல் வேகமாக எழுந்து நின்றவளின் உடல், பலவீனத்தின் காரணமாக தள்ளாடியது.

அறையின் வாயிலில், கனிவுடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த சத்யாவைக் கண்டதும், காயம் பட்ட குழந்தை, தாயைக் கண்டதும் ஓடிச் சென்று ஆறுதல் தேடுவது போல, ''சத்யா..'' என்ற கூவலுடன், ஓடிச் சென்று அவன் மார்பில் புதைந்தாள்.

இரண்டு நாட்களாக சேர்த்து வைத்திருந்த கண்ணீரை எல்லாம் வெளிக்கொணர்பவளைப் போல அவள் வெடித்து அழ, அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்ட சத்யா, ''மதும்மா... அழக் கூடாதுடா.. அத்தை சீக்கிரம் நல்லபடியா பிழைச்சு வருவாங்க.. அழாதேடா பட்டு!'' என்று தன்னால் முயன்றவரை, ஆறுதலாகப் பேசினான்.



அவள் அழுகை நிற்கவில்லை என்றானதும், ''அத்தை திரும்பி வந்த உடன், நீ இப்படி அழுதது எல்லாம் தெரிந்தால் எவ்வளவு வருத்தப்படுவாங்க?'' என்று அழுத்தத்துடன் வினவ,

சட்டென்று தலை நிமிர்த்திய மது, ''அம்மா... அம்மா... நல்லபடியா பிழைச்சு வருவாங்கதானே சத்யா?''என்று கண்களில் தவிப்பை நிரப்பியபடி வினவ, சத்யாவுக்கும் கண்கள் கரித்தன.

''கண்டிப்பா!'' உறுதியானக் குரலில் கூறியவன், ''ஆனால்... அதுக்கு நீ தைரியமா இருக்கிறது முக்கியம்! இப்போ நம்மால் முடிந்தது எல்லாம் பிரார்த்தனைதான் என்கிற பட்சத்தில், இப்படி அழுது அழுது நீயும் உடம்பைக் கெடுத்துக்கக் கூடாது! தைரியமா இருக்கணும்! இருப்பாய்தானே?'' என்று மென்மையாக வினவியதும், மது தலையாட்ட,

''தட்ஸ் லைக் எ குட் கேர்ள்! என் பட்டு ரொம்ப புத்திசாலின்னு எனக்குத் தெரியும்!'' என்று மீண்டும் அவளை மென்மையாக அணைத்துக் கொண்டவன், ''சாரிடா.. என்னால் உடனே வர முடியாமல் போச்சு!'' என்று மன்னிப்பு வேண்டினான்.

அவனது திடமான வார்த்தைகள் மனதுக்கு ஆறுதலோடு தைரியமும் கொடுக்க, அவன் தோளில் சாய்ந்திருந்தவள், மெல்ல தலையைத் தூக்கி, ''வேலை எல்லாம் முடிந்து விட்டதா?'' என்று விசாரிக்க, சத்யாவுக்கு மட்டுமன்றி, இரண்டு நாட்களாக, மது இருந்த நிலையைக் கண்டு பயந்து போயிருந்த, மகேந்திரனுக்கும் நந்தினிக்கும் நிம்மதியாக இருந்தது.

அடுத்த நாளில் இருந்து மதுவும் அலுவலகம் செல்ல ஆரம்பித்தாள்.

ஜானகியைப் பற்றிய வேதனை சற்றும் குறையவில்லை என்றாலும், அந்த வேதனையுடன் வாழ கற்றுக் கொள்ள முயன்றனர்.

தினமும் மாலை அலுவலகத்தில் இருந்து மதுமிதா, ஜானகியைப் பார்க்க மருத்துவமனை சென்று விடுவாள்.

உணர்வில்லாமல் படுத்திருக்கும் அன்னையைப் பார்க்கப் பார்க்க, வேதனை மிகுந்து கண்ணீர் வந்தாலும், இப்போதெல்லாம் அவற்றை அடக்கி ஆளவும் தெரிந்தது.

காலை முதல் நடந்ததை எல்லாம் ஜானகியிடம் ஒப்பிப்பது அவளது அன்றாட வேளைகளில் ஒன்றானது.

தாயால் தான் சொல்வதைக் கேட்க முடியாது, பதில் பேசவும் முடியாது என்பதை உணர்ந்தே இருந்தாலும், அன்னையுடன் பேசுவதை அவள் நிறுத்தவில்லை!

என்றாவது ஒரு நாள், தன் பேச்சு அவரது உணர்வுகளைத் தட்டி எழுப்பி விடாதோ என்ற நப்பாசை அவளுக்கு!

அதைத் தவிர, அன்னையுடன் அன்றாட நிகழ்வுகளைப் பகிர்வது அவளுக்குமே, அவருடன் பேசிக் கொண்டிருந்த நிறைவைத் தந்தது.

மற்றபடி, வீட்டிலும் அலுவலகத்திலும் அவளது பேச்சுக் குறைந்து போனது! தேவைக்கு அதிகமாக எதுவும் பேசுவதில்லை!

மகேந்திரனுமே, இயந்திர கதியில் வேலை அனைத்தையும் செய்து கொண்டிருந்தாலும், அத்தையைப் பற்றிய வேதனை அவன் மனதையும் அரித்துக் கொண்டிருந்தது.



நந்தினியிடம் முன்பு போல குறும்பாக பேசுவதில்லை என்றாலும், மகேந்திரன் அவளிடம் இயல்பாகப் பழகிக் கொண்டிருந்தான்.

ஆனால், சத்யா ஊரில் இருந்து வந்த நாள் அன்று, தன்னிலை மறந்து அவனை அணைத்து கண்ணீர் விட்ட மது, அதன் பிறகு அவனை எந்த விதத்திலும் நெருங்கவில்லை! முதலில், அவளது மன நிலையைக் கருத்தில் கொண்டு அமைதியாக இருந்த சத்யாவுக்கு, நாளாக நாளாக அவள் நடந்து கொள்ளும் முறை வருத்தத்தை அளித்தது.

அவள் இருக்கும் நிலையில், கண்டிப்பாக காதல் பேச்சை அவன் எதிர்பார்க்கவில்லை! ஆனால், இயல்பான பேச்சு வார்த்தைக்குக் கூடப் பஞ்சமாகிப் போன நிலையில், அவள் வேண்டும் என்ற அவனைத் தவிர்க்கிறாளோ என்ற சந்தேகம் தோன்றி, அவன் அவளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்ததில், அவன் சந்தேகம் உறுதியானது. என்ன யோசித்தும், காரணம் மட்டும் புலப்படவில்லை!

மகேந்திரனிடம் விசாரிக்கவும் மனம் வரவில்லை! என்ன என்ன என்று தனக்குள்ளே குழப்பிக் கொண்டவனுக்கு ஒரு நாள் விடை கிடைத்தது. ஆனால், காரணம் புரிந்ததே என்று சந்தோஷப் பட முடியாமல், அந்தக் காரணம் வேதனையை அதிகரிக்கவே செய்தது.



## 14

நந்தினி ஐந்து நாட்களாக அலுவலகம் வரவில்லை!

முதல் நாளே, என்ன விஷயம் என்று தெரிந்து கொள்ள மகேந்திரன் அழைத்த போது, ''கொஞ்சம் பீவரிஷா இருக்கு! நாளைக்கு வந்துடறேன்!'' சுருக்கமாகச் சொல்லி விட்டு நந்தினி வைத்து விடவே, உடம்பைப் பார்த்துக் கொள்ளட்டும் என்று மகேந்திரனும் விட்டு விட்டான்.

அடுத்த நாளும், அவள் வராமல் போகவே, ஒரு வேலை ரொம்பவும் முடியவில்லையோ என்ற கவலையில் அவன், நந்தினியின் கைப்பேசிக்கு அழைக்க, அவளது கைப்பேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

அவளே அழைப்பாள் என்று காத்திருந்தவனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அவன் அழைக்கும்போதெல்லாம் அவளது கைப்பேசி அணைத்தே வைக்கப் பட்டிருக்க, அலுவலகம் முடிந்ததும், மதுவுடன் சேர்ந்து ஜானகியைப் பார்க்க செல்வது வழக்கமாக இருந்ததால், அவனால் நந்தினியின் வீட்டுக்கும் செல்ல முடியவில்லை.

முடிந்தவரை, மதுவை தனியாக விடக் கூடாது என்ற காரணத்தினால், அவன் வீட்டுக்கு வந்த பிறகு வெளியே எங்கும் செல்வதும் இல்லை.

நந்தினியின் வீட்டினரின் எண்ணைக் கூட வாங்கி வைத்துக் கொள்ளாத தன் மடத்தனத்தை நொந்து கொண்டு, இன்று எப்படியும் நந்தினியின் வீட்டுக்குச் சென்று விவரம் அறிய வேண்டும் என்று மதுவிடம் சொல்லி விட்டு புறப்பட்டான்.

மகேந்திரன் நந்தினியின் வீட்டுக்கு சென்றபோது, வீடு திறந்தே இருந்தது. நேராக உள்ளே சென்றால் நாகரிகமாக இருக்காதென்று எண்ணி, அழைப்பு



மணியை அழுத்தப் போனவன் கை, உள்ளே இருந்து வந்த வார்த்தைகளில் அப்படியே உறைந்தது.

''சொல்லு நந்தினி, இப்போ நான் பார்த்திருக்கும் மாப்பிள்ளைக்கு என்ன குறை என்று நீ வேண்டாம் என்கிறாய்? ஐந்து நாளா, இதே கேள்வியை எத்தனை முறை கேட்கிறேன்? பதில் சொல்லவில்லை என்றால் எப்படி?''

மெல்லிய குரலில் என்றாலும் சிவராமனின் குரலில் அதிர்ச்சியோடு கோபமும் நிறைந்திருந்தது.

நந்தினிக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கிறார்களா?

அதிர்ச்சி மிக, மகேந்திரன் சிலையென நிற்க, ''என்ன தம்பி வெளியே நின்னுட்டீங்க? உள்ளே வாங்க!'' என்று அழைத்த பார்வதியின் குரலில், தன்னிலை மீண்ட மகேந்திரனுக்கு உள்ளே செல்வதில், தயக்கம் எழுந்தது.

''பால் வாங்கிட்டு வரலாம் என்று கடைக்கு போனதால், கதவை திறந்து வைத்து விட்டே போனேன்... நந்தினியும் அவங்க அப்பாவும் உள்ளே தான் இருக்காங்க... வாங்க!''

பார்வதி மீண்டும் அழைக்கவும், மகேந்திரன் உள்ளே வந்தான்.

மகேந்திரனை எதிர்பார்க்காத அதிர்ச்சியில், சட்டென்று எழுந்து நின்ற நந்தினி, வரவேற்பாய் தலை அசைக்க, சிவராமன் எழுந்து நின்று அவனை வரவேற்றார்.

அவரிடம் நலம் விசாரித்து விட்டு, நந்தினியிடம் திரும்பியவன், ''இப்போ உடம்பு தேவலையா?'' என்று விசாரித்தான்.

அவன் இயல்பான குரலில் விசாரித்தாலும், அவனது கண்கள், 'என்னிடம் ஏன் பொய் சொன்னாய்?' என்று கேள்வி கேட்பதை அவளால் உணர முடிந்தது.

மெல்லத் தலை அசைத்து விட்டு அவள் அமைதியாக இருக்க, சிவராமன் தான் பதில் சொன்னார்.

''உடம்புக்கு ஒண்ணும் இல்லை தம்பி. மனதில்தான் எதையோ வைத்துக் கொண்டு குழம்பிக் கொண்டிருக்கிறாள்!''

''உங்களுக்கே நந்தினியின் விஷயம் தெரியும்தானே தம்பி. முதலில் அவசரப்பட்டு அவதிப் பட்டோமே என்றுதான், இப்போ நல்லா விசாரிச்சு ஒரு நல்ல சம்மந்தத்தை முடிவு செஞ்சிருக்கேன்! அவங்களும், நடந்த விஷயத்தைப் பெரிசா எடுத்துக்கலை! ரொம்ப நல்ல மனுஷங்களா இருக்காங்க. என் நண்பரோடு நெருங்கிய சொந்தம் என்பதால், அவரும் உத்தரவாதம் தந்திருக்கார். இந்த பொண்ணு என்னடான்னா, வேண்டாம் என்கிறாள். காரணம் சொல்லும்மா என்றாலும் எதுவும் பேச மாட்டேங்கிறாள்! நீங்களே அவளுக்கு கொஞ்சம் எடுத்து சொல்லுங்க தம்பி...''

தன் ஆதங்கத்தைக் கொட்ட ஆள் கிடைத்ததும், படபடவென்று சிவராமன் கொட்டி விட, நந்தினிக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவள், இடையில் தந்தையின் பேச்சை தடுக்க எடுத்த முயற்சிகளை, அவர் கண்டு கொள்ளவே இல்லை.

தலை குனிந்து அமர்ந்திருந்த நந்தினியைப் பார்த்த மகேந்திரனுக்கும் என்ன சொல்வதென்று புரியவில்லை!

இன்னும் கொஞ்ச நேரம் அங்கே இருந்தால், மூச்சு முட்டி விடும் என்று தோன்ற, ''நான் அவங்ககிட்ட



பேசறேன் சார்...'' என்றவன், சட்டென்று எழுந்து நின்று, ''நான் கிளம்பறேன்... நாளைக்கு நந்தினி கிட்ட பேசறேன்!'' என்று கிளம்ப எத்தனிக்க,

''இருங்க தம்பி... சாப்பிட்டு விட்டு போங்க!'' என்றார் பார்வதி.

''இல்லை ஆன்ட்டி! மது தனியா வீட்டில் இருப்பா... நான் கிளம்பணும்!''

''சாரி தம்பி... என்னோட பிரச்சனையில் உங்க அத்தையைப் பற்றி விசாரிக்கவே மறந்துட்டேன்... எப்படி இருக்காங்க? ஏதாவது முன்னேற்றம் இருக்கா?''

சிவராமன் விசாரித்ததும், ''இல்லை அங்கிள்! அப்படியேதான் இருக்காங்க!'' கவலை நிறைந்த குரலில் அவன் பதில் அளித்ததும்,

''கவலைப்படாதீங்க! சீக்கிரம் குணமாகிடுவாங்க!''

சிவராமன் ஆறுதலாகக் கூற, மகேந்திரன் கிளம்பி விட்டான்.

வாசல் வரை வழி அனுப்ப வந்த நந்தினியிடம், ''நாளைக்கு ஆபீஸ் வருகிறாய்தானே?'' என்று விசாரிப்பது போல கேட்டாலும், 'வா' என்ற வேண்டுதல் இருந்தது.

''ம்ம்...'' என்று தலையாட்டியவள் வேறு ஏதாவது பேசுவாள் என்று அவன் காத்திருக்க, அவளோ, பார்வையைக் கூட அவன் மேல் பதிக்காமல் நின்று கொண்டிருக்க, மகேந்திரன் ஒரு பெருமூச்சுடன் வேகமாக நகர்ந்தான்.

அன்று இரவு முழுவதும், 'நந்தினி ஏன் தன்னிடம் இதைப் பற்றிப் பேசவில்லை?' என்ற கேள்வியிலேயே

உறக்கமில்லாமல் கழிய, அடுத்த நாள், அலுவலகத்தில் நந்தினியைக் கண்ட பிறகு தான் அவனுக்கு சீராக மூச்சு விட முடிந்தது.

''ஏன் நந்தினி? ஏன் என்கிட்டே எதுவுமே சொல்லலை? இன்னும் ஒரு வருஷம் கழிச்சுதானே கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்க்கப் போறதா சொன்னாய்? இப்போ என்ன திடீர்னு?

படபடப்புடன் அவன் கேள்விகளை அடுக்க, நந்தினியோ அதற்கு நேர் மாறான அமைதியோடு அவனை எதிர்கொண்டாள்.

''நீங்க ஏற்கனவே ஜானும்மா பற்றிய கவலையில் இருக்கும்போது, உங்களை மேலும் கஷ்டப்படுத்த வேண்டாம் என்றுதான் எதுவும் சொல்லலை... நானே சமாளிச்சிடலாம்னு நினைத்தேன்!''

''என்ன நந்து இது? உன்னோட பிரச்சனை என்னோடதும்தான் இல்லையா? ரெண்டு பேரும் சேர்ந்து பேசினால், ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் இல்லை?''

''அப்பாவுக்கு போன மாசம் திரும்ப நெஞ்சு வலி அதிகமாகிடுச்சு... அட்டாக் என்று இல்லை என்றாலும், இது மாதிரி அடிக்கடி வருவது நல்லது இல்லை என்று டாக்டர் சொல்லிட்டார்... அதனால்தான் அப்பா மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிட்டார்... அது இவ்வளவு சீக்கிரம் முடியும் என்று நானும் நினைக்கலை!''

''அப்பாவுக்கு உடம்பு முடியாமல் போனதா? இது எப்போ? நீ சொல்லவே இல்லையே?'' என்றவனுக்கு, தான் சமீப காலமாக அவளுடன் இயல்பாகப் பேசுவது கூட இல்லை என்பது, நினைவுக்கு வந்து குற்ற உணர்வு ஏற்பட்டது.



''அப்போதான் நீங்க கொஞ்சம் நார்மலுக்கு திரும்பி இருந்தீங்க! அதான் மீண்டும் உங்களை...'' என்ற வளை,

''நம்ம விஷயத்தை உங்க அம்மா அப்பாகிட்ட சொல்லிடலாம்!'' என்ற மகேந்திரனின் வார்த்தைகள் இடைமறித்தன.

''இல்லை மகி... இப்போ சொல்ல முடியாது!'' என்றவளிடம்,

''ஏன்... உங்க வீட்டில் ஒத்துக்க மாட்டாங்க என்று நினைக்கறயா?'' என்றான்.

''உங்களை மறுக்க வாய்ப்பு இல்லை. ஆனால்... உடனே கல்யாணம் நடக்கணும் என்று சொல்வாங்க! இப்போ இருக்கிற நிலையில் அது சாத்தியம் இல்லை என்பதால்தான் இப்போ சொல்ல வேண்டாம் என்றேன்!''

நந்தினி, தன் நிலைமையை எண்ணியே யோசிக்கிறாள் என்று பெருமிதமாக இருந்தாலும், அதே போல, தானும் அவளுக்காக யோசிப்பது முக்கியம் என்று உணர்ந்தவனாக,

''உங்க அப்பாகிட்ட நான் பேசறேன் நந்து... நம்ம கல்யாணம் நடப்பது உறுதி என்று சொல்றேன்!'' மென்மையாக உரைத்தான்.

''இல்லை மகி... அப்பா ரொம்ப தீவிரமா இருக்கார்... உடனே கல்யாணம் நடக்கணும் என்று சொல்லுவார்! ஜானும்மா இருக்கிற நிலையில் கண்டிப்பா இப்போ முடியாதுதானே? நீங்க கவலைப்படாதீங்க... நான் பார்த்துக்கறேன்!''

நந்தினி எழுந்து சென்று விட, மகேந்திரன் யோசனையில் ஆழ்ந்தான்.

அத்தை இருக்கும் நிலையில், இப்போதைக்கு திருமணம் என்பதை அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுதான்!

ஆனால்... நந்தினியும் தன் பெற்றோரை எவ்வளவு நாள் சமாளிக்க முடியும்? அதுவும் இல்லாமல், அவளது தந்தை உடல் நலக் குறைவு உள்ளவர் என்பதே, அவனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது.

அத்தைக்கு எப்போது நினைவு தெரியும் என்று உறுதியாகத் தெரியாத நிலையில், எத்தனை நாள் நந்தினியைக் காத்திருக்கச் சொல்வது?

அவள், தன்னுடைய தந்தையின் உடல் நலக் குறைவை காரணம் காட்டி, அவனைத் திருமணத்துக்கு கட்டாயப்படுத்தாததே அவனை, அவளுக்கும் சேர்த்து யோசிக்க வைத்தது.

'நான் பார்த்துக் கொள்கிறேன்!' என்று சாதாரணமாகச் சொன்னாலும், தந்தைக்கு தன் முடிவால் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்று அவள் தவிப்பதை, அவனால் உணர முடியாவிட்டால், அவன் அவள் மேல் கொண்ட காதலுக்கு அர்த்தமிருக்கிறதா என்ன?

நந்தினியின் தவிப்பை முழுமையாக உணர்ந்த மகேந்திரன், மதுவிடம் பேசி விட்டு, திருமணத்தைப் பற்றிய முடிவெடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தான்.

அத்தை இல்லாமல் அவனது திருமணம் நடப்பது அவனுக்கும் விருப்பமில்லைதான்!



ஆனால், நந்தினியின் திருமணம் தள்ளிப் போக தள்ளிப் போக, பெண்ணைப் பற்றிய கவலையில் இருக்கும் சிவராமனுக்கு, அது எமனாகக் கூடும்!

தன்னுடைய சுயநலத்தால், இன்னொருவர் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை அவன் விரும்பவில்லை! அத்தையும் அவன் முடிவைப் பாராட்டத்தான் செய்வார்கள் என்பது அவனுக்கு நிச்சயம்!

முடிவு என்று ஒன்றை எடுத்த பிறகு, மனம் லேசாகி விட, அன்றே மதுவிடம் பேசி விட வேண்டும் என்று எண்ணியவன், இரவு உணவுக்குப் பிறகு மதுவிடம் பேச்சுக் கொடுத்தான்.

''மது... நந்தினி வீட்டில் அவங்க அப்பா அவளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கார்!''

மகேந்திரன் சொன்னதும், அதிர்ச்சியுடன் நோக்கியவளிடம், நடந்த விவரங்களை விளக்கமாகச் சொன்னான்.

முழுவதுமாக கேட்ட மது, ''நீ நந்தினியை சீக்கிரமா கல்யாணம் செஞ்சுக்கறதுதான் நல்லது மகேன்!'' எனக் கூற, மகேந்திரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

''அதேதான் நானும் நினைத்தேன் மது! அத்தை இல்லாமல் கல்யாணம் நடக்கிறது வருத்தமா இருந்தாலும், நம்ம முடிவால் மற்றவங்க பாதிக்கப்பட வேண்டாம்னு நினைச்சேன்!'' என்றவன்,

''ஆனா... என் கல்யாணத்துக்கு முன்னாடி உன் கல்யாணம் நடக்கணும் மது! நான் நாளைக்கே சத்யாகிட்ட பேசவா?'' எனக் கேட்டதும், மதுவின் கண்கள் அதிர்ச்சியில் அகல விரிந்தன.

அவளிடம் இருந்து எந்த பதிலும் வராமல் போகவே, அவளை நிமிர்ந்து நோக்கிய மகேந்திரன், அவள் கண்களில் தெரிந்த அதிர்ச்சிக்குக் காரணத்தை தானே ஊகித்துக் கொண்டு, ''புரியுது மது! அத்தை இல்லாமல் கல்யாணம் என்பது உனக்கு எப்படி இருக்கும் என்று எனக்குப் புரியுது... நந்தினியும் சத்யாவும் நமக்காக காத்திருந்தாலும், அவங்க வீட்டில் இருக்கிறவங்களை எத்தனை நாள் சமாளிக்க முடியும்? அவங்க நிலை மையையும் நாம் நினைச்சு பார்க்கணும் இல்லை?'' என்று விளக்கமாக எடுத்துச் சொல்ல, மதுவின் முகம் தீவிரமாகியது.

''நீ கல்யாணம் செஞ்சுக்கோ மகேன்! அதுக்கு அவ சியமும் இருக்கு. ஆனால், என்னை வற்புறுத்தாதே!''

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல், மகேந்திரன் நோக்க, ''நான் இப்போ கல்யாணம் செஞ் சுக்க போறதில்லை மகேன்! அதனால்... என் கல்யாணம் முடிஞ்சு உன் கல்யாணம் என்று திட்டம் போடறது வேஸ்ட்!'' மதுவிடம் இருந்து தெளிவாக வந்து விழுந்தன வார்த்தைகள்!

அவள் குரலில் இருந்த அழுத்தம், அவள் முகத்தில் தெரிந்த தீவிரம், அவள் யோசித்து தான் பேசுகிறாள் என்று உணர்த்தி விட, காரணம் என்னவென்று புரியாமல் மகேந்திரன் குழம்பினான்.

''மது? ஏன் மது? உனக்கு ஒரு வாழ்க்கை அமை யாமல் நான் எப்படிக் கல்யாணம் செஞ்சுப்பேன் என்று நினைக்கிறாய்? என்னை அத்தனை சுயநலவாதியாய் அத்தை வளர்க்கவில்லை!''



கோபத்துடன் மகேந்திரன் பேச, ''இதில சுயநலம் எங்கே இருந்து வந்தது?'' என்ற மதுவிடம்,

''சரி... அதை விடு! நீ கல்யாணம் வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் சொல்லு!'' என்றான்.

அத்தனை நேரம் அமைதியுடனும், அழுத்தத்துடனும் பேசிக் கொண்டிருந்த மதுவின் கண்கள் கலங்கத் துவங்கின.

''மதுக்குட்டி! என்னடா? அத்தை சம்மதம் இல்லாமல் நாதல் கல்யாணம் செய்யப் போறோம் என்று ஃபீல் செய்யறியா?''

மென்மையாக மகேந்திரன் வினவியதும், மதுவின் கண்கள் கண்ணீரை பொழியத் துவங்கின.

''மது? என்னடா? எதுக்கு இப்படி அழறே?'' மகேந்திரன் பதட்டமடைய,

''அம்மா.. அன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல சொன்னதை மறந்து விட்டாயா?'' என்று கேட்டு அவனை அதிர வைத்தாள்.

அவர்களது திருமணம் பற்றி அத்தை சொன்னதைச் சொல்கிறாள் என்று, மகேந்திரனுக்கு நொடியில் புரிந்தது.

''மது.. அது அத்தை தனக்கு ஏதாவது ஆகி விடுமோ என்ற பயத்தில் சொன்னதும்மா!'' என்று புரிய வைக்க முயன்றவனிடம்,

''இல்லை மகேன்! அம்மாவுக்கு அந்த எண்ணம் அப்பவே இருந்திருக்கு! அன்று அவங்க கைப்பையில் நம்ம ரெண்டு பேர் ஜாதகத்தையும் அவங்க வைச் சிருந்ததைப் பார்த்தேன்! நம்ம ரெண்டு பேர்

கல்யாணத்துக்கு நாள் பார்க்க ஜோசியர் கிட்ட போறதா சொல்லித்தான் அன்னைக்கு லீவ் எடுத்தாங்க என்று, அம்மாவுடன் வேலை பார்க்கும் சுதா ஆன்ட்டி ஹாஸ்பிடலுக்கு வந்திருந்த போது சொன்னாங்க!'' மது விளக்கம் சொல்ல, மகேந்திரன் உறைந்து நின்றான்.

சிறிது நேரம் கழித்து தன்னிலைக்கு மீண்டவன், ''மது... அத்தை அப்படியே நினைத்து இருந்தாலும், நம்ம விருப்பம் இல்லாமல் எதையும் முடிவு செய்திருக்க மாட்டாங்க என்று உனக்கு நம்பிக்கை இருக்கா?'' என்று வினவ, மதுவும் ஒப்புதலாகத் தலை அசைத்தாள்.

''அப்புறம் என்ன? நாம் நம் காதல் விஷயத்தைப் பற்றிப் பேசிய பிறகு, கண்டிப்பா நம்ம சந்தோஷத்துக்காக ஒத்துக் கொண்டு தான் இருப்பாங்க! ஆனால், நடுவில் துரதிஷ்டவசமா ஏதேதோ நடந்துடுச்சு! அன்றைக்கு தன் குழந்தைகளை விட்டு விட்டு போய் விடுமோ என்ற பயத்தில் அவங்க சொன்னதை பெரிசு படுத்தாதே மது! அதுக்கு முன்னாடி அத்தை, நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுக்கிறதைப் பற்றி பேசினதே இல்லை தானே?''

குழந்தைக்குச் சொல்வதைப் போல மகேந்திரன் எடுத்துச் சொல்ல, ''இல்லை மகேன்! அம்மாவுக்கு காதல் என்றால் பிடிக்காது! அதைச் சொல்லித்தான் நம்மையும் வளர்த்தாங்க! நாமும் அப்படி செய்ய மாட்டோம் என்று சொல்லி இருந்தோம்! அதனால், நம்ம மேல நம்பிக்கை வைத்து அம்மா அந்த முடிவை எடுத்திருக்கலாம்! நம்ம கிட்ட நேரம் வரும்போது சொல்லலாம் என்று நினைத்திருக்கலாம்!'' என்றவளுக்கு, அவர் சொன்ன நேரமும் சூழ்நிலையும் நினைவுக்கு வந்து, கண்கள் மீண்டும் கலங்கின.



கண்களைத் துடைத்துக் கொண்டு, ''அம்மாவோட ஆசையை கண்டிப்பா நம்மால் நிறைவேற்ற முடியாது! அதே சமயம், அவங்க சொன்னதுக்கு மாறாக எதையும் செய்யக் கூடாது என்று நான் முடிவெடுத்திருக்கேன்!'' மீண்டும் அழுத்தமான குரலில் மது சொல்ல, மகேந்திரன் திகைத்தான்.

''மது... ப்ளீஸ்! இது முட்டாள்தனமான முடிவு! அத்தைக்கு நினைவு திரும்பி வந்தால், உன்னோட முடிவு முட்டாள்தனமானது என்று அவங்களே சொல்லுவாங்க!''

ஆயாசத்தோடு மகேந்திரன் சொல்ல, ''அம்மாவுக்கு நினைவு வரும்தானே மகேன்?'' என்று தவிப்போடு வினவியவள்,

''ஒரு வேளை! ஒரு வேளை... வராமலே போய் விட்டால்?'' என்ற அடுத்த கேள்வி விளைவித்த அச்சத்தில் உடல் சிலிர்த்தாள்.

''அப்போ.. அதுதான் அவங்க கடைசி வார்த்தை ஆகிடும் இல்லை?'' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டவள், ''இல்லை மகேன்! என்னால முடியாது! அம்மாவுடைய வார்த்தையை மீறி, அதற்கு மாறா வேற எதையும் செய்ய என்னால் முடியாது!'' என்று வெறித்த பார்வையோடு, மரத்த குரலில் மது சொன்னதும், மகேந்திரனுக்கும் நெஞ்சம் கலங்கியது.

ஜானகியின் வார்த்தைகளை இப்படி ஒரு பரிமாணத்தில், மது யோசித்தது அவனுக்குமே கலக்கமாக இருந்தது.

மது சொல்வது போல, ஜானகியின் கடைசி ஆசை அதுவாக இருக்கும் பட்சத்தில், அவனால் மட்டும் அதை மீற முடியுமா என்ன?

ஆனால், அவரது ஆசையை அவனால் மட்டு மில்லை, மதுவாலும் நிறைவேற்ற முடியாது என்ற பட் சத்தில், அவர்களுக்குப் பிடித்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் தவறேதும் இல்லை என்றே அவனுக்குத் தோன்றியது.

இருவரும் தனது ஆசையை நிறைவேற்ற போய் சந்தோஷமின்றி வாழ்வதை, அவர்களது சந்தோஷத்தை மட்டுமே பிரதானமாக கருதும் ஜானகியால் கூட ஏற்றுக் கொள்ள முடியாது என்பது அவனுக்கு நிச்சயம்!

அதையே அவன் மதுவிடம் சொல்ல, ''நீ சொல்றது எனக்கு புரியுது மகேன்! ஆனால், அம்மாவோட பேச்சை மீறிக் கல்யாணம் செஞ்சிட்டு, காலம் முழுக்க, என்னால் குற்ற உணர்வோடு இருக்க முடியாது!'' என்பதுதான் மதுவின் தீர்மானமான முடிவாக இருந்தது.

அதற்கு மேலும், விடாமல் மகேந்திரன் அவளுக்குப் புரிய வைக்க முயன்றும் ஒரு பலனும் இருக்கவில்லை!

''நீ கல்யாணம் செஞ்சுக்கலை என்றால் நானும் செஞ்சுக்க மாட்டேன்!''

அவனது மிரட்டலுக்கு, ''உன்னை விரும்பும் பெண்ணுடைய தந்தையின் உயிரை பணயம் வைக்க துணியும் அளவுக்கு, அம்மா உன்னை வளர்க்கவில்லை!'' என்று பதில் தந்து அவனது வாயை அடைத்தாள் அவள்.

''அத்தை இருக்கும் நிலையில், உன்னுடைய எதிர்காலம் என் பொறுப்பு இல்லையா? உனக்கு ஒரு வாழ்க்கை அமையாமல், நான் என் வேலையைப் பார்த்துக் கொண்டு போவேன் என்று எப்படி நினைத்தாய்?'' என்று உணர்வுப்பூர்வமான கேள்விக்கும் அவளிடம் பதில் இருந்தது.



''நான் திருமணம் வேண்டாம் என்று சொல்ல யே? அம்மாவுக்குச் சரியானதும் அவங்க சம்மதத் தோட திருமணம் செய்துக்கறேன் என்றுதானே சொல் னேன்!''

''அத்தைக்கு எப்போ நினைவு திரும்பும் என்று துனியா சொல்ல முடியாது என்று டாக்டர் சொல்றது க்கும் தெரியும்தானே மது? ஒருவேளை... நடுவில் தும்... எதுவும் ஆகிவிடக்கூடும் என்றும் டாக்டர் ன்னார்தானே?''

தான் சொல்வது அவளை வருத்தப்படுத்தும் என்று தெரிந்தும், நிதர்சனத்தை அவளுக்குப் புரிய வைக்க ன்றான்.

துவின் கண்களில் ஒரு வலி தோன்றி மறைந்தது. ன்னீரை அடக்கியபடி அவனை நோக்கியவள், ''அத தான் நானும் சொல்றேன்! அவங்க விருப்பத்துக்கு தா எதுவும் செய்துட்டு, வாழ் நாள் முழுக்க, ாவுக்கு விருப்பம் இல்லாததை செய்து விட்டேன் ற குற்ற உணர்வோடு என்னால் வாழ முடியாது! க்கு கல்யாணம் என்று ஒன்று நடந்தால், அது அம்மா ன் முழு சம்மதத்தோடு அவங்க ஆசீர்வாதத்தோடு ம்தான் நடக்கணும்!'' அழுத்தமாகச் சொல்லி , இத்தோடு பேச்சு முடிந்தது என்பதைப் போல் மது, தன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட, மகேந்திரன் திகைத்து நின் றான்.



## 15

சத்யநந்தனின் மனம் வேதனை யில் ஆழ்ந்திருந்தது.

மது, தனது அன்னையின் மீது வைத்திருக்கும் பாசத்தை அறிந்ததாலேயே, அவள் கடந்த இரண்டு மாதங்களாக அவனிடம் இயல்பாக பழகாமல் இருப்பதை, அவனால் புரிந்து கொண்டு, அதை ஏற்றுக் கொள்ளவும் முடிந்தது.

ஆனால், சில நாட்களாகவே, அவள் அவனைத் தவிர்க்க நினைப்பது போலத் தோன்ற, அதற்கு காரணம் புரியாமல் அவன் குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில், வந்த ஒரு தொலைபேசி அழைப்பு அவனது குழப்பத்தை மேலும் அதிகப்படுத்தியது.

பெங்களூருவில் உள்ள ஒரு பிரபலமான ஆடை நிறுவனத்தில் இருந்து வந்த அழைப்பு அது!

அந்த நிறுவனத்தின் பொது மேலாளர் அவனுக்குத் தெரிந்தவர் என்பதால், நேரிடையாக இவனுக்கு அழைப்பு வந்தது.

மது அந்த நிறுவனத்தில் உள்ள ஒரு வேலைக்கு விண்ணப்பம் அனுப்பி இருப்பதால், அவளது வேலை திறமை பற்றி அறிய அழைத்திருந்தார் அவர்!

முதலில் சத்யாவுக்கு அவர் தவறுதலாக விசாரிக்கிறாரோ என்று கூடத் தோன்றியது. அவன், அதைக் கேட்கும் முன்னரே, ''அவங்க ஊர் மாறி வருவதால், உங்க கம்பெனியில் இருந்து விலகுவதா சொல்லி இருக்காங்க... பெரிய போஸ்ட்! அதான், உங்களிடம் விசாரிக்கலாம் என்று அழைத்தேன்!'' என்று அவர் சொல்லி விட, மதுவைப் பற்றி நல்ல விதமாகவே சொல்லி விட்டு வைத்தான் அவன்.

முதலில் இருந்த குழப்பம் மறைந்தது, கோபம் அந்த இடத்தை ஆக்கிரமித்தது.



'எதற்கு இந்த வேலை மாற்றம்? அதுவும் அவனிடம் எதுவும் சொல்லாமல்?' என்று மனதுக்குள் கோபப் பட்டவன்,

ஜானகி மருத்துவமனையில் இந்த நிலையில் இருக்கும்போது, இவள் எப்படி வேறு ஊருக்குச் செல்வாள்? அப்படிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் என்ன? என்று மீண்டும் குழம்பினான்.

குழப்பமும் கோபமும் மாற்றி மாற்றி அலைக்கழிக்க, மதுவிடமே பேசி விடுவது எனத் தீர்மானித்து அவள் வீட்டுக்கு வந்த போதுதான், மதுவும் மகேந்திரனும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தது.

இத்தனை நாள் குழப்பத்துக்கும் விடை கிடைத்தது! ஆனால்... கிடைத்த விடை மனதுக்கு உவப்பாக இல்லை!

ஜானகியின் சம்மதத்தோடு திருமணம் என்பதில் அவனுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை! எத்தனை நாள் ஆனாலும், அவன் காத்திருக்கத் தயார்! ஆனால், இதைப் பற்றி எதுவுமே சொல்லாமல், அவனை விட்டு விலக நினைக்கிறாள் என்ற எண்ணம் வேதனையைத் தந்தது.

அடுத்த இரண்டு நாட்கள், அவளாக வந்து எதுவும் சொல்வாள் என்று அவன் காத்திருக்க, அவள் இவன் முன் பார்த்து பேசுவது கூட நடக்கவில்லை! அவளது அன்னையின் நிலைக்குப் பிறகு, அவள் முகத்தில் நிரந்தரமாக குடியிருக்கும் மெல்லிய புன்னகையும் தன்னம்பிக்கையும் ஏற்கனவே மறைந்துதான் போயிருந்தது. ஆனால், இரண்டு நாட்களாக, வெளிப்படையாகவே அவள் முகத்தில் சோகத்தின் நிழல் படிந்திருக்க, சத்யாவால் அதைப் பார்க்க இயலவில்லை!

தன் மனதில் இருப்பதைக் கூட என்னிடம் பகிர்ந்து கொள்ளாமல், இப்படி விலக்கி வைக்கிறாளே என் றெண்ணி அவன் மனம் வேதனையில் ஆழ்ந்தது.

அடுத்த நாள், மகேந்திரனிடம் இதைப் பற்றிப் பே வேண்டும் என்று அவன் நினைக்க, அடுத்த நாள் காலையிலேயே மகேந்திரன் சத்யாவை அழைத்து அவனைச் சந்திக்க வேண்டும் என்று சொல்ல, அன்று மதியம் ஒரு உணவகத்தில் சந்திப்பது என்று முடி வானது.

* * *

தனக்கும் மதுவுக்கும் நடந்த பேச்சு வார்த்தையை, தனக்குள்ளேயே இரண்டு நாட்களாக வைத்திருந்த மகேந்திரனுக்கு, மூச்சு முட்டுவதைப் போலிருந்தது.

மருத்துவமனையில் ஜானகி, மகேந்திரனை மதுவின் கழுத்தில், மாங்கல்யத்தை அணிவிக்க சொன்னபோது, அதிர்ச்சியாக இருந்தாலும், ஏதோ பயத்தில் அவர் அப்படிச் சொல்கிறார் என்றுதான் மகேந்திரன் நினைத் திருந்தான்.

அவருக்கு ஏற்கனவே அந்த எண்ணம் இருந்திருக் கிறது என்று மது சொன்னது, அவனுக்குமே அதிர்ச்சி தான். அவருக்கு ஏதாவது ஆகி விட்டால் அவரது கடைசி விருப்பம் என்று அவள் சொன்னது, அவனது மனதை யும் அசைத்திருந்தது.

மகேந்திரன் மது இருவருக்கும் காதல் வராமல் இருந்திருந்தால் கூட, தாங்கள் திருமணம் செய்து கொள்வதைப் பற்றி இருவருமே, யோசித்திருக்க மாட்டார்கள் என்பது அவனுக்கு உறுதி! ஒன்றாகவே



வளர்ந்ததால், இயல்பாக இருக்கும் பாசத்தைத் தவிர, இவர்கள், இருவரும் நல்ல நண்பர்கள். அதைத் தாண்டி யோசித்து எதையுமே இருவருமே யோசித்ததில்லை.

இப்போது, மது சத்யாவையும், தான் நந்தினியையும் உயிருக்கு உயிராக விரும்பும் போது, எப்படி அவர்களது திருமணத்தைப் பற்றி அவனால் யோசிக்க முடியும்?

சிறிதோ, பெரிதோ எந்த ஒரு விஷயத்திலும், இவர்கள் இருவரின் விருப்பத்தை முன்னிருத்தியே, அவனது எதையும் செய்வார். அதனால், அவருக்கு இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் இருந்திருந்தாலும், தங்களது விருப் பத்தைக் கேட்டிராமல், தங்களது முழு சம்மதத்தைப் பெறாமல், அவர் திருமண விஷயத்தில் இறுதி முடிவு எடுத்திருக்க மாட்டார் என்பதும் மகேந்திரனுக்கு நிச்சயம்.

அத்தையின் ஆசையை நிறைவேற்ற, இவர்களது வாழ்க்கையை பணயம் வைப்பதை, அவராலேயே ஏற்றுக் கொள்ள முடியாது என்ற அழுத்தமான முடிவுக்கு வந்தவன், இன்று நிச்சயம், சத்யாவிடமும், நந்தினி யிடமும் இதைப் பற்றி பேசி விட வேண்டும் என்று தீர்மானித்து, காலையிலேயே சத்யாவை அழைத்து அன்று அவனுடன் பேச வேண்டும் என்று சொல்லி விட்டு, அலுவலகத்துக்குக் கிளம்பினான்.

அலுவலகத்துக்கு வந்தவன், நந்தினியை அழைக்க, அவள் முகத்தில் இருந்தே, ஏதோ சரி இல்லாததை உணர்ந்தவனாக, ''என்ன நடந்தது?'' என்று அக்கறை யுடன் விசாரித்தான்.

''கொஞ்சம் உடம்பு சரியில்லை மகேன். இன்னைக்கு முடிக்க வேண்டிய வேலை சம்மந்தமான ஃபைல் ஒன்று

என் டிராயரில் இருந்தது. அதை எடுத்துக் கொடுக்கத்தான் வந்தேன். இப்போ கிளம்பப் போறேன்!'' அவனை நேரிடையாகப் பார்க்காமல், நந்தினி சொல்லி முடிக்க, மகேந்திரனுக்கு இருந்த மனக் குழப்பத்தில், அவளும் அதைக் கவனிக்கவில்லை.

''ஒரு அரை மணி நேரம் இருக்க முடியுமா நந்து உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்! நானே உன்னை வீட்டில் கொண்டு விடறேன்!'' என்று அவன் வேண்டுகோள் விடுக்க, நந்தினியும் அமைதியாக அமர்ந்தாள்.

இரண்டு நாட்களுக்கு முன், தனக்கும் மதுவுக்கும் நேர்ந்த பேச்சு வார்த்தை பற்றி மகேந்திரன் சொல்லக் கேட்ட நந்தினிக்கு, கண்கள் கலங்கியது.

மகேந்திரனுடனான தன் திருமணத்துக்கு எத்தனை நாள் ஆனாலும், அவள் காத்திருக்கத் தயாராக இருந்தாலும், தந்தையின் உடல் நிலை பற்றிய பயம் அவளை அரித்துக் கொண்டே இருந்தது.

மதுவுக்கு ஒரு வாழ்க்கை அமையாமல், மகேந்திரன் தான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொன்னது நியாயமாகத் தெரிந்தாலும், மது ஒத்துக் கொள்ளா விட்டால் அடுத்து என்ன என்ற கேள்வி பயமுறுத்த, கண்ணீர் அதிகமானது.

''நந்து... உன்கிட்ட எல்லாத்தையும் பகிர்ந்து கொள்ளணும் என்றுதான் சொன்னேன்! நீ எதுக்கு இப்போ கண்கலங்குகிறாய்?'' எல்லாம் சரியா நடக்கும் கவலைப் படாதே!'' என்று அவளைத் தேற்றியவன், அவளது கண்ணீர் நிற்கவில்லை என்றதும் பதறிப் போனான்.

''நந்து! என்னம்மா என்ன ஆச்சு?''



''உங்ககிட்ட சொல்ல வேண்டாம்னு நினைச்சேன்! ஆனால்... இப்போ சொல்லித்தான் ஆகணும் என்று தோணுது! நைட் அப்பாவுக்கு அட்டாக் வந்துடுச்சு!'' என்றதும்,

''என்ன காட்!'' மகேந்திரன் பதற,

''டாக்டர் ரொம்ப கடுமையா திட்டிட்டார்! அவரோட உயிரை சங்கடப் படுத்தற மாதிரி எதுவும் செய்யக் கூடாதுன்னு சொல்லிட்டார்... ஆபரேஷன் செய்யணும்... ஆனால் அதுக்கு கூட அவர் உடல்நிலை ஒத்துழைக்கிற நிலையில் இல்லை என்று சொல்லிட்டார். இன்னொரு முறை அட்டேக் வந்தால்... அப்பா... அப்பா பிழைக்கிறதே...'' மேலே சொல்ல முடியாமல் அவள் உதட்டைக் கடித்து கொண்டு கண்ணீரை அடக்க முயல, மகேந்திரனுக்கு வேதனையாக இருந்தது.

''என்ன நந்து இது? ஏன் முதல்லையே சொல்லலை?'' என்று கடிந்து கொண்டவன், ''இப்போ எப்படி இருக்கார்?'' என்று விசாரித்தான்.

''நேற்று நைட் முழுக்க ஐ.சி.யூலதான் இருந்தார். இன்னிக்கு காலைலதான் ரூமுக்கு மாத்தினாங்க.''

இனியும் தனது தயக்கத்தால் ஓர் உயிரோட விளையாடக் கூடாது என்று எண்ணியவன் ''சரி... வா'' என்று அவளைக் கூட்டிக் கொண்டு மருத்துவமனைக்கு திரும்பினான்.

சிவராமனிடம் நலம் விசாரித்தவன், ''இனிமேல் உங்க பொண்ணு கல்யாணத்தைப் பற்றி நீங்க கவலைப் பட வேண்டியதே இல்லை! அது கூடிய சீக்கிரம் நடக்கும்!'' என்று மென்மையாகக் கூற,

''நந்தினிகிட்ட பேசிட்டீங்களா தம்பி? நந்தினி நான் பார்த்திருக்கிற மாப்பிள்ளைக்கு ஓகே சொல்லிட்டாளா?''

ஆர்வத்துடன் சிவராமன் கேட்டதும்,

''இல்லை... அந்த மாப்பிள்ளை இல்லை... வேற ஒரு நல்ல மாப்பிள்ளையோடு உங்க பொண்ணு கல்யாணம் சீக்கிரம் நடக்கும்!''

''என்ன தம்பி சொல்றீங்க? நீங்க ஏதாவது மாப்பிள்ளை பார்த்திருக்கீங்களா?'' ஆவலோடு வந்தது சிவராமனின் கேள்வி.

''நான் பார்க்கிற மாப்பிள்ளை உங்களுக்கு ஓகேவா அங்கிள்?''

''கண்டிப்பா தம்பி. என் பொண்ணு கல்யாணம் சீக்கிரமா ஒரு நல்ல பையனோடு நடந்தால் போதும். அதுவும் உங்களை நான் என் பிள்ளை மாதிரி நினைக்கிறேன். நீங்க சொன்னாச் சரியாதான் இருக்கும்!''

அவன் மேல் இருந்த நல்ல அபிப்ராயத்தை வெளிப்படுத்தும் வகையில் சிவராமன் சொல்ல, ''ஏன் அங்கிள்? என்னை பிள்ளையா நினைக்கிற நீங்க, மாப்பிள்ளையா ஏத்துப்பீங்களா?''

எந்த அலங்காரமும் இல்லாமல், மகேந்திரன் சட்டென்று கேட்டு விட, திகைத்து விழித்தார் அவர்.

கேட்டுக் கொண்டிருந்த பார்வதியின் கண்களும் ஆச்சரியத்தில் அகன்றன. நந்தினிக்குமே திகைப்புதான்.

இந்த திடீர் தாக்குதலில் இருந்து மீள, அவருக்குக் கொஞ்ச நேரம் அவகாசம் கொடுத்து விட்டு,

''அங்கிள்?'' என்று மகேந்திரன் விளிக்க,



''உண்மையாத்தான் சொல்றீங்களா?'' என்றார் அவர் தழுதழுத்த குரலில்.

''என்கூட இத்தனை நாள் பழகி இருக்கீங்களே அங்கிள்... நான் இந்த மாதிரி விஷயத்தில் எல்லாம் விளையாடறவன் என்றா உங்களுக்கு தோணுது?''

''ச்சே... ச்சே... அப்படி எல்லாம் இல்லை தம்பி!'' என்று வேகமாக மறுத்தவர், ''உங்களை மாதிரி ஒருத்தர் எனக்கு மாப்பிள்ளையா வந்தால், அதை விட எனக்கு என்ன சந்தோஷம் இருக்க முடியும்?'' என்றவரின் முகத்தில், சோர்வை மீறி சந்தோஷம் மலர்ந்தது.

அவருக்கு சம்மதம் என்று புரிந்ததின் விளைவாக, மகேந்திரனின் முகத்தில் மட்டுமல்லாது குரலிலும் மகிழ்ச்சி மலர்ந்தது.

''அங்கிள்... என்னடா இவன் இவ்வளவு பெரிய விஷயத்தைச் சாதாரணமா சொல்றானே என்று நினைக்காதீங்க! நந்தினியைப் பற்றிய கவலையில், நீங்க ரொம்பக் கஷ்டப்படுத்திக்க வேண்டாம்னுதான் உடனே, இதைப் பேசிடணும் என்று நினைத்தேன்! நீங்க என்னைப் பற்றி நல்லா விசாரிச்சிட்டே ஓகே சொன்னால் கூடப் போதும்!''

''இல்லை தம்பி... இத்தனை மாசம் உங்களோட பழகி இருக்கோம்... உங்களைப் பற்றி எனக்கு எப்பவும் நல்ல அபிப்ராயம்தான்! சுந்தரமூர்த்தி கூட உங்களைப் பற்றி எப்பவும் நல்லாத்தான் சொல்லி இருக்கார்... உண்மை சில, நீங்க இப்படி வெளிப்படையா பேசினதில் எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம் தம்பி... இதனால் தான் இந்தப் பொண்ணு அந்த மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொன்னாளா? இதை முன்னாடியே

சொல்லி இருக்கலாமே?'' என்று அங்கலாய்த்தவர், அடுத்த கணம்,

''உங்க அத்தைக்கு இப்படி இருக்கும்போது, எப்படி?'' என்று தயங்கினார்.

''முதலில் உங்க ஒப்புதலுக்கு ஒரு பெரிய நன்றி மாமா!'' மாமா என்று அழைத்து அவரைக் குளிர வைத்தவன்,

''நாளைக்கே கல்யாணம் நடக்கப் போவதில்லையே? நீங்க அமைதியா இருக்கணும் என்றுதான் நான் இப்போ பேசறேன்! எப்படி இருந்தாலும், மகேந்திரன்-நந்தினி கல்யாணம் சீக்கிரம் நடக்கும் என்ற நம்பிக்கையோட நீங்க சந்தோஷமா இருங்க! பெண்ணோட கல்யாணத்தில ஓடி ஆடி வேலை செய்ய வேண்டாமா? உடம்பை நல்லபடியா பார்த்துக்கோங்க!''

உரிமை கலந்த அக்கறையுடன் பேசியவனை, பெருமிதத்துடன் நோக்கிய நந்தினியின் முகமும் மலர்ந்தது.

* * *

''அத்தை அன்னைக்கு சொன்னதை மது இவ்வளவு சீரியஸா எடுப்பாள் என்று நான் நினைக்கவே இல்லை சத்யா!''

மகேந்திரன் சொன்னதும், ''மகேன்! அவள் ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறாள்! இப்போ எங்க கல்யாணத்துக்கு எந்த அவசரமும் இல்லை! அத்தைக்கு எல்லாம் சரியானதும், அவங்க சம்மதத்தோடு நாங்க கல்யாணம் செஞ்சுக்கறோம்! இப்போ நாம யோசிக்க வேண்டியது நந்தினியுடைய அப்பாவைப் பற்றித்தான்!



உங்க கல்யாணம் தாமதிக்காமல் நடக்கிறதுதான் நல்லது!''

சத்யா தெளிவாகச் சொல்ல, மகேந்திரன் இடைப் புகுந்தான்.

''சத்யா, நீ சொல்றது எனக்குப் புரியுது! ஆனால்... ஒரு முக்கியமான விஷயத்தை நீ மறந்து விட்டாய்! இதைப் பற்றிப் பேசவே எனக்கு வேதனையா இருந்தாலும் பேசித்தான் ஆகணும்!'' என்றவன், ஒரு கணம் கண்ணை இறுக மூடித் திறந்தான்.

''அத்தைக்கு எந்த நேரத்திலும் எதுவும் ஆகலாம் என்று டாக்டர் சொல்லி இருக்கார். மதுவோ, அத்தை இப்போ மீறிக் கல்யாணம் செய்யக் கூடாது என்று உறுதியா இருக்கிறாள். ஒருவேளை... அத்தைக்கு ஏதாவது ஆகி விட்டால், காலம் முழுக்க அவள் கல்யாணம் செஞ்சுக் கொண்டதாலே இருந்துடுவாள்... அந்த ஒரு விஷயத்துக்காகத் தான் நான் இப்போ அவசரப் படறேன்! என் கல்யாணம் நடக்கணும் என்ற காரணத்துக்காகவாவது, அவள் கல்யாணத்துக்கு சம்மதிப்பாள் என்றுதான் முயற்சி செய்யறேன்!''

மகேந்திரன் சொல்லி முடித்ததும், அவனது வார்த்தை களில் இருந்த உண்மை, சத்யாவைத் தாக்கியது. எது எப்படி இருந்தாலும், திருமணத்துக்கு முழு மனதுடன் மது ஒப்புதல் சொல்ல வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

''நீ சொல்றது எனக்குப் புரியுது மகேன்! ஆனால்... திருமணம் என்பது சம்மந்தப்பட்ட இருவரும் நிறைவா உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயமில்லையா? மதுவைக் கட்டாயப் படுத்தறது சரியா?''

"சத்யா! நாம ஒண்ணும் அவளுக்குப் பிடிக்காத திரு மணத்தில் தள்ளப் போறதில்லையே! அவள் உயிராக நேசிக்கிற உன்னைத்தானே கல்யாணம் செஞ்சுக்க போகி றாள்? மகேந்திரன் தன் பக்க நியாயத்தை எடுத்துரைத்தான்.

மகேந்திரன் பேச்சில் இருந்த நியாயத்தை விட அவன் முன்பு சொன்னது போல ஜானகிக்கு ஏதாவது நடந்து விட்டால், மதுவை நிரந்தரமாக இழந்து விடுவோமோ என்ற எண்ணம் மனத்தைக் கலங்க வைக்க, "நான் மது கிட்ட பேசறேன், மகேன்!" என்றான்.

"தேங்க்ஸ் சத்யா! நீ பேசினால் அவள் மனம் மாறும் என்று நம்பறேன்!" என்றவன்,

"சத்யா! நான்... நான் என்னோட சுயநலத்துக்காக அவசரப் படுத்தறேன் என்று நினைக்கிறாயா?" என்று தயக்கத்துடன் வினவ,

"ஹே மகேன்! டோன்ட் பீ சில்லி! உனக்கு மது மேல் இருக்கிற அக்கறை எனக்குத் தெரியாதா?" என்று மகேந்திரனின் தோளில் தட்டியபடி சொன்ன சத்யா,

"நீ நம்ம நாலு பேருக்கும் சேர்த்துதான் பேசுகிறாய் என்று எனக்கு நல்லாவே புரியுது!!" என, மகேந்திரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

* * *

திருமண விஷயமாக ஒரு வாரத்துக்கு முன்பு பேசியதற்குப் பிறகு, மகேந்திரன் அதைப் பற்றி எதுவும் மதுவிடம் பேசவில்லை!

நந்தினியின் தந்தையின் உடல் நலக் குறைவு மதுவும் அறிந்ததுதான்! அதனாலேயே மகேந்திரன்-நந்தினி திருமணம் விரைவில் நடக்க வேண்டும் என்பதில் மதுவும் விரும்பினாள்.



ஆனால், தானே போய் மகேந்திரனிடம் இதைப் பற்றி பேசத் தயக்கமாக இருந்தது. மீண்டும், அவன் தனது திருமணத்தைப் பற்றிப் பேசினால், வீணான வாக்குவாதம் ஏற்படும் என்று எண்ணி அமைதியாக இருந்தாலும், மகேந்திரன் சரியான முடிவுதான் எடுப்பான் என்ற நம்பிக்கை இருந்தது அவளுக்கு!

தன்னுடைய முடிவால் அதிகம் பாதிக்கப்படப் போவது சத்யாதான் என்ற எண்ணம் தோன்ற, அவளது கண்கள் கலங்கின.

ஒவ்வொரு நாளும், அவனை அலுவலகத்தில் பார்க்கும்போது, அவளுக்கு குற்ற உணர்வு அதிகரித்துக் கொண்டே வந்தது.

அன்னையின் கண்டிப்பையும் மீறி, தான் சத்யாவைக் காதலித்தது ஒரு பிழை என்றால், இப்போது அவனிடம் இருந்து விலகி இருப்பதும் பிழையாகவே அவளுக்குத் தோன்றியது.

எது எப்படி இருந்தாலும், அவளால அன்னையின் சம்மதமின்றி அவளால் எதுவும் செய்ய இயலாது என்பது நிச்சயம்! அதுவும் அவருடைய ஆசையை அறிந்த பிறகு, அவருக்கு புரிய வைக்காமல் எதுவும் செய்யக் கூடாது என்பதில் அவள் தீர்மானாக இருந்தாள்.

உயிரில் சுவாசமாகக் கலந்தவன் அருகில் இருந்தும், அவனிடம் இயல்பாகப் பேசக் கூட இல்லாமல் விலகியே இருக்க வேண்டிய கட்டாயத்தில் அவளுக்கு மூச்சு முட்டியது!

அதுவும், அன்னையின் உடல் நிலை பற்றிய வருத்தம் மேலோங்கும்போதெல்லாம், சத்யநந்தனின் தோள் சாய்ந்து ஆறுதல் தேடத் துடித்த தன் மனதை அடக்கிக் கொள்ள, அவள் பெரும் பிரயத்தனப் பட வேண்டியிருந்தது.

இதற்கு என்ன தீர்வு என்று தீவிரமாக யோசித்த போதுதான், பெங்களூருவில் உள்ள பிரபலமான ஆஸ் நிறுவனத்தின் வேலைக்கான விளம்பரத்தைக் காண நேர்ந்தது.

வேறு ஊரில் வேலை தேடிக் கொண்டு போய் விட்டால் என்ன? சத்யாவின் அருகில் இருந்து கொண்டே அவனிடம் இருந்து விலகி இருக்க முடியாமல், தனிப் பதை விட, வெளியூரில் இருப்பது உசிதமாகப் பட்டது.

அன்னையையும் தான் வேலைக்கு சேரப் போகும் ஊரில் உள்ள மருத்துவமனையிலேயே, சேர்த்து விடலாம் என்று முடிவெடுத்தவள், அந்த வேலைக்கான விண்ணப்பத்தை அனுப்பி வைத்தாள்.

ஒரு முடிவோடு விண்ணப்பத்தை அனுப்பி விட்டாலும், அதை அனுப்பிய நாளில் இருந்து, சத்யாவைப் பிரியப் போகிறோம் என்ற எண்ணம் தோற்றுவித்த வேதனை, அவளைப் புழுவாய் அரித்துக் கொன்றது.

அவள் இந்த வேதனையைத் தனக்குள் பூட்டி வைத்துக் கொண்டிருந்த நேரத்தில், மகேந்திரன் திருமணம் பற்றிப் பேசிய பேச்சு, அவளது எடுத்திருந்த முடிவு சரியானதுதான் என்று உறுதி செய்தது.

மகேந்திரன், முதலில் மதுவின் திருமணத்துக்குப் பிறகே தன் திருமணம் என்று பிடிவாதமாக இருந்தாலும், இவள் தன் முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்று புரிந்த பிறகு, நந்தினியைத் திருமணம் செய்து கொள்வான் என்று அவள் நம்பினாள்.

அந்த நம்பிக்கையின் விளைவாக மகேந்திரனைப் பற்றிய கவலை அகன்று விட, மீண்டும் மனம் சத்யன் பால் வந்து நின்றது.



தான் செய்வது சரியா? அவனிடம் சொல்லாமல் இப்படிப் போவது முறையா?

கேள்விகள் எழ, தான் செய்வது தவறு என்று அவளுக்கும் தெரியாமல் இல்லை!

இந்த பிரிவு தற்காலிகமானதா, நிரந்தரமானதா என்று நிச்சயமாகத் தெரியாத நிலையில், அவனிடம் அவனை விட்டு பிரியப் போகிறேன் என்று சொல்லும் தைரியம் அவளுக்கு இல்லை! அத்தோடு, அவளை அத்தனை சுலபமாக அவன் விட்டு விடவும் மாட்டான்.

எல்லாம் முடிவான பிறகு, வேலையில் சேர்ந்து விட்ட பிறகு சொன்னால், அவள் தன் முடிவில் உறுதி யாக இருக்கிறாள் என்று புரிந்து கொள்வான் என்று எண்ணியவள், இப்போதைக்கு அவனிடம் இதைப் பற்றிச் சொல்ல வேண்டாம் என்று முடிவெடுத்தாள்.

முடிவு என்று ஒன்றைத் தீர்மானமாக எடுத்து விட்ட பிறகு, மனம் அமைதி அடையாமல், முன்பை விட அதிகமாக அலைபாயத் தொடங்கியது.

'சாரி சத்யா... சாரி சத்யா' என்று மனமோடு சேர்ந்து வாயும் அரற்ற ஆரம்பித்தது.

''எதுக்கு சாரி சொல்றே, மது?''

சத்யாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு மதுமிதா, அறையின் கதவில் சாய்ந்து, கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, கூர்மையான பார்வையுடன் அவளையே நோக்கிக் கொண்டிருந்த சத்யாவைக் கண்டதும் திகைத்தாள்.

இந்த நேரத்தில் இவன் எங்கே வந்தான்?

அவனையே நினைத்துக் கொண்டிருந்ததில், அவள் நேரில் இருப்பதாகத் தோன்றுகிறதா என்ற ஐயம் தோன்ற, கண்களை கசக்கி விட்டுக் கொண்டு அவள் மீண்டும் நோக்க, சத்யா அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

''எதுக்கு சாரி சொல்றே என்று கேட்டேன்!'' அருகில் வந்தவன் மீண்டும் நிதானமாக வினவ, ''நான்... நான்...'' என்று தடுமாறியவளிடம்,

''என்னைக் கல்யாணம் செஞ்சுக்க முடியாது என்று மகேந்திரனிடம் சொன்னாயே! அதற்காகவா?'' என்று கேட்டு அவளைத் திகைக்க வைத்தான் அவன்.

'கடவுளே! இந்த மகேந்திரன் எல்லாவற்றையும் இவனிடம் சொல்லி விட்டானா என்ன?' என்று எண்ணியவள், 'எப்படியும் ஒரு நாள் தெரிந்துதானே ஆக வேண்டும்!' என்று தன்னையே சமாதானமும் செய்து கொண்டாள்.

அவனுக்கு எல்லாம் தெரிந்தது ஒரு விதத்தில் நிம்மதியாக இருந்தது. அவள் இனிமேல் எந்த விளக்கமும் அவள் வாயால் சொல்ல வேண்டியதில்லை! மனதுக்குள் மகேந்திரனுக்கு நன்றி சொன்னவள்,

''சாரி சத்யா...'' என்றாள்.

''ஏன் மது? நீ சொல்லி இருந்தால் நான் புரிந்து கொண்டிருக்க மாட்டேன் என்று நினைத்தாயா? இல்லை... இதெல்லாம் பகிர்ந்து கொள்கிற அளவுக்கு நான் உனக்கு முக்கியமானவன் இல்லையா?''

வருத்தம் மேலிட சத்யா வினவியதும், ''சத்யா ப்ளீஸ்! நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லை! எனக்கு...



...எல்லாம் உங்ககிட்ட சொல்ற அளவுக்கு மன ...தரியம் இல்லை... அதுதான் உண்மை!'' வருத்தம் ...ந்த குரலில் மது சொல்ல, சத்யாவின் மனதில்,

'...ன்னிடம் சொல்லாமல் ஊரை விட்டுக் கிளம்ப ...ற்கு தைரியம் இருக்கிறதா?' என்ற கேள்வி எழுந்தது.

...ன்னைப் பிரிந்து செல்வது அவளுக்கும் உவப்பாக ...த்திருக்கவில்லை என்பதை, சற்று நேரத்திற்கு முன்பு ...தில் கண்டு உணர்ந்ததால், அதைப் பற்றி கேட்காமல் ...வன் வேறு பேசினான்.

''மகேந்திரன் கல்யாணம் சீக்கிரம் நடக்க வேண்டிய ...ரியம் பற்றி உனக்கே தெரியும்! அவன் உன் ...ல்யாணம் முடிந்தால்தான், அவன் கல்யாணம் என்று ...தியா இருக்கான்!''

''அந்த முட்டாளுக்குத்தான் நான் ஏற்கனவே என் ...லையைப் பற்றி விளக்கமா சொல்லிட்டேனே... இன் ...ன்ன?'' கோபமாக வினவியவள், ''ப்ளீஸ் சத்யா... ...க்காக அவன்கிட்ட கொஞ்சம் பேசுங்க!'' என்ற ...ண்டுதலோடு முடித்தாள்.

''பேசறேன் மது! அத்தைக்கு சரியாகிற வரை ...த்திருக்க எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை ... எங்க வீட்டில் பிரச்சனை வரும் என்றாலும், நான் ...ளித்து கொள்வேன்! மகேந்திரன் கிட்ட பேசறதுக்கு ...ன்னாடி... நான் கேட்கிற கேள்விக்கு உன்னிடம் ...ந்து எனக்கு உண்மையான பதில் வேணும்!''

'கேளுங்க!' என்பது போல மது அவனை நோக்க, ''ஐ ...ம் சாரி மது! நான் கேட்க போறது உனக்கு வருத்தமா ...க்கும் என்று எனக்குத் தெரியும்! ஆனால்... எனக்கு ...று வழி இல்லை!'' என்று தயங்கியவன்,

''அத்தையின் சம்மதத்தோடு கல்யாணம் நடக்கணும் என்று நீ நினைக்கிறதில் எனக்கும் உடன்பாடுதான்! ஆனால்...'' கேட்க வந்ததைக் கேட்க முடியாமல் மீண்டும் தயங்கி நின்றான்.

அவன் என்ன கேட்க வருகிறான் என்று புரிந்து மதுவின் உடல் விறைத்தது.

''இதுக்கும் நான் மகேந்திரன் கிட்ட பதில் சொல்லிட்டேன்... இப்போ இன்னும் ஒரு முறை சொல்றேன்! எனக்கு கல்யாணம் என்று ஒன்று நடந்தால், அது அம்மாவின் சம்மதத்தோடு மட்டும்தான் நடக்கும்! இதில் எந்த மாற்றமும் இல்லை!''

மரத்த குரலில்... ஆனால்... அழுத்தமாக... மிக மிக அழுத்தமாக மதுவிடம் இருந்து பதில் வந்தது.

மகேந்திரன் சொன்னது சரிதான்! ஜானகி அத்தைக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், இந்த முட்டாள் பெண் திருமணம் என்பதையே நினைக்கப் போவதில்லை என்று சத்யாவுக்கு தெளிவாகப் புரிந்தது.

ஆனால்... மது இல்லாத ஒரு வாழ்க்கையை அவனால் வாழ முடியுமா என்ன? இவ்வளவு உறுதியாகப் பேசும் இவளாலும்தான் சத்யா இல்லாமல் வாழ முடியுமா?

உணர்ச்சிகளின் பிடியில் இருக்கும் அவளுக்கு உண்மை விளங்கவில்லையோ என்ற எண்ணத்தில் அவளுக்குப் புரிய வைத்து விடும் வேகத்தில் சத்யா தொடர்ந்து பேசினான்.

''சாரி மது... அத்தைக்கு சீக்கிரம் எல்லாம் சரியாகி விட வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனையும்! ஆனால்... அத்தையின் ஆசைக்கு மாறா எதுவும் செய்ய



...து என்று நினைக்கும் நீ, ஒன்றை மறந்து விட்டாய்! ...அவர்களது ஆசையை நிறைவேற்றுகிறாயோ இல்லையோ... நீ சந்தோஷமாக இருந்தால்தான் அவர்களுக்கு சந்தோஷம் என்பதை மறந்து விட்டாயா!''

...ன் வார்த்தைகளுக்கு மதுவிடம் எந்த எதிரொலியும் இல்லாமல் போகவே, ''மது உனக்கு நான் சொல்றது புரியுதுதானே?'' என்று தவிப்புடன் சத்யா வினவ, ...ச்சியற்ற பார்வையோடு அவனை ஏறிட்ட மது,

''நீங்க என்ன சொன்னாலும்... என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை!'' என்றதும் சத்யாவுக்கு எரிச்சல் வந்தது.

''முட்டாள்! நீ சரியான முட்டாள்'' அவன் திட்ட,

''என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்!' என்ற அலட்சியத்தோடு மது நின்று கொண்டிருக்க, சத்யாவுக்கு கோபம் வந்தது.

கோபத்தை விட, உண்மையிலேயே அவளை இழக்க நேரிடுமோ என்ற பயம் தலை தூக்க, வார்த்தைகளைக் கோர்த்தான்.

''அம்மாவுக்கு விருப்பம் இல்லாததை செய்ய மாட்டேன் என்று இவ்வளவு உறுதியா சொல்ற நீ... எதுக்காக என்னைக் காதலிச்சாய்? எதுக்காக இப்போ என் வாழ்க்கையோடு விளையாடுகிறாய்?''

சத்யநந்தன் கேட்டதும், மதுவின் கண்கள் வலியைக் காட்டின.

அவள் கண்களில் வலியைக் கண்டதும், அவளை விட அதிகமாய் சத்யா துடித்துப் போனான்.

''சே... வுளே... ஆத்திரத்தில் என்ன மாதிரி பேசிவிட்டேன்!' தன்னையே நொந்து கொண்டவன்,

''பட்டு... சாரிடா...'' என்று அவளிடம் நெருங்க, மது அவனிடம் இருந்து விலகி நின்றாள்.

''தப்புதான்... அம்மாவுக்கு பிடிக்காது என்று தெரிந்தும் நான் காதலிச்சது தப்புதான்! அதுக்கான தண்டனையைத்தான் இப்போ அனுபவிக்கிறேன்!''

கண்களில் நீருடன் மது சொன்னதும், சத்யா வேதனையோடு கண்களை மூடினான்!

தன்னைக் காதலித்தது தவறு என்று காதலி சொல்லும்போது, எந்த காதலனுக்குத்தான் வேதனை இராது?

ஆனால்... தானே அவளது இந்த வார்த்தைகளுக்கு காரணம் என்ற குற்ற உணர்வோடு அவளை நோக்கியவன், ''சாரி... மது... வெரி வெரி சாரி!'' என்றான் ஆதங்கமார்த்தமாக!

''இல்லை சத்யா... நீங்க சொன்னது தப்பில்லை! என் மேல்தான் எல்லா தப்பும்! அதுதான் உண்மை! ஆனால் நீங்க என்ன சொன்னாலும் என் முடிவை என்னால் மாற்றிக் கொள்ள முடியாது! அதுவும் உண்மை!' என்றவள் கண்கள், 'இத்தோடு விட்டு விடேன்' என்று அவனிடம் கெஞ்சின.

அவள் விழிகள் வேண்டியதைச் செய்து விட வேண்டும் போலத் தோன்றினாலும், இப்போது விட்டு விட்டால், அவளை இழப்பது நிச்சயம் என்று தெரிந்தும் அவனால் விட்டு விட முடியுமா என்ன?

இப்போது அவன் சொல்லப் போகும் வார்த்தைகள் அவளைக் காயப் படுத்தும் என்று சத்யாவுக்குத் தெரிந்தது. ஆனால்... இப்போது இதைச் சொல்லா



...ல், வாழ் நாள் முழுதும் இருவரும் வருந்த ...டி இருக்கும் என்பதை உணர்ந்தவனாக, அவளிடம் ...தினான்.

''இங்கே பாரு மது! ஒன்று நீ அத்தையின் ஆசையை நிறைவேற்றணும்! இல்லை... உனக்கு சந்தோசம் தரும் வாழ்க்கையை அமைச்சுக்கணும்! இது ரெண்டையும் செய்யாமல் இருந்தால், அத்தைக்கு...'' என்றவன் குரல் தழுதழுத்தது. தொண்டையை செருமி சரி செய்து கொண்டு, ''அத்தைக்கு ஏதாவது ஆகி விட்டால், அவங்க ஆன்மா கூட உன்னை மன்னிக்காது!''

தனது வேண்டுதலுக்கு இணங்கி இத்தோடு இந்தப் பேச்சை விட்டு விடுவான் என்று எண்ணி இருந்த மது, சத்யாவின் வார்த்தைகளில் திகைத்து அவனை நோக்கி ...ள்!

'என்ன சொல்கிறான் இவன்?'

அவளுக்கு உண்மையிலேயே ஒன்றும் புரிய ...லை!

மதுவின் முகத்தில் தெரிந்த குழப்பம், அவளுக்கு ...ன் சொன்னது விளங்கவில்லை என்பதை உணர்த்த, சத்யா மீண்டும் பேசினான்.

''ஆமாம்... அத்தைக்கு ஏதாவது ஆகி விட்டால்... நீ சொன்ன மாதிரி அவங்க உங்க திருமணம் பற்றி பேசியதுதான் அவங்க கடைசி வார்த்தை... கடைசி ஆசையா இருக்கும்! அதை நிறைவேற்றுவது உன் கடமையும் கூட! அதனால், ஒன்று நீ மகேந்திரனை கல்யாணம் செய்து கொண்டு அவங்க ஆசையை நிறைவேற்றணும்! இல்லை என்றால், நீ மனசார

விரும்பிய என்னை கல்யாணம் செஞ்சுக்கணும்... தன் ஆசை நிறைவேறவில்லை என்றாலும் கூட, தன் மகன் சந்தோஷமாக இருக்கிறாள் என்ற நிறைவாவது அவங்களுக்கு மிஞ்சும்! அதுதான் நீ அவங்களுக்கு கொடுக்கப் போற உண்மையான சந்தோஷமா இருக்கும்! நீ எடுக்கப் போற முடிவில்தான் நம்ம நாலு பேருடைய சந்தோஷம்... இன்னும் சொல்லப் போனால்... இன்னும் ரெண்டு குடும்பங்களுடைய சந்தோஷம் அடங்கி இருக்கு என்பதை மனதில் வைத்து பதில் சொல்லு! இப்பவே சொல்லணும் என்று இல்லை! நல்லா யோசிச்சுச் சொல்லு! நீ எந்த முடிவு எடுத்தாலும் எனக்குச் சம்மதம்!''

சத்யா சென்று விட்டான்!

'அன்னையின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்றால் மகேந்திரனைத் திருமணம் செய்து கொள்' என்று சத்யா சொன்னதுமே, வேலை நிறுத்தம் செய்யத் துவங்கி இருந்த மதுவின் மூளை, வேறு எதையும் யோசிக்கவோ, கேட்கவோ முடியாதபடி மரத்துப் போயிருந்தது.

'அவளது சத்யாவா? அவனா என்னை மகேந்திரனைத் திருமணம் செய்து கொள் என்று சொன்னான்! அவனால், எப்படி அவளிடம் இப்படிச் சொல்ல முடிந்தது?

வேறு வார்த்தைகளை எல்லாம் மறந்து போனவளாக இதே கேள்வியே அவளது மனத்தைக் குடைந்து கொண்டிருக்க, சுற்றுப் புறம் மறந்து அமர்ந்தவளுக்குத் தலை சுற்றியது.



இடையில் மகேந்திரன் வீட்டுக்குள் வந்ததையோ, தன்னையே பார்த்த வண்ணம் இருந்ததையோ கூட அவள் உணரவில்லை!

மகேந்திரன் என்ன? பக்கத்தில் இடியே விழுந்திருந்தாலும், அவள் அசைந்திருப்பாளா என்பது சந்தேகமே! அந்த அளவுக்கு அந்தக் கேள்வி மட்டுமே அவளை ஆக்கிரமித்து இருந்தது.

சத்யா பேசியதைக் கேட்டபடி உள்ளே வந்த மகேந்திரன், மது இருந்த நிலையைக் கண்டு ஒரு புறம் பதறினாலும், அவனது இந்தப் பேச்சு அவளை நல்ல முறையில் சிந்திக்க வைக்கும் என்று நம்பினான்.

அவளை யோசிக்க விட வேண்டும் என்று எண்ணிய மகேந்திரன், அவளைத் தனியே விட்டு விட்டு அங்கிருந்து அகன்றான்.

மது பிரம்மை பிடித்தது போல் அமர்ந்திருந்த தோற்றம் மனதை இளக்கினாலும், இப்போது அவளை யோசிக்க விடுவதே நல்லது என்று எண்ணிக் கிளம்பி இருந்த சத்யாவுக்கு, அவளை நல்லபடியாக சிந்திக்க வைக்க வேண்டும் என்று தான் சொன்ன வார்த்தைகள், அவளை சரியான முடிவை எடுக்க வைக்கப் போகிறது என்று அப்போது தெரிந்திருக்கவில்லை!



## 16

''முடிவு உன் கையில்! நீ எந்த முடிவு எடுத்தாலும் எனக்குச் சம்மதம்!'' என்று சொல்லி விட்டு வந்து விட்டானே தவிர, வீட்டுக்கு வந்ததும் சத்யாவுக்கு இருப்பு கொள்ளவில்லை!

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருக்கும் அவனைத் தெளிவாக சிந்திக்க வைக்க வேண்டும் என்று, தான் சொன்னதைப் புரிந்து கொள்ளாமல், அவள் வேறு விதமாக முடிவெடுத்து விட்டால்? என்ற சந்தேகம் வந்ததுமே, சோர்ந்து போய் அமர்ந்து இருந்தவனின் மூளை மரத்துப் போன உணர்வு தோன்றியது.

உணர்ச்சி வேகத்தில் அன்னையின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று மகேந்திரனைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று மது சொல்லி விட்டால்?

அவனால் அதைத் தாங்க முடியுமா?

அவளை மறந்து அவனால் இருக்க முடியுமா?

வேறொரு வாழ்க்கையை நினைக்கத்தான் முடியுமா?

கேள்விக் கணைகள் தொடர, இருக்கையில் இருந்து எழுந்தவன், தலையை அழுந்தக் கோதிக் கொண்டான்.

இல்லை! தன்னால் மதுவைத் தவிர வேறு யாரையும் வாழ்க்கைத் துணையாக நினைக்க முடியாதோ... அதே போலத்தான் மதுவுக்கும் இருக்கும்! என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அன்னையின் வார்த்தையை மீறக் கூடாது என்று உன்னிடம் கூடச் சொல்லாமல் உன்னை விட்டு பிரிந்து விடத் துணிந்தால்தானே? என்ற கேள்வியும் எழுந்து அவனது மனதை ரணமாக்கியது.

மது தன்னை விரும்ப ஆரம்பித்த நாளில் இருந்து அவள்தான் வாழ்க்கைத் துணை என்று உறுதியாக இருந்த சத்யாவுக்கு, இடையில் நேர்ந்த இந்த சறுக்கல்



அதிர்ச்சியைத் தந்திருந்தது. மதுவைத் திருமணம் செய்து கொள்வதில் இப்படி ஒரு சிக்கல் எழும் என்று, அவன் கனவிலும் நினைத்ததில்லை.

தனது கரங்களில் முகத்தைப் புதைத்து, ''கடவுளே! என் மதுவை என்னிடம் இருந்து பிரித்து விடாதே!'' என்று வாய் விட்டு வேண்டியவன், கதவைத் தட்டும் ஒலி கேட்டு, முக்தியில் இருந்து கைகளை எடுத்தான்.

கைகளில் இருந்த ஈரம், அவனையும் அறியாமல் அவன் அழுதிருப்பதை அவனுக்கு உணர்த்தி விட, மதுவை விட்டுக் கொடுப்பது இயலாத காரியம் என்பது அந்த கணத்தில் அவனுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

அவனுக்கு இருக்கும் அதே அளவு வருத்தம், வேதனை, அவனைப் பிரிவதனால் அவளுக்கும் இருக்கும் என்பதும் தெளிவாகி விட, இதற்குக் கூடிய சீக்கிரம் வேறு வழி கண்டு பிடிக்க வேண்டும் என்று அவன் முடிவு எடுத்த நேரம், அறைக் கதவு மீண்டும் தட்டப்பட்டது.

கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தவன், அங்கே நித்யா கவலை படிந்த முகத்துடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு,

''என்னடா நித்தி?'' என்று அக்கறையோடு விசாரிக்க,

''எனக்கு ஒண்ணும் இல்லை! உங்களுக்கு என்ன அண்ணா ஆச்சு? சாப்பிடாமலே மேலே வந்துட்டீங்க. நீ, பாலாவது கொடுத்துட்டுப் போகலாம் என்று

வந்தேன். ஏன், உங்க முகம் ஒரு மாதிரி இருக்கு?'' என்று கவலையுடன் கேட்டுக் கொண்டிருந்தவள், அவனது சிவந்த கண்களைப் பார்த்ததும்,

''அண்ணா! அழுதீங்களா என்ன?'' என்று அதிர்ச்சியோடு வினவ,

''ஹே! குட்டிம்மா! இல்லைடா!'' என்று அவசரமாகச் சொன்னவன்,

''அது சரி நீ என்ன பெரிய மனுஷி மாதிரி கவலைப் படறே? என்னைக் கேள்வி எல்லாம் கேட்கிறே?'' கேலியாகவே பேச்சை மாற்ற முயல,

''ப்ச்! நீங்க சரியான அழுத்தக்காரர் அண்ணா! உங்களுக்கும் அண்ணிக்கும் ஏதாவது லடாயா?''

தயக்கத்துடன் என்றாலும், தங்கையின் குரலில் இருந்த கவலையும் அக்கறையும் மனதை நெகிழ்த்த,

''குட்டிம்மா! ரொம்ப யோசிச்சு இருக்கிற சின்ன மூளையையும் பாழ் செஞ்சிடாதே! உங்க அண்ணியோட சண்டை போட்டு நான் ஜெயிக்க முடியுமா? எங்களுக்குள்ள எந்தப் பிரச்னையும் இல்லைடா!'' என்று புன்சிரிப்புடன் சொல்ல, அதற்கு மேல் அவனைத் துருவும் தைரியம் இல்லாமல், பாலைக் கொடுத்து விட்டு நித்யா கீழே சென்றாள்.

பெருமூச்சுடன் உள்ளே வந்து அமர்ந்த சத்யாவின் மனதை மீண்டும் மதுவே ஆக்கிரமித்தாள். அவள் குழம்பி இருந்த நேரம், தானும் அவ்வளவு கடுமையாக அவளிடம் பேசி இருக்கக் கூடாது என்று எண்ணியவள், அடுத்த நாள் அவளிடம் பொறுமையாகப் பேசிப் புரிய வைக்க வேண்டும் என்று முடிவெடுத்தான்.



இரவெல்லாம் யோசனையோடு உறங்காமல் இருந்தவன், அதிகாலை நேரம் தன்னையும் அறியாமல் கண்ணயர, சிறிது நேரத்திலேயே, அவனது கைப்பேசி அலறி அவனை எழுப்பியது.

திரையில் மகேந்திரனின் எண்ணை கண்டதும் அவசரமாக எடுத்தவன், ''மகேன்... என்ன இந்த நேரத்தில்? அத்தைக்கு...?'' என்று பதட்டத்துடன் கேள்வி கணை அடுக்க,

''சத்யா... உடனே கிளம்பி வீட்டுக்கு வர முடியுமா?'' என்ற மகேந்திரன் குரல் சரியாக இல்லை!

''என்ன மகேன்? என்ன விஷயம்?'' என்று அவன் கேட்கும்போதே மகேந்திரன் அழைப்பைத் துண்டித்து விட, உடனே அவனது எண்ணுக்கு அழைக்க முயன்ற போது, அது அணைத்து வைக்கப்பட்டிருந்தது. மதுவின் எண்ணுக்கு முயன்றால், எந்த வித பயனும் இருக்க வில்லை.

வேகமாக தயார் ஆகி, அன்னையிடம் அவசர வேலை என்று சொல்லி விட்டுக் கிளம்பினான்.

சத்யா வந்த போது, மகேந்திரன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

ஏதோ சரியில்லை! விபரீதமாக நடந்திருக்கிறது என்று உள்ளுணர்வு சொல்ல, ''மது எங்கே மகேன்?'' என்ற கேள்விக்குப் பதிலாக, மகேந்திரன் ஒரு காகிதத்தை நீட்ட, அதை வாங்கிய சத்யாவின் கை அவனையும் அறியாமல் நடுங்கியது.

*''சாரி சத்யா.*

*நீங்க நேற்று சொன்ன இரண்டில், எதையுமே என்னால் செய்ய முடியாது! என்னை மன்னித்து விடுங்கள்!*

*- மது.''*

கடவுளே? இதென்ன குழப்பம்! மது எங்கே?

அவன் கேட்பதற்கு முன்பே இன்னொரு கடிதத்தை மகேந்திரன் கொடுக்க, சத்யா அவசரமாக வாங்கி வேக வேகமாக படிக்க ஆரம்பித்தான்.

*''மகேன்,*

*எந்த தவறான முடிவும் எடுக்க மாட்டேன் என்ற உறுதி மொழியோடு, நான் இங்கேயிருந்து போகிறேன்!*

*என் திருமணம் நடந்தால்தான் உன் திருமணம் என்று நீ பிடிவாதம் பிடித்தாய்! ஆனால், என்னால் அம்மாவின் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொள்ள முடியாது. அதை எவ்வளவு சொல்லியும் நீ புரிந்து கொள்ளவில்லை என்பதால்தான் இந்த முடிவு.*

*நந்தினியின் அப்பா இருக்கும் நிலைக்கு, கல்யாணத்தை இன்னும் தள்ளிப் போடாதே! உன் திருமணம் முடிந்த பிறகுதான், நான் மீண்டும் இங்கே வருவேன்! இது மிரட்டல் இல்லை! வேண்டுகோள்!*

*அம்மாவைப் பார்த்துக் கொள் என்று நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை! அம்மாவைப் பார்க்காமல் என்னால் ரொம்ப நாள் இருக்க முடியாது! ஆனால் நான் மீண்டும் அம்மாவைப் பார்ப்பது உன் கையில்தான் இருக்கிறது!*

*உன் முகநூலில் உன் திருமணப் புகைப் படத்தைப் பார்த்தால்தான் நான் திரும்ப வருவேன். அதை நினைவில் வைத்துக் கொள்!*

*- மது*



''ஓ காட்! மகேன்... அவள் போனுக்கு அழைத்தால் கனெக்ட் ஆகாமல் என்று வருது! எப்போ... எப்போ கிளம்பினாள் என்று தெரியுமா?''

''அவள் நேற்று நைட்டே கிளம்பி இருக்காள்!''

''வாட்!!?? நேற்றே கிளம்பி இருக்காள் என்றால் உனக்கு தெரியலையா?''

ஆத்திரத்தில் சத்யாவின் குரல் உயர, மகேந்திரன் குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்தான்.

''சொல்லு மகேன்? எப்படி எப்படித் தெரியாமல் இருந்தது?''

''நேற்று நீ அவள்கிட்ட பேசிட்டு போன பிறகு, நான் உடனே வந்தேன் சத்யா... அவள் பிரம்மை பிடிச்ச மாதிரி உட்கார்ந்துட்டு இருந்தாள். அவள் யோசிக்கட்டும் என்று நானும் வெளியே கிளம்பிப் போயிட்டேன். நைட் நான் வந்த போது, வீடு பூட்டி இருந்தது. என்கிட்டே இருந்த சாவியில் திறந்துட்டு வந்தேன். மதுவோட ரூம் சாத்தி இருந்தது. எனக்கான சாப்பாடு மட்டும் மேஜையில் இருந்தது. நான் வர லேட்டானால், மது பூட்டிட்டு படுத்துட்டா என்று நினைத்தேன். சில சமயங்களில் அப்படி நடக்கிறதுண்டு. அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று நானும் போய் படுத்துட்டேன்! காலையில சீக்கிரமே விழிப்பு வந்துடுச்சு! பால் வந்த பிறகும் மது எழுந்து கொள்ளவில்லை என்று, அவளை எழுப்ப போகும்போதுதான் அவளோட ரூம் கதவு வெறுமனே சாத்தி இருக்கிறதைப் பார்த்தேன்... உள்ளே போய் பார்த்தால், இந்த லெட்டர்ஸ் இருக்கு!''

வேக வேகமாகச் சொல்லி முடித்தவன் கண்கள் கலங்கி இருந்தன.

''என்னால்தான்... எல்லாம் என்னால்தான்... அவளைப் புரிஞ்சுக்காம... காயப்படுத்தி... கடவுளே... எனக்கு மூளை வேலை செய்யவே இல்லை... அதான் உன்னை கூப்பிட்டேன்!''

மகேந்திரன், மது சென்றதற்கு தான்தான் காரணம் என்று வருந்த, சத்யா தான்தான் காரணம் என்று வேதனை அடைந்தான்.

ஆனால், இப்போது வருந்திக் கொண்டிருக்க நேரமில்லை! மது எங்கே போயிருக்கிறாள் என்று கண்டுபிடிப்பதுதான் இப்போது முக்கியம் என்று யோசித்தவனுக்கு, சட்டென்று பெங்களூருவில் இருந்து வந்த அழைப்பு நினைவு வந்தது. மது கண்டிப்பாக அங்கேதான் போயிருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில், அவன் முகம் மலர்ந்தது.

''எங்கே போனாள் என்று தெரியலையே சத்யா, எனக்கு ரொம்ப பயமா இருக்கு!''

மகேந்திரன் வேதனையுடன் புலம்ப, ''வருத்தப் படாதே மகேன்... அவள் எங்கே போயிருப்பாள் என்று எனக்குத் தெரியும்!'' என்ற சத்யா, விவரங்களைக் கூற,

''கடவுளே! அவள் இங்கே இருந்து வேற ஊருக்கு போக எப்பவோ முடிவு செஞ்சிருக்காளா?'' என்ற போது தன்னிடம் கூட சொல்லவில்லையே என்ற வருத்தம் தொனித்தது.

''ம்ம்ம்... நீ உன்னால்தான் அவள் கிளம்பி விட்டாள் என்று வருத்தப் படறதை நிறுத்து! நான் இப்பவே



அங்கே கிளம்பறேன்! அவளை எதற்கும் கட்டாயப் படுத்த மாட்டோம் என்று சொல்லிக் கூட்டிட்டு வரேன்! இதற்கு மேல் பட்சம் அவள் என் கண் எதிரேயாவது இருக்கட்டும்!''

கம்மிய குரலில் சொல்லி விட்டு சத்யா கிளம்ப எத்தனிக்க, ''சத்யா... நானும் வரேன்!'' என்றான் மகேந்திரன்.

''இல்லை மகேன்! நான் அவள் கிட்ட நிறையப் பேசணும்! ப்ளீஸ் புரிஞ்சிக்கோ!'' குரலோடு கண்களும் கெஞ்ச, மகேந்திரன் தயங்கினான்.

''ப்ளீஸ் மகேன்! நான் திரும்பி வரும்போது மதுவோடதான் வருவேன்! என்னை நம்பு!'' மகேந்திரனின் கையைப் பிடித்து அழுத்தி விட்டு சத்யா கிளம்ப,

''அவளைப் பார்த்த உடனே எனக்கு போன் செய் சத்யா! அப்பதான் என்னால் நிம்மதியா மூச்சு விட முடியும்!'' மகேந்திரன் சொன்னதும், சத்யா தலையாட்டி விட்டுச் சென்றான்.

அவசரம் அவசரமாக பயணச்சீட்டு ஏற்பாடு செய்து, பெங்களூரு செல்லும் விமானத்தில் ஏறி அமர்ந்த சத்யாவின் மனம் படபடத்துக் கொண்டிருந்தது.

அவள் நல்ல முறையில் யோசிக்க வேண்டும் என்று தான் சொன்ன வார்த்தைகள், அவளை இப்படி ஒரு முடிவெடுக்க வைக்கும் என்று அவன் நினைக்கவே இல்லை!

ஏற்கனவே, அன்னையின் உடல் நிலையால், மன வேதனையில் இருப்பவளைத் தான் மேலும் வேதனைப் படுத்தி விட்டதை எண்ணி, தன்னையே நொந்து கொண்டான்.

அவள் பெங்களூருவில் உள்ள நிறுவனத்தில் வேலை தேடுவது தெரியாமல் இருந்திருந்தால், அவள் இப்போது எங்கே போயிருப்பாள் என்று எப்படி கண்டுபிடித்திருக்க முடியும்? என்று எண்ணியவனுக்கு, வேறொரு சந்தேகம் தான்றி அவனை நிம்மதியாக இருக்க விடாமல் செய்தது.

பெங்களூரு நிறுவனத்தில் விண்ணப்பம் செய்திருப்பதை போல, அவள் வேறு ஏதாவது ஊரில் உள்ள நிறுவனங்களுக்கு விண்ணப்பம் செய்திருந்தால்?

அந்தக் கேள்வி எழுந்ததும், சத்யா ஒரு கணம் மூச்சு விட மறந்தான்.

இல்லை! அப்படி இருக்காது! அவள் அங்கேதான் போயிருக்க வேண்டும்!

மீண்டும் மீண்டும் அதையே ஜபம் செய்து கொண்டே பெங்களூரு வந்து இறங்கியவன், அந்த நிறுவன பொது மேலாளாரை அழைத்து விவரம் கேட்ட போது, அவன் தலையில் இடி விழுந்தது போலிருந்தது.

"இல்லை சார்! நாங்க மெயிலில் அனுப்பிய ஆஃபரை அவங்க ஏற்றுக் கொள்ளவில்லை! உங்க கம்பெனியிலேயே தொடரப் போறதா மெயில் அனுப்பி இருந்தாங்க!"

வாழ்க்கையில் முதன் முறையாக அடுத்து என்ன செய்வது? என்று புரியாமல் சத்யநந்தன் திகைத்து நின்றான்.



## 17

மது பெங்களூரு வரவில்லை என்று தெரிந்ததும், அடுத்து என்ன



செய்வது என்று புரியாமல் திகைத்து நின்ற சத்யாவை, கைப்பேசியில் வந்த அழைப்பு தன்னிலைக்கு மீட்டு வந்தது.

இயந்திர கதியில் கைப்பேசியை எடுத்து அழுத்தி, காதில் வைத்தவனிடம், "சத்யா... மதுவைப் பார்த்து விட்டாயா?" என்று மகேந்திரன் கேட்டதும்தான், சத்யா நினைவு வந்து பார்த்தான்.

விமானம் வந்து இறங்கி, ஒரு மணி நேரமாக தான் இங்கேயே அமர்ந்திருப்பது புரிந்தது.

துரிதமாக செயல்பட வேண்டிய இந்த நேரத்தில், இதென்ன முட்டாள்தனம்? என்று தன்னையே நொந்து கொண்டவன், "மகேன்! மது இங்கே வரலை!" என்றான்.

"வாட்? அங்கே போகலையா? அப்போ எங்கே போயிருப்பா?" என்று பதறிய மகேந்திரனிடம், "மகேன்... மதுவோட ரூமில் வேறே ஏதாவது க்ளூ கிடைச்சதா?" என்று விசாரித்தான்.

"பார்த்தேன் சத்யா. உபயோகமா எதுவும் கிடைக்கலை. அவளுடைய சிம் கார்ட் மட்டும் அவள் தலையணையில் இருந்தது. சிம் கார்டை வைச்சிட்டு போனை மட்டும் எடுத்துட்டு போயிருக்காள்!"

மகேந்திரன் சொன்னதும், சத்யாவின் மனதில் ஆயிரம் பரவியது. அடுத்த கணமே, அவனது மூளை துரிதமாக செய்ய வேண்டியதை யோசிக்க ஆரம்பித்தது.

"மகேன்! உடனே மது நம்பருக்கான டீடைல் பில் எடுத்து, அவள் சமீபத்தில் யார் யாருக்கு போன் செஞ்சிருக்கா என்று எடுத்து, அவங்க டீடைல் எல்லாம் முடிந்த வரை கலெக்ட் செஞ்சு வை... நான் இன்னும்

இரண்டு மணி நேரத்தில் அங்கே இருப்பேன்!'' என்று உத்தரவிட்டு விட்டு, பயணச் சீட்டுக்கான ஏற்பாட்டில் இறங்கினான்.

இதை முன்னமே செய்திருக்க வேண்டும்! மது வீட்டை விட்டுக் கிளம்பி விட்டால் என்றதும், அவனால் சரி வர யோசிக்கக் கூட முடியவில்லை!

பெங்களூரு விவரம் ஏற்கனவே தெரிந்தது என்பதால், அங்கேதான் போயிருக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டான். சரி... நடந்ததை விட்டு விட்டு இனிமேல் கவனமாகச் செயல்பட வேண்டும் என்று எண்ணிக் கொண்டே, சென்னைக்கு வந்து சேர்ந்த வனை, மகேந்திரன் ஒரு பட்டியலுடன் எதிர்கொண்டான்.

''இந்த ஒரு மாசமா, அவள் கூட படிச்சு வேற வேற ஊரில் இருக்கிற நிறைய பிரெண்ட்சுக்கு போன் செஞ்சிருக்கா சத்யா! அவளோட போன் டயரியில் இருந்து அவங்க யார் யார் என்று எடுத்து, அவங்க டீடெய்ல்ஸ் எல்லாம் அவளோட ஃபேஸ்புக் பிரண்ட்ஸ் லிஸ்ட்ல இருந்து எடுத்து வைச்சிருக்கேன்! கடைசியா ரெண்டு பேருக்கு பேசி இருக்கா... ஒண்ணு டெல்லியில் இருக்கிற மனிஷா... இன்னொண்ணு மும்பையில் இருக்கிற ரித்தி! இந்த ரெண்டு பேர்கிட்டவும் பேசி பார்க்கலாமா?''

''இல்லை மகேன்! அவங்க கிட்ட பேசினாலும் எந்த க்ளூசும் இருக்காது என்று தோணுது! இந்த அளவுக்கு நாம அவளை கண்டுபிடிக்க முயற்சி செய்வோம் என்று அவளுக்கும் தெரியும்தானே? அதனால், நம்ம கிட்ட எதையும் சொல்லக் கூடாது என்று கட்டாயம் சொல்லி வைத்திருப்பாள்! நாம போன் செஞ்சது தெரிந்து, அந்த



இருந்து அவள் வேற எங்கேயாவது போய் விட்டால், இன்னும் கஷ்டம்!''

''எனக்கு ரொம்ப பயமா இருக்கு சத்யா! மது ரொம்ப தைரியசாலி! புத்திசாலியும் கூட! மற்ற நேரத்தில் அவள் உலகத்தின் எந்த மூலைக்கு போயிருந்தாலும், நான் பயப்பட்டிருக்க மாட்டேன்... ஆனால் அவள் இப்போ இருக்கிற குழப்பமான மனநிலையில... எனக்கு ரொம்ப பயமா இருக்கு!''

''மகேன்... ப்ளீஸ்... நான் உன்னை விட அதிகமா நொந்து போயிருக்கேன்... இப்போ நாம் ரெண்டு பேரும் நிதானம், பயம் இதெல்லாம் விட்டுட்டு ஒழுங்கா யோசிச்சால்தான் மது இருக்கிற இடத்தைக் கண்டு பிடிக்க முடியும்! இப்போ அதுதான் ரொம்ப முக்கியம்!''

தொடர்ந்தான்.

மகேந்திரன் கொடுத்த இருவரின் முகநூல் பக்கங்களை ஆராய, இருவருமே பிரபலமான ஆடை வடிவமைப்பு நிறுவனங்களில் வேலை செய்வது தெரிந்தது.

அவர்கள் வேலை செய்யும் நிறுவனங்களின் பெயரைக் கண்டு பிடித்தவன், தனது செல்வாக்கைக் கொண்டு விசாரித்த போது, மது இரண்டு நிறுவனங்களுக்குமே விண்ணப்பம் அனுப்பி இருப்பது தெரிய வந்தது.

அவள் எங்கே போயிருக்கிறாள் என்று தெளிவாக தெரிந்திராத நிலையில், மகேந்திரன் மும்பை போவதென்றும், சத்யா டெல்லி போவதென்றும் முடிவானது.

சொல்லவும் முயன்றும் அன்று இரவு விமானத்தில் இடம் சீட்டு கிடைக்கவில்லை! அன்று இரவு முழுவதும்,

உறங்காமல் தவிப்புடன் கழித்து விட்டு, அதிகாலையில் கிடைத்த விமானத்தில ஏறி, டெல்லி வந்து இறங்கியதும், மது இங்கே வந்திருக்க வேண்டும என்று சத்யாவின் மனம் பிரார்த்தித்தது.

ஒரே நாளில் எவ்வளவு நடந்து விட்டது! உடனே விட மனம் களைத்துப் போயிருந்தது. மதுவைக் கண்ணால் கண்ட பிறகுதான் அவனால் நிம்மதியாக மூச்சு கூட விட முடியும் என்று தோன்றியது.

விமான நிலையத்தில் இருந்து மதுவின் தோழி இருக்கும் இடத்துக்கு செல்ல டாக்சி பிடித்தவன், ''மது இங்கேதான் இருக்க வேண்டும்!'' என்று அத்தனை மனதில் ஜபித்து கொண்டு வர, வழியில் லக்ஷ்மி நாராயணன் கோவிலைக் கண்டதும், ''டிரைவர் ஒரு நிமிஷம், இங்கே நிறுத்துங்க!'' என்று இறங்கி கோவிலின் உள்ளே சென்றான்.

* * *

டெல்லி லக்ஷ்மி நாராயணன் சந்நதி!

தன் அன்னை விரைவில் பரிபூரணமாக குணமாக வேண்டும் என்று பிரார்த்தி விட்டு, ஓர் இடத்தில் வந்து அமர்ந்தாள் மதுமிதா!

மனிஷாவின் நிறுவனத்தில், வேலையில் இன்னும் ஒரு வாரம் இருக்கிறது. ஏற்கனவே இங்கே வர வேண்டும் என்று முடிவு செய்ததுதான் என்றாலும் இப்படி அவசரம் அவசரமாக வர வேண்டும் என்று அவள் நினைத்திருக்கவில்லை.

சென்னையில் இருந்து வந்து ஒருநாள்தான் ஆகி இருக்கிறது என்று அவளால் நம்ப முடியவில்லை.



இப்போதே, அன்னையைப் பார்த்து ரொம்ப நாள் ஆன மாதிரி தோன்ற, தான் தவறு செய்து விட்டோமோ என்று கூடத் தோன்றியது.

உடனே, இல்லை! இதுதான் சரியான முடிவு என்றும் தோன்றியது.

தன்னால், மகேந்திரனின் திருமணம் தடைபடக் கூடாது. ஏற்கனவே அன்னை உணர்வில்லாமல் இருப்பதைக் கண்டு தானும் மகேந்திரனும் அடையும் வேதனை, கண்டிப்பாக நந்தினிக்கும் வரக் கூடாது என்றால், அவர்கள் திருமணம் விரைவில் நடக்க வேண்டும்.

இவள், அங்கேயே இருந்தால், அது நிச்சயம் நடக்காது. மகேந்திரன், மதுவின் திருமணம் நடந்தால் தான் தன் திருமணம் என்று பிடிவாதமாக இருப்பான். இவள் எழுதி வைத்து விட்டு வந்திருக்கும் கடிதத்தைப் பார்த்து விட்டு, கண்டிப்பாக மகேந்திரன் திருமணத்தை விரைவில் நடத்துவான் என்ற நம்பிக்கை இருந்தது.

தான் இவ்வாறு சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி வந்தது அனைவரையும் வேதனைப் படுத்தும் என்று தெரிந்தும், இந்த முடிவை எடுக்க வேண்டி இருந்ததை எண்ணி அவள் மனம் வேதனையுற்று இருந்தது. ஆனால், அவளுக்கு வேறு எந்த வழியும் இருந்திருக்க வில்லை.

மகேந்திரன் திருமணம் நடைபெற வேண்டும் என்பதுதான் அவளது ஆசையும்! அதற்காக அவளால் அன்னையின் சம்மதமின்றி சத்யாவைத் திருமணம் செய்து கொள்ள முடியாது! அப்படிச் செய்தால், அவளது

குற்ற உணர்வால், அவளால் நிச்சயம் ஒரு நல்ல மனைவியாக நடந்து கொள்ள முடியாத பட்சத்தில், அதைச் செய்து சத்யாவின் வாழ்வைக் கெடுக்க அவள் விரும்பவில்லை!

அன்னையின் நினைவு அதிகமாகத் தாக்க, சென்னையில் இருந்து கிளம்பியதில் இருந்து அவளுக்குத் துணையாய் இருந்த அன்னையின் மாங்கல்யத்தைக் கைப்பையில் தேடியவளின் கைக்கு, அது அகப்படாமல் போகவே, மனம் பதறியது.

'கடவுளே! மனீஷாவின் அறையில் இருந்து கிளம்பும் போது கைப்பையில் இருந்ததே!'

அவசரமாக கைப்பையைத் தலைகீழாக திருப்பி, அன்னையின் மாங்கல்யத்தைத் தவிர மற்ற எல்லாமே சரியாக இருந்தது.

பதறத் தொடங்கிய மனதை அடக்கியபடி, எப்போதெல்லாம் கைப்பையைத் திறந்தாள் என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

ஆட்டோவில் வந்து இறங்கும்போது, பணம் கொடுக்க ஒரு முறை! கோவிலில் அர்ச்சனை சீட்டு வாங்கும்போது ஒரு முறை, அப்போது, கைப்பை தவறி விழுந்தது நினைவுக்கு வந்து, வேகமாக ஓட்டமும் நடையுமாக அர்ச்சனை சீட்டு விற்கும் இடத்துக்கு போய் தேடியவளின் கண்கள், அங்கே தான் தேடியது இல்லாததைக் கண்டதும் கண்ணீரால் நிறைந்தன.

அன்னையின் மாங்கல்யம் தொலைந்ததில், ஏற்கனவே கலங்கி இருந்த அவளது உள்ளம் மேலும் கலக்கம் அடைந்தது. இதென்ன, அவ்வளவு கவனமாக



...இருந்தது எப்படி காணாமல் போயிற்று? ...ன்னைக்கு ஏதாவது நடந்திருக்குமோ? அதன் ...றியாகத்தான் அவரது மாங்கல்யம் காணாமல் ...யிற்றா? என்ற எண்ணம் தோற்றுவித்த அச்சத்தில், ...ள் உடல் ஒரு முறை சிலிர்த்து அடங்கியது.

'இல்லை! அப்படி எல்லாம் முட்டாள்தனமாக ...சிக்கக் கூடாது!' என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் ...ண்டவள், கீழே பார்த்தவாறே மெதுவாக ...லைச் சுற்றி வர, எதிரே வந்த ஆள் மீது மோதிக் ...ண்டாள்.

"சாரி!" என்றபடி நிமிர்ந்தவள், எதிரே நின்றவனைக் ...டும், உறைந்து நின்றாள்.

"...த்... யா!" என்று முணுமுணுத்தவளுக்கு, 'இவன் ...இங்கே வந்தான்? தான் இங்கே இருப்பது எப்படித் ...ரிந்தது?" என்ற கேள்விகளோடு,

'அம்மாவுக்கு ஏதாவது ஆகி விட்டதா, விவரம் ...ல்ல வந்திருக்கிறானா?" என்ற அச்சம் தோன்ற, "சத்யா? அம்மாவுக்கு... அம்மா..." மேலே கேட்க ...யாமல் வாய் குழற, அவனது சட்டையைப் பற்றி ...ண்ணீரோடு உலுக்கியவளைக் கண்ட சத்யாவுக்கும் ...திர்ச்சிதான்!

...துவைக் கண்டு, அவளது மனம் புண்படாதவாறு ...சி, இங்கிருந்து அழைத்து செல்ல வேண்டும் என்ற ...த்மார்த்தமான பிரார்த்தனையோடு கோவிலை வலம் ...ந்தவனுக்கு, தன் மீது மோதிய பெண் மதுதான் ...பதை அறிந்தும் ஆனந்த அதிர்ச்சி.

இவளைப் பாராமல் இருந்தது ஒரே ஒரு நாள் ...னா?

யுகம் யுகமாய் பிரிந்திருந்து துணையை மீண்டும் காண்பதைப் போல உடலும் உள்ளமும் ஆனந்தத்தில் திளைத்த அந்த நொடி, அவன் அவளை எந்த அளவு நேசிக்கிறான் என்பதை அவனுக்குத் தெளிவாக உணர்த்த அவனது கண்கள் தாமாகக் கலங்கின!

அவனைப் பார்த்ததும் அவள் அடைந்த அதிர்ச்சி இயல்புதான்! அது அவன் எதிர்பார்த்ததும் கூட!

ஆனால், அத்தைக்கு ஏதோ என்று ஏன் கேட்கிறாள் என்று குழம்பியவன், அவள் இன்னும் தன் சட்டையை பிடித்து உலுக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்ததும், தன் யோசனையில் இருந்து மீண்டான்.

''மது... என்னடா? ஏன் இப்படி அழறே? அத்தைக்கு எதுவும் ஆகலைம்மா!'' என்று சமாதானப் படுத்தியவன் அவளது கண்ணீருக்கான காரணத்தை விசாரிக்க, விவரம் சொன்னவள், தன்னுடைய அச்சத்தையும் பகிர,

''மது... தேவை இல்லாமல் குழப்பிக்காதே. அத்தைக்கு எதுவும் ஆகாது! பொறுமையா தேடினால் கிடைக்கும்... வா!'' என்று அவளது கையைப் பற்றிக் கொண்டு தானும் தேடுதலைத் தொடர, மதுவின் கண்ணீர் நிற்கவில்லை என்றாலும், சத்யாவின் கைப்பற்றி இருந்தது அவளது அச்சத்தை சற்றே நீக்கி இருந்தது.

இருவரும் எதையோ தேடிக் கொண்டிருப்பதைக் கண்டு என்னவென்று கேட்ட மற்றவர்களும் ஆளுக்கொரு புறமாய்த் தேட, ஒரு வயதான பெண்மணி அருகில் வந்தார்.

''இதைத்தான் தேடுகிறீர்களா?''



தமிழில் வந்த குரலைக் கேட்டு இருவரும் திரும்பிக்கிட்டு நிமிர, மதுவின் கண்கள் அவரது கையில் இருந்த அன்னையின் மாங்கல்யத்தைக் கண்டதும் ஒளிர்ந்தன.

''ஆமாம் ஆன்ட்டி! உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை! ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் ஆன்ட்டி!'' கண்ணீருடன் நன்றி சொன்னவளிடம்,

''இருக்கட்டும்மா... கண்ணில் கிடைத்ததை எடுத்து கொடுத்ததுக்கு எதுக்கு தேங்க்ஸ் எல்லாம்!'' என்றவர்,

''ரொம்ப பயந்துட்டே போலிருக்கு! அபசகுனம் அதெல்லாம் நினைச்சு பயப்படாதேம்மா! ஏதோ திருஷ்டி கழிஞ்சது என்று நினைச்சிக்கோ!'' என்று சொல்லி, சத்யநந்தனிடம் திரும்பினார்.


''இந்தாப்பா! நீயே உன் கையால் அணிவித்து விடு! பாவம் குழந்தை ரொம்ப பயந்து போயிருக்கா!''

சத்யாவிடம் மாங்கல்யத்தை தந்து விட்டு, அவர் சொன்னதைக் கேட்டு இருவரும் திகைத்து நிற்க, ''சொம்பவும் சக்தி வாய்ந்த கோவில் இது! கட்டுப்பா! நீங்க இரண்டு பேரும் நீண்ட ஆயுளோடு சந்தோஷமா இருப்பீங்க!'' ஆசீர்வதிப்பது போல அவர் சொல்ல, முதலில் திகைப்பில் இருந்து மீண்டது சத்யநந்தன்தான்!

அவளது விருப்பம் இன்றி எதுவும் நடக்காது என்று உறுதி அளித்து, மதுவைக் கூட்டிச் செல்ல வந்தவனின் எண்ணங்களில், அந்த வயதானப் பெண்மணி சொன்னது தெய்வத்தின் குரலாகவே ஒலித்தது.

நேற்று முழுவதும், மதுவைத் தேடி அலைந்த தவிப்பு நினைவில் வர, அந்த தவிப்பை வாழ்வில் இன்னொரு

முறை அடையும் சக்தி தனக்கு இல்லாதது உணர்ந்தவனாக, அதற்கு மேல் ஒரு நொடியும் தாமதிக்காது, மதுவின் கைப் பற்றி நாராயணனின் சன்னதிக்குள் நுழைந்தவனின் கரம், அவளது கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்த கணம், அவர்களை ஆசீர்வதிப்பதைப் போல, கோவில் மணி ஓங்கி ஒலித்தது!



# 18

தன் கழுத்தில் இருந்த மாங்கல்யத்தையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த மதுமிதாவுக்கு நடந்தது எல்லாம் ஒரு கனவைப் மாதிரி தோன்றியது.

தன்னுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான, மிக மிக முக்கியமான நிகழ்வு நடந்திருப்பதில், அவளுக்கு சந்தோஷம் இல்லை! வருத்தமும் இல்லை! ஏன், வேறு எந்த விதமான உணர்வும் தோன்றவில்லை!

அன்னையின் அனுமதி இன்றி தனது திருமணம் நடக்கக் கூடாது என்று உறுதியாக இருந்தவளது திருமணம், அவள் கண் மூடி கண் திறப்பதற்குள், நடந்து முடிந்து விட்டது.

தன் வாழ்க்கையில் நடப்பவற்றில் தனக்கு எந்த விதச் சம்மந்தமும் இல்லாமல், தான் ஒரு பார்வையாளராக மாறிப்போனதைப் போன்ற விசித்திரமான உணர்வு தோன்ற, அவளது இதழ்க்கடையில் ஒரு விரக்தி புன்னகை மலர்ந்து. மனைவியையே பார்த்துக் கொண்டிருந்த சத்யாவின் மனம், அந்த விரக்தி புன்னகையில் வாடியது.



கோவிலில் இருந்து கிளம்பி, மதுவின் தோழியின் அறைக்கு வந்து மதுவின் பொருட்களைச் சேகரித்துக் கொண்டு, விமான நிலையம் வரும் வரையிலும், மது ஒரு வார்த்தை கூடப் பேசாமல், அமைதியாக வந்தது சத்யாவின் மனதை வாளாய் அறுத்தது.

சத்யநந்தனுமே, தான் நடந்து கொண்ட விதத்தில் அதிர்ந்து போயிருந்தான்.

மதுவை இழந்து விடக் கூடாது என்ற அச்சமே, அவனை அவ்வாறு செய்ய வைத்திருக்கிறது என்பதை அவன் உணர்ந்தாலும், மதுவின் அனுமதி இன்றி, தான் செய்தது தவறு என்ற குற்ற உணர்வு அவனை அவளிடம் பேச விடாமல் தடுத்தது.

தன் வீட்டுக்கும் மகேந்திரனுக்கும் அழைத்து விவரம் சொல்லி இருந்தான்.

அவனது தந்தைக்கு மிகவும் வருத்தம், கோபம்! யாருக்குத்தான் இருக்காது? தங்கள் மகனின் திருமணம் விமரிசையாக நடக்க வேண்டும் என்று கனவு கொண்டிருப்பவர்களின் கோபம் அவனுக்கும் புரிந்தது.

அந்தக் கோபம் எந்த விதத்திலும், மதுவைப் பாதித்து விடக் கூடாது என்பதால், அவன் பொறுமையாக எல்லா தரணி காரியங்களையும் விளக்கி, அவனது பெற்றோரிடம் மன்னிப்பு கேட்டு, சமாதானப் படுத்த வேண்டியதாயிற்று.

"அம்மா... மது ஏற்கனவே ரொம்ப நொந்து போயிருக்காம்மா... நாங்க அங்கே வரும்போது... நீங்கதான் அப்பாவை சமாதானப் படுத்தி வைக்கணும்! ப்ளீஸ் மா!"

அன்னையிடம் அவன் வேண்டுகோள் வைக்க, ''இது செய்யறதுக்கு முன்னே யோசிச்சு இருக்கணும்! மது மருமகளாய் வந்ததில் எங்களுக்கு சந்தோஷம்தான்... ஆனாலும், வீட்டுக்கு பெரியவன் நீ... சொந்தக்காரங்க... பிசினஸ் பிரண்ட்ஸ் என்று எத்தனை பேரைச் சமாளிக்கணும்... அப்பாவுக்கு கோபம் வராமல் என்ன செய்யும்?''

''சரி... எல்லாம் நடந்து முடிந்த பிறகு என்ன பேசறது? என்று தானே தணிந்து, ''மது பக்கத்தில் இருக்காளா? போனை கொடுக்கறீயா?'' என்றார்.

''இல்லைம்மா... அவ கொஞ்சம் அப்செட்டா இருக்கா...'' அவன் தயங்கியபடி சொல்ல,

''நான் அப்பா கிட்ட பேசறேன்.. நீ முதலில் அவளை சமாதானப் படுத்து!'' என்று அவர் வைத்து விட, என்ன சொல்லிச் சமாதானப் படுத்துவது என்று அவனுக்குப் புரியவில்லை.

அவள், இவன் பக்கம் கூடத் திரும்பவில்லை.

உள்ளுக்குள், மது தன்னோடு வீட்டுக்கு வருவாளா என்ற சந்தேகம் வேறு முளைத்தது. வீட்டிலும் சொல்லியாயிற்று. இப்போது, இவள் வரவில்லை என்ன செய்வதென்று தவித்தவன், சென்னைக்கு வந்து இறங்கியதும், அவர்களை அழைக்க வந்த காரில், மது ஏறி அமர்ந்ததும்தான் கொஞ்சம் நிம்மதியானான்.

வீட்டுக்கு வந்ததும், சுமித்ரா ஆரத்தி கரைத்து உள்ளே கூப்பிடும்போதும், அவள் அமைதியாகவே இருக்க, நித்யாதான் ''அண்ணி!'' என்று ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.



பாசத்துடன் அண்ணி என்று அழைத்தவளைக் கண்டதும், மதுவும் தன்னை அறியாமல் புன்னகைத்தாள்.

இவர்கள் வருவதற்கு முன்னரே அங்கே வந்திருந்த மகேந்திரனிடமும், மது எதுவும் பேசவில்லை!

மகேந்திரனுக்கும், மதுவின் மன நிலை புரிந்ததால், அவனும் அவளிடம் பேச முயற்சிக்கவில்லை.

இப்போது கோபமாக இருந்தாலும், விரைவில் அவள் மனம் மாறும் என்ற நம்பிக்கையோடு, அங்கிருந்து சென்றான்.

அன்று இரவு உணவுக்குப் பிறகு, சத்யாவின் தந்தை பேச்சை ஆரம்பித்தார்.

''நீ செஞ்சதில எனக்கு ரொம்ப வருத்தம்தான் சத்யா! ஆனால்... நடந்தது நடந்து விட்டது! இந்த விஷயம் வெளியே தெரியறதுக்கு முன்னாடி அஃபிசியலா நாம், கல்யாண ஏற்பாட்டை செஞ்சாகணும்!''

கோபிநாத் சொன்னதும், மதுவின் உடல் ஒரு கணம் இறுகி, பின்பு இயல்பானது.

தந்தை பேச ஆரம்பித்ததும், கவனத்தை அவர் பேச்சிலும், பார்வையை மனைவியிடமும் வைத்திருந்தவனுக்கு மனைவியின் மனம் புரிந்தது.

''சாரிப்பா! உங்க அனுமதி இன்றி செஞ்சது தப்புதான்! ஆனால்... இப்போ வேற எந்த ஏற்பாடும் வேண்டாமே... ப்ளீஸ்!'' என்றவனிடம்,

''புரியாமல் பேசாதே சத்யா! நாம கல்யாண ஏற்பாடு செய்யலைன்னா... எல்லாரும் ஆளுக்கு ஒரு விதமா பேசுவாங்க... மதுவுக்கும் தான் கெட்ட பேர்! இதுவரை செஞ்சது போதும்! இப்போ என் பேச்சைக் கேள்!''

தந்தையாய் அவர் அதட்ட, சுமித்ரா உதவிக்கு வந்தார்.

''இங்கே பாருங்க! ஏற்கனவே அவள் கழுத்தில் இவன் தாலியை கட்டியாச்சு! இதற்கு மேல் கல்யாண ஏற்பாடு எல்லாம் வேண்டாம்! ஒரு ரிசப்ஷனுக்கு மட்டும் ஏற்பாடு செய்யுங்க!''

சிறிது நேர யோசனைக்குப் பிறகு, அவருக்கும் மனைவி சொல்வது சரிதான் என்று தோன்றியது.

பேச்சு முடிந்ததும், சத்யாவும் மதுவும் அவர்களது அறைக்கு வந்தனர்.

சத்யாவுக்கு தந்தையின் பேச்சையும் மீற முடியவில்லை! அதே சமயம், இந்த ஏற்பாடுகள் மதுவை வருத்தப் படுத்துமோ என்ற எண்ணமும் வருத்தத்தைத் தர, ''சாரி மது! நான் வேணா இன்னொரு தரம் பேசிப் பார்க்கிறேன்!'' என்றான்.

அவனை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தவள், ''வேண்டாம்! இதுவரைக்கும் பெரியவங்க அனுமதி இல்லாமல் நடந்தது எல்லாம் போதும்! இனிமேலாவது அவங்க விருப்பப்படி எல்லாம் நடக்கட்டும்!'' என்றதோடு, மது கட்டிலின் ஒரு முனையில் படுத்துக் கொள்ள, சத்யா திகைத்து நின்றான்.

இரண்டு நாட்கள் அறைக்குள்ளேயே அவள் முடங்கி இருக்க, சுமித்ராவும், நித்யாவும் தாங்களாகவே வந்து அவளிடம் பேச முயன்றனர்.

மகன் செய்து விட்டு வந்த விஷயத்துக்கு காரணம் இவள்தானே என்ற வருத்தம், கோபம் எதையும் வெளிக் காட்டாமல் தன்னோடு சுமித்ரா இயல்பாக பழகியதைக் கண்டு, மதுவுக்கு குற்ற உணர்வு ஏற்பட்டது. அதனால்



அவளும் இயல்பாக இருக்க முயல, நித்யாவின் உதவியால், அது எளிதாகவும் இருந்தது.

மூன்றாவது நாள், சத்யா தயங்கித் தயங்கி அவளருகே வந்து நிற்க, அதை உணர்ந்தாலும், திரும்பிப் பார்க்காமல், மது அவள் செய்து கொண்டிருந்த வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

''மது...'' என்று மெல்லிய குரலில் அழைத்தவன் பக்கம் திரும்பி நின்றாலும், அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை.

மனைவியின் பாராமுகம் மனதை வாட்ட, அதை மறைத்துக் கொண்டு, ''இன்னைக்கு ஹாஸ்பிடல் போய் அத்தையை பார்த்துட்டு வரலாம்'' என்றான்.

அவள் ஏதாவது சொல்வாள் என்று அவன் காத்திருக்க, எதுவும் சொல்லாமல், மீண்டும் தன் வேலையில் ஆழ்ந்தாள் அவள்.

''என்ன மது? எதுவும் சொல்ல மாட்டேங்கிறே?''

பதில் வரவேயில்லை.

''ப்ளீஸ் மது... ரெண்டு நாளா, நீ நைட் தூங்காமல் அத்தையை நினைச்சு அழறது எனக்கு தெரியும். என் மேல் இருக்கிற கோபத்தில், நீ உன்னையே வாட்டிக் கொள்ளாதே. நான் சாயந்திரம் வரும்போது, ரெடியா இரு. ஹாஸ்பிடலுக்கு போகலாம்.''

சற்று அழுத்தமாகச் சொல்லி விட்டு சத்யா கிளம்பி விட, மதுவுக்கு கண்கள் கலங்கின.

அவளுக்கு மட்டும் அன்னையைப் போய் பார்க்க வேண்டும் என்று இல்லையா என்ன?

மூன்று நாளாய் மருத்துவமனை போகத் துடித்த மனதை, அவள் மனதில் இருந்த தயக்கம் கட்டிப்

போட்டிருந்தது. ஆனால், அன்னையைப் பார்க்கும் ஆவல், அந்த தயக்கத்தை உடைத்தெறிய, அன்று மாலை கணவன் வந்து ''போகலாமா?'' என்று கேட்டதும் கிளம்பத்தான் செய்தாள்.

மருத்துவமனை சென்றபோது, ஏதோ குற்றம் செய்தவளைப் போல, அன்னையின் முகத்தைக் கூட அவளால் சரியாகப் பார்க்க இயலாமல், கண்ணீர் பார்வையை மறைத்தது.

அவளது கண்ணீர் சத்யாவின் குற்ற உணர்வை மேலும் அதிகமாக்கியது.

அடுத்த ஒரு வாரத்தில், வரவேற்பு நடந்த போது இயல்பான, முகத்துடனே கலந்து கொண்டாலும், தனிமையில் சத்யாவிடம் பேசுவதை அறவே தவிர்த்தாள்.

அவள் மனம் மாற, அவகாசம் கொடுத்தே ஆக வேண்டும் என்று புரிந்ததால், சத்யாவும் அவளைத் தொந்தரவு செய்யவில்லை என்றாலும், தன் மனம் கவர்ந்தவள், மனைவியாக வாய்த்த பிறகும், வேற்று மனிதனைப் போல தள்ளி நிற்பது அவனுக்கு வருத்தத்தையே அளித்தது. அவளது வருத்தத்தைத் துடைக்க வேண்டியவனே, அவளது வருத்தத்துக்கு காரணகர்த்தாவாக மாறிப்போனதை எண்ணி மனம் தவித்தான்.

அவள், தன்னிடம் காதல் மனைவியாய் நடந்து கொள்ள வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆனால், இயல்பான பேச்சு வார்த்தை கூட இல்லாமல் இருப்பது மனதை வருத்தவே செய்தது.



அவன் மேல் இருக்கும் கோபத்தில், அவனைத் திட்டி தீர்த்து போட்டால் கூடப் பரவாயில்லை! ஆனால்... மனைவி பாரா முகம் காட்டுவது, அன்பு கொண்ட அவன் மனதை ரணமாக்கியது.

தினமும் மாலை, ஜானகியை மருத்துவமனையில் பார்ப்பதற்காக மனைவியை அழைத்து செல்லும் நேரம், சத்யாநந்தனுக்கு மிகவும் பிடித்தமான தருணம்! அப்போது தான், அவன் மனைவி அவள் அருகில் காரில் அமர்ந்து வருவாள் மற்ற நேரம், அவன் கிழக்கே நின்றால், இவள் மேற்கே நிற்பாள்!

தான் அருகில் வந்தாலே, விலகி செல்கிறவளை இழுத்து வைத்துப் பேச வேண்டிய கட்டாயத்தில் மனம் நொந்தியது. அவன் சொல்வதைக் கேட்கும் மன நிலையில் இல்லாதவளுக்கு, தான் சொல்வதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது என்று தெரிந்தும், அவளிடம் பல முறை பேச முயன்றான்.

அவனது பல நாள் முயற்சிக்கு பலனாக, ''ப்ளீஸ்! முடிந்து முடிந்ததைப் பற்றிப் பேச வேண்டாமே!'' என்பதில் வேண்டுதலுடன் மனைவியிடம் இருந்து ஒரு பதிலிப்பு மட்டுமே பதிலாக கிடைத்தது. ஏற்கனவே அவளை வேதனைப் படுத்தி விட்டோம் என்ற வருத்தத்தில் இருந்தவனுக்கு, அதற்கு மேல் அவளை வேதனைப் படுத்த தைரியம் இருக்கவில்லை.

அவள் மனம் மாறும் வரை காத்திருக்க வேண்டியது தான் என்ற வருத்தத்துடன் எண்ணியவன், அவளை முதலில் இயல்பு வாழ்க்கைக்கு மீட்கும் முயற்சியில் ஈடுபட்டானான். மகேந்திரனின் திருமணம் முடிந்த பின், அவளை மீண்டும் அலுவலகத்துக்கு வரவழைக்க

வேண்டும் என்று முடிவு செய்தான். இயல்பு நிலைக்குத் திரும்பினால், அவளே நல்ல படியாக யோசிக்க ஆரம்பிப்பாள் என்று தோன்றியது. எந்த நேரமும் யோசனையில் மூழ்கியவளை வெளிக் கொண்டு வர, தங்கையின் உதவியை நாடினான்.

மதுவின் மேல் அபிமானம் கொண்டிருந்த நித்யாவும் மதுவிடம் அதிகமாக நேரத்தை செலவிட ஆரம்பித்தாள். அவளுக்கு பாடத்தில் உதவி செய்வது என்று மதுவின் நேரமும் நல்ல முறையில் கழிந்தது.

மகேந்திரனிடமும் மது பேசுவதில்லை! ஜானகியை சந்திக்க மது வரும் நேரம், மகேந்திரனும் மருத்துவ மனையில்தான் இருப்பான்! அவனுக்குமே மதுவின் வருத்தம் புரிந்திருந்தது.

மது அவனிடம் எதுவும் பேசவில்லை என்றாலும் மகேந்திரன் அவளை அப்படியே விட்டு விடவில்லை. அவளைக் காணும் நேரம் எல்லாம், விடாமல் பேச்சு கொடுப்பான். அவன் அப்படி விடாமல் பேசும்போது மதுவால் முகம் திருப்பிக் கொள்ள முடியாது. அந்த சமயம், இயல்பாகப் பேசவும் முடியாது.

ஒரு வார்த்தை சொல்ல வேண்டிய இடத்தில், ஒரு தலை அசைவு, ஒரு வாக்கியம் பேச வேண்டிய இடத்தில் ஒரு வார்த்தை என்று அவளிடம் இருந்து வரும் வார்த்தைகளோடு மகேந்திரன் திருப்தி பட வேண்டியிருந்தது.

என்றைக்காவது ஒரு நாள், நடந்தது எல்லாம் நன்மைக்கே என்று மது புரிந்து கொள்வாள் என்று நம்பும் மகேந்திரன், அந்த நாள் சீக்கிரம் வர வேண்டும் என்று பிரார்த்திக்க ஆரம்பித்தான்.



அடுத்த ஒரு மாதத்தில், மகேந்திரனுக்கும், நந்தினிக்கும் திருமண நாள் குறிக்கப்பட்டது.

காலை முகூர்த்தம், அன்று மாலையே வரவேற்பு என்று நாள் முழுவதும், தன்னோடு இருந்தே ஆக வேண்டும் என்று நந்தினி வலியுறுத்தி கூறி இருந்ததால், மது முதல் நாள் இரவே நந்தினியின் வீட்டுக்கு வந்து விட்டாள். தன் மேல் இருக்கும் கோபத்தில், மது விலகியே நிற்பாளோ என்று மகேந்திரனது அச்சத்தை போக்கும் வகையில், திருமணத்தில் மதுவின் பங்களிப்பு சிறப்பாகவே அமைந்தது.

சத்யாவின் குடும்பத்தினர், முகூர்த்தத்துக்கு வந்து விட்டு, இரவு வரவேற்பு விருந்துக்கு வருவதாகச் சொல்லி விட்டுக் கிளம்பி விட, இதுதான் தனக்கு கிடைத்த வாய்ப்பு என்று சத்யாவும் அன்று முழுவதும் மனைவி கூடவே இருக்கத் தீர்மானித்தான்.

புதிதாக திருமணமானவர்கள் என்று சூழ இருந்த சொந்தங்கள், அதற்குரிய வகையில் கேலியில் இறங்க, மதுவுக்கு தர்மசங்கடமாக இருந்தது.

இதுதான் சாக்கு என்று தன்னை ஒட்டிக் கொண்டு அலைந்த கணவனிடம், மற்றவர் எதிரில் முகத்தைக் காண்பிக்கவும் முடியவில்லை! மற்றவர்களுக்கு வித்தியாசமாகத் தெரியக் கூடாது என்பதற்காக கணவனிடம் அவள் இயல்பாகப் பேச முயல, பாரா முகம் காட்டிய மனைவி தானாகவே பேசியதில், சத்யாவின் அகத்தோடு முகமும் மலர்ந்தே இருந்தது.

கணவனின் முகத்தில் தெரிந்த மாற்றம், மதுவின் மனதையும் இளக்கியது. மற்றவர்களுக்காக என்று பேச

ஆரம்பித்தது, அன்று முழுமையும் தொடர, மதுவுக்குமே, வெகு காலம் கழித்து மனம் லேசாக இருந்ததை உணர முடிந்தது.

மாலை வரவேற்பின் போது, மேடையில் இருந்த மகேந்திரனும் நந்தினியும் ஒருவரை ஒருவர் மாலையிட்டு வருடிக் கொண்டும், சில சமயம் பேசிச் சிரித்துக் கொண்டும் இருக்க, மதுவுக்கு அதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தாலும், மனதின் ஓர் ஓரத்தில் அவளுக்கும் சத்யாவுக்கும் நடந்த திருமண வரவேற்பு மனதில் நிழலாடியது.

வருவித்த புன்னகையோடு தானும் சத்யாவும் நின்று கொண்டிருந்தது நினைவுக்கு வர, அவளது கண்கள் அவளையும் அறியாமல், கணவன் மேல் படிந்தது. அந்த நேரம், அவனும் அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். ஏனென்று தெரியாமல், மதுவுக்கு கண்கள் கரித்துக் கொண்டு இருந்தது.

மனைவியின் மன நிலையை அறிந்தவனாக அவளருகில் வந்த சத்யா, அவளது கரத்தைப் பற்றிக் கொண்டான். பொங்கி வரவிருந்த கண்ணீர், தானாக நின்று விட மனதில் ஒரு இதம் பரவுவதை மது ஆச்சரியத்துடன் உணர்ந்த நேரம், பிடித்த பிடியை விடாமல், ''வா மது!'' என்று சத்யா அவளை மேடைக்கு அழைத்துக் கொண்டு போனான்.

மேடைக்கு சென்றவன், ஒரு பரிசுப் பெட்டியை மதுவிடம் கொடுத்து மணமக்கள் இருவரிடமும் கொடுக்க சொல்ல, ''ஹே... சத்யா! காலையில் அதுதான் பரிசு கொடுத்திட்டாரே!'' என்று மகேந்திரன் தயங்கினான்.



''அது வேற... இது நானும் மதுவும் உங்களுக்கு கொடுக்கிற கிஃப்ட்! பிகு செய்யாமல் வாங்கிப் பிரிச்சு பாருப்பா!'' என்று சத்யா வலியுறுத்த, பரிசுப் பெட்டியைத் திறந்து பார்த்த மகேந்திரன், நந்தினி மட்டுமல்லாது மதுவும் திகைத்து போனாள்.

மகேந்திரன் நந்தினி இருவருக்கும், ஒரே மாதிரியான டிசைனில், இரு வைர மோதிரங்கள் இருந்தன.

''சத்யா... இவ்வளவு காஸ்ட்லியா...'' என்று மகேந்திரன் தயங்க,

''என்ன மகேன்? நான் உனக்குச் செய்யக் கூடாதா? அவ்வளவு அந்நியமா நான்?'' என்ற சத்யா, ''மகேன்... நந்தினிக்குப் போடு! நந்தினி உனக்குப் போடட்டும்! சீக்கிரம்!'' என்று உற்சாகமாகச் சொன்ன பிறகும், மகேந்திரன் தயங்க,

''சொல்லேன் மது!'' என்று சத்யா மதுவிடம் சொல்ல, ''அவர்தான் சொல்றார் இல்லை? போடு!'' என்று மதுவும் சொல்ல, அதற்கு மேல் மகேந்திரனுக்கு எந்த தயக்கமும் இருக்கவில்லை.

சந்தோஷமாக இருவரும் மோதிரங்களை மாற்றிக் கொண்டதும், ''விஷ் யூ எ வெரி வெரி ஹாப்பி மேரிட் லைஃப்!'' என்று மது வாழ்த்த, ''தேங்க்ஸ்டா மது!'' என்ற மகேந்திரனின் கண்கள் ஆனந்தத்தில் கலங்கின.

இரவு வரவேற்பு முடிந்து, மகேந்திரனையும் நந்தினியையும், நந்தினியின் வீட்டில் விட்டு கிளம்பிய போது, முழு நாளையும் மனைவியோடு செலவழித்ததில் சத்யாவின் மனம் ஒரு விதமயக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

மனைவி அவனுடன் அன்று இயல்பாக பேசி, சிரித்து இருந்ததில், மனதில் இருந்த ஏக்கம் குறைந்து உற்சாக மாக இருந்தது.

காரில் வரும்போது, அமைதியாகவே வந்த மது கொஞ்ச நேரத்திலேயே, உறங்கி இருந்தாள்.

வீட்டுக்கு வந்த பிறகும், அவள் எழவில்லை என்றதும் சத்யாவுக்கு அவளை எழுப்ப மனமில்லை.

இந்த ஒரு மாதமாக அவள் இரவில் சரியாக உறங்கு தில்லை என்பது அவன் அறிந்ததே! அதனால், ஒரு குழந் தையைப் போல் நிச்சலனமாய் உறங்குபவளை எழுப் மனசில்லாமல், அவன் காரிலேயே அமர்ந்திருந்தான்.

வண்டி நின்று ரொம்ப நேரமாகியும், சத்யா காண ஷெட்டுக்குள் செலுத்தாமல் இருக்கவே, டிரைவர் அருகில் வந்து,

''உள்ளே விட்டுடட்டுமா தம்பி?'' என்று வினவ,

நன்றியுடன் அவனை நோக்கிய சத்யா, ''ம்... தேங்க்ஸ் அண்ணா...'' என்று சொல்லி காரை விட்டு இறங்கி, மது பக்கம் வந்து கார் கதவை சத்தமில்லாமல் திறந்து மதுவைத் தன் கையில் ஏந்திக் கொண்டான்.

நல்ல உறக்கத்தில் இருந்த மது, தன் கரங்களை அவன் கழுத்தில் கோர்த்துக் கொள்ள, அந்த திடீர் அணைப்பில் ஒரு கணம் விறைத்து நின்றான்.

சமாளித்துக் கொண்டு மாடிப்படியில் ஏறி, தங்கள் படுக்கையில் மனைவியைக் கிடத்தி விட்டு நிமிர முயன்றவனால் அது முடியவில்லை!

ஏனென்று பார்த்தவன் திகைத்துப் போனான். அவள் கழுத்தில் கோர்த்திருந்த கைகளை மனைவி இன்னும் இறுக்கி இருந்தாள்.



'கடவுளே! இப்படிச் சோதிக்கிறாளே!'

நொந்து கொண்டே அவன், அவளது கரங்களைப் பிரிக்க முயல, தூக்கத்திலும் அவளது பிடி இறுக்கமாக இருந்தது.

இன்னும் முயன்றால் அவளது உறக்கம் களைத்து விடுமோ என்று அஞ்சியவனாக, சத்யாவும் அவளருகில் படுத்தான்.

இந்த ஒரு மாதத்தில், தெரிந்தோ தெரியாமலோ, பல முறையாக மனைவி தானாகவே தன்னை அணைத் திருந்ததை உணர்ந்தவனுக்கு, அந்த நெருக்கத்தை விலக்க மனம் வரவில்லை. மனைவியை அணைத்துக் கொண்டு தானும் உறக்கத்தில் ஆழ்ந்தான்.



## 19

காலையில் உறக்கம் கலைந்த மதுவுக்கு, நீண்ட நாள் கழித்து நிம்மதியாக உறங்கியதைப் போலி ருந்தது.

கைகளைத் தூக்கி சோம்பல் முறிக்க எண்ணியவளாக அவள் கையைத் தூக்க முயல, அது முடியாமல் போகவே, மெல்ல கண்களைத் திறந்து பார்த்தவளுக்கு, முதலில் ஒன்றுமே புரியவில்லை.

சிறிது நேரத்துக்குப் பிறகே, தான் கணவனின் அணைப்பில் இருப்பதையும், தனது கரங்கள் அவனது கழுத்தில் கோர்த்திருப்பதையும் உணர முடிந்தது.

நேற்று, தான் காரிலேயே உறங்கி இருக்க வேண்டும் என்று புரிந்தது.

அவன்தான் அவளைத் தூக்கி வந்து படுக்க வைத்திருக்க வேண்டும்!

இது கூடத் தெரியாமலா, உறங்கி இருக்கிறேன்? என்று எண்ணியவளுக்குச் சங்கடமாக இருந்தது.

அவனது தூக்கம் கலையாமல், அவனது அணைப்பிலிருந்து விலகி, குளியலறைக்குச் சென்றாள்.

குளித்து முடித்து வெளியே வந்தவளின் பார்வை, கணவன் மீது படிய, அவன் கண்களால் அவளை வருடியபடி இருந்தது தெரிந்தது.

சிவந்த முகத்தை அவனுக்குக் காட்டாமல் மறைத்தவள், அவன் ஏதோ பேச வரவே, அறையை விட்டு வெளியேறி வேகமாக கீழே சென்று விட்டாள்.

காலை உணவை உண்டு கொண்டிருந்த சத்யா பின்னங்கழுத்தை இடது கையால் வருடியபடி இருக்க,

''என்ன அண்ணா? என்ன ஆச்சு? ஏன் கழுத்தை தடவிட்டே இருக்கீங்க?'' என்று நித்யா விசாரித்தாள்.

''ஒண்ணுமில்லை! நேத்து...'' என்று அவன் ஆரம்பிக்க,

திடுக்கிட்டு நிமிர்ந்த மது, என்ன சொல்லப் போகிறான் என்று பயத்தோடு அவனை நோக்க, விஷமச் சிரிப்புடன் மனைவியை நோக்கியவன், ''எதுவுமில்லை நித்தி... அங்கே ஏதோ இருக்கிற மாதிரி இருந்தது!'' என்று தங்கையிடம் சமாளித்தான்.

ஏதோ, இத்தனை நாளாய் மனைவியிடம் இருந்து விலகி இருந்தவனால், நேற்றைய நிகழ்வுக்குப் பிறகு அப்படி இருக்க முடியவில்லை.

அன்று மாலை அலுவலகத்தில் இருந்து வந்தவன் சோபாவில் அமர்ந்து தன் அன்னையுடனும்



தங்கையுடனும் பேசிக் கொண்டிருந்த மனைவியின் அருகில் வந்து அமர்ந்தான்.

அவன் அருகாமை தந்த இம்சையில், அவள் கொஞ்சம் தள்ளி அமர சளைக்காமல் அவனும் நெருங்கி அமர, ஒரு கட்டத்தில், தள்ளி அமர இடம் இல்லாததால், எழுந்து கொள்ள முயன்றவாறே, ''நான்... நான் போய் உங்களுக்கு சாப்பிட ஏதாவது எடுத்து வரேன்!'' என்று தடுமாற்றத்துடன் மது மொழிய,

அந்த நேரம், உள்ளே சென்றிருந்த தங்கை நித்யா டிபன் தட்டை எடுத்து வர, ''நித்திம்மா... ந்யூ மாடல் போன் கேட்டே இல்லைடா... நாளைக்கே போய் வாங்கிடலாம்'' என்று அறிவித்தபடி, அவனிடம் இருந்து டிபன் தட்டை வாங்கிய சத்யா மேலும் மனைவியை நெருங்கி அமர,

''அத்தையும், நித்தியும் இருக்கும்போது இது என்ன?'' என்று மனைவி அடிக்குரலில் அதட்டினாள்.

''சரி! நம்ம ரூமுக்கு போயிடலாமா?'' என்று வினவியவன், எழுந்திருக்க முயலவில்லை!

தங்கள் அறைக்கு சென்றால், இப்போதைய நெருக்கம் கிடையாது என்பதை அவன் அறியாதவனா என்ன?

இவர்கள் தங்களுக்குள் ரகசியம் பேசியது மித்ராவுக்கு எதுவும், வித்தியாசமாகத் தெரியவில்லை போலும்!

ஆனால், அண்ணன் வந்ததில் இருந்து அவர் களையே கவனித்துக் கொண்டிருந்த நித்யாவுக்கு, மனம் நிறைவாக இருந்தது. இடையில் இருந்த ஊடல், தீர்ந்து விட்டது போல என்று எண்ணியவள்,

''அம்மா! நாம கோயிலுக்கு போயிட்டு வரலாமா?'' என்று கேட்டபடி அன்னையை அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்ப முயன்றாள்.

''நித்தி... இரு நானும் அண்ணியும் வரோம்!'' என்றான் சத்யா.

அவனுக்கு நேற்றில் இருந்தே மனைவியின் அருகிலேயே இருக்க வேண்டும் என்பதே உள்ளக் கிடக்கையாக இருந்தது.

அவனது இந்த திடீர் மாற்றத்தால், மதுவுக்கும் வீட்டில் இருப்பதை விட வெளியே போவதே உசிதமாகப் பட்டது.

கோவில் பிரகாரத்தில் நடக்கும்போது, மதுவின் காலில் ஏதோ இடறி விட, விழாமல் இருக்க, கணவனது கையைப் பற்றிக் கொண்டாள்.

அவனது கரத்தைப் பற்றி இருந்த அவளது கரம் எப்போது அவனது ஆளுகைக்குள் வந்தது என்றே தெரியாமல், அவனது வலிய பெரிய கரங்களுக்குள் அடங்கி இருக்க, மனதில் ஒரு பாதுகாப்பு உணர்வோடு கூடவே சஞ்சலமும் ஒரே சேர குடி புக, மது சோர்ந்து போனாள்.

வீட்டுக்கு வந்து இரவு உணவை முடிக்கும் வரையிலும், கணவனின் பார்வை தன்னை விட்டு அகலவில்லை என்பதை உணர்ந்த மதுவுக்கு நெஞ்சக் கூட்டுக்குள் குளிர் பரவியதைப் போல இருந்தது.

உணவு முடிந்த பிறகு, அவனுக்கு ஏதோ தொலைபேசி அழைப்பு வந்து விட தப்பித்தோம் பிழைத்தோம் என்று தங்கள் அறைக்கு வந்த மது, அவசரமாக உடை மாற்றி விட்டு, படுக்கையில் விழுந்தாள்.



கொஞ்ச நேரத்தில், கணவன் அறைக்குள் வருவது தெரிந்து, கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

உள்ளே வந்து கதவைத் தாழிட்ட கணவன், அருகில் நெருங்கி வருவதை உணர்ந்து, அவளது மனம் படபடத்தது.

மனைவியின் அருகில் வந்து அமர்ந்த சத்யாவுக்கு, அவள் உறங்கவில்லை என்பது புரிந்தே இருந்தது.

மெல்லிய பெருமூச்சுடன் குனிந்து அவளது நெற்றியில் இதழ் ஒற்றியவன், ''குட் நைட்!'' என்று சொல்லி விட்டு, கை நீட்டி விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான்.

அவன் ஆழ்ந்து உறங்கும் வரை, அமைதியாகப் படுத்திருந்தவள், கணவனது புறம் திரும்பி, மின்விளக்கின் வெளிச்சத்தில் அவனது முகத்தைப் பார்க்க, கண்களில் நீர் நிரம்பி, கன்னத்தில் கோடாய் வழிந்தது. தன்னை மீறி அவள் உறங்க, வெகு நேரமாயிற்று.

அடுத்த நாள் காலையில் கண் விழித்த சத்யாவுக்கு, தான் எழுவதற்கு முன்பே எழுந்து விடும் மனைவி இன்று எழாமல் இருந்ததைப் பார்த்து ஆச்சரியமாக இருந்தது.

வெளிச்சத்தில் மனைவியின் முகத்தைப் பார்த்தவனுக்கு, அவளது கன்னத்தில் இருந்த கண்ணீர் கறை, அவள் நேற்று அழுது இருக்கிறாள் என்பதை உணர்த்தியது.

கண்களை ஒரு முறை இறுக மூடித் திறந்தவன், இதற்கு கூடிய சீக்கிரம் ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

சூரிய ஒளி அறைக்குள் நன்றாகப் பரவ ஆரம்பித்ததும்தான், மதுவுக்கு விழிப்பு வந்தது. சத்யா அறையில் இல்லை.

சட்டென்று திரும்பி, கடிகாரத்தைப் பார்த்தவள், மணி ஏழரை என்றதும் பதறிக் கொண்டு எழுந்தாள்.

வேகமாக குளித்து அவள் குற்ற உணர்வுடன் அவள் கீழே வரும்போது,

சுமித்ரா, ''இப்போ தலை வலி எப்படி இருக்கு மது?'' என்ற கேள்வியோடு எதிர்கொண்டார்.

'தலை வலியா?' என்று ஒரு கணம் குழம்பியவள், கணவனை நோக்க, அவனது பார்வையிலேயே அவன் சொன்னதை உணர்ந்து,

''இப்போ பரவாயில்லை அத்தை... சாரி... ரொம்ப நேரம் தூங்கிட்டேன்!'' என்று மெல்லியக் குரலில் சொன்னவளிடம்,

''எதுக்கு சாரி எல்லாம் மது? உடம்புக்கு முடியலன்னு இன்னும் கொஞ்ச நேரம் கூட ரெஸ்ட் எடுத்திருக்கலாமே?'' என்று அக்கறையுடன் சொன்னவர்,

''வா... சாப்பிட்டு விட்டு மாத்திரை போட்டுக்கிட்டு ரெஸ்ட் எடு!'' என்று சொல்லி விட்டுப் போக, கணவனை நன்றியுடன் நோக்கினாள்.

* * *

அன்று இரவு, ''மது... வீட்டில் இருந்து போர் அடிக்குது இல்லை? நாளையில் இருந்து ஆபீசுக்கு வாயேன்!''

மனைவி வீட்டில் தனித்திருந்து தேவை இல்லாத எண்ணங்களால் மனதை வருத்திக் கொள்வதைத்



கண்டு, சத்யா அவளை அலுவலகத்துக்கு அழைத்தான்.

சும்மா இருக்கும் மனம் சாத்தானின் உலைக்களம்! ஏதாவது வேலை... அதுவும் அவளுக்குப் பிடிக்கும் வேலையைச் செய்ய ஆரம்பித்தால், ஓயாமல் தோன்றும் எதிர்மறை எண்ணங்களையும், சஞ்சலங்களையும் தவிர்க்கலாம் என்றெண்ணிய மதுவும், கணவன் சொன்னதை ஒப்புக்கொண்டு வேலைக்குச் செல்லலாம் என்று தீர்மானித்தாள்.

அன்று முதல் காலையில் கணவனுடன் அலுவலகம் சென்று, மாலை அலுவலகத்தில் இருந்து மருத்துவமனை சென்று ஜானகியைப் பார்த்து வருவது என்று வழக்கமாயிற்று.

ஜானகியோடு அன்றைய நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்வதை, திருமணத்துக்குப் பிறகு, தனது குற்ற உணர்வின் காரணமாக நிறுத்தி இருந்த மது, மீண்டும், அவரிடம் பேச ஆரம்பித்தாள். அந்த நேரத்தில், தனிமை கொடுத்து சத்யா நகர்ந்து விடுவது, அவளது நொந்த மனதுக்கு இதமாக இருந்தது.

அலுவலகம் வந்தால், சத்யாவோடு அதிக நேரம் செலவழிக்க வேண்டுமே என்று முதலில் தயங்கியவள், போகப் போக கணவனின் அருகாமையை ரசிக்க ஆரம்பித்தாள். அதை வெளிக்காட்டாமல் இருந்தாலும், அதுதான் உண்மை என்பது அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்!

அவளுக்குப் பிடித்தமான வேலையில் ஈடுபடுவது, அவளது மன வருத்தத்தைப் போக்கி, உற்சாகமாக இயல்பாய வர உதவி செய்தது.

முதலில், அலுவலக வேலை சம்மந்தமாக மட்டுமே இருந்த அவர்களது பேச்சு, நாளடைவில் சற்றே இயல்பான பேச்சு வார்த்தையாக மாறியது. ஆனால் ஒரு சில சமயங்களில் கணவனின் கண்களில் தெரியும் மாற்றம்... அவளைத் தள்ளியே நிற்க வைத்தது.

சத்யாவுக்கும், பாரா முகம் காட்டிய மனைவி இப்போது சற்றே இயல்பாக இருப்பது மகிழ்ச்சியைத் தந்தது. அவள், மனம் மாறி, தன்னுடன் ஆன வாழ்வை நல்ல படியாக ஏற்றுக் கொள்வாள் என்ற நம்பிக்கையும் முளை விட ஆரம்பித்தது.

அன்னையின் அனுமதி பெறாமல் நடந்திருந்தாலும் இதுதான் தன் வாழ்வு என்று மதுவும் உணர்ந்தே இருந்தாள்! ஆனால்,அவளால் மனம் ஒன்றி அந்த வாழ்க்கையில் ஈடுபட இயலவில்லை!

காலம் எல்லாவற்றையும் மாற்றும் சக்தி வாய்ந்தது! அந்தக் காலம், தன் மனதையும் மாற்றும் என்ற நம்பிக்கையோடு வாழப் பழகிக் கொண்டாள்.

மகேந்திரனிடம் முன்பு போல் இல்லாவிட்டாலும் சகஜமாக பேச ஆரம்பித்தாள்.

சத்யாவின் யூ.எஸ். அலுவலகத்தில், ஒரு புது ஆர்டர் கிடைப்பதற்கான வாய்ப்பு அமைந்திருந்தது. அவர்கள் முற்றிலும் புதிதாக டிசைன்கள் வேண்டும் என்று கேட்டிருக்க, அதற்கான ஆடை வடிவமைப்புகளை சத்யா மதுவைச் செய்யச் சொல்லி இருந்தான்.

பெரிய ஆர்டர் என்பதால், மது தயங்க, ''கம் ஆன் மது! பயப்படாமல் செய்!'' என்று ஊக்கம் கொடுத்து செய்ய வைத்தான்.



தங்கள் வடிவமைப்புகளை அனுப்பி விட்டு, அவர்களின் அனுமதிக்காகக் காத்திருந்த ஒரு வாரமும், மது படபடப்புடனே இருக்க, ''ஈசி... மது! எதுக்கு இவ்வளவு டென்ஷன் எடுத்துக்கறே? கிடைத்தால் சந்தோஷம்... இல்லைன்னாலும் நாம் முயற்சி செஞ்சோம் என்ற திருப்தி பட்டுக்க வேண்டியதுதான்!'' என்று அவளது படபடப்பைக் குறைக்க முயன்றான்.

அன்று அலுவலகத்தில் முக்கியமான வேலை இருக்கிறது என்று சத்யா, அவளைப் போகச் சொல்லி விட, வீட்டுக்கு வந்த மதுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

இன்று அவள் வடிவமைப்பு செய்து அனுப்பிய புதிய ஆர்டருக்கு, அனுமதி கிடைக்குமா இல்லையா என்று தெரியும் நாள்! அந்த முடிவைத் தெரிந்து கொண்டே வீட்டுக்கு வர வேண்டும் என்று கணவன் அலுவலகத்திலேயே இருக்கிறான் என்பதும் அவளுக்குத் தெரியும்! அவன் வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும், மதுவுக்கு அது தெரிந்தே இருந்தது.

கணவன், தன் திறமை மேல் வைத்திருந்த நம்பிக்கை வீணாகப் போய் விடக் கூடாது என்று பிரார்த்தித்த வண்ணம், கணவனின் வருகைக்காக படபடப்புடன் காத்திருக்க ஆரம்பித்தாள்.

கார் வரும் ஓசையும், அவன் மாடிப்படி ஏறி வருவதும் தெரிந்து படபடப்பு அதிகரித்து, கட்டிலில் இருந்து இறங்கி நின்றவள், அறைக்குள் நுழைந்த கணவனை ஆர்வத்துடன் நோக்க, அவனது முகத்தில் இருந்த பிரகாசமே, ஆர்டர் கிடைத்து விட்டதைச் சொல்லாமல் சொல்லியது.

அவள் எதுவும் கேட்கும் முன், வேகமாக அவள் அருகில் வந்தவன், ''பட்டு! யூ மேட் இட்!'' என்று சந்தோஷத்துடன் மொழிய, அவ்வளவு நேரம் இருந்த எதிர்பார்ப்பு பூர்த்தியான சந்தோஷத்தில், மது தன்னை யும் அறியாமல், கணவனின் கன்னத்தில் தன் இதழ்களை பதித்தாள்.

கணவன் திகைத்து நிற்க மனைவியோ அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனது மார்பில் தலை சாய்த்தாள்.

இது ஒரு சந்தோஷத்தின் வெளிப்பாடு என்பது சத்யாவுக்குப் புரிந்தே இருந்தாலும் மனைவியின் அருகாமை, இத்தனை நாளாய் அடக்கி வைத்திருந்த உணர்வுகளைத் தட்டி எழுப்ப, குனிந்து, மனைவியின் தலையை நிமிர்த்தியவன் அவள் முகமெங்கும் வேகமாக தன் இதழ்களைப் பதித்தான்.

முதலில் திகைத்தாலும், கணவனின் இதழ் ஒற்றுதல் கள் மயக்கத்தைத் தர, மதுவும் கண்மூடி அதை ரசிக்க ஆரம்பித்தாள்.

சற்றே வேகம் குறைந்து, சத்யா மனைவியின் முகம் நோக்க, மனைவியின் முகத்தில் இருந்த மென்னகை தந்த உற்சாகத்தில், அவனது இதழ்கள் மீண்டும் நிதான மாக அவளது முகத்தில் பயணத்தைத் தொடங்கின.

செவி மடல், கன்னம் என்று வலம் வந்த இதழ்கள், மனைவியின் துடித்துக் கொண்டிருந்த இதழ்களை சிறை செய்தன.

கணவனின் அருகாமையும், இதழொற்றுதலும் மதுவைக் கிறங்கச் செய்ய, விழிகளைத் திறந்தால், இது கனவென்று ஆகி விடுமோ என்ற எண்ணத்தில் கண்களை மூடியபடி அப்படியே நின்றாள்.



மனைவியின் நிலையைக் கண்டு கொண்ட சத்யா, அவளைக் கைகளை ஏந்தி, படுக்கையில் கிடத்த, அப்போதும் மது விழிகளைத் திறந்தாளில்லை.

புன்னகை விரிய, மூடி இருந்த அவளது இமைகளில், மென்மையாக இதழ் பதித்தவன், ''பட்டு... கண்ணைத் திறந்து என்னைப் பார்!'' கரகரப்பான குரலில் சொல்ல, மதுவுக்கு அவன் என்ன எதிர்பார்க்கிறான் என்று புரிந்தது!

கண்ணைத் திறந்து அவனைப் பார்க்க நாணம் கொண்டவளாக, தனது சம்மதத்தைத் தெரிவிக்கும் விதமாக, அவன் கழுத்தில், தன் கரங்களைக் கோர்த்து, கண்ணைத் தன்னோடு சேர்த்து இறுக்கினாள்.

மனைவியின் அனுமதி கிடைத்து விட்ட சந்தோஷத்தில், சத்யாவும் மனைவியை ஆரத் தழுவினான்.

''தேங்க்ஸ் மது... தேங்க்ஸ்!'' முணுமுணுத்தபடி சத்யா, தன் அணைப்பை மேலும் மேலும் இறுக்க, மதுவின் கழுத்தில் இருந்த மாங்கல்யம் சற்றே உறுத்தியது.

மதுவுக்கு சட்டென்று, அன்று மருத்துவமனையில் கண்டுதலும் தவிப்புமாக தன்னை நோக்கிய அன்னை முகம் நினைவுக்கு வந்தது. சற்று முன் உள்ளத்தில் இருந்திருந்த மயக்கமும் கிறக்கமும், அவசரமாக விடை பெற, அந்த இடத்தில கலக்கம் நிறைந்தது.

அப்படியும், இவன் என்னவன்! இவனோடுதான் என் வாழ்வு! என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு கணவனோடு இணைய முயற்சி செய்த மதுவுக்கு, முழுமை யாக கணவனோடு ஒன்ற இயலாமல் போகவே, வேதனை யோடு கணவனிடம் இருந்து விலக முயன்றால் அவள்.

இத்தனை நாட்களாய், மனைவியின் மனம் வாடாமல் இருக்க, தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டிருந்த

சத்யாவுக்கு, இன்று எந்த எதிர்ப்பும் இல்லாமல் மனைவி தன்னோடு இழைந்ததில் மனம் மயங்கி இருந்தது.

மனைவியின் திடீர் விலகலுக்கு, கூச்சமே காரணம் என்று எண்ணியவன், ஒரு புன்னகையோடு, மேலும் தன் அணைப்பை இறுக்க, அதற்கு ஈடாக, அவனிடம் இருந்து விலக மதுவும் தீவிரமாக முயன்றாள்.

மனைவியின் தீவிரத்தை சற்றே உணர்ந்தவனாக, ''மதூ... ப்ளீஸ்டா!'' கரகரப்பான குரலில் வேண்டியவளின் தனது தேடலைத் தொடர, மதுவுக்கு கண்ணீர் சுரந்தது.

உயிராய் நேசிக்கும் கணவனின் அணைப்பை இயல்பாக ஏற்றுக் கொள்ள முடியாமல், தவிக்கும் தன் நிலை தன்னிரக்கத்தை உண்டு செய்தது.

அவனிடம் இருந்து விலகும் முயற்சியை கை விட்டவளிடம், ''தேங்க்ஸ்டா பட்டு!'' என்றபடி கன்னத்தில் முத்தமிட்ட சத்யா, மனைவியின் கண்ணீரை உணர்ந்து, வேகமாக அவளிடம் இருந்து விலகினான்.

மனைவியின் கண்ணீர் நிறைந்த முகத்தைக் கண்டவனுக்கு, சற்றுமுன் இருந்த மயக்கம் முற்றிலுமாகத் தொலைந்து போனது.

மனைவியின் கண்ணீர் மனதைச் சுட்டாலும், சற்று முன் கிடைக்கவிருந்த சொர்க்கம் கை நழுவிப் போனதில் ஏமாற்றமே மனதில் விஞ்சி நிற்க, ''என்ன மது? நீ... நீ விரும்பியதால்தானே?'' என்றவன், அவளது கண்ணீர் பெருகுவதைக் கண்டதும், தயக்கத்துடன் நிறுத்தினான்.

ஆமாம்! அவளும் விரும்பினாள்தான்! அவளது உயிரும், உணர்வும் நிறைந்த மனிதப் பிறவிதானே!

மனம் முழுக்க நிறைந்திருக்கும் கணவனின் ஆசை காமையில், மயங்காமல் இருக்க, அவள் என்ன உணர்ச்சியற்ற ஜடமா என்ன?



அவனிடம் முழுதாக ஒன்ற முடியாத தன் இயலாமை, அவன் மேலேயே கோபத்தை வரவழைக்க, கணவனை உறுத்து விழித்தாள் அவள்!

''ஆமாம்! ரொம்பத்தான் என் விருப்பத்தை மதிக்கிறவர் நீங்க!'' எரிச்சலும் எகத்தாளமுமாக மனைவி மொழிந்ததில், சத்யா அதிர்ந்து நின்றான்.

சற்று முன் இருந்த குற்ற உணர்வும், ஏமாற்றமும், அவளது குற்றச்சாட்டில் கோபமாக உருமாறியது.

''உன் விருப்பத்தை நான் எந்த அளவுக்கு மதிக்கிறேன் என்று உனக்கு இந்த இரண்டு மாதத்தில் தெரிந்திருக்க வேண்டுமானே மது?'' என்றவன் குரல் சற்று அழுத்தமாகவே வெளிவந்தது.

அவன் சொன்னதில் இருந்த உண்மை சுட, அதற்கும் அவன் மேலேயே கோபம் கொண்டாள் மனைவி.

''ஆமாம்! என்னோட விருப்பத்தை மதிக்கிறவர்தான். என்னை கேட்காமலேயே, கல்யாணம் என்ற பெரிய முடிவை எடுத்தீங்க இல்லை?''

சீற்றத்துடன் மனைவி கேட்டதும், சத்யாவின் முகம் இறுகியது.

சூழ்நிலை எப்படி இருந்தாலும், அவள் சொன்னது உண்மைதானே?

''சொல்லுங்க! என் விருப்பத்தை மதித்திருந்தால், இந்த மாதிரி ஒரு முடிவு எடுத்திருப்பீங்களா?''

மேலும் ஆத்திரத்துடன் வினவியவளுக்கு, ''தப்புதான் மது... ஆனால்... உனக்காகவும்தானே...'' என்று சத்யா எதோ சொல்ல ஆரம்பிக்க, பொறுமை பறந்தது.

''இல்லை! இல்லவே இல்லை! நீங்க எனக்காக எதையுமே யோசிக்கவே இல்லை! உங்களைப் பத்தி மட்டும்தான் யோசிச்சீங்க! அந்த சமயத்தில நான் எவ்வளவு குழப்பத்தோடும், சஞ்சலத்தோடும் இருந்தேன் என்று உங்களுக்குத் தெரியும்தானே? அந்த போக்கணும் என்று கூட நீங்க நினைக்கவே இல்லை! உங்களுக்குத் தேவையானது நடக்கணும் என்று கிடைச்ச சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கிட்டீங்க! அதுதான் உண்மை!''

சீற்றத்துடன் ஒலித்த மதுவின் வார்த்தைகளில், சத்யா அதிர்ந்து போய் நின்றான்.

ஆனால், அவள் சொல்வது உண்மைதானே? என்ற மனசாட்சி அவனைக் கேள்வி கேட்டது.

நடந்த திருமணத்தில், அவனும் சந்தோஷமாக இல்லாமல், தானும் அமைதியாக இல்லாமல்... என்ன வாழ்க்கை இது? என்று இது நாள் வரை, தனக்குள் அடக்கி கொண்டிருந்த இருந்த தவிப்பை எல்லாம், ஆத்திரமாக வெளியிட்ட மதுமிதா, தன் முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தாள்.

மனைவியின் கண்ணீர் மனதில் வலியை ஏற்படுத்தினாலும், அவளைத் தேற்றவும் இயலாமல், சத்யாவிற்கு குற்ற உணர்வு அவனை வாட்டியது.

இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டால், எங்கே மதுமிதா இழந்து விடுவோமே என்று எண்ணித்தானே, அன்று அவள் கழுத்தில் மாங்கல்யத்தை பூட்டினான்.

நீ ஒரு சந்தர்ப்பவாதி!'' என்று நேரிடையாகச் சொல்லாமல் மனைவி சொன்ன வார்த்தைகள், அவன்



மனதில் வலியை ஏற்படுத்தினாலும், அவள் சொன்னதில் இருந்த உண்மை அவனை வாய் மூடி நிற்க வைத்தது.

அவனுடைய செயலுக்கு, அவள் மேல் வைத்த அன்பு மட்டுமே காரணமாக இருப்பினும், அவளது முழு அனுமதி இன்றித் திருமணம் செய்து, அவளது மனக் குழப்பத்தையும் வேதனையையும் தான் அதிகரித்து விட்டதை உணர்ந்து, அவனும் வேதனையுற்று நின்றான்.



# 20

மனைவி கண்ணீர் விடுவதைக் காணவும் முடியாமல், தேற்றவும் முடியாமல், வேதனையுடன் நின்று கொண்டிருந்த சத்யாவுக்கு மூச்சு முட்டுவது போல தோன்ற, வேகமாக அறையில் இருந்து வெளியேறினான்.

தனக்குப் பிடித்த நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பானதை பார்த்து முடித்து விட்டு, தன் அறைக்குச் செல்ல முயன்ற நித்யா, அண்ணன் தடுமாற்றத்தோடு படிகளில் இறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அதிர்ந்து நின்றாள்.

''நித்திம்மா... யூ.எஸ். ஆர்டருக்காக உங்க அண்ணி செய்த டிசைன்ஸ் எல்லாம் அப்ரூவ் ஆகிடுச்சு! தளைக்கு அண்ணிகிட்ட பெரிசா ட்ரீட் கேளு!'' என்று உற்சாகமாக ஒரு மணி நேரத்துக்கு முன்பு சொல்லிச் சென்றவனுக்கு திடீர் என்று என்ன ஆயிற்று?

இவளைக் கண்டதும், சத்யா அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டதைக் கண்டதும், 'அண்ணன்

அழுகிறானா என்ன?' என்று தோன்ற, மனம் வலித்தது.

எல்லாம் சரியாகி விட்டது என்று நினைத்தது தவறோ? இன்னும் என்ன பிரச்சனை என்று யோசித்தவள், கண்ணீரோடு அண்ணனைப் பார்க்கும் சக்தி இன்றித் தன்னறைக்குள் சென்று விட்டாலும், நானை நிச்சயம் அண்ணியோடு பேச வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

அடுத்த நாள், மது விழிப்பதற்கு முன்பே சத்யா அலுவலகத்துக்குக் கிளம்பி இருந்தான்.

அழுது அழுது நேரம் கழித்து உறங்கி இருந்ததால், மதுவுக்கு எழும்போதே, தலை வலித்தது.

''இன்று அலுவலகம் வர வேண்டாம்! ஓய்வு எடுத்துக் கொள்!'' கணவனின் குறிப்போடு, ஒரு மாத்திரையும் கண்ணில் பட, மதுவுக்கு கண்கள் கரித்தது.

குளியலறைக்குள் சென்றவள் வெளியே வந்த போது நித்யா காலை உணவை எடுத்து வந்திருந்தாள்.

''நானே வந்திருப்பேனே நித்யா?'' என்றவளிடம், ''இருக்கட்டும் அண்ணி... உங்களுக்கு உடம்பு சரியில்லை என்று அண்ணன் சொல்லிட்டு போயிருந்தார் அதான்..'' என்றவள், மது உண்டு முடிக்கும் வரை வேறு எதுவும் பேசவில்லை.

அவள் முகத்தில் இருந்தே ஏதோ பேச நினைக்கிறாள் என்று உணர்ந்த மது, ''என்ன நித்யா? ஏதாவது சொல்லணுமா?'' என்று வினவ,

''சாரி! அண்ணி உங்க விஷயத்தில் தலையிடுவது தப்புதான்! இருந்தாலும், மனசு கேட்கலை!'' என்றவள்,



''உங்களுக்கும்... அண்ணனுக்கும் ஏதாவது பிரச்னையா?'' என்றாள் தயக்கத்துடன்.

மதுவுக்கு இதற்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை!

ஒரு சின்னப் பெண் கவனித்து கேட்கும் அளவுக்கு தான் நடந்து கொள்கிறோம் என்பது குற்ற உணர்வைத் தந்தாலும், ''அதெல்லாம் எதுவும் இல்லை நித்தி!'' என்று சமாளிக்க முயன்றாள்.

''இல்லை அண்ணி! நேற்று அண்ணன் கண்ணெல்லாம் கலங்கி இருந்தது! எனக்கு அண்ணனை அப்படிப் பார்க்கவே முடியலை தெரியுமா?'' என்றபோதே, நித்யாவுக்கு கண்கள் கலங்க, மது அதிர்ச்சியுடன் நோக்கினாள்.

''இப்படி அண்ணனை நான் பார்க்கிறது இரண்டாவது முறை! உங்க கல்யாணம் நடக்கிறதுக்கு இரண்டு நாள் முன்னாடி கூட இப்படித்தான் இருந்தார்... ஆனால் அப்போ அந்த கண்ணீரையும் மீறி, ஒரு தெளிவு இருந்தது! ஆனால் நேற்று... எனக்குச் சொல்லத் தெரியலை அண்ணி!'' என்றவள் கொஞ்சம் இடைவெளி விட்டு.

''எது எப்படி இருந்தாலும் அண்ணன் உங்களை உயிராய் நினைக்கிறார் என்பது மட்டும் எனக்குத் தெரியும் அண்ணி! அண்ணன் ஏதாவது தப்பு செய்திருந்தாலும், நீங்க கொஞ்சம்...''

அதற்கு மேல் என்ன சொல்வது என்று தெரியாமல், நித்யா தயங்கி நிற்க,

அவள் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மதுவுக்கு இன்னுமே அதிர்ச்சி குறையவில்லை!

சத்யா அழுதானா? என்பதிலேயே அவள் மனம் உழன்று கொண்டிருந்தது.

ஏற்கனவே குற்ற உணர்வுடன் இருந்தவனை என்னவெல்லாம் பேசி விட்டாள்? தன் மேல் இருந்த கோபத்தை அவன் மேல் காட்ட அவளுக்கென்ன தகுதி இருக்கிறது?

''அண்ணி... நான் ஏதாவது தப்பாப் பேசி இருந்தால் மன்னிச்சுக்கோங்க!'' என்ற நித்யாவின் குரல், அவளைத் தன்னிலைக்கு மீட்டு வந்தது.

கலங்கி இருக்கும் அந்தச் சின்னப் பெண்ணைச் சமாதானப்படுத்துவதுதான், இப்போதைக்கு முக்கியம் என்று உணர்ந்தவள்,

''ச்சே ச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்லை நித்தி! எனக்கும் உங்க அண்ணனுக்கும் ஒரு சின்ன லடாய்... அவ்வளவுதான்! மற்றபடி எந்தப் பிரச்னையும் இல்லை! நீ தேவை இல்லாமல் மனசைக் குழம்பிக்காதே! சரியா!'' என்று உறுதியான குரலில் கூற, நித்யாவும் புன்னகையோடு வெளியேறினாள்.

நித்யா சென்றதும், மது அமைதியாக நடந்ததை எல்லாம் யோசிக்க ஆரம்பித்தாள்.

பொறுமையாக அமர்ந்து யோசிக்கும் போது, சத்யா அவள் ஊரை விட்டு கிளம்பும் அன்று சொன்னதெல்லாம், சரிதான் என்று அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

ஜானகிக்கு, மகேந்திரனும் மதுவும் அவர்களது வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த எண்ணமும் இருந்ததில்லை.



சத்யா, ஜானகிக்கு சரியாகும் வரை காத்திருக்கிறேன் என்றுதானே சொன்னான்? இவள் ஊரை விட்டு கிளம்பிய உடன், அவளை நிரந்தரமாக இழந்து விடுவோமோ என்ற அச்சத்தில்தானே அன்று அவசரமாக திருமணம் செய்து கொண்டான்?

அலுவலகத்தில் அவன் பொறுப்பில் இருக்கும் விஷயங்களில் கூட, முடிவெடுப்பதற்கு முன்பு, தந்தையிடம் பேசி அனுமதி வாங்கிய பிறகு அவன் செயல் படுவதை அவளும்தானே முதலில் இருந்தே பார்த்திருக்கிறாள்.

அப்படிப்பட்டவன், வாழ்வின் மிக முக்கியமான, பெரியவர்களின் அனுமதி தேவைப் படுகிற திருமண முடிவை, தானே எடுத்திருக்கிறான் என்றால், அவளை அவன் எவ்வளவு இன்றியமையாதவளாக எண்ணி இருக்கிறான்?

அத்தனை அன்பும் ஆசையும் இருந்தும், அவளை எந்த விதத்திலும் கட்டாயப் படுத்தாமல்தானே இருந்தான்?

நேற்றும் கூட, தானும் வசம் இழந்து அவனையும் வசம் இழக்க வைத்தது அவள்தானே?

அவன், எப்போதும் அவளது மனநிலையைக் கருத்தில் கொண்டு நடந்து கொண்டிருக்க, தான் மட்டும் அவனுக்கு அநியாயம் செய்து விட்டதாக மதுவுக்குத் தோன்றியது!

நேற்று, அவனை அந்த மாதிரி குற்றம் சாட்டியது எவ்வளவு பெரிய தவறு என்பது புரிய, அப்போதும் அவன் அவளைக் குற்றம் சொல்லவில்லை என்பது

கருத்தில் பதிந்து அவளைக் குற்ற உணர்வுக்கு ஆளாக்கியது.

அத்தோடு, மதுவின் சந்தோஷத்தை, தனது சந்தோஷமாக கருதும் அன்னைக்கு, தான் இப்படி திருமணத்துக்கு பிறகும் சந்தோஷமின்றி தவிப்பதைப் பொறுத்துக் கொள்ள இயலாது என்று புரிந்தது.

அன்று மாலை சத்யா வருவதற்கு முன்பே, ஜானகியைப் பார்க்க மருத்துவமனைக்கு சென்றவள், ''அம்மா... இத்தனை நாளா உங்ககிட்ட சொல்லாத ஒரு விஷயத்தை இப்போ சொல்லப் போறேன்! எனக்கு கல்யாணம் ஆகிடுச்சும்மா! உங்க அனுமதி இல்லாமல் கல்யாணம் செஞ்சது தப்புதான்! ஆனால்... அந்த மாதிரி சூழ்நிலை அமைந்து விட்டதும்மா... என்னை மன்னிச்சிடுங்கம்மா... உங்களுக்கு சத்யாவை கண்டிப்பா பிடிக்கும்! எனக்கு நம்பிக்கை இருக்கு! நீங்க சீக்கிரமே நல்லபடியா எழுந்து வந்து, சத்யா மாதிரி ஒரு பையன் கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கே என்று சொல்லு வீங்க என்று எனக்கு நம்பிக்கை இருக்கு!'' கண்களில் நீர் வழிய அன்னையிடம் சொல்லி முடித்த போது, மனம் லேசாகி இருந்தது.

இதுநாள் வரை, தன் திருமணம் பற்றி உணர்வில் லாமல் படுத்திருக்கும் அன்னையிடம சொல்ல, பயந்து கொண்டிருந்தவளுக்கு, இன்று அவரிடம் சொல்லி விட்டோம் என்ற திருப்தியில மனம் நிறைந்து இருந்தது.

கணவனோடு மனம் விட்டுப் பேசி, நேற்றைய தவ றுக்கு மன்னிப்பு வேண்டி சமாதானப் படுத்த வேண்டும் என்று வெகு நேரம் காத்திருந்தவள், தன்னையும் மீறி



கண்ணயர்ந்த நேரம் வந்த சத்யா, அவளைத் தொந்தரவு செய்யாமல் படுத்தான்.

காலையில் மது எழுந்த போது, சத்யா வெளியே செல்லத் தயாராகி, தலை வாரிக் கொண்டிருந்தான்.

கண்விழித்த மனைவியைப் புன்னகையோடு நோக்கி, ''குட் மார்னிங், மது!'' என, 'இவனுக்கு என் மேல் கொஞ்சம் கூட கோபம் இல்லையா?'' என்று ஆச்சரியத்துடன் எண்ணியவள், ''குட் மார்னிங்!'' என்று விட்டு, மேலே ஒன்றும் பேசாமல் குளியலறைக்கு சென்றாள்.

அவள் வெளியே வந்த போது, சத்யா பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான்.

வெளியூர் போகிறானா என்ன? சொல்லவே இல்லையே?

அவள் எதுவும் கேட்கும் முன்பே, ''மது... இன்னைக்கு தான் யூ.எஸ். போறேன்! வர ஒரு வாரம் ஆகும்!'' என்று சொல்ல, மது அதிர்ந்து நின்றாள்.

நேற்று முன் தினம் அவள் பேசியதும், நடந்து கொண்டதும் தவறுதான்! அதற்காக இப்படி சொல் லாமல் கொள்ளாமல் கிளம்பி விடுவானா என்ன?

''உங்களுக்கு நான் அப்படி பேசியதில் கோபம்தானே? அதானே என்னைப் பார்க்கப் பிடிக்காமல் கிளம்பறீங்க?''

கண்ணீரோடு வினவியவளை ஆச்சரியத்துடன் நோக்கி, ''ஹே... மது! டோன்ட் பி சில்லி! அந்த ஆர்டர் கிடைத்ததும், நான் போக வேண்டி இருக்கும் என்று முன்னமே தெரிந்ததுதானே? எனக்கு உன் மேல் எந்த கோபமும் இல்லைடா!'' அவன் சமாதானப் படுத்தி

னாலும், மதுவுக்கு மனம் சமாதானம் அடைய வில்லை!

மனைவி நின்ற நிலை வருத்தத்தை தர, அவளை ஆறுதலாக அணைக்க எண்ணியவன், மனதை மாற்றிக் கொண்டு, ''டேக் கேர்!'' மட்டும் சொல்லி விட்டுக் கிளம் பினான்.

அவன் சொன்ன காரணம் உண்மை என்று புரிந் தாலும், மதுவுக்கு அவனது விலகல், கண்ணீரை வர வழைத்தது.

கீழே வந்து அன்னையிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பிய சத்யாவுக்கு, மனைவியின் கண்ணீரே மனதில் நிற்க, வாசல் வரை சென்றவன் மனம் கேளாமல் மீண்டும் மேலே வந்தான்.

தான் அறையில் இருந்து கிளம்பிய போது நின்றிருந்த இடத்திலேயே, இப்போதும் கண்களில் கண்ணீரும் ஏக்கமுமாய் நின்றிருந்த மனைவியைக் கண்டதும், அதற்கு மேல் ஒரு நொடியும் தாமதிக்காமல் வேகமாக சென்று அவளை அணைத்துக் கொண்டான் சத்யா.

அவளது கண்ணீரைத் தன் இதழ்களால் ஒற்றி எடுத்தவன், அடுத்த கணம் வேகமாக அவளது முகத்தை முத்தங்களால் நிறைத்தான்.

முதலில் திகைத்த மதுவும், அவனது முத்தங்களை மன நிறைவோடு ஏற்றுக் கொண்டு அவனோடு ஒன்றிப் போனாள்.

தன் வேகம் குறைந்ததும், அவன் மனைவியின் முகம் நோக்க, அவளோ சிவந்த முகத்தோடு ஒரு எதிர்பார்ப் புடன் அவனைப் பார்த்து விட்டு, தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.



''மதூ...'' தாபத்துடன் அழைத்த சத்யா, அவளது முகத்தை நிமிர்த்த முயல, அவனது கழுத்தைக் கட்டிக் கொண்ட மது, அவனது மார்பில் முகத்தைப் புதைத் தாள்.

அவளது அணைப்புக்கு பதில் கொடுக்கும் விதத்தில், சத்யாவும் மனைவியை இறுக அணைத்துக் கொண் டான்.

அந்த அணைப்பில் இருந்து விலக மனம் வராமல் இருவரும், தங்களை மறந்தபடி நின்றிருக்க, அவனது கைப்பேசி அவர்களது மோன நிலையைக் கலைத்தது.

கைப்பேசி அழைக்கும் ஓசை, காதில் விழவே இல்லை என்பது போல அதை அலட்சியம் செய்தான் அவன்.

முழுதாக ஒரு முறை அடித்து ஓய்ந்த அலைபேசி, மீண்டும் அழைக்கத் துவங்க, மனைவியை அணைப் பில் இருந்து விலக்காமலே, அலைபேசியை எடுத்தான்.

அலுவலகத்தில் அவனது காரியதரிசியிடம் இருந்து அழைப்பு வந்திருந்தது.

''சார்! ஃப்ளைட்டுக்கு நேரமாகுது! நீங்க இன்னும் டிக்கெட் வாங்கிக்கவே இல்லையே? வீட்டுக்கு கொடுத்து அனுப்பவா?''

அவரது குரலில் இருந்த அவசரம் சத்யாவையும் தொற்றிக் கொள்ள, ''இல்லை... நானே வரேன்! அங்கே கொஞ்சம் வேலை இருக்கு!' பதில் சொல்லி அழைப் பைத் துண்டித்தவன்,

''பட்டு! நான் கிளம்பணும்டா... நேரமாகுது!'' என்ற படியே சத்யா, தன்னிடம் புதைந்திருந்த மனைவியை விலக்க முயன்றான்.

அவனிடம் இருந்து விலகாமல், ''நீங்க போக வேண்டாம்!'' என்று மனைவி முனகியது காதில் சரியாக விழாமல் போகவே.

''என்னடா சொன்னே?'' என்று விசாரிக்க,

நிமிர்ந்து அவனை நோக்கிய மனைவி, ''நீங்க என்னை விட்டுட்டு எங்கேயும் போக வேண்டாம்னு சொன்னேன்!'' கண்களில் மையலுடன் சொல்ல,

''பட்டு?''

ஆச்சரியமான அழைப்புடன் சத்யா அவளைக் கேள்வியாக நோக்க,

''இன்னும் என்ன?'' சிணுங்கியபடியே கணவனின் கழுத்தைத் தன் புறம் வளைத்த மது அவன் தாடையில் முத்தமிட, அடுத்த கணம் அவளது எலும்புகள் நொறுங்கி விட்டதோ என்று எண்ணும்படி அவனை இறுக அணைத்த சத்யா, அதற்கடுத்த கணமே மனைவிக்கு வலிக்குமோ என்றெண்ணி அவளை விடுவித்தான்.

மனைவி 'என்ன?' என்பதாய் நோக்க, ''பட்டு! ஏற்கனவே டைம் ஆயிடுச்சு! கிளம்பணும்!'' சொல்லிக் கொண்டே அவன் திரும்ப,

''இன்னும் கோபம் தீரலை இல்லை?'' என்றவளின் குரலில் கண்ணீர் தெரியவும், மனைவியிடம் திரும்பி,

''கோபமே இல்லை எனும்போது அது தீரலையா என்ற கேள்விக்கே இடமில்லை பட்டு! என்னால் உன்னைப் புரிஞ்சிக்க முடிஞ்சுது! இப்போ, உண்மையிலேயே வேலையாத்தான் போறேன்! அது உனக்கும் தெரியும்! மனசை போட்டு அலட்டிக்காமல் அமைதியா இரு!'' பரிவுடன் சொன்னவன்,



''நான் ஒரு வாரத்தில் வந்துடுவேன்! வந்தவுடனே இன்னைக்கு விட்டதைப் பிடிச்சுடலாம்!'' கண் சிமிட்டிக் குறும்புடன் சொல்லி விட்டு, அவளது கன்னத்தை வருடி முத்தமிட்டு விட்டு கிளம்பிச் சென்றான்.

* * *

இரண்டு நாளுக்குப் பிறகு, நந்தினியுடன் வந்திருந்த மகேந்திரனை, மருத்துவமனையில் பார்த்தபோது, மது பழைய கேலி கிண்டலுடன் பேச, மகேந்திரன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''சத்யாதான் ஊரில் இல்லையே... வீட்டுக்கு வாயேன் மது!''

நந்தினி அழைத்ததும், சுமித்ராவிடம் சொல்லி விட்டு, மது தங்கள் வீட்டுக்கு வந்தாள்.

மதுவின் அறையில் நந்தினியும் மதுவும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, ''அப்பா எப்படி இருக்காங்க நந்தினி, ஆபரேஷன் செய்யணும் என்று சொல்லிட்டு இருந்தாயே, என்ன ஆச்சு?'' என்று மது விசாரிக்க,

''அப்பா இப்போ ரொம்ப நல்லா இருக்கார் மது. போன முறை செக் அப் போகும்போது, ஆன்ஜியோக்ராம் மட்டும் செஞ்சால் போதும் ஆபரேஷன் தேவைப்படாது என்று சொல்லிட்டாங்க. டாக்டரே ஆச்சரியப்பட்டார்'' என்ற நந்தினியிடம்,

''கேட்கவே சந்தோஷமா இருக்கு நந்தினி. உன் கவலைதான் அவரை ரொம்ப பலவீனப் படுத்தி இருக்கு போல. இப்போ அந்த கவலை இல்லை என்றதும், எல்லாம் சரியா ஆகிடுச்சுன்னு நினைக்கிறேன்!'' என்ற மதுவின் குரலிலும் மகிழ்ச்சி தெரிந்தது.

''மது... நீ சந்தோஷமா இருக்கிறாயா?'' என்று விசாரிக்க, ''இதென்ன கேள்வி நந்தினி? சூப்பரா இருக்கேன்! ஏன் திடீர்னு இப்படி ஒரு கேள்வி?'' ஆச்சரியத்துடன் மது வினவ,

''இல்லை... சும்மாதான்!'' என்று நந்தினி மழுப்ப, மதுவுக்கு எதோ இருக்கிறது என்று தோன்றியது.

அந்த நேரம் பார்த்து நந்தினியின் அன்னையின் அழைப்பு வர, பேசி விட்டு வைத்தவளின் முகம் சோர்ந்து போக, மது என்னவென்று விசாரித்தாள்.

''அம்மாவுக்கு எப்பவும் எதாவது விசேஷமா என்ற கேள்வியைத் தவிர வேற கேட்கத் தெரியாது!'' அலுப்புடன் நந்தினி சொன்னதும்,

''பெரியவங்களுக்கு எப்பவும் அந்த நினைப்புதான்... அதுக்கு ஏன் நீ அலுத்துக்கறே? ஏன்... ஏதாவது பிளானிங்ல இருக்கீங்களா?'' என்ற மது, நந்தினியின் முகம் மாறியதைக் கண்டு,

''சாரி... ரொம்ப பெர்சனலா கேட்டுட்டேனா?'' என, ப்ச்... உனக்கு இல்லாத உரிமையா மது?'' என்ற நந்தினி, ''மது... நீ உண்மையிலேயே சந்தோஷமாதானே இருக்கே?'' மீண்டும் வினவ,

''நந்து... என்ன விஷயம்? எதுக்கு இப்படிக் கேட்கிறே?'' என்று நந்தினியின் கண்களை நேராகப் பார்த்து வினவ, ஒரு கணம் தயங்கிய நந்தினி,

''இல்லை... நீ சந்தோஷமா இருந்தால்... நானும் சீக்கிரமே அம்மாவுக்கு நல்ல பதில் சொல்லிடுவேன்!'' என்று சொல்ல, ஒரு கணம் மதுவுக்கு ஒன்றும் புரியவில்லை!



கொஞ்ச நேரம் கழித்தே, விஷயம் விளங்க, அதிர்ச்சியில் அவளது கண்கள் அகல விரிந்தன.

''இதென்ன முட்டாள்தனம் நந்தினி? யாரு... அந்த மக்கு மகனோட ஐடியாவா? பதி சொல் மீறாத பத்தினியா நீயும் அதுக்கு ஒத்துக் கொண்டாயா?'' படபடவெனப் பொரிந்தவள்,

''எதை வைச்சு நீங்க ரெண்டு பேரும் நான் சந்தோஷமா இல்லைன்னு முடிவு செஞ்சீங்க? ம்ம்ம்... சொல்லு!'' என்று அதட்டிய நேரம்,

மகேந்திரன் உள்ளே நுழைந்தான், ''ஏன் மது? உன் முகத்தில் இருந்தே நீ சந்தோஷமா இருக்கிறாயா இல்லையா என்று எனக்குத் தெரியாதுன்னா நினைச்சே?'' என்ற கேள்வியோடு!

அந்தக் கேள்வியில் அவனது முழுமையான பாசம் வெளிப்பட, மது ஒரு கணம் அமைதியாக இருந்தாள்.

''சாரிடா மகேன்! உன்னைக் கூட ரொம்ப கஷ்டப் படுத்திட்டேன்! இப்படி எல்லாரையும் நான் கஷ்டப் படுத்தி இருக்கேன் என்று நினைக்கவே ரொம்ப வேதனையா இருக்க! எல்லாருக்குமே என்னால கஷ்டம்!'' என்று முடித்தபோது கண்கள் கலங்கி இருந்தன.

''மது... அப்படி எதுவும் இல்லை! ப்ளீஸ்... நீ இப்படி அழாதே! மகி ஒண்ணும் என்னைக் கட்டாயப் படுத்தலை... என்னோட விருப்பமும் அதுதான்! நீ சந்தோஷமா இருக்கும்போதுதான், நாங்களும் வாழ்க்கையை ஆரம்பிக்கணும் என்று நினைத்தோம்! அவ்வளவுதான்! இதில் உன் தப்பு எதுவும் இல்லை!''

நந்தினி, மதுவை சமாதானப்படுத்த, அவளது வார்த்தைகளில் மனம் நெகிழ்ந்தாலும்,

''சாரி மகேன்! உன்கிட்ட கூட இவ்வளவு நாள் சரியா பேசாம இருந்தேன்... சாரிடா!'' என்று மகேந்திரனிடம் மன்னிப்பு வேண்டினாள்.

''விடு மத்து! நமக்குள்ளே என்ன? பட், என்னோட சிம்பதி எல்லாம் சத்யாவுக்குத்தான்! என்னதான் லவ் என்றாலும், தானா இப்படி ஒரு கஷ்டத்தில மாட்டி வானா ஒருத்தன்? ப்ச்... ஹீ இஸ் ரியலி கிரேட்!''

''டேய்... வேண்டாம்... நந்தினிக்காக பார்க்கிறேன் இல்லை... உன்னை உண்டு இல்லைன்னு ஆக்கி இருப்பேன்!'' கண்ணீரைத் துடைத்துக் கொண்ட மது அவனை மிரட்டி விட்டு,

''கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? என் நந்தாவுக்குத்தான் என்னோட அருமை புரிஞ்சிருக்கு'' பெருமிதத்துடன் சொல்ல,

''இதில கழுதை என்று சொன்னது உன்னைத் தானே மது?'' விடாமல் மகேந்திரன் வம்பிழுக்க, மது அவனை அடிக்க கை ஓங்கி விட்டு, பின் சிரிக்க ஆரம்பித்தாள்.

அவர்கள் இருவரும் முன்பு போலவே, கேலியுடன் பேசிக் கொள்வதைக் கண்ட நந்தினிக்கும் உள்ளம் நிறைந்தது.

* * *

மகேந்திரனையும் மதுவையும் சந்தித்து விட்டு வந்த மதுவுக்கு, மனம் யோசனையில் ஆழ்ந்திருந்தது. தன்னைப் பற்றிய யோசனையிலேயே இத்தனை நாளாய் இருந்து விட்டதை எண்ணி வருத்தப் பட்டவளி



னிமேல் தானும் சந்தோஷமாக இருந்து தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

அன்னையைப் பற்றிய கலக்கம் கூட மறைந்து, விரைவில் அவர் குணமாகி வருவார் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

மனம் கணவனை நாட, அவனது எண்ணுக்கு அழைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தவளின் அலைபேசி அழைப்பு வந்ததின் அறிகுறியாக ஓசை எழுப்ப, அவசரமாக எடுத்தவள், சத்யா என்றதும் ஆவலுடன் பேசினாள்.

''நந்தா...''

வெகு நாளைக்குப் பிறகு மனைவியின் காதல் நிறைந்த அழைப்பு சத்யாவை நெகிழ்த்த, ''பட்டு!'' என்றவன் குரலும் குழைந்தே வந்தது.

''எப்ப வருவீங்க?'' காதல் ஏக்கம் நிறைந்த குரலில் மனைவி வினவியதும், இப்போதே அவள் முன் போய் நிற்கும் ஆவல் தோன்றியது சத்யாவுக்கு.

''இன்னும் மூணு நாளில் வந்துடுவேன்டா பட்டு!'' மென்மையான குரலில் சொன்னவன், கொஞ்ச நேரம் அவளிடம் பேசி விட்டு அழைப்பை வைத்து விட்டு மனைவியைப் பற்றிய எண்ணங்களில் ஆழ்ந்தான்.

மனைவி அவளது குற்ற உணர்வில் இருந்து நீங்கி, தன்னுடன் ஆன வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து விட்டாள் என்று புரிந்தாலும், ஜானகியின் ஆசி கிடைத்தால்தான், அவளது மனம் முழுமையாக நிறைவடையும் என்பதை அவன் அறிந்தே இருந்தான்.

விரைவில் அத்தைக்கு குணமாக வேண்டும் என்று ஆத்மார்த்தமாக பிரார்த்தனை செய்து விட்டு வேலையை கவனிக்க ஆரம்பித்தான்.

* * *

புடவையைக் கையில் கொடுத்த மனைவியை பயத்துடன் பார்த்துக் கொண்டே, ''நந்து... என்ன இது?'' என்றான் மகேந்திரன்.

''என்னவா? தினமும் நடக்கிறதுதானே சார்... நீங்க அந்த ரூமில் என்னோட புடவையை கட்டிப் பிடித்துக் கொண்டு தானே தூங்குவீங்க? அதான் கொடுத்தேன்!''

நமட்டுச் சிரிப்புடன் சொன்ன மனைவியை ஆச்சரியத்தோடு நோக்கி, ''கள்ளி... உனக்கு அந்த விஷயம் தெரியுமா?'' என்றபடியே அவள் அருகில் வந்து அவளது இடையைப் பற்றித் தன் பால் இழுத்தவன்,

''ஹே! அது நேற்று வரை! இனிமேல் நிழல் வேண்டாம்! நிஜம்தான் வேண்டும்!'' என்று கிறக்கத்துடன் சொன்னவன் கரங்கள், மனைவியின் ஆசையுடன் தோளை வருடின.

''ஆமாம் இல்லை! நான் மறந்தே போயிட்டேன்! அப்பாவியாகச் சொல்ல நினைத்த நந்தினியின் குரல் கணவனின் வருடலில் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண்டதைப் போல மெலிந்து வந்தது.

''ம்ம்ம்... இன்னைக்கு உனக்கு எல்லாத்தையும் மறக்க வைக்கணும் என்பதுதான் அய்யாவோட ஐடியா!'' என்றபடி மனைவியைக் கையில் ஏந்த,

''இதென்ன பயங்கர ரொமாண்டிக்கா பேசறீங்க! அவனைக் கேலி செய்ய நினைத்தாலும், அவளது குரல் குழைந்தே வந்தது.



''யெஸ்! இன்னைக்கு நீ மகேந்திரனோடு இன்னொரு முகத்தை பார்க்க போறே!'' அமர்த்தலாக சொன்னவன், மனைவியை கட்டிலில் அமர்த்தி ஆவலுடன் நெருங்கி அமர்ந்தான்.

''நந்து... நம்ம கல்யாணம் முடிந்த உடன், நான் அப்படிச் சொன்னது உனக்கு வருத்தமா இருந்ததா?''

கவலையுடன் மகேந்திரன் விசாரிக்க, ''இதோ பாருடா! சார் எவ்வளவு நாள் கழிச்சு விசாரிக்கிறாருன்னு?'' என்று கேலி செய்தாலும்,

''இல்லை மகி! அன்னைக்குச் சொன்னதைத்தான் இன்னைக்கும் சொல்றேன். கல்யாண வாழ்க்கை என்பது என்ன? கணவன் மனைவி இரண்டு பேரும் தங்கள் சந்தோஷத்தையும் துக்கத்தையும் பகிர்ந்து கொள்வதுதானே? நீங்க என் அப்பாவோட உடல் நிலைக்காக, உங்க அத்தையோட ஆசீர்வாதம் கூட இல்லாமல் என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்டீங்க... அது உங்க அன்போட வெளிப்பாடு! அப்போ நானும் உங்க மனசுப்படி நடந்தால்தானே, நம்ம நேசத்துக்கு ஒரு அர்த்தம் இருக்கு!''

மனைவியின் வார்த்தைகளில், அவன் மேல் அவள் கொண்ட நேசமும், புரிதலும் வெளிப்பட, அவளை மனைவியாய் அடைந்ததை எண்ணி எப்போதும் போல அவன் மனம் நெகிழ்ந்தது.

அவன், மனைவியின் முகத்தையே கண் கொட்டாமல் காதலோடு பார்த்துக் கொண்டிருக்க, ''அதுவும் இல்லாமல், என்னால்தான், மதுவின் கல்யாணம் இப்படி அவசரம் அவசரமா அவளுடைய முழு விருப்பம் இல்லாமல் நடந்தது என்று, எனக்கும் ஒரு குற்ற உணர்ச்சி

இருந்துட்டேதான் இருந்தது. அவள் சந்தோஷமா இருக்காள் என்று தெரிஞ்ச பிறகுதான் எனக்கு நிம்மதியா இருக்கு. நீங்களும் எத்தனை நாள் மது உங்ககிட்ட சரியா பேசலை என்று வருத்தப்பட்டு இருக்கீங்க? இப்போ எல்லா சரி ஆகிடுச்சு. ஜானும்மாவுக்கும் சீக்கிரம் குணமாகி விடும் என்று தோணுது மகி.''

கணவனுக்கு ஆறுதல் தரும் வகையில் பேசிய மனைவி மீதிருந்த பார்வையை, மகேந்திரன் விலக்கவே இல்லை.

''ஹலோ?'' என்று அவன் முகத்துக்கு நேரே, நந்தினி கையை ஆட்ட, அப்போதும் அவன் அசையவில்லை.

கணவன் தன்னுடன் விளையாடுகிறான் என்று நந்தினிக்குப் புரிந்தது.

''என்ன? இப்படியே பார்த்துட்டு தான் இருக்க போறீங்களா? ஏதோ வேற முகத்தைக் காட்டறேன்னு சவால் விட்டீங்க? வீரமெல்லாம் பேச்சுல மட்டும்தான் போலிருக்கு!''

புன்னகையுடன் புருவம் உயர்த்திக் கேலி செய்த மனைவியை, ''வாயாடி... வர வர கிண்டல் ஜாஸ்தி ஆகிடுச்சு உனக்கு!'' என்ற அவளது மூக்கை பிடித்து செல்லமாக ஆட்டியவன்,

அவளைக் காதலுடன் நோக்கி, ''செயலிலும் நான் வீரன்தான் என்று காட்டறேன்!'' என்று மனைவியின் முகம் நோக்கி குனிந்தான்.



## 21

அடுத்த வந்த மூன்று நாட்களும் வேகமாகச் செல்ல, சத்யா மனை



வியைக் காணப் போகும் உற்சாகத்தோடு இந்தியாவுக்கு கிளம்பினான்.

அந்த விமானப் பயணம் அவனது வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது. அந்தப் பயணத்தில் சந்திக்க நேர்ந்த ஒரு பெண்மணியின் மூலம், அவனது மனைவியின் குற்ற உணர்வை போக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

* * *

சத்யா விமானத்தில் உயர் வகுப்பு பிரிவில் பயணம் செய்ய, கொஞ்ச நேரத்தில் விமான பணிப்பெண் அருகில் காலியாய் இருந்த இருக்கையில் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை அழைத்து வந்து அமர வைத்தார்.

கூடவே வந்த அந்தப் பெண்மணி, அந்த கர்ப்பிணிப் பெண்ணின் தாயார் போலும்!

''ரொம்ப நன்றிம்மா... அங்கே அவளால் உட்காரவே முடியலை! உங்க டைம்லி ஹெல்புக்கு ரொம்ப நன்றி!''

''உங்க அதிர்ஷ்டம் இங்கே ஒரு சீட் காலியாக இருந்தது... அதனால் கொடுக்க முடிந்தது... தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம்!'' புன்னகையுடன் சொன்ன பணிப்பெண்.

''மேடம்! நீங்க உங்க சீட்டுக்கு போங்க! இப்படி இங்கே நிற்கக் கூடாது!'' என்று அறிவுறுத்த,

''இந்த மாதிரி வலி எல்லாம் சில சமயம் வருவது தான். இன்னும் இரண்டு மாசம் பிரசவத்துக்கு. பயப் படாமல் இரு!'' என்று மகளிடம் சொல்லி விட்டு அவர், அங்கிருந்து போக மனமில்லாமல் நிற்க, அந்தப் பெண்ணும் பயத்தில், அன்னையின் கையைப் பற்றிக்

கொண்டே இருக்க, சத்யாவுக்கு அவர்களது நிலைமை புரிந்தது.

''ஆன்ட்டி... நீங்க வேணா இவங்களோடு இங்கே உட்கார்ந்துக்கோங்க... நான் உங்க சீட்டுக்கு போறேன்!'' என்று உதவி செய்ய முன் வந்தான்.

பெண் அருகே அமர வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், அந்தப் பெண்மணி தயங்க, ''எதுக்கு இவ்வளவு யோசிக்கறீங்க? எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை ஆன்ட்டி!'' என்றவன், பணிப்பெண்ணிடம் அவரது சீட்டை விசாரித்துக் கொண்டு கிளம்ப, ''ரொம்ப நன்றி தம்பி!'' என்றார் அவர்.

ஒரு புன்னகையுடன் அவரது நன்றியை ஏற்றுக் கொண்டு அவன் செல்ல, ''ரொம்ப நல்ல மனசு! பஸ்ல சீட் கேட்டாலே கொடுக்காதவங்க இருக்காங்க... இவர் கேட்காமலே இவ்வளவு பணம் போட்டு வாங்கிய சீட்டை விட்டுக் கொடுத்துட்டு போறாரே?'' மகளிடம் வியந்து பேசியவர், அவளது கைகளைப் பற்றிக் கொண்டு பயந்து போயிருக்கும் பெண்ணுக்கு இதமாக பேச ஆரம்பித்தார்.

சென்னையில் இறங்கியதும், அவர்கள் இருவரும் வரும் வரை சத்யா காத்திருந்து, ''எங்கே போகணும் என்று சொல்லுங்க.. நான் எங்க காரில் கொண்டு விடறேன்!'' என்றான்.

''வேண்டாம் தம்பி! ஏற்கனவே பெரிய உதவி செஞ்சிருக்கீங்க! நாங்களே போயிருக்கிறோம்!'' என்று அவர் தயங்க, ''நீங்க ரொம்ப யோசிக்கறீங்க ஆன்ட்டி... எனக்கு கார் வந்திருக்கு! உங்களை விட்டு விட்டு போறதில் எனக்கு பெரிசா எந்தப் பிரச்சனையும்



இல்லை!'' என்றவன், போகும் வழியில் அவரைப் பற்றி விசாரிக்க, அவர் தனது இருப்பிடம் வேலை பற்றி சொன்னதும்,

''ஆன்ட்டி... நீங்களும் அந்த பேங்கில்தான் வேலை செய்யறீங்களா? உங்களுக்கு அப்போ ஜானகி ஆன்ட்டியைத் தெரியுமா?'' என்று ஆர்வத்துடன் விசாரிக்க,

''ஜானகியைத் தெரியுமாவா? அவங்கதானே பிராஞ்ச் மேனேஜர்! உங்களுக்கு எப்படி அவங்களைத் தெரியும்?'' அவரும் ஆச்சரியத்துடன் வினவ,

''நான் அவங்க மருமகன்! அவங்க பெண் மதுவைக் கல்யாணம் செஞ்சிருக்கேன்!'' சத்யா சொன்னதும், அவர் மேலும் ஆச்சரியமடைந்தார்.

''இது எப்போ நடந்தது? ஜானகி எனக்குச் சொல்லவே இல்லையே?''

ஆதங்கத்துடன் அவர் சொன்னதும், சத்யா விவரங்களைப் பகிர, அவர் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார்.

''கடவுளே! ரொம்ப நல்ல மனுஷி அவங்க! நான் யூ.எஸ். போன பிறகு, என் பொண்ணோட பிரச்சனையில் யார் கூடவும் பேச முடியாமல் போயிடுச்சு... அதனால் எனக்கு அவங்களுக்கு விபத்து ஏற்பட்டதும் தெரியாமல் போயிடுச்சு... அச்சோ... அந்தக் குழந்தைகள் தனியா என்ன பாடு பட்டதுங்களோ தெரியலையே?''

கற்பகம் கவலையுடன் பேச, ''உங்களுக்கு என்ன பிரச்சனை ஆன்ட்டி...'' என்றவன், அந்தப் பெண் தீபாவின் முகம் மாறியதைக் கண்டதும், ''சாரி... ரொம்ப

பெர்சனல் என்றால் வேண்டாம்! தெரிஞ்சவங்க ஆகிட்டீங்க... ஏதாவது உதவி செய்ய முடியுமா என்றுதான் கேட்டேன்!'' என்றவனிடம், கற்பகம் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்ல, சத்யாவின் முகம் இறுகியது.

''என்ன ஆன்ட்டி இது? அவங்களை சும்மாவா விட்டீங்க? உங்க நகைகள் வேற அவங்க கிட்ட இருக்கு என்று சொல்றீங்க?'' என்று ஆத்திரப்பட்டவனிடம்,

''அதை எல்லாம் வாங்க முயற்சி செய்தோம் தம்பி. அவங்ககிட்ட அவமானப்பட்டதுதான் மிச்சம். என் ஒண்ணு விட்ட அண்ணன் வீட்டில்தான் இவ்வளவு நாளா தங்கி இருந்தோம். பிரசவத்துக்கு அங்கே ரொம்ப செலவாகும் என்றுதான், டாக்டர் கிட்ட விமானத்தில் பயணம் செய்யலாமா என்று கேட்டு, அவங்க பயணம் செய்யலாம் என்று லெட்டர் கொடுத்த பிறகு கிளம்பி வந்துட்டோம்'' என்றார் அவர்.

''சிஸ்டர்! உங்ககிட்ட ஒண்ணு கேட்கவா?'' தீபாவை நோக்கி வினவ, அவள் தலையாட்டியதும், ''உங்களுக்கு அவர் கூட சமரசம் ஆகிற எண்ணம் இருக்கா?'' என்றான்.

''இல்லவே இல்லைங்க... பட்டதெல்லாம் போதும்... எனக்கு இந்த குழந்தையே போதும்!'' வேகமாக பதில் வந்தது தீபாவிடம் இருந்து.

''அப்போ விடுங்க! நான் இந்த விஷயத்தை டீல் செய்யறேன்! எனக்கு அங்கே தெரிஞ்சவங்க நிறைய பேர் இருக்காங்க.. அந்தக் கும்பலை உண்டு இல்லைன்னு செஞ்சிடலாம்... உங்க நகைகளும் திரும்ப



வாங்கிடலாம்!'' என்று நம்பிக்கை தர, இருவரும் அவனை நன்றியுடன் நோக்கினர்.

''ஆன்ட்டி... ஒரு நாள் வீட்டுக்கு வாங்க!'' கற்பகத்தையும் தீபாவையும் வீட்டில் விடும்போது, சத்யா அழைப்பு விடுக்க, ''கண்டிப்பா வரேன் தம்பி... நாளைக்கே வரேன்! மதுவை கூட்டிட்டு போய் ஜானகியைப் பார்க்கணும்!'' என்றார் அவர். அவனது இந்த உதவியும், அழைப்பும் அவனுக்கு அதற்குரிய பலனைக் கொடுக்கப் போகிறதென்று அப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

வீட்டுக்கு வந்த கணவனைக் கண்ட மதுவின் முகம் மலர்ந்தது. வீட்டினரிடம் பேசி விட்டு, தாய்க்கும் தங்கைக்கும் வாங்கி வந்திருந்த பரிசுகளைக் கொடுத்து விட்டு, தங்கள் அறைக்கு வந்த கணவனை, மது இறுக அணைத்துக் கொண்டாள்.

அவளது இறுகிய அணைப்பில் நெகிழ்ந்து போனவன், தன் கேள்விக்கான விடையைத் தெரிந்து கொண்டே, ''பட்டு... டிட் யூ மிஸ் மீ? என்றான், மனைவியின் வாயால் அதைக் கேட்க வேண்டும் என்ற ஆவலோடு!

மெல்ல தலையை நிமிர்த்திய மது, ''வெரி மச்!'' என்றபோது, அவளது கண்கள் கலங்கின.

''ஹே... சியர் அப்! அதான் வந்துட்டேன் இல்லை!''

மனைவியை அணைத்துக் கொண்டவன், வேலை பற்றிய விவரங்களைக் கூற, மதுவும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டாள்.

இரவு உணவு முடிந்து அறைக்கு வந்ததும், அவள் ஒரு வித எதிர்பார்ப்போடு அவனது முகத்தை நோக்க,

''ரொம்ப டயர்டா இருக்கு மது!'' என்று அவன் அவளை அணைத்து கொண்டு படுத்துக் கொண்ட போது, அவன் என்ன நினைக்கிறான் என்று புரியாமல் குழம்பினாள்.

அவள் அன்று குற்றம் சாடியதை அவன் இன்னும் மறக்கவில்லையா என்ன? அவன் மறப்பது இருக்கட்டும்! இன்னும் அவள், அதற்காக அவனிடம் மன்னிப்பு வேண்டவே இல்லையே?

அந்த எண்ணம் தோன்றியதும், தன்னை அணைத்திருந்த கணவனை திரும்பி பார்த்தவள், அவன் நிச்சலனமாகி உறங்கி கொண்டிருப்பதைக் கண்டதும், நாளை கண்டிப்பாக அவனிடம் மன்னிப்பு கேட்டு விட்டுத்தான் மறுவேலை என்று தீர்மானித்தபடி தானும் உறங்க முயற்சித்தாள்.

அடுத்த நாள், ''மது... இன்னைக்கு நீ ஆபீஸ் வர வேண்டாம்! கற்பகம் ஆன்ட்டி உன்னை பார்க்க வரேன் என்று சொல்லி இருக்காங்க!'' என்று போகிற போக்கில் சொல்ல,

''கற்பகம் ஆன்ட்டியா? ஊரில் இருந்து வந்துட்டாங்களா? உங்களுக்கு எப்படி தெரியும்?''

அடுக்கடுக்காக கேள்விகளைத் தொடுத்தவளிடம், ''நான் கொஞ்சம் சீக்கிரம் போகணும்டா! அவங்க வருவாங்க அவங்ககிட்டயே கேட்டுக்கோ!'' என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான்.

மதியம் கற்பகம் வர, இருவரும் ஜானகியைப் பற்றியும், தீபாவைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்த பிறகு, கற்பகம், ''சத்யா மாதிரி ஒரு கணவன்



கிடைச்சதுக்கு... நீ ரொம்ப கொடுத்து வைச்சிருக்கணும் மது!'' என்று சத்யாவின் புகழ் பாட, மதுவுக்குப் பெருமிதமாக இருந்தது.

''நான் கூட ஜானு கிட்ட சொல்லிட்டு இருந்தேன்... இப்போவெல்லாம் பெண்களுக்கு நல்ல வரன் அமையறது கஷ்டம்... நீ மகேந்திரனுக்கே மதுவை கட்டிக் கொடு என்று... அவளுக்குத்தான் ரொம்ப தயக்கமா இருந்தது... சேர்ந்து வளர்ந்த பிள்ளைகள்! கல்யாணம் என்றால் எப்படி எடுத்துப்பாங்களோ என்று... பரவாயில்லை... இப்போ எல்லாம் நல்லதாவே அமைஞ்சுடுச்சு! நான் நாளைக்கு வந்து அம்மாவைப் பார்க்கிறேன்!''

அதற்கு மேல் கற்பகம் பேசியது எதுவும் மதுவின் காதில் விழவில்லை! அவர் விடை பெற்றுக் கொண்டு கிளம்பியபோது, இயந்திர கதியில், அனுப்பி வைத்தவள், தங்கள் அறையில் வந்து அமர்ந்தாள்.

கற்பகம் சொன்ன வார்த்தைகள் மதுவைத் திகைக்க வைத்திருந்தது.

கற்பகம் சொல்வதைப் பார்த்தால், தனக்கும் மகேந்திரனுக்கும் திருமணம் செய்யும் ஆசை எல்லாம் அம்மாவுக்கு இல்லை என்றல்லவா தெரிகிறது?

கற்பகம் சொல்லித்தான், அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்யும் எண்ணம் எழுந்திருக்கிறது என்றால், அன்னை தங்கள் விருப்பத்தைக் கண்டிப்பாக கேட்டுத்தான் இறுதி முடிவு எடுக்க நினைத்திருப்பார்கள்! அப்போது, தங்கள் விருப்பத்தைத் தெரிவித்திருந்தால், முதலில் தயங்கினாலும், அவளும் மகேந்திரனும் நம்பி இருந்ததைப் போல கண்டிப்பாக ஒத்துக் கொண்டிருப்பார்கள்!

அந்த எண்ணம் தோன்றியதும், அதுவரை மனதை அடைத்துக் கொண்டிருந்த பாரம் விலகி, மனம் இலவம் பஞ்சாய் லேசானது.

உடனே சத்யாவைப் பார்க்க வேண்டும்... இதைச் சொல்ல வேண்டும் என்று தோன்றி விட, அவள் கைப்பேசியை எடுத்த நேரம், வேறொரு அழைப்பு வந்தது. ஜானகி இருந்த மருத்துவமனையில் இருந்து அழைப்பு என்றதும் அவள் பதட்டத்துடன் எடுக்க, அவர்கள் சொன்ன விவரத்தைக் கேட்டதும் ஆனந்தத்தில் கண்ணீர் வந்தது.

''உடனே வரேன்!'' என்றவள், போகும் வழியில் சத்யாவுக்கும் மகேந்திரனுக்கும் விவரம் தெரிவித்தாள்.

அவள் அங்கே சென்ற போது ஜானகி, மகளையும் மகேந்திரனையும் எதிர்நோக்கி காத்திருந்தார்.

அன்னை கட்டிலில் எழுந்து அமர்ந்து கொண்டிருப்பதைக் கண்ட மது ஓடிச் சென்று அவரைக் கட்டிக் கொண்டு கண்ணீர் சொரிய, ''மதுக்குட்டி... அதான் அம்மா பிழைச்சு வந்துட்டேனே? அப்புறம் என்னடா? அழாதடா!'' மெல்லியக் குரலில் ஜானகி ஆறுதல் கூற, மகேந்திரனும் அருகில் வந்து அமர்ந்தான். அவனது கண்களும் கலங்கி இருந்தன.

தன் பிள்ளைகளின் கண்ணீர் வருத்தத்தைத் தர ''பயந்துட்டீங்களா?'' என்று அவர் வினவியதும்,

''ரொம்ம்ம்ப...'' கம்மிய குரலில் மது மொழிய, அவருக்கும் கண்கள் கலங்கின.

''என் குழந்தைகளை விட்டு விட்டு அவ்வளவு சீக்கிரம் நான் போய் விடுவேனா என்ன?'' என்றவர் கரம், மகளையும் மகேந்திரனையும் ஆதுரத்துடன் வருட, அந்த



தாயின் ஸ்பரிசத்தில், இருவரும் மீண்டும் குழந்தைகளாயினர்.

புன்னகையும் கண்ணீரும் போட்டி போட, மது அன்னையின் கழுத்தை சலுகையாக கட்டிக் கொள்ள, மகேந்திரன் அவரது கையை இறுகப் பற்றிக் கொண்டான். தன் குழந்தைகளின் அந்த செயல், அவர்களது நீண்ட நாள் தவிப்பை, ஏக்கத்தை எடுத்துரைக்க, தன்னை நல்ல படியாக பிழைக்க வைத்த கடவுளுக்கு, ஜானகியின் உள்ளம் மனமார நன்றி நவின்றது.

சுற்றுப்புறம் மறந்து, உங்கள் உலகத்தில் மூழ்கி இருந்த மூவரையும் தொந்தரவு செய்யாமல் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்த, சத்யாவுக்கும், நந்தினிக்கும் உள்ளம் நெகிழ்ந்தது.

கொஞ்ச நேரத்தில், மருத்துவர் உள்ளே வர, மதுவும் மகேந்திரனும், ஜானகியிடம் இருந்து விலகி எழுந்து நின்றனர்.

அப்போதுதான் அறையில் இருந்த நந்தினியையும் சத்யாவையும் பார்த்த ஜானகி, சட்டென்று அடையாளம் புரியாமல் குழம்பினார்.

''யார் இவங்க?'' ஜானகி கேட்டதும், மகேந்திரனும் மதுவும் திகைத்து என்ன சொல்வதென்று புரியாமல் குழம்பி நிற்க, மருத்துவர் அவரையும் அறியாமல் அவர்களது உதவிக்கு வந்தார்.

''அவங்க இப்பதான் விழிச்சிருக்காங்க... ரொம்ப தொந்தரவு செய்யாதீங்க. இன்னும் நிறைய டெஸ்ட் எல்லாம் எடுக்க வேண்டி இருக்கு! இப்போதைக்கு நீங்க எல்லாம் கிளம்புங்க!''

இப்போதுதான் நினைவு திரும்பி நிற்கிறது! இந்த நேரத்தில், அவரிடம் விஷயத்தை உடனே சொல்வது உசிதமில்லை என்றே அனைவருக்கும் தோன்றியது.

அன்னையோடு இன்னும் கொஞ்ச நேரம் இருக்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், வேறு வழி இல்லாமல் மதுவும் மற்றவர்களும் அங்கிருந்து நகர்ந்தனர்.

மருத்துவரிடம் மகேந்திரனும் சத்யாவும் பேசி விட்டு வந்தனர்.

''அத்தைகிட்ட இப்போ ஏதும் சொல்ல வேண்டாம்! ஒரு வாரம் அவங்க இங்கே இருக்க வேண்டி இருக்கு மாம்... வீட்டுக்கு வந்தவுடன் பேசிக்கலாம்!''

சத்யா சொன்னது மற்றவர்களுக்கும் சரியென்று பட, மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

* * *

ஒரு வாரம் கழித்து ஜானகியை வீட்டுக்கு அழைத்து வந்திருந்தனர். இடையில் மருத்துவமனையில் ஜானகியைப் பார்க்க வந்த கற்பகத்திடம், விஷயம் சொல்லப்பட,

இந்த குழப்பத்துக்கெல்லாம் காரணமான தானே ஜானகியிடம் பேசுவதாக அவர் சொன்னார்.

மதுவுக்கு இப்போது தன் திருமணத்தைப் பற்றி அன்னையிடம் சொல்ல எந்த தயக்கமும் இல்லை. ஆனால், அவர் மனம் புண்படாமல் எப்படிச் சொல்வது என்பதுதான் யோசனையாக இருந்தது. இப்போது அந்த பொறுப்பை கற்பகம் ஏற்றுக் கொண்டு விட, நிம்மதியாக இருந்தது.

கற்பகம் பேசி விட்டுப் போன பிறகு, தயக்கத்துடன் மது அன்னையின் அறைக்குள் நுழைய, புன்னகையுடன் ஜானகி அவளை நோக்கி கை நீட்டினார்.



''அம்மா!!!'' சந்தோஷக் கூவலுடன் அன்னையிடம் ஓடியவள், அவரைக் கட்டிக் கொண்டு கண்ணீர் சிந்த, ''இப்போ எதுக்கு கண்ணீர்! நடந்து எல்லாம் நன்மைக்கே!'' என்ற ஜானகி,

''அம்மா உங்க ரெண்டு பேரையும் ரொம்ப கஷ்டப் படுத்திட்டேனோ?'' என, ''அப்படி எல்லாம் எதுவும் இல்லை அத்தை'' என்றபடி, உள்ளே நுழைந்த மகேந்திரனும் அவரது இன்னொரு பக்கம் அமர்ந்து அவரைக் கட்டிக் கொண்டான்.

''கற்பகம் சொன்ன போது கூட, எனக்கு உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செய்யணும் என்பதில் தயக்கம் இருந்திட்டேதான் இருந்தது மது! அன்னைக்கு ஒரு நாள், நீயும் மகேனும் என்கிட்டே உங்க காதலைப் பற்றி சொல்வதைப் பற்றி பேசிட்டு இருந்ததைக் கேட்டு, நான் நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறீங்க என்று தப்பா நினைச்சிட்டேன்!'' என்று சொல்லி அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியவர்,

''அதனால்தான் உங்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கணும் என்று நல்ல நாள் பார்க்க போனேன்... அப்புறம் ஏதேதோ நடந்துடுச்சு...'' என்று பெருமூச்சு விட்டார்.

பிறகு, ஜோசியர் அன்று தன்னிடம் சொன்னதைச் சொன்னவர், ''எனக்கு ஏதாவது ஆகி விட்டால் என்ன ஆகும் என்ற பயத்தோடு அவர் சொன்னதும் சேர்ந்து கொண்டதால்தான், அன்னைக்கு நான் ஹாஸ்பிட்டல்ல உங்ககிட்ட அப்படி சொன்னேன்!'' என்று விளக்க, மதுவின் மனதில் மிஞ்சி இருந்த கொஞ்ச நஞ்சம் இருந்த சஞ்சலங்களும் விலகி, மனம் தெளிவானது.

''கடவுள் அருளால், எல்லாம் நல்லபடியாவே முடிஞ்சிடுச்சு! கற்பகம் சத்யாவைப் பற்றி சொன்னாங்க... கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு!''

தன் சந்தோஷத்தை வெளியிட்ட ஜானகி, ''அவங்க ரெண்டு பேரையும் சீக்கிரமா வர சொல்லுங்க.. நான் பார்க்கணும்!'' என,

''இதோ வந்துட்டோம்!'' என்று உள்ளே நுழைந்தனர் சத்யாவும், நந்தினியும்!

மதுவும் மகேந்திரனும் தத்தம் துணைகளோடு ஜானகியின் பாதம் பணிய, ஜானகி நிறைந்த மனதோடு அவர்களை ஆசீர்வதித்தார்.

நந்தினியின் பெற்றோரும், சத்யாவின் பெற்றோரும் ஜானகியைக் காண வந்திருந்தனர்.

''என்னால்தான்மா அவசர அவசரமா எல்லாம் நடக்க வேண்டியதா போச்சு!'' என்று சிவராமன் குற்ற உணர்வோடு சொல்ல, கடந்த ஒரு வாரமாக தினமும் ஜானகியைப் பார்க்க வந்திருந்த நந்தினி, தன்னுடைய குணத்தால், அவரைக் கவர்ந்திருந்தாள். அதனால் அவளது தந்தையின் வருத்தத்தைத் துடைக்கும் விதமாக,

''என்ன அண்ணா இது? நல்ல விஷயம்தானே நடந்திருக்கு! நந்தினி மாதிரி ஒரு பெண் மகேந்திரனுக்கு அமைஞ்சதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்று ஜானகி அவரைத் தேற்றினார்.

''உங்களைப் பற்றி மது ரொம்ப சொல்லி இருக்கா எவ்வளவு அருமையா குழந்தைகளை வளர்த்து இருக்கீங்க! உங்களுக்கு நினைவு வந்துடுச்சு என்று தெரிந்ததில் இருந்து, உங்களைப் பார்க்கணும் என்று ஆவலா



இருந்தேன்! சத்யாதான் வீட்டுக்கு வந்ததும் வாங்க என்று சொல்லிட்டான்!'' என்று தோழமையுடன் பேசிய சுமித்ராவையும் ஜானகிக்கு ரொம்பவே பிடித்து போயிற்று. ஒரு நல்ல வீட்டில் தன் மகள் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள் என்று அவரது தாய் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது.



# 22

கணவனின் கழுத்தை கட்டிக் கொண்டு, அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்திருந்த மனைவியின் கண்களில் இருந்து ஈரம் கசிவதை உணர்ந்த சத்யா, அவளைத் தன்னிடம் இருந்து விலக்க முயன்றான்.

''பட்டு! என்னடா? இப்போ போய் எதுக்கு கண்ணீர்?'' பரிவுடன் கேட்டபடி, அவளை வருடியவனை மேலும் இறுக்கி அணைத்தவள், ''சாரி நந்தா! வெரி வெரி சாரி!'' என்று மன்னிப்பு வேண்ட, சத்யா குழம்பினான்.

''என்னடா? எதுக்கு சாரி!''

அவனிடம் இருந்து மெல்ல விலகி, நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவள், ''அன்னைக்கு உங்களை ரொம்ப காயப்படுத்திட்டேன்!'' என்றாள்.

மனைவி சொன்னது புரிந்ததும், ''ஹே! நான் அதை அப்பவே மறக்க சொன்னேன் இல்லை?'' என்று செல்லமாக கண்டித்து விட்டு,

''நீ அந்த நேரத்தில் சொன்னது தப்பு இல்லை மது!'' என்றான் ஆறுதலாக.

''இல்லை சத்யா! நான் அன்னைக்கு பேசினது ரொம்ப தப்பு! அதுக்கு உங்ககிட்ட மன்னிப்பு கேட்காமல் இத்தனை நாளை கடத்தினது அதை விட தப்பு!''

மனைவியின் கண்ணீரைக் கண்டதும், ''என் வாயாடி பட்டு எப்போ அழுகாச்சி பட்டுவா மாறினாங்க என்று தெரியலையே?'' என்று கேலியாகவே அவன் பேச்சை மாற்ற முயல, அவன் முயற்சி புரிந்தாலும், அவனிடம் மன்னிப்பை பெற்றே ஆக வேண்டும் என்று எண்ணிய மது,

''ப்ளீஸ் சத்யா! என்னை மன்னிச்சேன் என்று நீங்க ஒரு வார்த்தை சொன்னால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும்!'' என்று கெஞ்ச,

''மது... நீ அன்னைக்கு சொன்னதில் எந்த தப்பும் இல்லை! நீ குழப்பமா இருந்த நேரத்தில், நான் கல்யாணம் என்ற முடிவை எடுத்தது என் தப்புதான்! ஆனால்... நான்... உன்னை இழந்து விடக் கூடாது என்ற பயத்தில், வேற எதைப் பற்றியும் யோசிக்காமல் எடுத்த முடிவு அது! அந்த நேரம், எப்பவும் உன்னை விட்டு நீங்க கூடாது என்ற ஒரே எண்ணம் மட்டும்தான் என் மனசில இருந்தது. அதை மட்டும் நீ புரிஞ்சிகிட்டா போதும் மது! மற்றபடி இந்த மன்னிப்பெல்லாம் நமக்குள்ள அவசியமே இல்லை! புரியுதா?''

மனைவியின் தாடையை செல்லமாக ஆட்டியபடி சத்யா வினவ, ''ம்ம்ம்... அமைதியா உட்கார்ந்து யோசிச்சு பார்க்கும்போது எல்லாமே தெளிவா புரிஞ்சிடுச்சு!'' புன்னகையுடன் சொன்னவளிடம்,

''அன்னைக்கு ஏதோ ஒரு வேகத்தில் அப்படி செய்திட்டேனே தவிர, நீ அதை ஒரு கல்யாணமா ஏற்றுக்



கொண்டு என்னோடு வருவாயோ மாட்டாயோ என்று நான் ரொம்ப பயந்துட்டு இருந்தேன் தெரியுமா?'' என்றான்.

''ஏன்? ஏன் அப்படி நினைச்சீங்க?'' ஆச்சரியத்துடன் வினவியவளிடம்,

''பின்னே? உன் அனுமதி கூட கேட்காமல் நான் தாலி கட்டிட்டால்... அது கல்யாணம் ஆகிடுமா என்ன?'' தயக்கத்துடனே சத்யா பதில் சொல்ல, மதுவின் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

அவளது தலை கோதி, ''என்னடா?'' என்று சத்யா மென்மையாக வினவ,

''நீங்க சொல்றது சரிதான் நந்தா. தாலி கட்டிட்டால் மட்டும் கல்யாணம் ஆகிடாதுதான். கட்டியவனையும், கட்டிக் கொண்டவளையும் பொறுத்து தான் அந்த தாலிக்கு மதிப்பே. அப்படி பார்த்தால், நம்ம கல்யாணம் ஒரு உண்மையான கல்யாணம் என்பதில் உங்களுக்கு சந்தேகமே வேண்டாம். அன்றைக்கு நடந்ததை எல்லாம் யோசிச்சு பார்த்தால், அம்மாவுடைய ஆசீர்வாதத்தோடு தான், தெய்வ சந்நிதானத்தில் அந்தக் கல்யாணம் நடந்த மாதிரித் தோணுது!''

ஆத்மார்த்தமாக மது சொன்னதும், சத்யாவின் முகம் மலர்ந்தது. ''தேங்க்ஸ் மது! இதை நீ சொல்லும்போது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? எங்கே கல்யாணம் என்ற பெயரில் உன் மனவேதனை அதிகமாக நானே காரணம் ஆகிட்டேனோ என்று, எனக்கு வருத்தம் இருந்துட்டே இருந்தது!''

கணவனை நெருங்கி, அவன் தோளில் சாய்ந்து கொண்ட மதுமிதா, ''உங்ககிட்ட ஒரு உண்மையை

சொல்றேன் நந்தா. எனக்கு டெல்லி போற அன்னைக்கு மனசெல்லாம் ஒரே தவிப்பா இருந்தது. அம்மாவின் அனுமதி இல்லாமல் கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு உங்களை தவிர்த்தேன் தான். ஆனால், மனசு ஒரு பக்கம் அம்மாவை நினைச்சு தவிக்கும்போது, இன்னொரு பக்கம் உங்களை எங்கே இழந்து விடுவேனோ என்ற பயம் இருந்துகிட்டே இருந்தது. நம்ம கல்யாணம் முடிஞ்ச பிறகு, மனதில் இருந்த தவிப்பு பாதியா குறைந்து, அம்மாவைப் பற்றின கவலை மட்டும்தான் மனசில இருந்தது. என்னோட குற்ற உணர்வின் காரணமா, நம் கல்யாணம் எனக்குச் சந்தோஷத்தை தந்ததை, நான் அதை உணரவே இல்லை'' என்றவளை உணர்ந்து கொண்டவனாக, சத்யாவின் கரங்கள் அவளை மென்மையாக அணைத்தன.

''செஞ்சது தப்பு என்று நீங்க வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது போதாதுன்னு, நான் வேற உங்ககிட்ட முகம் திருப்பிட்டு கவலைப்பட வைச்சிட்டேன். சாரி நந்தா!'' மெல்ல முகம் உயர்த்தி, கணவனைக் கண்ணோடு நோக்கி மது சொல்ல,

''நீ நான் சொல்ல வந்ததை நீ காது கொடுத்துக் கூட கேட்கலை என்று எனக்கு வருத்தம்தான் மது. ஆனால், உன்னோட நிலையையும் என்னால் புரிஞ்சுக்க முடிஞ்சுது. அதனால், நீயா மனசு தெளிஞ்சு யோசிக்கிற வரை, காத்துட்டு இருக்க முடிவு செஞ்சேன். கூடவே, நான் உன்னை என்ன சமாதானப்படுத்தினாலும், அத்தை யுடைய ஆசீர்வாதம் இருந்தால்தான், உன் மனசு முழுமையா நிம்மதி அடையும் என்று எனக்குத் தோணுச்சு! அத்தோடு, நீயே யோசிச்சு தானாக உணர்ந்து, நம்ம



பந்தத்தை ஏற்றுக் கொண்டால், அது நம்ம ரெண்டு பேருக்குமே நல்லது என்று நினைச்சேன்'' என்றவனை, பெருமிதத்துடன் நோக்கி,

''ஏன்? என்கிட்டே சொல்லவே இல்லை, நந்தா?'' என்றாள் அவள்.

''என்ன மது? என்ன சொல்லவே இல்லை?'' குழப்பத்துடன் வினவினான் அவன்.

''நேற்று... டாக்டர்க்கு நானும் மகேனும் நன்றி சொல்லப் போன போது, அவர் எல்லாம் சொல்லிட்டார்!'' என்றாள் அவள்.

அவன் அப்போதும் அமைதியாகவே இருக்க, ''அம்மாவுக்காக இத்தனை முயற்சி எடுத்து இருக்கீங்க. அதைப் பற்றி, என்கிட்டயும் சொல்லலை. மகேன்கிட்டயும் சொல்லலை. ஏன் நந்தா?''

''மது... நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியில் இருந்தே, அத்தையை கோமாவில் இருந்து நார்மல் நிலைக்கு வரச் செய்ய வேறு ஏதாவது பிரத்யேக ட்ரீட்மென்ட் கொடுக்க முடியுமா என்று நாம ஏற்கனவே விசாரிச்சதுதான். ஆனால்... அவங்க தலையில் ஆபரேஷன் செஞ்சு இருந்ததால், உணர்வை திரும்ப கொண்டு வர செய்யற தீவிர சிகிச்சை, எதிர் விளைவுகளை கொடுக்க வாய்ப்பு இருக்கு என்று டாக்டர் சொல்லிட்டார். அதனால், பழைய சிகிச்சை முறையையே அவங்க தொடர்ந்துட்டு இருந்தாங்க. அது உனக்கும் தெரியும். ஆனால்... நான் விடாமல் எனக்குத் தெரிந்த நண்பர்கள், டாக்டர்ஸ் மூலமா, வேறு ஏதாவது வாய்ப்பு இருக்கா என்று முயற்சி செஞ்சுட்டே இருந்தேன். அப்போதான், ஒரு சிகிச்சை முறை பற்றி தெரிய வந்தது. உடனே உங்ககிட்ட

சொல்லிடணும் என்று மனம் பரபரத்ததுதான்!'' என்றவன்,

கொஞ்சம் இடைவெளி விட்டு, ''ஆனா.. அதுலயும் ஒரு பிச்சனை இருந்தது. அந்த சிகிச்சைக்கு பலன் இருக்கா இல்லையா என்று இரண்டு மாதத்துக்குள்ள தெரிஞ்சிடும் என்று சொன்னாங்க. ஐம்பது பெர்சன்ட் தான் ஹோப் என்று வேற சொல்லி இருந்தாங்க. பலன் இருந்து அத்தை மீண்டு வந்தால், எல்லாருக்கும் சந்தோஷம்தான். ஆனால்.. ஒரு வேளை பலன் இல்லாமல் போயிட்டால், எல்லாரையுமே ஆசை காட்டி மோசம் செய்த மாதிரி ஆகிடும். இந்த சிகிச்சை பலன் அளிக்காமல் போயிட்டால், அத்தைக்கு சரி ஆகிடும் என்ற நம்பிக்கையோடு இருக்கிற எல்லாருடைய மனசிலயும், அவங்களுக்கு குணமே ஆகாதோ என்ற பயம் வர வாய்ப்பு இருக்கு! அதான், எதுவா இருந்தாலும் என் ஒருவனோடு போகட்டும் என்று அமைதியா இருந்தேன்!''

கணவன் சொல்லி முடித்ததும், மது வாயடைத்து நின்றிருந்தாள்.

அவன் சொன்னது சரிதான்! பிரத்யேக சிகிச்சையிலேயே பலன் இல்லை என்று தெரிந்தால், அதன் பிறகு, அவர்கள் எல்லாருக்குமே அவநம்பிக்கைதான் மிஞ்சி இருக்கும்!

மற்றவர்கள் மனம் புண்பட வேண்டாம் என்று கணவன் பார்த்துப் பார்த்து செய்தது மனதை நெகிழ்த்த, கண்கள் கலங்க, அவன் கன்னத்தில் இதழ் ஒற்றியவள், ''எனக்காக நீங்க இவ்வளவு செஞ்சு இருக்கீங்க. ஆனால்.. நான்.. எப்போதும், என்னோட மனநிலையைப் பற்றி மட்டுமே யோசிச்சிட்டு இருந்திருக்கேன். உங்களை



ரொம்பப் படுத்தி இருக்கேன். உங்க இடத்தில் வேற யாராவது இருந்திருந்தால், போடி நீயும் ஆச்சு, உன் காதலும் ஆச்சுன்னு போயிருப்பாங்க'' என்று கூற,

''ஹே பட்டு. என்ன இது? எதுக்கு இவ்வளவு எமோஷனல் ஆகறே?'' என்றவன்,

மனைவியின் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, அவளது விழிகளை ஊடுருவி, ''அப்படி போறதுக்குத் தான், பார்த்த முதல் நாள்ல இருந்து உன் மேல் பைத்தியமா இருக்கேனா? ம்?'' என்றவன், ''இன்னொரு தரம் இப்படிப் பேசினே... உதை வாங்குவே!'' என்று செல்லமாக அதட்டவும் செய்தான்.

தன் தோள் சாய்ந்த மனைவியை மென்மையாக அணைத்து, ''பட்டு! இந்த நிமிஷம்... உலகத்திலேயே என்னை விட சந்தோஷமா யாரும் இருக்க முடியாதுன்னு தோணுது!'' ஆத்மார்த்தமான குரலில் அவன் கூற, மேலும் அவனிடம் ஒண்டினாள் அவள்!

''முதல் முதல்ல உன்னைப் பார்த்த போது தோன்றிய அந்த உணர்வு.. அப்புறம் நீ என்னை விரும்புவாயா என்ற தவிப்பு... அப்புறம் எங்கே உன்னை இழந்து விடுவேனோ என்ற பயம்... இதெல்லாம் முழுசா காணாமல் போய்... நீ இப்போ என் கைவளைவில் இருக்கே என்பது மட்டும் தான் இப்போ மனசில நிக்குது... இந்த மாதிரி ஒரு சந்தோஷத்தை நான் எப்பவுமே அனுபவிச்சதில்லை!'' மனப்பூர்வமாகச் சொன்னவன், மெல்ல அவளது தலையை நிமிர்த்தி, அவளது நெற்றியில் இதழ் பதித்தான்.

கணவனது வார்த்தைகள் கண்களில் ஆனந்தக் கண்ணீரைத் துளிர்க்கச் செய்ய, ''எப்பவும் தோன்றுகிற

அதே சந்தேகம் இப்பவும் தோணுது... நீங்க என்னை நேசிக்கிற அளவுக்கு நான் உங்களை நேசிக்கிறேனா என்று!'' நெகிழ்ந்த குரலில் மது சொல்ல,

''மது... அன்பை அளக்க முடியுமா என்ன? உணரத் தானே முடியும்! உணர்ந்த நான் சொல்றேன்! என் அன்பு உயர்ந்தது... உன் அன்பு உயர்ந்தது என்று சொல்றதை விட, நம்ம அன்புதான் உயர்ந்தது என்றுதான் நான் சொல்வேன்!'' அழுத்தமாக மொழிந்தவன்,

மனைவியின் உதட்டோர மச்சத்தை ஆசையுடன் வருடியபடி, ''பட்டூ...'' என்று அழைக்க, அவன் குரலில் இருந்த வேறுபாட்டை உணர்ந்து முகம் சிவந்தவள், ''ம்...'' என,

''இப்படி பேசிட்டு இருக்கிறதை விட, நம்ம அன்பை செயலிலும் காட்ட ஆரம்பிக்கலாமா?'' தாபத்துடன் சொல்லி, சத்யா கண்சிமிட்ட, அவனது வருடலில், குரலில் இருந்த குழைவில், மனமும் உடலும் சிலிர்த்தாலும்,

''ஹப்பாடா... இப்பவாவது உங்களுக்கு அதுக்கு மனசு வந்ததா?'' என்று மதுவும் கேலியாகச் சொல்ல முயன்றாள்.

''ஹே.. என் பட்டு இப்பதான் ஃபார்முக்கு வந்திருக்கா... இனிமேல் பேச்சுக்கு தடாதான்!'' உற்சாகமாக சொன்ன வனின் கரம், அவளது இடையில் பதிந்து, தன்னவளைத் தன்னோடு சேர்த்து அணைத்தது.

மன சஞ்சலம் எல்லாம் அகன்று, மதுவும் ஒருமித்த மனதுடன் கணவனுடன் இணைய, அவர்களது இல்லறம் நல்லறமாக சிறக்கத் துவங்கியது.

''சுந்தரி கண்ணால் ஒரு சேதி... சொல்லடி இந்நாள் நல்ல தேதி...
என்னையே தந்தேன் உனக்காக... ஜென்மமே கொண்டேன் அதற்காக...



நானுனை நீங்க மாட்டேன்... நீங்கினால் தூங்க மாட்டேன்...
சேர்ந்ததே நம் ஜீவனே!''

ஐந்து வருடங்களுக்குப் பிறகு...

சத்யநந்தனின் பெற்றோருக்கு சஷ்டியப்த பூர்த்தி விழா!

காலையில் பூஜை புனஸ்காரங்கள் முடிந்திருக்க, மாலையில் அவர்களது இல்லத்தில், நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் விருந்து ஏற்பாடாகி இருந்தது.

ஐந்து மணிக்கு நந்தினியுடன் வந்த மகேந்திரன், ''என்ன சத்யா? மதுவைக் காணோம்? விருந்தினர்களை வரவேற்காமல் மேடம் என்ன செஞ்சிட்டு இருக்காங்க?'' என்று சத்யாவிடம் வம்பு வளர்த்தான்.

''நீ... நீ கெஸ்டா? வீட்டுப் பிள்ளையா லட்சணமா வேலையை இழுத்துப் போட்டு செய்யறதை விட்டுட்டு, விழா நேரத்துக்கு கரெக்டா வந்துட்டு, என் பொண்டாட்டியை வம்பு இழுக்கிறயா?''

சத்யா செல்லக் கோபத்துடன் மகேந்திரனை அதட்ட, ''சாரி சத்யா. நந்தினி சொந்தத்தில் ஒரு கல்யாணம் என்று ஏற்கனவே சொல்லி இருந்தேன் இல்ல? அதான் அத்தையும் அனன்யாவும் காலையிலேயே வந்துட்டாங் களே?'' என்று மகேந்திரன் சமாதானம் சொல்ல,

''சரி... நான் போய் மதுவைக் கூட்டிட்டு வரேன்!'' என்று சத்யா அங்கிருந்து சென்றான்.

* * *

''அம்மா!'' என்ற அழைப்போடு உள்ளே ஓடி வந்து தன் கழுத்தைக் கட்டிக் கொண்ட மகன் ராஜாவின் கன்னத்தில் முத்தமிட்ட மது, ''என்னடா கண்ணா?'' என்று கொஞ்சலுடன் வினவினாள்.

நான்கு வயது ராஜாவுக்கு, எத்தனை பேர் சூழ இருந்தாலும், அரை மணிக்கு ஒரு தரம் தன் அன்னையைப் பார்த்துவிட வேண்டும்!

''இன்னைக்கு டே ரொம்ப ஜாலியா இருக்கும்மா. அனன்யா, ஷாலு குட்டி எல்லோரோடவும் விளையாடிட்டு இருக்கேன். நிதி அத்தை பாப்பா ஷாலு எவ்ளோ ஸ்வீட் இல்ல? நம்ம பாப்பாவும் அதே மாதிரி இருக்கு மாம்மா?''

அன்னையின் மணி வயிற்றில் பார்வைப் பதித்தபடி, கண்களை உருட்டி ஆவலுடன் மகன் கேட்ட பாவனை மனதைக் கொள்ளை கொள்ள, ''கண்டிப்பா!'' என்றவள், மீண்டும் அவன் கன்னத்தில் முத்தமிட்ட நேரம், சத்யா உள்ளே நுழைந்தான்.

''அடடா! திரும்ப வந்துட்டீங்களா? கீழே வரவங்களை விசாரிக்காமல், இதென்ன அரை மணி நேரத்துக்கு ஒரு முறை, இங்கே விசிட்? ம்? ராஜாவுக்கும் உங்களுக்கும் வித்தியாசமே இல்லை, நந்தா!'' அலுப்பாகச் சொன்னாலும், அவள் குரலில் பெருமிதமே பொங்கி வழிந்தது.

''என்ன செய்யறது? எங்க ரெண்டு பேரையும், உன் அன்பால் கட்டிப் போட்டு வைச்சிருக்கியே!'' என்ற சத்யா, ''ராஜாகுட்டி, கீழே மகேன் அங்கிளும் நந்தினி ஆன்ட்டியும் வந்திருக்காங்க'' என்று சொல்ல, ''ஹேய்! மகேன் அங்கிள் எனக்கு சாக்லேட் வாங்கி வந்திருப்பாரே!'' என்றவாறே குழந்தை குதித்து ஓடினான்.

நிறை மாத கர்ப்பிணியாய் இருக்கும் மதுவின் வீங்கி இருந்த கால்களை கவலையுடன் நோக்கி, ''இப்போ வலி பரவாயில்லையாடா, பட்டு?'' என்று விசாரித்த சத்யா,



''நம்ம ராஜா வயிற்றில் இருக்கும்போது உனக்கு இப்படி இல்லையேடா?'' என்று கவலை காட்டினான்.

''அச்சோ... அவர் வயிற்றில் இருந்தப்போ முதல் மூணு மாசம், வாந்தி மயக்கம் என்று நான் சாப்பிட முடியாமல், உட்கார முடியாம இருந்தது மறந்து போச்சா? இந்த முறை அதெல்லாம் இல்லைதானே? ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு விதமா இருக்கும் என்று டாக்டர் சொன்னாங்கதானே? அதுவும் இல்லாமல், இன்னைக்கு அபிஷேகம் என்று காலையில் கோவிலில் ரொம்ப நேரம் நின்றதால்தான் இவ்வளவு வீக்கம், வலி எல்லாம் இல்லை! நானே இப்போ கீழே வரதா இருந்தேன்'' என்றவள்,

தன் காலை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு இதமாகப் பிடித்து விட்டுக் கொண்டிருந்த கணவனின் தலையை, கை நீட்டி செல்லமாக கலைத்து விட்டு விளையாட, அவளது கண்களில் கணவனின் அக்கறையின் விளைவாக பெருமிதம் மிகுந்திருந்த.

''ஹே... நேரம் கெட்ட நேரத்தில் இப்படி எல்லாம் பார்த்து வைக்காதே! அப்புறம்... கீழே வேலை இருக்கு வரலையா என்று என்னைக் கேட்கக் கூடாது!''

குறும்புடன் கணவன் கண் சிமிட்ட, ''பாருடா... ரெண்டு பிள்ளைகளுக்கு அப்பா ஆகிட்டாலும், சாருக்கு இன்னும் ரொமான்ஸ் குறையலை போல!'' என்று வம்பிழுத்தாள் மனைவி.

''ரெண்டு பிள்ளைக்கே நான் கிழவன் ஆகிட்ட மாதிரி பேசறே? கிழவனே ஆனாலும், என் ரொமான்ஸ் குறையாதுதான்!''

காதலுடன் சொன்ன கணவனின் விழிகளோடு, மதுவின் விழிகள் ஆசையுடன் உறவாட, இருவரும்

தங்களை மறந்து ஒருவரை ஒருவர் ரசித்தபடி அமர்ந்திருந்த நேரம்.

''நந்து... நான் சொன்னேன் இல்லை? சத்யா வேகமாக நான் போய் கூப்பிடறேன் என்று சொல்லிட்டுப் போகும் போதே, ரொமான்ஸ் சீன்தான் ஓடப் போகுதுன்னு!''

மகேந்திரனின் கேலிக் குரலில் தன் நிலைக்கு வந்த மது, அவசரமாக காலை கணவனிடம் இருந்து இழுத்துக் கொள்ள முயல, சத்யா விடவில்லை.

''டேய்! உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதடா! ஆபீஸ் போறோம் என்று வீட்டில் சொல்லிவிட்டு, பெண்ணையும் அத்தை தலையில் கட்டிட்டு, மாசம் ஒரு முறை குட்டி ஹனிமூன் போற ஆள் ஆச்சே நீ?''

சத்யா கேலி செய்ய, ''ஹய்யோ... வாயை மூடிட்டு சும்மா இருங்க என்றால் கேட்கறீங்களா? இப்ப பாருங்க... மானம் போகுது!'' என்று நந்தினி முகம் சிவக்க, மகேந்திரன் அசடு வழிய, அந்த இடம் கலகலத்தது.

விழாவுக்கு நேரம் ஆகிறது என்று, அனைவரையும் கீழே கூப்பிட வந்த ஜானகியின் செவிகளில் அவர்களது சந்தோஷச் சிரிப்பொலி விழ, அவரது மனம் நிறைந்தது.

இந்த ஐந்து வருடங்களில், நந்தினி அவருக்கு இன்னொரு மகளாகி போனாள் என்றால், சத்யா செல்ல மகனாகிப் போனான்.

தன் குழந்தைகளின் சந்தோஷத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருந்த ஜானகியின் உள்ளம், அவர்கள் இன்று போல் என்றும் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்தது.